தனியொருவனுக்கு உணவு இல்லையெனில்...

நூற்றாண்டு கண்ட

# கல்விப் புரட்சி



# சிறப்பு மலர்

தனியொருவனுக்கு உணவு இல்லையெனில்...

## நூற்றாண்டு கண்ட

# கல்விப் புரட்சி

வெளியீடு : முதல் பதிப்பு - 15.09.2022

திருத்தப்பட்ட பதிப்பு -27.09.2022

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

வாய்மையே வெல்லும்

## வாழ்த்துரை

**"கல்வி என்பது ஒருவருடைய மனதினைத் திறக்கக்கூடிய திறவுகோல். ஊட்டச்சத்துடன் கூடிய கல்வி என்பது குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது"**

தொன்று தொட்டு நிலவும் சமூகச் சிக்கலுடன் வறுமையும் இணைவதால் ஏழை, எளிய சமூகக் குழந்தைகளின் காலடிகள் கல்விச் சாலையை எட்ட முடியவில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயர் அவர்கள் தலைமையில், 1920ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மதிய உணவுத் திட்டம், இந்தியாவிலேயே முதன்முதலாக 1922ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்பு விரிவாக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர், 1957 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்களால், தொடக்கக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம், பள்ளி செல்லும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1962ஆம் ஆண்டு மதிய உணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னர் 1982–இல் இத்திட்டம் சத்துணவுத் திட்டமாக முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் மாற்றப்பட்டது. குழந்தைகளுக்குத் தேவையான புரத ஊட்டச்சத்து வழங்கப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக, இத்திட்டத்தினை மெருகேற்றும் வகையில் சத்துணவில் முட்டை வழங்கும் நடைமுறை 1989–இல் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

–2–

சத்துணவுத் திட்டம் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்குச் செல்லத் தூண்டுவது மட்டுமல்லாமல் வகுப்பறையில் பசியின்றிப் படிக்கவும் உதவுகிறது. மேலும், குழந்தைகளின் ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தி, கற்றல் ஆர்வத்தினை அதிகப்படுத்துகிறது. ஒவ்வொரு நாளும் சரிவிகித சத்தான உணவினை வழங்குவது குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நிவர்த்தி செய்து, அதன் மூலம் மனித வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாகச் செயல்படுகிறது என்பதை, திட்டத்தின் வரலாறு தெளிவாகப் பிரதிபலிக்கிறது. 2022–23 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தில் மொத்தம் 46,70,458 மாணவ மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

தற்போது, அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினைப் போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், அரசுப் பள்ளி மாணவ மாணவியருக்குக் காலைச் சிற்றுண்டி வழங்கிடும், 'முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டத்தினைச்' செயல்படுத்திட ஆணையிடப்பட்டு, 15.09.2022 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்ட சத்துணவுத் திட்டத்தின் தொடக்கம் முதல் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள 'முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்' வரை காலந்தோறும் இத்திட்டத்தில் நடைபெற்ற வியத்தகு மாற்றங்களை இந்த நூற்றாண்டு மலர் தெளிவாகவும், விரிவாகவும் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த மலர் சிறப்புற வெளிவரப் பங்காற்றிய அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.

(மு.க. ஸ்டாலின்)
முதலமைச்சர்

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

## அணிந்துரை

எந்த ஒரு மனிதனும் பசியோடு உறங்கச் செல்லக்கூடாது என்ற ஜீவகாருண்ய தத்துவத்தை நடைமுறைப்படுத்த அரசியல் தமக்களித்த அதிகாரத்தை பயன்படுத்தி பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் ரூபாய்க்கு **'மூன்று படி லட்சியம் ஒரு படி நிச்சயம்'** என்ற கொள்கையை வகுத்து செயல்பட்டார். அந்த மரபின் வழியாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் **ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி** வழங்கி பசியில்லா தமிழகத்தை உறுதி செய்தார்.

எதிர்கால தலைமுறையினர் கருத்தூன்றி கல்வி கற்க உணவு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று மதிய உணவு திட்டம், சத்துணவுத் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் முட்டை உள்ளிட்ட வரலாற்றுத் திட்டங்களுக்கு மணி மகுடமாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ செல்வங்களுக்கு மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கப்படும் 'முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை'** வரலாற்றுச் சிறப்புமிக்க செப்டம்பர் 15 ஆம் நாள் முதலமைச்சர் தொடங்கி வைப்பது பெருமைக்குரியது அதற்காக வரலாற்றில் என்றென்றும் நினைவு கூறப்படுவார் நம் முதல்வர்.

இத்தகைய சிறப்புமிக்க நிகழ்வுகளை ஆவணப்படுத்தி சிறப்பு வெளியீடாக பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய சிறந்த கருத்துக்கள் மற்றும் கட்டுரைகள் உள்ளிட்டவற்றை தொகுத்து, பல்வேறு சிறப்பு மலர்களை செய்தி துறையின் தமிழரசு வெளியீடு மூலமாக வெளியிட்டு வருகிறோம்.

**'நூற்றாண்டு கண்ட கல்வி புரட்சி'** என்ற இந்த வரலாற்று பெட்டகத்தை தேடித் தொகுத்து சீரிய உழைப்பின் வழியாக வெளியிடும் தமிழரசு இதழுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் துறையின் அமைச்சர் என்கிற முறையில் பெருமை அடைகிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்,

13/9/22

(மு.பெ.சாமிநாதன்)

**பி. கீதா ஜீவன்**
சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை
அமைச்சர்

தமிழ் நாடு அரசு
வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

12.09.2022.

நாள்.....................................

## அணிந்துரை

" மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்;
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே "

என்பதற்கேற்ப, தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும், அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தைகள் கல்வி பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் நாட்டின் மதிப்புமிகு மனித வளமாக உருவாக இயலும். எனவே தான், குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவித்து பசியின்றிக் கல்வி பயில வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன், சத்தான உணவு அளிப்பதன் மூலம் அவர்களின் உடல்நலத்தினை மேம்படுத்தி, கல்வி கற்பதையும் உறுதி செய்து அதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் களைவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை பேணும் விதமாக, தற்போது மதிய உணவுத் திட்டத்தில் செறிவூட்டப்பட்ட அரிசி, உப்பு மற்றும் எண்ணெய் போன்ற தரமான பொருட்களைக் கொண்டு மதிய உணவு தயாரிக்கப்பட்டு, குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாணவர்களின் விருப்பத்தினை அறிந்து, தினம் ஒரு கலவை சாதம் மற்றும் பலவிதமான மசாலா முட்டையுடன் சேர்த்து வழங்கும் திட்டத்தினை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு, பல்வேறு திட்டங்களை வழங்கி, இன்றைய குழந்தைகள் நாட்டின் வருங்காலத் தூண்கள் என்ற முதுமொழிக்கேற்ப, மாணாக்கர்களை பேணிக்காக்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு சீரும் சிறப்புமாகச் செயல்படுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒரு குழந்தை கூட இரவு உறங்கச் செல்லும்போது பசியோடு உறங்கக்கூடாது என்ற முதலமைச்சரின் எண்ணத்தினை முழுமையடையச் செய்யும் நோக்கில் **"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"** வருகிற 15.09.2022 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று துவக்கப்பட உள்ளதையும் பதிவு செய்கிறேன்.

நூற்றாண்டு காணும் சத்துணவுத் திட்டத்தின் பல்வேறு வளர்ச்சிகளை, குறிப்பாக முதல்வரின் காலை உணவு திட்டம் உட்பட அனைத்து நிகழ்வுகளையும் இந்த மலர் தெளிவுபடுத்துகிறது என்றால் அது மிகையல்ல.

நன்மகி... ன்,

பி. கீதா ஜீவன்,
சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை
அமைச்சர்.

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை—600 009

## மாணவர் உணவின் வரலாறு

அறிவே மனிதனை அடையாளம் காட்டியது. அறிவைச் செதுக்கிச் செதுக்கி மேம்படுத்தும்போதுதான் மனிதன் உயர்ந்து நிற்கிறான். தொடக்கத்தில் தோற்றம் கவர்ந்தாலும், நாளடைவில் அறிவே தலைதூக்கி நிற்கிறது.

குழந்தைகளுக்குப் பெற்றோர் சேர்த்து வைக்கிற சொத்து, அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியும், அவர்கள் உடல் உறுதியாக இருக்கவும், ஒளிபடைத்த கண்களோடு அவர்கள் திகழவும் அளிக்கிற ஊட்டச்சத்துமே.

காலை உணவு மூளையின் செயல்பாட்டுக்கு முக்கியமானது. இரவு உணவுக்கும், காலை உணவுக்குமிடையில் மிகப்பெரிய இடைவெளியிருக்கிறது. நம் மூளை எப்போதும் நாம் உண்கிற உணவில் நான்கில் ஒரு பகுதியைக் கிரகித்துக்கொள்கிறது. குறைந்தது 20 விழுக்காடாவது நாம் உட்கொள்ளும் உணவின் அளவு மூளைக்குச் செலவிடப்படுகிறது. அப்போதுதான், மூளை அவயங்களுக்கு ஆணை பிறப்பிக்க முடியும், அவற்றை இயக்க முடியும். கைகள் செயல்படுதற்கும், கண்கள் ஒளிவிடுவதற்கும் மூளையே உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றது. அந்த மூளை சுறுசுறுப்பாக இயங்க காலை உணவு மிகவும் முக்கியம்.

தமிழ்நாடு அரசு, காலை உணவுகூட உட்கொள்ள முடியாமல் பள்ளிக்கு வருகின்ற குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கி, அவர்கள் சுறுசுறுப்பாகவும், ஆர்வமாகவும் கற்பதற்கு 'முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்' என்கின்ற திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது.

எளிய மக்களின் கல்வி மேம்பாடுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான அளவுகோளாக எப்போதும் இருக்கும்.

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

2

இந்தத் தொகுப்பை படித்ததும் உண்ணும் ஒரு பருக்கையும் வீணாகாமல் உண்பதும், உணவு உற்பத்தி செய்பவர்களுக்கு நன்றி சொல்வதுமே நம்முடைய வெளிப்பாடாக இருக்கும்.

தமிழ்நாடு, குழந்தைகளுக்கு உணவு வழங்கும் திட்டத்தில் சாதனை படைத்திருக்கும் மாநிலம். அதன் சரித்திரச் சுவடுகளையெல்லாம் தேடியெடுத்து அது வளர்ந்த விதத்தையும், பரிணாம வளர்ச்சியடைந்து பார்போற்றும் வகையில் பிரம்மாண்டமாக உருப்பெற்றிருக்கும் விதத்தையும் அழகிய தொகுப்பாக 'நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி' என்கின்ற தொகுப்பின்மூலம் செய்தித் துறை கொண்டுவந்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்நூல் வெறும் காகிதக்கட்டு அல்ல; தமிழகத்தின் எளிய மக்களின் கல்விப்புரட்சியை உள்ளடக்கிய களஞ்சியம் என்பதை நினைவுறுத்துகிறேன்.

அன்புடன்,

மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

## அணிந்துரை

கல்வி கற்பதற்குப் 'பசி' ஒரு தடையாக அமைந்துவிடக் கூடாது, வீட்டில் உணவில்லை என்பதால், பள்ளிக்குச் சென்று கல்வி கற்க இயலவில்லை என்ற நிலை உருவாகக் கூடாது என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதுதான் மதிய உணவுத் திட்டம் என்ற மகத்தானத் திட்டம்.

பெற்ற குழந்தைகள் பள்ளிக்குச் செல்லுங் காலத்தில் அவர்களுக்கு உணவு அளிக்க முடியாமல் தவித்த தாய்மார்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, குழந்தைகளின் பசிப்பிணியை நீக்கும் வகையில் மெருகேற்றப்பட்ட இத்திட்டம், பின்னர் சத்துணவுத் திட்டமாக மாறி, பின்பு பள்ளிக் குழந்தைகளின் உடல் வளம் பெற இத்திட்டத்தில் முட்டை மற்றும் வாழைப்பழம் வழங்கி மேம்படுத்தப்பட்டது. குழந்தைகளின் உணவில் ஊட்டச்சத்தினை மிகுதியாக்கி அவர்கள் மிகச் சிறப்பாகக் கல்வி பயில அடித்தளமிட்டது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசு.

அதைத் தொடர்ந்து, ஏழைக் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை மேலும் ஊக்குவிக்கும் வகையில் நண்பகல் சத்துணவு மட்டுமன்றி, குழந்தைகள் காலையிலேயே பள்ளிக்கே வந்து உணவு உண்டு பசியின்றிக் கல்வி கற்க வேண்டும் என்ற பெருநோக்கத்தோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" 15.09.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க சத்துணவுத் திட்டத்தின் வளர்ச்சிப் படிநிலைகளை ஆவணங்களாகத் தயாரித்துப் பொதுமக்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் கட்டுரைகளாகத் தொகுத்து செய்தித் துறையின் தமிழரசு வாயிலாக சிறப்பு மலர் ஒன்றினை உருவாக்கி இருப்பதை அறிந்து மகிழ்கிறேன். இதை அரிய வரலாற்றுப் பதிவாக வருங்காலத் தமிழகம் ஏற்றுக் கொண்டாடும் என்பதில் ஐயமில்லை. "நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி" என்ற இச்சிறப்பு மலரினை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

சிறப்பு மலர் தயாரிப்பில் தொய்வின்றிப் பணியாற்றிய அனைவரையும் வாழ்க வெல்க என வாழ்த்தி மகிழ்கிறேன்.

(மகேசன் காசிராஜன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021

# உள்ளடக்கம்


1. சத்துணவுத் திட்ட காலவரிசை ........ 12
2. பசிப்பிணி தீர்த்தல்: தமிழ் மரபு சொல்வது என்ன? ........ 14
3. மதிய உணவுத் திட்ட வரலாறு ........ 16
4. அயோத்திதாசப் பண்டிதரின் தினசரி சிற்றுண்டித் திட்டம் ........ 41
5. சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு நிதி வேண்டி சர்.பி.தியாகராயர் அவர்கள் 1922ஆம் ஆண்டு அனுப்பிய மனுக்கள் ........ 46
6. The Origin and The Development of The People's Movement for Free Supply of School Meals in Madras State ........ 50
7. பகல் உணவுத் திட்டம் பிறந்த கதை ........ 58
8. பயன்பெற்றோர் போற்றுகின்றனர் திரு. தில்லைக்குமரன் ........ 66
9. CARE - அமெரிக்கத் தன்னார்வ அமைப்பின் பேருதவி ........ 68
10. தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டத்திற்கு நேசக்கரம் நீட்டிய அமெரிக்கா ........ 76
11. பயன்பெற்றோர் போற்றுகின்றனர் திரு. சுந்தர், திரு. சொர்ணம் சங்கரபாண்டி ........ 79
12. சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் - 1971 ........ 82
13. சத்துணவுத் திட்டம் - புகைப்படக் கட்டுரை ........ 85
14. சத்துணவுத் திட்டத்தால் சமுதாயம் பெறப்போகும் பலன்கள் ........ 95
15. சத்துணவும் சமத்துவமும் - கவிதை ........ 105
16. சத்துணவுத் திட்டத்தின் உடனடிப் பலன்கள் ........ 107
17. தமிழ்நாடே முன்னோடி! Centre for Social Studies ஆய்வறிக்கை ........ 111

# உள்ளடக்கம்


18. கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க,
உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம் ..... 115

19. குழந்தைகளுக்கு முட்டை:
சந்தேகத்திற்கு இடமற்ற புரதத் தீர்வு ..... 123

20. பயன்பெற்றோர் போற்றுகின்றனர்
டாக்டர் ஜெயராம கிருஷ்ணன் வேலுசாமி ..... 129

21. தேசிய அளவில் மதிய உணவுத் திட்டம் ..... 132

22. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் ..... 139

23. Tamil Nadu: ICDS with a Difference -
Anuradha Kathi Rajivan (EPW) ..... 149

24. சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படும்
உணவுப் பொருட்களின் விவரம் ..... 161

25. சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் ..... 166

26. முதலமைச்சரின் திராவிட மாதிரியும் தமிழ்நாட்டு
சத்துணவுத் திட்டத்தின் வெற்றிக்கதையும் ..... 174

27. பயன்பெற்றோர் போற்றுகின்றனர்
திரு. கனகராஜ் நடராஜன், திரு. பொன்சிங்பாபு ..... 181

28. மருத்துவப் பார்வையில் மதிய உணவுத் திட்டம் ..... 186

29. இனி பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் ..... 193

30. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான அரசாணை ..... 199

31. "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" தொடக்கம் ..... 216

32. குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்ய தயார் ..... 219

33. சத்தான காலை உணவுத் திட்டம் பயன்பெற்றோர் போற்றுகின்றனர் ..... 229

34. ஊடகப் பார்வை ..... 235


❖ ❖ ❖

# நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி



ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.

- அதிகாரம்: கல்வி: குறள் எண் 398.

**கலைஞர் உரை:** ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

தலைமுறை தலைமுறையாய்க் கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில் கல்வி அறிவூட்டி எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்றால், இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்றால் கல்வி தவிர வேறேதும் துணைக்கோல் இல்லை. ஆனால், அந்த இல்லாமை கல்விக்குத் தடையாகக் கூடாதென்னும் கொள்கை ஒன்றால் தமிழ்நாடு அரசு மக்களின் கல்வி வளர்ச்சிக்கென்று நாட்டிற்கே முன்னோடியாகப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. திராவிட மாடலின் முதல் அடித்தளமாகக் கல்வித்திட்டங்களை வகுத்தது தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் நீதிக்கட்சி.

அந்த வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையானது மதிய உணவுத் திட்டம். பள்ளிகளுக்கு மாணவர்கள் வராததற்குக் காரணம் ஏழ்மையும் பசியும் என்றால் அதனைத் துடைத்தெறிந்து மக்களைக் கல்விச் சாலைகளுக்குள்ளே திரட்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது மதிய உணவுத் திட்டம். 1922ஆம் ஆண்டு, ஆயிரம் விளக்கு பகுதியில் இருந்த மாநகராட்சிப் பள்ளியில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இந்த நூறாண்டுகளில் இந்தத் திட்டம் பல்வேறு மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. திராவிட மாடல் திட்டங்களில் தலையாயதான மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டமாகி, மாபெரும் குழந்தை வளர்ச்சித் திட்டமாக இன்று உலக அறிஞர்களெல்லாம் வியந்து போற்றும் திட்டமாகப் பரிணமித்துள்ளது. சத்துணவுத் திட்டம், அத்தனை வளர்ச்சிப் போக்குகளிலும் இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கியது. பள்ளிகளில் காலைச் சிற்றுண்டியும் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களது அறிவிப்பால் இந்தியாவிலேயே மிகப்பெரிய குழந்தைகள் வளர்ச்சித் திட்டமாகச் சத்துணவுத் திட்டம் மாறுகின்றது. 1922இல் தொடங்கி 2022இல் நூற்றாண்டு காணும் சத்துணவுத் திட்டத்தின் வரலாற்றுப் பக்கங்களை மீட்டெடுக்கும் வகையில் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

# சத்துணவுத் திட்ட காலவரிசை

## (1922 முதல் 2022 வரை சத்துணவுத் திட்டம் கடந்து வந்த படிநிலைகள்)

1922 சென்னை மாநகராட்சியில் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியில் சோதனை முயற்சியாகத் தொடங்கப்பட்டது.

1925 சென்னை மாநகராட்சி முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

1956 தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

1962 ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் மதிய உணவுத் திட்டப் பயனாளர்களாக இணைக்கப்பட்டனர்.

1982 5 வயது முதல் 9 வயது வரை பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

1984 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

1989 பள்ளி செல்லும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

1997 சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு முக்கியப்பிரமுகர்களின் பிறந்தநாள் அன்று இனிப்பு பொங்கல் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

1998 2 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

2006 2 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2007 2 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2010 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் (வாரத்தில் 5 நாட்கள்) முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

2014 பயனாளிகளுக்குப் பலவகை கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2022 பள்ளி மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

# பசிப்பிணி தீர்த்தல் தமிழ் மரபு சொல்வது என்ன?

நா. முத்துநிலவன்,
மாநிலத் துணைத் தலைவர்
தமுஎகச

பசியைத் 'தீப்பிணி' என்கிறது திருக்குறள்; பசிநோய் தீர்ப்பவர் யாராயினும் அவரைப் 'பசிப்பிணி மருத்துவர்' என்று கொண்டாடச் சொல்கிறது புறநானூறு (173). 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது மணிமேகலையின் அறைகூவல். பாரதியோ, 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கொந்தளிக்கிறார்.

நீதிக்கட்சியின் முன்னெடுப்பு: 1920-களில் மதராஸ் மாகாணத்தில் ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சி அரசு, சென்னை மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தது. பின்னர் இதே வழியில் முதல்வர் காமராஜர், மதிய உணவுத் திட்டத்தை 1955இல் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தியபோது, பாரதி பிறந்த எட்டயபுரத்தில் தொடங்கி வைத்தார்.

மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்ட இரண்டே ஆண்டுகளில் பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்திலிருந்து பத்து இலட்சமாக உயர்ந்தது. 1920இல் மாநகராட்சிப் பள்ளியில், 1955இல் மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளில் என்று தொடர்ந்த இலவச மதிய உணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆர்., சத்துணவுத் திட்டமாக்கினார்; மு.கருணாநிதி சத்துணவில் முட்டை சேர்த்தார், ஜெயலலிதா பயறு, பருப்பு எனச் சத்துப் பொருட்களைச் சேர்த்தார்.

பாடநூல்கள் மட்டுமின்றி, மாணவர் சீருடை, எழுதுபொருள், புத்தகப் பை, மடிக்கணினி, மிதிவண்டி, இலவசப் பேருந்துப் பயண அட்டை என 14 விதமான பொருள்களாகத் தொடர்கிறது. இதன் விளைவு, மத்திய அரசின் தேசியக் கல்விக் கொள்கையின் இலக்கான 'பள்ளிப் படிப்பை முடிப்போர் சதவீதத்தை இன்னும் 10 ஆண்டுகளில் 50 சதவிகிதமாக உயர்த்துவது' என்பதைத் தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியிருப்பதுதான்.

'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்னும் திருக்குறளைப் புரிந்துகொண்டால், மக்கள் நலத் திட்டங்களும் சத்துணவுத் திட்டமும் புரியும்; இந்தத் தமிழ் மரபுதான் தமிழ்நாட்டை உயர்த்தி வருகிறது என்பதும் புரியும்.

# மதிய உணவுத் திட்ட வரலாறு!

இந்திர குமார்
தேரடி, ஊடகவியலாளர்

மதிய உணவுத் திட்டம் அல்லது சத்துணவுத் திட்டம் என்பது தமிழ்நாட்டில் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்ட போதே உருப்பெற்றது. தமிழ்நாட்டரசுகள் நாட்டிற்கே பலவகைகளிலும் முன்னோடியாளர்களாகவே விளங்கியிருக்கின்றன. குறிப்பாகக் கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு கொண்டுவந்த பல்வேறு சீர்திருத்த முயற்சிகளில் தலையாயது, "மதிய உணவுத் திட்டம்". அதன் வரலாறு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்குகின்றது.

மெட்ராஸ் தொடக்கக் கல்விச் சட்டம் 1920இன்படி மெட்ராஸ் மாநகராட்சியோ அல்லது நகராட்சியோ அல்லது தாலுகாவோ தங்கள் பகுதிக்குட்பட்ட குழந்தைகளைக் கண்டிப்பாகப் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்துவர வேண்டும் என்று வழிசெய்தது. குழந்தைகளைக் கட்டாயமாக பள்ளிக்கு அழைத்துவந்து ஆரம்பக் கல்வி அளிக்க வழி செய்த அச்சட்டத்தில் பல்வேறு திருத்தங்களும் சீர்திருத்தங்களும் செய்யப்பட வேண்டி இருந்தன. குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சட்டம் கூறினாலும், ஒரு குறிப்பிட்ட காலம் வரை குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, பின்னர் அவர்களைப் பள்ளியிலிருந்து நிறுத்திக்கொள்ளவும் அச்சட்டத்தின் வலுவற்ற பகுதிகள் துணை செய்தன. எனவே, 1924ஆம் ஆண்டு அச்சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. ஆரம்பக்கல்வியை முடிக்கும் வரையிலும் பள்ளியிலிருந்து குழந்தைகளை விலக்கக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டது. ஆனாலும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர் மீது அபராதம் விதிக்க மாநகர ஆணையர் / நகர்மன்றத் தலைவர் /தாலுகா தலைவர்களுக்கு அதிகாரம் இருந்தாலும் அதனைச் செயலாக்க முடியாத நிலை 1947 வரைத்தொடர்ந்தது. பின்னர் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டது.

1920ஆம் ஆண்டிலேயே சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும், அதிகாரிகளும் அதிகாரங்களும் மாற்றப்பட்டாலும், சமூகத்தில் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் அவல நிலை தொடர்ந்துகொண்டேதான் இருந்தது. பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் வேலைகளுக்குச் செல்வதையும் துன்புறுவதையும் கண்கூடாகக் காண முடிந்தாலும் என்ன செய்வதென்று தெரியாத நிலைதான் தொடர்ந்தது.

இந்த நிலையை மாற்ற சமூகதளத்தில் சிலர் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியாததன் காரணத்தை உணர்ந்துகொள்ளச் சட்ட அறிவு மட்டும் போதாது, மக்கள்

அறிவு வேண்டும் என்பதன் சாட்சிகளாக மக்களின் உண்மையான தேவையைக் களைவதற்கு அயோத்திதாசப் பண்டிதர், சர்.பி.தியாகராயர், எல்.சி.குருசாமி போன்றவர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துவரவும் சமூக நிலையைத் தலைகீழாக்குவதற்கும் வெவ்வேறு தளங்களில் போராடிக்கொண்டிருந்தனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனிப்பட்ட அளவில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்துவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பிடி அரிசித் திட்டம் போன்றவற்றின் மூலமாக அங்கே பயின்ற மாணவர்களுக்கு உணவளிக்கப்பட்டது. சமுதாய முன்னேற்றம் என்னும் அளவில் இதுபோன்ற முன்னெடுப்புகளைப் பல்வேறு நபர்கள் தங்கள் தனிப்பட்ட முயற்சிகளில் செய்து வந்தனர்.

1894 முதல் 1909ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு இடையே பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள் சென்னையில் தேனாம்பேட்டை, மயிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் கர்னல் ஆல்காட் பள்ளிகளில், கர்னல் ஆல்காட் அவர்கள், பால்மர் அம்மையார் அவர்கள் உதவியின் மூலமாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு பள்ளியிலேயே மதியச் சிற்றுண்டி வழங்கி வந்தார்.

## தீர்மானம் நிறைவேற்றிய தியாகராயர்

1920ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று சென்னை மாநகராட்சி மன்றக் குழுவில் ஒரு குழந்தைக்கான ஒரு வேளை உணவிற்கு ஒரு அணா செலவில் மதிய உணவு அளிப்பது என்று அன்றைய மாமன்றத் தலைவர் சர்.பி.தியாகராயர் அவர்கள் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு அரசு வரலாற்றில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும் என்று ஒரு அறிவிப்பு வெளியானது அதுவே முதல்முறை.



**சர்.பி.தியாகராயர்**

அதுபற்றி சர்.பி.தியாகராயர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வரிகள் பின்வருமாறு:

"மாநகராட்சிப் பள்ளிகள் பலவும் ஒடுக்கப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமைந்துள்ளன. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கையும் அவர்களின் தினசரி வருகையும் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இதுகுறித்து ஆய்ந்து பார்க்கும்போது அம்மாணவர்களின் சமூகப் பொருளாதாரப் பின்புலம் முக்கியக் காரணமாகத் தெரியவருகின்றது. பெரும்பாலான குழந்தைகளின் குடும்பம் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு கூட வழங்கமுடியாத சூழலில்தான் அப்பெற்றோர் வாழ்ந்து வருகின்றனர். எனவே, அந்தக் குழந்தைகள் தங்கள் உணவுக்காக வேலைக்குச் சென்றால் மட்டுமே அந்தக் குடும்பத்திற்குப் போதுமான உணவைப் பெற முடிகிறது. எனவே, இதனைத் தவிர்க்கும்பொருட்டு மாணவர்களுக்குப் பள்ளியிலேயே மதிய சிற்றுண்டி வழங்க 16 செப்டம்பர் 1920ஆம் ஆண்டு சென்னை மாமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம். மேலும், ஆயிரம் விளக்கு பகுதியில் அமைந்துள்ள மாநகாராட்சிப் பள்ளியில் இத்திட்டம் சிறிய அளவில் முன்னோட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. அதன் வெளிப்பாடுகள் ஊக்கமளிப்பதாக இருந்ததால், சேத்துப்பட்டு மற்றும் மீர்சாஹிப் பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. மேலும், 7 பள்ளிகளுக்கு இதனை விரிவு செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது," என்று 17 பிப்ரவரி 1922ஆம் ஆண்டு மெட்ராஸ் அரசின் தன்னாட்சித்துறைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், அன்றைய மெட்ராஸ் மாநகரத் தலைவரும் சட்டமன்றக் குழுவின் உறுப்பினருமான திவார் பகதூர் சர் பி. தியாகராயர்.

1920ஆம் ஆண்டே பள்ளி மாணவர்களுக்குப் பகல் சிற்றுண்டி வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 1922ஆம் ஆண்டு பல இடங்களில் தொடங்கி நடத்தப்பட்டாலும், அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து

செயல்படுத்தவும் விரிவாக்கவும் தேவையான நிதியைப் பெறுவதில் அன்றைய நீதிக்கட்சி அரசிற்கும் மாநகரத் தலைவர் சர்.பி.தியாகராயருக்கும் பெரும் சிக்கல் நிலவியது. திட்டத்திற்கான நிதி வேண்டித் தொடர்ந்து பிரிட்டிஷாருக்கு மனுவும் கடிதங்களும் அளிக்க வேண்டியிருந்தது. அதற்கான நிதியினைக் கோரியபோது, இத்திட்டம் சட்டத்திற்குப் புறம்பானது என்று உள்ளூர் நிதிக் கணக்காயர் நிராகரித்ததாகவும் மாணவர்களின் நலன் கருதி அத்திட்டத்திற்கான நிதியினை வழங்குமாறும் சர்.பி. தியாகராயர் அவர்கள் பிப்ரவரி 17, 1922 அன்று தன்னாட்சித் துறைச் செயலாளருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளார். பின்னரும் நிதி கிடைக்கப்பெறாமல், மீண்டும் 23 மே 1922 அன்று மற்றுமொரு கோரிக்கை மனுவையும் அனுப்பியிருக்கிறார்.

நீதிக்கட்சி ஆட்சியின்போது அமலாக்கப்பட்ட பகலுணவுத் திட்டத்திற்குச் சென்னை நகரத்தில் நல்ல வரவேற்புக் கிடைத்தது மட்டுமல்லாமல், பகலுணவு வழங்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் சேர்க்கையும் வருகையும் அதிகரித்தன.

## குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு

பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்ததில் மட்டுமல்லாமல் அவர்களுக்கு வேண்டிய மருத்துவ ஆய்வுகளையும் முதன்முதலாகப் பள்ளிகளிலேயே செய்ததும் தமிழ்நாடும் நீதிக்கட்சியும்தான்.

பள்ளியில் பயிலும் குழந்தைகளின் சமூக பொருளாதார நிலைகளைக் கருத்தில் கொண்டதோடல்லாமல், மாணவர்களின் உடல்நலன் குறித்து மருத்துவ ஆய்வினை மேற்கொண்டு உடல்நலன் குன்றிய மாணவர்கள், பள்ளியில் வழங்கப்படும் மதிய உணவு பெறத் தகுதியானவர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துப் பொருட்களும் இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டன.

இவ்வாறு குழந்தைகளின் சமூக பொருளாதாரப் பின்னணி,உடல்நலன் எனப் பலவற்றையும் கருத்தில்கொண்டு மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பெற்றோர் வருமானம் மாதம் ரூ.50க்குக் குறைவாக ஈட்டுவது அளவுகோளாக நிருணயிக்கப்பட்டது.

ஆண்டின் 200 நாட்கள் பள்ளியில் மதிய உணவு வழங்கப்பட்டது. தினமும் ஒரே வகையான உணவாக அல்லாமல்,

| | |
|---|---|
| திங்கள் | – சோறு, சாம்பார். |
| செவ்வாய் | – தயிர், சோறு, கொத்சு |
| புதன் | – புளிச்சோறு, கூட்டு |
| வியாழன் | – கதம்பம் |
| வெள்ளி (இந்துக்கள்) | – சோறு, சாம்பார் |
| சனி (இஸ்லாமியர்) | – சோறு, சாம்பார் |

இந்துக்களுக்கு சனி மற்றும் ஞாயிறு, இஸ்லாமியருக்கு வெள்ளி மற்றும் ஞாயிறு – விடுமுறை

## மையப்படுத்தப்பட்ட பொது சமையலறைகள்

மாநகராட்சிப் பள்ளிகளில் வழங்கப்பட வேண்டிய உணவு மொத்தமும் 3 மையங்களில் சமைக்கப்பட்டன. ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டு அவரது கண்காணிப்பில் சமையல் நடைபெற்றது. சரக சுகாதார ஆய்வாளர் மூலமாக பணிகளும் உணவுத் தரமும் திடீர் சோதனைகளின் வழியாகக் கண்காணிக்கப்பட்டது. உணவு வழங்கப்பட வேண்டிய பள்ளிகள், மாணவர்களின் எண்ணிக்கை, சமைக்கத் தேவையான உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், தினசரி சமைக்கப்படும் உணவின் அளவு உள்ளிட்ட அனைத்துத் தரவுகளும் இந்தப் பொது சமையற்கூடங்களில் அட்டவணையிடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு நாளும் காலை 7 மணியளவில் பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய உணவு சமைத்துத் தயார் நிலையில் வைக்கப்பட்டு, 2 மணி நேர இடைவெளியில் 6 வாகனங்களில் 3 முறை பயணப்பட்டு அனைத்துப் பள்ளிகளுக்கும் 12 மணிக்கு முன்னதாக உணவு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும், விறகு அடுப்புகளுக்கான விறகுச் செலவும் சமைக்கும் நேரமும் அதிகமாக இருந்ததால், நீராவிக் கொதிகலன்கள் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

## சென்னை மாநகராட்சியில் திட்டத்தின் வெளிப்பாடு

1922 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம், 1925ஆம் ஆண்டு 500 மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, பின்பு 1960ஆம் ஆண்டில் 33,668 மாணவர்களோடு 302 பள்ளிகளில் செயல்பட்டுவந்தது.

(Report of the School Meals and School Improvement Schemes Assessment Committee, 1961)

## மதிய உணவுத் திட்டம் தடைப்பட்ட காலம்

3 மார்ச் 1947 அன்று அரசு வெளியிட்ட அரசாணை எண்.386இல் மாகாணத்தின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மதிய உணவுத் திட்டத்தைத் தொடர முடியாத நிலை இருப்பதால் 1 ஏப்ரல் 1947 அன்று முதல் மதிய உணவுத் திட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## ஹரிஜன நலத்துறையின் மதிய உணவுத் திட்டம்

1926ஆம் ஆண்டு ஹரிஜன நலத்திட்ட வேலைகள் தொழிலாளர் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. இத்துறையின்கீழ் இயங்கிவந்த பள்ளிகளில் பயிலும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் கட்டாயம் 5ஆம் வகுப்பு வரை படித்து முடிப்பதை உறுதிசெய்திடும் வகையில் சோதனை முயற்சியாக மேற்கு கோதாவரி, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு மற்றும் நெல்லூர் ஆகிய பகுதிகளில் 8 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதியைச் சமன் செய்ய முறையாக இயங்காத ஓராசிரியர் பள்ளிகளின் இயக்கம் நிறுத்தப்பட்டன.

முதற்கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டபோது இந்து மதத்தைச் சேர்ந்த தேர்வு செய்யப்பட்ட சில சமூகங்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே பயனளிக்கப்பட்டது. 1941ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அந்த 8 பள்ளிகளிலும் பயின்றுவந்த கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய குழந்தைகளும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இந்த 8 பள்ளிகளும் அமைந்துள்ள மாவட்டங்களின் ஆட்சியர்கள் மூலமாகப் பெறப்பட்ட அறிக்கையிலிருந்து அப்பள்ளிகளில் முதலாம் வகுப்பு மாணவர் சேர்க்கை கணிசமாக அதிகரித்தது கண்டறியப்பட்டது. மாணவர்கள் வருகையும் சீராக இருந்தது. மதிய உணவுத் திட்டத்தால் பலனடைந்த மாணவர்கள் வகுப்பறைகளில் ஆர்வமுடனும் உற்சாகத்துடனும் இயங்குவதைக் காண முடிந்தது.

1942 – 1943ஆம் நிதியாண்டில் 14 மாவட்டங்களில் ரூ.5.38 இலட்சம் செலவில் தேர்வு செய்யப்பட்ட 600 தொழிலாளர் பள்ளிகளுக்கு இத்திட்டத்தை விரிவாக்கும் கோரிக்கையைத் தொழிலாளர் நலத்துறை ஆணையர் அரசிடம் வழங்கியதையடுத்து முதல் தவணையாக 1942–1943ஆம் ஆண்டிற்கு ரூ.25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், 1943–1944ஆம் ஆண்டிற்கு ரூ.25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், 1944–1945 ஆம் ஆண்டில் ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வாறு பல்வேறு கட்டங்களாக அமலாக்கப்பட்ட திட்டங்கள் குறித்து தொழிலாளர் நலத்துறை ஆணையர் அறிக்கையில், இத்திட்டத்தினால் பெருமளவிற்குக் கல்வி வளர்ச்சி சாத்தியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். திட்டத்தை அனைத்துத் தொழிலாளர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த 1945–1946 ஆண்டிற்கு ரூ.6,74,000 ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை வைத்துள்ளார்.

மாகாணத்தின் அனைத்துத் தொழிலாளர் பள்ளிகளிலும் குறிப்பிட்ட சமூகங்களைச் சேர்ந்த இந்து மற்றும் கிறிஸ்தவக் குழந்தைகளுக்குத் திட்டத்தை விரிவுபடுத்த ரூ.6,74,900 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இக்காலகட்டங்களில் தொழிலாளர் நலத்துறையின்கீழ் ஹரிஜன நலக்குழு செயல்பட்டுவந்தது. பின்னர், தொழிலாளர்களின் சிக்கல்களில் முறையாகக் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருந்ததாலும் ஹரிஜன நலச் செயல்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையை உணர்ந்ததாலும் 1949ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று ஹரிஜன நலத்துறை தனித்துறையாக உருவாக்கப்பட்டு அதற்கான இயக்குநர் நியமனமும் நடைபெற்றது. துறை தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னர், தொழிலாளர் துறையின்கீழ் செயல்பட்டுவந்த மதிய உணவுத்திட்டம் ஹரிஜன நல்வாழ்வுத் துறையின்கீழ் செயல்படத் தொடங்கியது.

1960ஆம் ஆண்டு நிலவரப்படி 3 உயர்நிலைப் பள்ளிகள், 38 பட்டியல் பழங்குடியினர் பள்ளிகள், 23 சீர்மரபினர் பள்ளிகள், 24 திண்ணைப் பள்ளிகள், 346 கள்ளர் பள்ளிகள் உள்ளடங்கிட 832 ஹரிஜன நலப்பள்ளிகள் ஹரிஜன நலவாழ்வுத்துறையின்கீழ் செயல்பட்டு வந்தன. 88,214 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயின்று வந்தனர். இவர்களில் 86,000 மாணவர்கள் மதிய உணவுத் திட்டத்தால் பலன்பெற்று வந்தனர்.

ஹரிஜன நலத்துறை பள்ளிகளில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு மட்டுமில்லாமல் குறிப்பிட்ட சில பகுதிகளில் சாதி பேதங்களைக் களையும் நோக்கில், ஹரிஜன நலத்துறை பள்ளிகளில் பயிலும் ஹரிஜன் அல்லாதார், ஹரிஜன நலத்துறை சாராத பள்ளிகளில் பயிலும் ஹரிஜன மாணவர்கள் ஆகியோருக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. இதற்கான செலவுகளில் 50 ரூபாய் மாநில அரசும், 50 ரூபாய் இந்திய அரசும் (மானியம்) ஏற்றுக்கொண்டனர்.

1947ஆம் ஆண்டு போதிய நிதி ஆதாரங்கள் இல்லை என்ற காரணம் கூறப்பட்டு மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டபோதும், ஹரிஜன நலத்துறைப் பள்ளிகளில் அத்திட்டம் தொடர்ந்து இயங்கி வந்துள்ளது.



## இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதிய உணவுத் திட்டம்

1955ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த சீரிய முயற்சிகள் அன்றைய பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் திரு.நெ.து. சுந்தரவடிவேலு அவர்களால் முன்னெடுக்கப்பட்டன. 1925ஆம் ஆண்டே மதிய உணவுத் திட்டம் சென்னையின் ஆரம்பப் பள்ளிகளில் அமல்படுத்தப்பட்டிருந்தாலும் தமிழ்நாடு முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் இயங்கி வந்த ஆரம்பப் பள்ளிகளில் உள்ளாட்சி நிருவாகம், அரசு மற்றும் மக்கள் பங்களிப்புடன் இயங்கிவந்த மதிய உணவுத் திட்டம் 1947ஆம் ஆண்டு நிதிநிலையின் காரணமாக நிறுத்தப்பட்டது. அதே வேளையில் தொழிலாளர் நலத்துறையின்கீழ் செயல்பட்டுவந்த பள்ளிகளில் ஹரிஜன நலத்திட்டத்தின் மூலமாகவும்



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாநகர நிருவாகத்தின் மூலமாகவும் அரசின் பெரும் துணை இன்றியும் மதிய உணவுத் திட்டம் அமலில் இருந்தது. தமிழ்நாடு முழுவதும் கட்டாய ஆரம்பக் கல்வி என்னும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வந்தாலும் மக்கள் தங்கள் குழந்தைகளை அதில் இணைக்க பெரும் ஆர்வம் காட்டாத நிலையில் மதிய உணவுத் திட்டம், வறுமையை மீறிக் கல்விக் கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்ப மக்களைத் தூண்டியது. எனவே இத்திட்டத்தை மீண்டும் செயலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று 1947க்குப் பிறகு பலமுறை முயற்சி மேற்கொள்ளப்பட்டும் நிதிச் சிக்கல் என்னும் காரணத்தினால் செயல்படுத்த முடியாததாகவே இருந்தது. 1954ஆம் ஆண்டு பொதுக்கல்வி இயக்குநராகப் பொறுப்பேற்ற திரு.நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் அன்றைய முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களிடம் தொடர்ந்து இத்திட்டத்தினைப் பற்றிப் பேசிவந்தார். 1955ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் பணிகள் நடைபெற்றன. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி

மானியம் கிடைக்கும் என்பதால் பொதுக்கல்வி இயக்குநர் திரு.நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை கல்வித்துறையின் சார்பில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இணைக்க சீரிய முயற்சிகளை எடுத்தார். முதலமைச்சர் காமராசர் நேரடியாகத் திட்டத்தைப்பற்றி அறிந்து பொதுக்கல்வி இயக்குநரைத் திட்டம் தீட்ட அறிவுறுத்தியிருந்தாலும் அன்று உயர் பொறுப்பிலிருந்த பல அதிகாரிகளும் அமைச்சர்களும் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கவே செய்துள்ளனர்.

மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களை ஆய்வு செய்ய மூவர் அடங்கிய உயரதிகாரிகள் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அன்றைய வளர்ச்சி ஆணையர் திரு. டி.என்.எஸ். ராகவன், நிதிச்செயலர் திரு. டி.ஏ. வர்கீஸ் மற்றும் கல்விச் செயலர் டி.எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் குழு மதிய உணவுத் திட்டம் பற்றிய வரைவறிக்கையைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். ஆனால் கல்வியாளர் திரு.நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள், "முதல்வர் காமராசரே மாநாட்டில் நேரடியாக அறிவித்தது இத்திட்டம்" என்று சுட்டிக்காட்டிய பிறகு அமைச்சரவை முடிவுக்கு அக்கோப்புகள் நகர்ந்தன.

அமைச்சரவைக் கூட்டத்திலும் திட்டத்திற்கு எதிர்மறையான மற்றும் விமர்சனக் கருத்துக்களே பெருவாரியாக இருந்தன. காண்டிராக்டர்கள் பலன் அடைகிறார்கள், ஆசிரியர்கள் சாப்பாட்டை எடுத்துச் செல்கிறார்கள் என்று கடுமையாக இத்திட்டம் எதிர்க்கப்பட்டது. "காண்டிராக்டர் மூலம் நடத்தக் கூடாது என்பதைப் பதிந்துகொள்ளுங்கள்: பொதுமக்கள் குழுவே திட்டத்தை நடத்த வேண்டும். ஆசிரியர்கள் பள்ளியில் குழந்தைகளோடு அமர்ந்து சாப்பிடலாம் என்று ஆணையிட வேண்டும். இந்த முடிவுகளோடு பகல் உணவுத் திட்டத்தை அப்படியே ஏற்கிறோம்" என்று முதலமைச்சர் காமராசர் அக்கூட்டத்திலேயே அறிவித்த பிறகு அமைச்சரவையின் ஒப்புதலோடு தொடக்கப்பள்ளி பகல் உணவுத் திட்டம் முழுமையாக ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றது.

சில தினங்களில் தமிழ்நாடு (மதராஸ்) ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தையும் பரிசீலிக்க டெல்லி திட்டக்குழுக் கூட்டத்தில் இருந்து

வந்த அழைப்பை அடுத்து அனைத்துத்துறை இயக்குநர்கள், செயலர்கள், முதலமைச்சர் திரு.காமராசர், நிதி அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம், அமைச்சர் திரு.மீ. பக்தவத்சலம் ஆகியோர் டெல்லி சென்றனர்.

தமிழ்நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை பற்றாக்குறையாகவே இருந்தது. தமிழ்நாடு கோரியதைவிட ரூ.5 கோடிகள் பற்றாக்குறையாக ஒதுக்கப்பட்டபோது, மீண்டும் பகல் உணவுத் திட்டத்தைச் சுருக்கலாம்/வெட்டலாம் என்று கருத்துக்கள் வந்தபோது, "பகல் உணவுத் திட்டத்தில் கைவைக்காதீர்கள்" என்று அங்கும் முதலமைச்சர் காமராசர் சொன்ன சொல் ஏற்கப்பட்டு அத்திட்டம் தப்பிப் பிழைத்து தமிழர்களுக்குக் கிடைத்தது.

இதைப் பற்றிக் குறிப்பிட்ட அன்றைய பொதுக்கல்வி இயக்குநர் திரு. நெ.து. சுந்தரவடிவேலு, "கயிறு இழுத்தல் போட்டிக்குப் பிறகு பகல் உணவுத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்" என்று குறிப்பிட்டார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மதிய உணவுத் திட்டம் / பகல் உணவுத் திட்டம் சேர்க்கப்பட்டாலும் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் இடம் பெற்றாலும், போதுமான நிதி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படவில்லை. மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மக்கள் பங்களிப்பு ஆகியவற்றின் மூலமாகத் திரட்டப்பட்ட நிதியிலிருந்து மதிய உணவுத் திட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது.

1971ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்துக் குறைபாடுகளைப் போக்கும் வகையில் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் "சிறப்பு ஊட்டச் சத்துணவுத் திட்டம்" அமல்படுத்தப்பட்டது. முதலில் ஒன்றிய அரசின் முழுமையான நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்ட திட்டம் பின்னர் முழுமையாக மாநில அரசே ஏற்றது. முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளிம்புநிலைப் பகுதிகளில்

6ஆவது மாதம் முதல் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் புரதம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் ஆகிய ஊட்டங்கள் நிறைந்த சத்தான பொருட்களையும் தேவைப்படும்பட்சத்தில் போதிய சத்து மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்ட போதிலும் விளிம்பு நிலைப் பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்திற்குச் சிறப்புக் கவனம் கொடுத்துச் செயல்படுத்தியது. மக்களைச் சமூகப் பொருளாதார ரீதியாக முன்னேற்றும் முயற்சிகளில் கவனம் செலுத்துகிற வேளையில் அதற்கு மக்களைத் தயார்படுத்தப் பலவற்றையும் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு கவனத்தில் கொண்டே செயல்பட்டது. 1970களில் கண்ணொளித் திட்டம் மூலமாகத் தமிழ்நாடு முழுவதும் கண் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கண் பரிசோதனை, கண்ணாடிகள், கண் சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. 1972இல் நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (Tamil Nadu Civil Supplies Corporation) அரிசி, கோதுமை, பருப்பு, மண்ணெண்ணெய், ரவா, உணவு எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் மக்களிடையே பொது விநியோகம் செய்வதற்காகத் தமிழ்நாடு அரசு 1972ஆம் ஆண்டில் நிறுவியது. இவ்வாறு பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து மக்கள் மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்பட்டது.

1970 முதல் 1973 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு ஊட்டச்சத்து ஆய்வு என்று மாநிலம் முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. சர்வதேச வளர்ச்சிக்கான ஐக்கிய அமெரிக்க முகமையின் துணையோடு ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அந்த ஆய்வில் பல்வேறு முக்கியமான கூறுகள் கண்டறியப்பட்டன. அவை பின்வருமாறு:

தமிழ்நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களுக்கு அன்றாடம் தேவையான ஆற்றல் அளவைவிட 80 ரூபாய்க்குக் குறைவான கலோரிகளையே உட்கொள்கின்றனர்.

சிலருக்குப் புரதக் குறைபாடு இருந்தாலும் பெரும்பான்மையாக உணவாற்றல் தேவையே அதிகமாக இருந்தது.

3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துப் போதாமை அதிகரித்துள்ளது. இதனால் 3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணம் அதிகரிக்கிறது.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு உள்ள ஆரோக்கியக் குறைபாடுகளும் குழந்தையின் வளர்ச்சிக்கு அது பாதிப்பை ஏற்படுத்துவதையும் கண்டறிய முடிந்தது.

இவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் களைவதற்காகச் செயல்படுத்தப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் கிட்டத்தட்ட 25க்கும் அதிகமான திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன. அவற்றுக்காக மாநில அரசு கிட்டத்தட்ட 9 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவிட்டது. பெருந்தொகையை ஊட்டச்சத்துத் திட்டங்களுக்குச் செலவிட்டு வந்த காரணத்தால் மேலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில் தமிழ்நாடு அரசு, சர்வதேச வளர்ச்சிக்கான ஐக்கிய அமெரிக்க முகமையிடம் நிதி உதவி கோரியது. 1980ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட Tamilnadu Integrated Nutrition Programmeக்கான திட்ட ஆய்வுப் பணிகள் 1970ஆம் ஆண்டே தொடங்கப்பட்டுவிட்டன.

1970இல் ஊட்டச்சத்துக் கணக்கெடுப்பு தொடங்கி 1973வரையில் ஆய்வு நடத்தப்பட்டு அமெரிக்க உதவியுடன் திட்டமிடப்பட்ட தமிழ்நாடு

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், 1980ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சமூக நலத்துறை, சமூக நல ஆணையம், பொதுக்கல்வி இயக்ககம் மற்றும் தடுப்பு மருந்துத்துறை ஆகியவை உலக வங்கி நிதி உதவியுடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியது. 1980ஆம் ஆண்டு அக்டோபரில் தொடங்கி 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் Tamil Nadu Integrated Nutrition Programme - Phase 1 செயல்படுத்தப்பட்டது.

1,500 பேர் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமப் பகுதியிலும் சமூக ஊட்டச் சத்து மையம் அமைக்கப்பட்டது. இதற்கான பிரத்தியேகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுப் பிறந்து 6 மாதங்களான குழந்தைகள் முதல் 3 வயதான குழந்தைகள் வரை கணக்கெடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டனர். அவர்களது உடல் எடை ஒவ்வொரு மாதமும் கணக்கிடப்பட்டுத் தரவரிசைப்படுத்தப்பட்டது. Grade I/II/III/IV என்று குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்ற உணவு முறை பரிந்துரைக்கப்பட்டு உணவும் ஊட்ட மருந்துகளும் வழங்கப்பட்டன. வறுத்து அரைத்த தானியங்களை வெள்ளத்தோடு கலந்து சத்துமாவு தயாரிக்கப்பட்டு அக்குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஏற்ற ஊட்டச்சத்துப் பொருட்கள் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்கு ஏற்ற உணவு வகைகளை வழங்கி அவர்களது உடல் நலனைப் பேணுவதற்கான பயிற்சிகள் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலமாகக் குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை வைட்டமின் ஊசிகள் (Vitamin A prophylaxis), ஆண்டுக்கு 3 முறை குடற்புழு நீக்க மருந்துகள் (Vitamin A prophylaxis), கர்ப்பிணிப் பெண்களுக்கு இரும்புத் தாது மற்றும் இலைக்காடி உயிர்ச்சத்து மருந்துகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் – 1இல் 385 ஊரகப் பகுதிகள் கண்டறியப்பட்டு 6 மாவட்டங்களில் 177 பகுதிகள் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டன. இதனிடையே 1975ஆம் ஆண்டு

ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்து நடைமுறைப்படுத்தியது. அதன் பின்னர் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்த 177 பகுதிகளில் 31 பகுதிகள் ஒன்றிய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படத் தொடங்கியது.

TINP எனப்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் – 1இன் பயன் வெளிப்பாடு குறித்த விரிவான ஆய்வினைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. அந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு வீதம், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு வீதம் ஆகியவை பெரியளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. TINP திட்டம் செயல்படுத்தப்பட்ட பகுதிகள், ஏனைய பகுதிகளைவிடப் பல மடங்கு முன்னேற்றம் அடைந்திருந்தன.

இதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாடு அரசு TINP - Phase II என்று தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் – 2ஆம் பகுதியைச் செயல்படுத்த முடிவு செய்தது. இம்முறை 385 ஊரகப் பகுதிகளில் 316 பகுதிகள் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டன. 3 கோடியே 28 இலட்சம் மக்கள் இதன் பயனாளர்களாக இணைக்கப்பட்டனர். கடந்த பகுதியில் பிறந்து 3 மாதங்கள் முதல் 3 வயதான குழந்தைகள் வரை பயனடைந்த நிலையில் இம்முறை பிறந்த குழந்தைகள் முதல் 6 வயதான குழந்தைகள் வரை திட்டத்தின் பயனாளிகளாக முடிவு செய்யப்பட்டது. TINP - II திட்டத்தில் 9,194 சமூக ஊட்டச்சத்து மையங்கள் செயல்பட்டன.

1980ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் முதற்கட்டமாகச் செயல்படுத்தப்பட்டபோதே முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் தலைமையிலான தமிழ்நாடு அரசு இன்னும் ஒரு முக்கியமான திட்டத்தைச் செயல்படுத்தியது. 1920ஆம் ஆண்டு தீர்மானம் செய்யப்பட்டு 1922இல் சோதனை முயற்சியாகத் தொடங்கி 1925ஆம் ஆண்டு சென்னை மாநகர் முழுவதும் செயல்படுத்தப்பட்டு 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் விரிவு செய்யப்பட்ட மதிய உணவுத் திட்டம்

1982ஆம் ஆண்டு மிகப்பெரிய அளவில் விரிவுபடுத்தப்பட்டது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 1982ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. முந்தையத் திட்டங்களைவிட இந்தமுறை திட்டம் மிகப்பெரிய மாற்றங்களைக் கண்டது.

மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால் ஊரகப்பகுதிகளில் 01.07.1982 அன்றும் நகர்ப்புறங்களில் 15.09.1982 அன்றும் சத்துணவுத்திட்டம் தொடங்கப்பட்டது.

60 இலட்சம் குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டத்தால் பயனடைவர்.

முன்பிருந்த 4,343 குழந்தைகள் காப்பகங்கள் தவிர, புதியதாக 15,501 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களும் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படும்.

15,500க்கு மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்களுக்குப் புதியதாக 15,500 மேற்பட்ட குழந்தைகள் நல அதிகாரிகள் நியமனம்.

குழந்தைகள் காப்பகங்கள் உதவியாளர், சமையல்காரர்கள் என்று ஏறத்தாழ இலட்சம் பேருக்கு ஏழைத் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை.

கிராமப்புறங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.38,000 செலவில் உணவுக்கூடம் அமைக்கப்படும்.

பழைய திட்டத்தில் அரசு வழங்கும் 10 காசுகளோடு (ஒரு குழந்தைக்கு) உள்ளாட்சி அமைப்புகள் 5 காசுகள் வழங்கி, மேலும் சில உள்ளூர் பிரமுகர்களின் உதவியுடனுமே செயல்பட வேண்டி இருந்தது மாற்றப்பட்டு புதிய திட்டத்திலோ, மதிய உணவு ஒன்றுக்கு ஆகும் 45 காசு செலவு முழுவதையும் அரசே நேரடியாகத் தந்து விடுகிறது.

குழந்தைகள் ஒரே வகையான உணவைத் தினந்தோறும் உட்கொள்வதால் குழந்தைகளுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதைக் கருதிக் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு 28 உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவ்வாறு தயாரித்து வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டது.

இத்திட்டத்தினைப் பற்றி முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனே வானொலி வழியாக மக்களுக்கு உரையாற்றினார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் நேரடியாக இத்திட்டம் குறித்துமக்கள்மத்தியில்விளம்பரங்களைவெளியிட்டும்திரையரங்குகளில் விளம்பரம் வெளியிட்டும் பிரபலப்படுத்தியது, இத்திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்த்து குழந்தைகளைப் பள்ளியை நோக்கிக் கவர உதவியது.

இத்திட்டத்தின் வெளிப்பாடாகப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையும் தினசரி வருகையும் பெரும் முன்னேற்றத்தைக் கண்டது ஆய்வுகளில் கண்டறியப்பட்டது.

சத்துணவுத் திட்டத்தின் மற்றுமொரு பாய்ச்சல் 1989ஆம் ஆண்டு நடந்தது. சைவ உணவு வகைகள் மட்டுமே வழங்கப்பட்டுவந்த சத்துணவுத் திட்டத்தில் முதன்முதலாக முட்டை வழங்க வழிவகை செய்தார் மாண்புமிகு முத்தமிழறிஞர் முதலமைச்சர் கலைஞர். 31.03.1989 அன்று சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிட்டு 03.06.1989 முதல் சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு முட்டை வழங்கப்படும் என்று 26.05.1989 அன்று அரசாணை வெளியிட்டது மாண்புமிகு முத்தமிழறிஞர் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு.

பின்னர் 1998–1999ஆம் ஆண்டு (அரசாணை (நிலை) எண் 73 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 27.04.1998) கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் வாரம் ஒருமுறை முட்டை வழங்கப்படும் என்று அரசாணை வெளியிட்டது.

சத்துணவில் முட்டை வழங்கப்பட்டது சத்துணவுத் திட்ட வரலாற்றில் முக்கியமான மைல்கல்லாகப் பார்க்கப்படுகின்றது. குழந்தைகளுக்குப் போதுமான புரதச் சத்தை அளிப்பதற்கு முட்டை மிகப் பயனுள்ளது என்று இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு ஆய்வறிஞர்களும் இத்திட்டத்தைப் பாராட்டியுள்ளனர். தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி சத்துணவில் முட்டை என்னும் இத்திட்டம் இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்குகின்றது. இதன் பிறகே பல்வேறு மாநிலங்களும் தங்கள் மாநிலத்தின் சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்குவதைப் பரிசீலித்தனர்.

## சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களின் உரிமை

அதேவேளையில் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் இருந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. இவற்றில் 65,000 சத்துணவு மையங்களும், 54,439 அங்கன்வாடி மையங்களும் இருந்தன. இவற்றில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வந்தனர். 1989ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு இவர்களை அந்தந்த ஊராட்சியின் நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் என வகைப்படுத்தியது.

மேலும் 2007 முதல் பணிக்காலத்தில், காலமான சத்துணவு/ அங்கன்வாடி ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

2006–2011 வரையிலான மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு சத்துணவு பெண் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டது.

1996–2001 வரையிலான மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சத்துணவுப் பணியாளர்கள் குடும்பநல நிதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு,

பணிக்காலத்தில் காலமான சத்துணவுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்று ரூ.1,50,000 குடும்ப நல நிதி வழங்கப்பட்டது.

சத்துணவு சமையலர்/உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 55லிருந்து 58 ஆக உயர்த்தித் தரப்பட்டது.

சத்துணவு/அங்கன்வாடி பணியாளர்களுக்குச் சிறப்பு சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டு அரசின் பங்குத் தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டது.

ரூ.200–5–250–10–400 என அவர்கள் பெற்று வந்த ஊதியம் ரூ.600–10–700–20–1,100 என உயர்த்தி 01.01.1996 முதல் முன் தேதியிட்டு வழங்கப்பட்டது. அவர்களது ஊதியம் இரண்டாவது முறையாக 01.09.2006 முதல் ரூ.1,300–20–1,500–25–2,000 ஆகவும் மூன்றாம் முறையாக ஊதியக் குழு பரிந்துரைப்படி ரூ.2,500–500 அத்துடன் தர ஊதியம் ரூ.500 என 01.09.2006 முதல் முன் தேதியிட்டு வழங்கப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களில் பத்தாண்டுக் காலம் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வும், 20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மற்றொரு ஊதிய உயர்வும் வழங்கியது.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் அனைவருமே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் சிறப்பூதியம் வழங்கப்பட்டது.

சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் அவர்களுக்கு முதன்முறையாக 01.06.2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி,

நகர ஈட்டுப்படி ஆகியவைகளுக்கும் 100 ரூபாய் மருத்துவப்படியும், 2,000 ரூபாய் பண்டிகை முன்பணமும் வழங்கப்பட்டது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் இல்லாதிருந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களில் சமையலருக்கும், முதல்நிலை அங்கன்வாடி ஊழியர்களுக்கும், சமையல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் நிலை அங்கன்வாடி ஊழியர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூ.700, ரூ.600, ரூ.500 என்று முதன்முறையாக ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

அவர்களுக்கு எந்த பதவி உயர்வும் வழங்கப்படாதிருந்த நிலை மாற்றி சத்துணவு உதவியாளர்களுக்குச் சமையலர்களாகவும், சமையலர் மற்றும் உதவியாளர்களுக்குச் சத்துணவு அமைப்பாளராகவும் என மொத்தம் 1,020 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டன. 01.04.2010 முதல் இவர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

சிறப்பு சேமநல நிதித்திட்டம் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இரண்டு இலட்ச ரூபாய் வரை மருத்துவ வசதி தொடங்கப்பட்டது.

ஆசிரியர் பட்டயப்படிப்பு மற்றும் பி.எட் முடித்த சத்துணவு மற்றும் குழந்தை மைய பணியாளர்களுக்கு ஆசிரியர் பணி வழங்கக் கழக அரசு ஆணை வெளியிட்டதைத் தொடர்ந்து, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் சிறப்புத் தேர்வு நடத்தும் பொருட்டு தகுதிவாய்ந்த 59 அங்கன்வாடி பணியாளர்களுக்கும், 405 சத்துணவு பணியாளர்களுக்கும் பெயர் பட்டியல் 04.10.2010 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடி பணியாளர்களும், குறைந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 1,488 ரூபாயும் உயர்ந்தபட்ச ஊதியமாக 2,158 ரூபாயும் பெற்று வந்தனர். அந்நிலை மாற்றப்பட்டு அவர்கள் குறைந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 4,911 ரூபாயும் அதிகபட்ச ஊதியமாக மாதந்தோறும் 5,471 ரூபாயும் பெற்றனர்.

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோருக்கு தமிழகத்தில் வழங்கப்படும் சலுகைகளும் திட்டங்களும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வாரத்தின் அத்தனை நாட்களும் முட்டை!

சத்து வழங்குவதில் மட்டுமல்ல சைவம் தான் சிறந்தது என்னும் ஆய்வோ, அடிப்படையோ அற்ற கூற்றுகளைச் சமூகத்தில் தூள் தூளாக்கியது முட்டை வழங்கும் திட்டம். ஆனால் 2001ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டது.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான ஆட்சியின்போது முட்டை வழங்கும் முறையில் அதிருப்தி நிலவுவதாகக் கூறி முட்டைக்கு மாற்றாக ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில் ஏதேனும் மூன்று நாட்களில் முறையே 20 கிராம் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை (முழு உருவில்) மற்றும் பிறிதொரு நாள் 20 கிராம் பச்சைப் பயறு (முழு உருவில்) வழங்க 06-09-2001அன்று நடந்த சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டு முட்டை வழங்கல் நிறுத்தப்பட்டது.

ஆனால் 2006இல் மீண்டும் காமராஜர் பிறந்தநாளான ஜூலை 15 முதல், வாரம் இரண்டு முட்டைகள் வழங்க ஆணை பிறப்பித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மேலும், 15.07.2007 முதல் வாரம் மூன்று முட்டைகள் வழங்கப்பட்டன. திங்கள், புதன், வியாழக்கிழமைகளில் முட்டை வழங்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை வேக வைத்த 20 கிராம் கொண்டைக் கடலை அல்லது பச்சை பயிறு வழங்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை 20 கிராம் வேக வைத்த உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் இத்திட்டத்தால் பயன்பெறும் 71 இலட்சம் குழந்தைகளில் 90,000 குழந்தைகள் முட்டை சாப்பிடுவதில்லை என்பதால் அவர்களுக்குச் சத்துணவுடன் வாழைப்பழம் வழங்க அரசு முடிவு செய்தது. இந்த திட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஜூலை 15, 2008 அன்று சென்னையில் தொடங்கிவைத்தார். அதன் பின்னர் திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் முட்டை சாப்பிடாத 90,000 குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு சென்னை கோட்டூர்புரத்தில் ரூ.1,80 கோடியில் அமைக்கப்பட்ட உலகத் தரம் வாய்ந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்துவைத்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாகப் பள்ளிக்கூடம் நடைபெறும் 5 நாட்களிலும் இனி முட்டை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

பின்னர் 20-03-2013 முதல் சத்துணவுத் திட்டத்தில் கலவை சாதங்கள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்.

தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் 2022ஆம் ஆண்டில் நூற்றாண்டை எட்டுகிறது. சென்னை ஆயிரம் விளக்கில் ஒரு பள்ளியில் தொடங்கிய திட்டம் வாரந்தோறும் முட்டை என்று விரிவடைந்து இச்சமூகத்தின் மாணவர் சமுதாயத்தை உடல் ஆரோக்கியத்திலும் கல்வியிலும் மேம்படுத்தப் பெரும்பங்காற்றியுள்ளது.

பெரும்பாலான பிள்ளைகள் காலையில் புறப்படும்போது சாப்பிடாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்ற நிலை தமிழ்நாட்டில் இருப்பதை அறிந்து இனி பள்ளிகளில் காலைச் சிற்றுண்டியும் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்துள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள். இத்திட்டத்தையும் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்துவது தமிழ்நாடு அரசுதான். நாடு முழுவதும் இன்று சத்துணவுத் திட்டம் செயல்பட்டாலும் சத்துணவுத் திட்டத்தின் அத்தனை பரிணாமங்களுக்கும் தமிழ்நாடு அரசே முன்னோடியாக விளங்கிக் கொண்டுள்ளது!

# அயோத்திதாசப் பண்டிதரின் தினசரி சிற்றுண்டித் திட்டம்

அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டத்திற்கு முன்னோடியாக விளங்கியுள்ளார். கர்னல் ஆல்காட் மற்றும் பால்மர் அம்மையார் ஆகியோருடன் தான் கொண்டிருந்த நட்பின் மூலமாக அவர்களின் துணையோடு சென்னையில் பல பகுதிகளில் பள்ளிகளை நிறுவி அங்கு அப்பிள்ளைகளுக்கு மதிய உணவு, சீருடை, பள்ளிக்குத் தேவையான புத்தகங்கள், எழுதுகோல்கள், எழுத்துப் பலகைகள் ஆகியவற்றை வழங்கி மக்களுக்குக் கல்வியறிவை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.



அயோத்திதாசப் பண்டிதர்

## பஞ்சமர் பள்ளிகள்

கர்னல் ஆல்காட்டுடன் ஏற்பட்ட நட்பினால் அவரின் துணையோடு 1892இல் சென்னை நகரின் விளிம்புநிலைப் பகுதிகளில் பள்ளிகளை நிறுவி அப்பிள்ளைகளுக்குக் கல்விக் கண் நல்கினார் அயோத்திதாசப் பண்டிதர். இந்தப் பள்ளிகள் அடையாறு, தேனாம்பேட்டை, மைலாப்பூர், கோடம்பாக்கம் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. இவை கர்னல் ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் 1894-1909ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்திலேயே மதிய உணவு வழங்கவும் அயோத்திதாசப் பண்டிதர் ஏற்பாடு செய்திருந்தார். இப்பள்ளிகள், தரத்தில் மேட்டுக்குடி மக்களுக்காகவே ஏற்பட்டிருந்த பள்ளிகளுக்கு இணையாகவே இருந்துள்ளன எனப் பாராட்டி ஆங்கில நாளிதழ்கள் செய்தி வெளியிட்டன.

### இது குறித்து அயோத்திதாசர் சிந்தனைகள் நூலில் இடம்பெற்றுள்ள தகவல்

சென்னை இராஜதானியிலும், திருவாங்கூர் இராஜதானியிலும் சிறுவர்களுக்கு இலவசக்கல்வி நிறைவேறிவரும் முயற்சிக்கு மூலம் யாரென்று சென்னை மகாஜன சபையோரை வினவி தெரிந்துகொண்டு அயோத்திதாசப் பண்டிதரைத் தருவித்து தனது அடையாற்றிலுள்ள கலாசாலையை எடுத்து நடத்திக்கொள்ளும்படி சொன்னார். அதற்குப் பண்டிதரவர்கள் தங்கள் கூட்டத்தார் எளிய நிலையையும், அவர்கள் பேதத்தையும், பூர்வ சமயப்போக்கையும் விளக்கி அடையாற்றிலுள்ள கலாசாலையுடன் மற்றும் சில கலாசாலைகளை வகுத்து சிறுவர்களை சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அமெரிக்காவினின்று கனந்தங்கிய மிஸ். சாரா. இ பால்மரென்னும் லேடியைத் தருவித்தார். அவ்வம்மை ஆல்காட் தியாசபி சங்கத்தில் வந்திறங்கியவுடன் காரியதரிசியரால் வாசித்த வாழ்த்துப்பத்திரம்.

To

Miss. SARAH.E, PALMER, F.T.S. RESPECTED MADAM,

We come to greet you on your arrival at Madras as a committee of the Dravidian or so called Panchama Community, to contribute to whose highest welfare, you have come. Words fail us to express our gratitude for your self-denial and holy sym-

pathy for our long oppressed and wronged race. We hope that this day will mark a new and bright epoch in our history, and you may feel assured that your name will be mentioned to our children as that of a true friend and a benefactress in ameliorating our miserable condition and reviving our old Buddhistic faith...

PUNDIT C. IYODHI DOSS,
Secretary.
3:24; நவம்பர் 24, 1909

கனந்தங்கிய எச்.இ. பால்மர் அம்மைக்கு வந்தனோபசார பத்திரம் வாசித்தவுடன் அவ்வம்மனும் மிக்க ஆனந்தமுடன் எழுந்து திராவிட சாக்கைய பௌத்த சங்கத்தோரை நோக்கி சகோதரர்களே நீங்கள் கோரிய விண்ணப்பம் ஏழை, என்னாற் கூடிய கல்வி விருத்தி செய்து வைப்பேனென்று வாக்களித்தார்கள்.

அவ்வாக்கு பிசகாது பண்டிதரை அழைத்து வேளாளத் தேனாம்பேட்டையிலும், மற்றுமுள்ள இடங்களிலிருக்கும் சாதிபேதமற்ற திராவிடர்களை அழைத்து கலாசாலை அமைக்கும் விஷயங்களை எடுத்தோதும்படிச் செய்து அங்கோர் கலாசாலையும், மயிலாப்பூரில் ஓர் கலாசாலையும், கோடம்பாக்கத்தில் ஓர் கலாசாலையும் நிலைக்கச் செய்தார்கள்.

அம்மூன்று நூதன கலாசாலைகளின் கட்டிடங்களைச் சொந்தமாகவே கட்டிமுடித்ததுமன்றி வாசிக்கும் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லாமல் கற்பிப்பதுடன் நான்காவது வகுப்புப் பிள்ளைகள் வரையில் வாசிக்கக்கூடிய புத்தகங்களும், கடிதங்களும், சிலேட்டுகளும், பென்சில்களும் மற்றும் சித்திர வேலைகள் செய்யும் சாமான்களும் இலவசமாகக் கொடுத்துக் கற்பித்து வந்தார்கள்.

அத்தகைய கற்பனா உபகாரம் போதாது மத்தியானத்தில் பொசிப்பில்லா ஏழை சிறுவர்களுக்கு சிறுதிண்டியாம் புசிப்புமளித்து வருவதுடன் அம்மை பால்மர் துரைசானியிருக்குமளவும் ஏழை சிறுபிள்ளைகளுக்கு வேண்டிய உடைகளுந் தைத்து உடுத்திவந்தார்கள்.

கர்னல் ஆல்காட் துரையவர்களின் கருணையாலும், அவரை அடுத்தோரின் பேருபகாரத்தாலும் கலாசாலை சம்பளமின்றி மேற்கூறிய உபகாரம் பெற்று வாசித்துவரும் பிள்ளைகளின்தொகை 700-க்கு மேலதாகும்.

ஏழை சிறுவர்களின் கலாசாலை விருத்திபெற்று வருங்கால பிள்ளைகளின் துற்பாக்கியம் கர்னல் ஆல்காட் துரை இறந்துவிட்டார். சாலைவிருத்தி ஏதேனும் மாறிப்போமென்றெண்ணிய பண்டிதரவர்கள் தியாசபி சங்கத்திற்குத் தலைவராகத் தோன்றியுள்ள அதன்பின் ஆனிபீசென்டம்மையவர்களுக்கு ஓர் விண்ணப்பமெழுதி நேரிற்போய் கண்டு கலாசாலைகளை கனந்தங்கிய கர்னலவர்கள் ஆதரித்துவந்ததுபோல் தாங்களும் ஆதரிப்பதுடன் கைத்தொழிற்சாலையும் ஒன்றை வகுத்து சிறுவர்களை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பண்டிதர் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தின்படி பிரசிடென்ட் ஆனிபீசென்டம்மனால் கலாசாலைகள் நிறைவேறி வருகின்றது. கனந்தங்கிய ஆனிபீசென்டம்மை அவர்களுக்கு பண்டிதரவர்கள் விண்ணப்பம் கொடுக்கவேண்டிய காரணம் யாதென்பீரேல் கர்னல் இறந்தவுடன் அவரது கலாசாலைகளை முனிசிபாலிட்டியாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் வதந்தி வெளிவந்தபடியால் அம்மனுக்கு விண்ணப்பமளிக்கவும், நேரில் கண்டுபேசவும் நேரிட்டு ஆனிபீசன்டம்மனுடைய ஆதரவில் நிலைக்கப் பெற்றிருக்கின்றது.

இத்தியாதி சிறுவர்களின் கல்வி விருத்தியும் திராவிட சங்கத்தோர் முயற்சியேயாம்.

இவ்வாறு அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் சென்னையின் விளிம்புநிலைப் பகுதிகளில் பள்ளிகளை நிறுவி மதிய உணவு வழங்கி மாணவர்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

# சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்திற்கு சென்னை மாகாண அரசுக்கு சர்.பி.தியாகராயர் அவர்கள் அனுப்பிய கோரிக்கை



G. D. Form No. 15.

LOCAL SELF-GOVERNMENT DEPARTMENT.

COPY TO GOVT. LOCAL SELF GOVERNMENT & ASST. SEC.

Received 13 FEB 1922 192 . Registered 03299 192 .

**SUBJECT.**

Requesting the sanction of Government for incurring the expenditure towards the provision of mid-day tiffin to the pupils in some of the Corporation Schools.

| Enclosures | |
|---|---|
| No........................ | |
| ........................ | |
| copies........ | |

G. D. ~~Dis.~~ C No. 110 ~~Index~~ ~~Routine.~~ of 22

Madras, dated, the 17th February 1922.

*From*

*Dewan Bahadur Sir P. Tyagaraya Chetti, M.L.C.*,

President, Corporation of Madras.

*To*

*The Secretary to the Government of Madras*,

Local Self-Government Department.

*Sir*,

I have the honour to state that several of the Corporation schools are situated in localities inhabited by the depressed classes. The strength and attendance of these schools was found to be unsatisfactory and enquiry showed that this was due partly to the poverty of the parents who could not afford to provide the boys with a midday meal unless the boys themselves earned it by work and partly to the difficulty the boys experienced in going home and returning to school in the short afternoon interval. With a view to obviate these difficulties



-2-

ensure steadiness in the strength and attendance, the Council at its meeting held on 16th September 1920 resolved to provide such children with a mid-day tiffin at a cost not exceeding one anna per head per day. As an experimental measure, this concession was first tried in the Corporation School, Thousand Lights and as the result was very encouraging the practice has since been extended to two more schools located in Chetput and Mirsahibpet, and it is proposed to extend the concession to 7 other schools.

2. The Examiner of Local Fund Accounts now objects to the above expenditure on the ground that it is not authorised by the Madras City Municipal Act of 1919. As the stoppage of the concession is likely to seriously affect the attendance of the said schools, I request that Government will be pleased to accord special sanction to the expenditure.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,

P. Theagarayar (?)
President.

17-2-22.



G. D. Form No. 15.

3/ A 3/

Early R

10359

LOCAL SELF-GOVERNMENT DEPARTMENT.

Received 24/5/22 192 . Registered 192 .

SUBJECT.

Requesting early orders on letter R.O.G.D.C.No.110 of 22 dated 17th February 1922, re: the expenditure incurred in providing mid-day tiffin to pupils in certain Corporation Model Schools:

| Enclosures | |
|---|---|
| No. | |
| Spare copies | |

R. C. G. D. Dis. No. 110 Index Routine 22

Madras, dated, the 23rd May 1922.

From

Dewan Bahadur Sir P. Tyagaraya Chetti, M.L.C.

President, Corporation of Madras.

To

The Secretary to the Government of Madras,

Local Self-Government Department.

Sir,

I have the honour to request the favour of early orders on my letter R.O.G.D.C.No.110 of 22 dated 17th February 1922 requesting special sanction for the expenditure incurred in providing midday tiffin to pupils in certain Corporation Model Schools.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,

P. Theagaraya Chetty

President.

# THE ORIGIN AND THE DEVELOPMENT OF THE PEOPLES MOVEMENT FOR FREE SUPPLY OF SCHOOL MEALS IN MADRAS STATE

-N.D. SUNDARA VADIVELU
Director of Public Instruction



The provision of free midday meals to school children has always been recognized as one of the incentives to regular attendance of pupil's enrolled. Many progressive countries have arranged this as one of the essential amenities in the scheme of primary education. Wherever compulsion (compulsory education) has been successful, it has been successful not only owing to vigilance in enforcement and the co-operation of the public but also because of this provision. It is this realization that has prompted the Madras Government to provide midday meals at State cost to Harijan children studying in Welfare schools for some years now. The Corporation of Madras has also been providing free midday meals to the poor children in their elementary schools for many years now. It is this provision that accounted for the appreciable percentage of attendance in those schools, catering for the poorer section of our society.

It has rarely been realized that this scheme is not merely an incentive for regular attendance but a dire necessity if the pupils are to be effectively educated. The large-scale prevalence of poverty in our country is too well-known to need special mention. Nor is it necessary to remind us of the fact that this is, to a large extent, responsible for the non-enrolment of a considerable percentage of the school-age children. Because of this widespread poverty there is even today, when every village with a population of 500 and above has been provided with a school, a considerable percentage of school-age children are still outside the school. Even among the children at school, there are many who go without their midday meal, How can anyone effectively educate such hungry children? We all know the Tamil poem which says, "as hunger comes in, it drives away all the ten virtues of man including education." Starvation has been responsible for a good deal of ineffectiveness in our schools and consequential stagnation and wastage in education. Many pupils stagnate at the same class for more than a year even at the elementary stage and continued stagnation causes withdrawal of children from the school, which is called "Wastage."

An unforgettable incident to which I was an eye witness some years back, made me realize fully the absolute need for free midday meals for poor children, if we are to educate them. In the month of November 1955, I happened to visit one evening, during my tour in Malabar District, the Board High School, Perintalmanna. There was a meeting of the students over which I was presiding. In a few minutes the sad spectacle of two boys swooning in the meeting, one after the other, was witnessed by me. On enquiry, I found that it was not due to any special strain to which they had been put on that occasion. I was told that this was not an uncommon occurrence in that

school, owing to utter starvation. These poor children go walking to the school from distant places, and, in addition, go without a noon meal. This has been an eye opener to me about the conditions prevailing among our school children and, on further enquiry, in various districts, I found that there were many starving children both in Elementary and Secondary schools throughout the State, irrespective of whether they were situated in towns or in villages, in prosperous or in poor districts.

To the poor the only means of salvation and social uplift is education and, if the poor children are to be educated, at least as well as their richer classmates, if not better, we must ensure for them certain basic requirements. They must run at present a handicap race with their well-to-do classmates. The poor pupils are subjected to various handicaps. They have neither educational environment nor physical provision like proper lighting etc., in their homes to enable them to study at home as much as the well-to-do child can. Nor can they afford the finances to engage a private tutor as is done by richer pupils, who need such extra tution. Their only hope of getting an acceptable kind of education is, therefore, in the classroom. It is there that they must assimilate as much knowledge as possible and acquire necessary skills and proper attitude. Outside the classroom opportunities for study are limited for them.

How could we expect them to do their best in the school when they are hungry? Being hungry, they are not able to be, at least, as attentive as others. Hence, they do not do as well as others. Their stagnation and wastage are more due to this cause than to their lack of intrinsic worth and the capacity to benefit by the educational opportunities. It was at Perintalmanna, that I realized that the attempt to teach a hungry child and to condemn him later as "not so good as others" is the height of unfairness to the child. It is not only an administrative waste but a destruction of tender human material that can blossom into fine personality, if only the necessary environmental and physical requirements are supplied. Of what avail will all our educational reforms, up-to-date techniques, modern methods, and attractive aids be, when the child is unable to attend to or absorb what we provide for it by these means and aids?

We are witnessing the paradox of innumerable pupils and students going without their noon meals or starving during the school day and, at the same time, a flood of charity and hospitality flowing in the country. Ours has been a country renowned for hospitality and charity. Many are the forms in which our spirit of charity has found expression. We value Annadan as the best of the Dans. If our

traditional hospitality and Annadan could only be diverted, to some extent, to the schools, it will be possible to feed these hungry children without any extra burden being placed on society. These were the ideas that came to my mind.

A big gathering of all Elementary school teachers in Tuticorin in February 1956, gave me the opportunity to give expression to these ideas and to plead for voluntary provision for free midday meals to school children through non-official agencies. It so happened that the speech was tape-recorded by Sri Rama Subbu, the President, District Board, Tirunelveli, who later lent this recorded speech to the District Educational Officers, Tirunelveli. This speech was first broadcast in a village called "Malappuram" in Koilpatti taluk. This was listened to not merely by teachers who gathered for their monthly meeting, but also by the local public. It was there that the leaders of the village, having listened to this appeal for school Annadan, responded to the call, calculated the requirements to feed the poor school children in their schools and resolved that everyone owning a plot of cultivable land should contribute a specified quantity of food grains at the time of harvest. The Chief Minister of Madras, Sri K. Kamaraj, who happened to see this item of news in the papers encouraged me personally by pointing out that this had a great potentiality and no village in Tamilnadu would fail to contribute for Annadan, whatever their views on other matters might be. The Minister for Education, Sri C. Subramaniam, equally encouraged me by pointing out that Noon Meals a normal feature in many schools in Madras State.

The seeds to Sarvodaya could be sown in schools by such a movement for School Annadan.

Encouraged in this manner, I and my officers took up the task of organizing, purely on a voluntary basis, free midday meal centers in towns and villages. The movement was launched in July 1956. This developed entirely as a people's movement for organized charity. It was entirely a voluntary movement, to avoid official pressure no orders of any kind were issued by me. Nor was the progress taken official cognizance of till September 1957. It was only in September 1957 that the particulars from various districts were officially gathered, revised, and communicated so that every officer might know what was being done by his colleagues in other districts.

I am happy to record that the experience has been thrilling and encouraging. Wherever the officers have taken this up in earnestness and put across this idea, it

has caught the imagination of the people and they have responded enthusiastically, both in town and in villages. In the last fifteen months, this has received the enthusiastic support of the various sections of the public. Leaders of public life with different political views, economic objectives and social aspirations have lent their support to this humanitarian movement though not as a means of permanent solution of our problems of poverty, atleast as a sort of first aid to the suffering. Newspapers have also given a good deal of support by due publicity of these activities and some even by editorials supporting the scheme. Today, this scheme is functioning not only in thousands of elementary schools but also in several secondary schools. Today, about 10,000 educational institutions provide such free midday meals for about 30,000 pupils. If it has not spread to other schools, it is not so much due to the lack of support of the public as due to the inability of our officers to spare more time and effort for this purpose.

It is not merely the contribution in cash and kind and the burden that the public willingly take up in feeding these children that is full of hope and promise for the future. The volume of interest that this participation inevitably arouses in them will go a long way to improve the school-community relationship and thereby raise the standards. The larger the interest the public develop in educational matters, the more certain is the future of education. Without public understanding and support, it will not be possible to get adequate support, both material and moral, for our educational plans. Looking at it from this point of view, I feel, this movement of free midday meals augurs well for the future of the education of our children.

The kind of midday meals served varies from school to school. Mostly, it consists of simple "sambar or curd bath" on alternate days. There are a few schools where both are served daily. Here and there a few schools provide regular meals consisting of the usual two or three courses like, sambar, rasam and butter milk.

Many are the ways by which these midday meal centers have been organized in various localities. I have already referred to the case of Nagalapuram where all the landowners, big and small, have agreed to contribute towards the school Annadan at the time of harvest a specified quantity of foodgrains, according to the extent of the land owned by them. Another example comes from an Elementary School at Avinashi run by nuns. About 100 empty match boxes were distributed to

such of those school children as could donate every morning without strain and compulsion a match-boxful of rice. Those children willingly brought with them to school match-boxful of rice. In a few days, the accumulation became substantial, and the scheme was then launched.

Thereafter, a few charitable minded persons from the locality supplemented the continuous free supply of foodgrains in that school. It is learnt that, in the Board High School, Eddapadi, almost all the children bring on the first working day of the week handfuls of foodgrains and deposit them in the school. These collections enable the school to feed about 30 to 40 children per day throughout the year. The collection of handfuls of rice for this purpose is resorted to in many schools.

In many villages, the mothers at home put aside a handful of rice when they cook their own food. This rice set apart for charity is collected once a week from each house and utilized for feeding the school children. In bigger villages and towns, cash donations are the mainstay. Annual cash donations are given by the rich and the salaried persons. There are cases where one wealthy person undertakes to feed the children throughout the year as in the case of the Ettaiyapuram Raja's Elementary School, Gomathi Ambal High School, Tirunelveli, Sri Visalakshi Kalasalai, Thekkur etc. In several villages, a few rich land owners of the village come together and undertake to feed the poor children for a specific period of time (like a week, a month. etc.) by rotation to cover the entire year.

Almost all the Government Basic Training Schools are doing this charity, by feeding a specific number of poor children in the model- schools where they have their teaching practice. As these teacher trainees must live in hostels, all that they must do is to allow a slightly larger quantity of rice to be cooked and spare the extra to the poor children. As no separate establishment or organization becomes necessary, the extra burden for them is almost negligible. It does not amount to more than 3 or 4 annas per month per trainee and none grudges to spare that much. The organization of free midday meals by the pupil-teacher gives them the necessary training for organizing such things later when they go out as teachers. The teachers in service have not been lagging in contributing to this cause. There are many instances of lump-sum or periodical contribution by teachers. In one high school the teachers themselves set the ball rolling by agreeing to feed by turns six students per day. In a few days, the villagers came forward to take up the responsibility of free supply of meals. There are centers where food is cooked in the individual houses for a specific number of pupils and sent to the schools at the appointed hour. The houses in the village take their turn in cooking and supplying the midday meals.

There are thus various ways of getting resources in cash and kind for running free midday meals in the schools. It is not only the rich but also the poor that have contributed according to their capacity.

It is not merely those with a regular income, however small, that come forward to contribute but also others with less certain incomes. The noble example of even "daily" wage earners contributing their meal to this cause has come to my notice quite recently in a village called Narasingapuram, Tiruvallur Taluk, Chingleput District. The midday meal scheme for the elementary school in the village was inaugurated by me on the 24th of October 1957. The list of donors was read out in full at the public meeting. In that lists the names of nine good men-daily wage earners-who had undertaken to contribute every day "a quarter anna" found a place. This shows that though they were not up to date enough to speak in terms of Naya Paise, they were yet good enough to be as charitable as any up-to-date man.

As the ways and means of financing of this scheme has varied, there is a lot of elasticity in the organization of the scheme. In many places informal committees have been constituted right from the beginning. In some places like Kancheepuram, the non-official committees are all-party committees including the local leaders of all political parties and social organizations.

Such committees have organized collections in cash and kind, arranged for central or individual cooking of meals and serving them. Where individuals or Individual households undertake to feed the children by turn, no such committees are formed. Similarly in institutions where the meals scheme is organized based on contributions of handful or match-boxful of foodgrain, committees have not come into existence. Now that it is proposed to put the free midday meals scheme on a regular basis, to ensure its continuous and proper functioning over long years, the inspecting officers have been requested to see that in every one of these centers, a non-official committee with rules and regulations is formed. As regards the mode of preparation of the food, there are several ways. In the Basic Training School, the food is cooked in the hostel itself along with the food for the pupil teachers and served in the model schools. In a few high schools, the Domestic Science sections undertake the responsibility of preparing the food. There are Schools where the maid servant of the school cooks the food. In many places they employ some one from outside to cook and serve the food for the children. They work on a part-time basis, and they are remunerated with food and some cash payment.

The experience of the last fifteen months in organizing free midday meals leaves no doubt as to the potentiality of this movement. There are plenty of resources waiting to be tapped for such charitable purposes. Such free supply of food has ensured not only regular attendance but also better enrolment. In my own native village, within a month after the inauguration of the midday meals, the enrolment has increased from 61 to 77. This is not a stray case of improvement in enrolment. It is so in every place where provision is made for feeding the extra number of poor children that may be admitted. The children are also more contented and more attentive. Their growth is better and there is a marked improvement in their health- this is the impression that I have gathered from these centers.

There is one silent revolution that this scheme is ushering in. In my village when the scheme was launched, there were forty starving children of different communities. Fifteen of them were Harijans. When it came to serving the midday meals on the first day, twenty-five non-Harijans, though poor, did not want to sit together and eat with Harijans. Hence, this free supply had to be confined to the Harijans for a few days. In a few days, things changed. The non-Harijan parents themselves came forward to allow their children to sit with the Harijan children instead of allowing them to starve. Today pupils of different communities sit together and eat together without any hitch. Such a situation I have personally noticed in a few villages in other districts. This silent revolution in outlook will go a long way in bringing about a unified, well-integrated society without any consciousness of caste differences.

Good social habits and habits of health and hygiene can easily be instilled in the minds of the children by these services even more than by class-room theoretical teaching..

All this has been going on, depending entirely on private benefactions in a new field where no tradition yet has been established. I am confident that in due course there will be greater and greater progress. To make this a longstanding provision and to place it on a sound footing, Government subsidy is essential. Now that Government has decided to share the expenses and to give subsidy towards this scheme, one can confidently expect improvement not only in the quality of the food supplied but also in the number of children benefiting by this scheme and along with that, undoubtedly in the effectiveness of the education that is imparted.

# பகல் உணவுத் திட்டம் பிறந்த கதை

நெ.து.சுந்தரவடிவேலு,
மேனாள் பொதுக்கல்வி இயக்குநர்

சென்னை பூங்கா நகர். காலை ஒன்பது மணி. பனி போக்கும் இளம் வெயில். மெமோரியல் மண்டபம் நிறைந்து வழிகிறது. தமிழ்நாட்டுத் திலகர், டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை வகிக்கிறார். அவருக்கு அடுத்து அமர்ந்திருப்பவர் யார்? சென்னை மாநில முதலமைச்சர், மாண்புமிகு காமராசர். அடுத்து உட்கார்ந்திருப்பவர் யார்? பொதுக் கல்வி இயக்குனராகிய நெ.து.சு.

அவையோரின் கண்களிலே ஒளி. முகங்களிலோ? மகிழ்ச்சிப் பொங்கல். வாயிலில் நின்று வரவேற்போர் மொழிகளோ? இனிமைப் பொழிவு. ஆர்வமும் கனிவும் நம்பிக்கையும் ஒன்றோடு ஒன்று போட்டியிடும் அக்கூட்டம் என்ன கூட்டம்? பொதுக் கூட்டமா? இல்லை. பின் என்ன? மாநாடு. தியாகிகள் மாநாடா? இல்லை. நிர்வாகிகள் மாநாடு. எதை நிர்வகிப்பவர்கள்? தனியார் தொடக்கப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு அது. ஏழைப்பங்காளர்

முதலமைச்சரிடம் முறையிட்டால் குறை தீரும் என்பது அவர்கள் நம்பிக்கை. அதன் விளைவுகளே, ஆர்வமும் கனி மொழியும் குறித்த நேரத்தில் மாநாடு தொடங்கிற்று. வரவேற்புரை நிகழ்கிறது.

மாண்புமிகு காமராசர் என் பக்கம் திரும்பினார். "நீங்கள் மாநகராட்சிக் கல்வி அதிகாரியாக இருந்தீர்களே? அப்பள்ளிகளில் பகலுணவு போடுகிறார்கள். அதனால்தான் நிறையப் பிள்ளைகள் வருகிறார்களாமே! மெய்யா" என்று கேட்டார்.

"ஆம் அய்யா. சனிக்கிழமை பாதி நாள் பள்ளிக்கூடம். அன்று சோறு போடுவதில்லை. ஆகவே ஏழைப்பிள்ளைகள் வருகை குறைகிறது" என்றேன். "அப்படியா! சாப்பாட்டிற்கு எவ்வளவு ஆகிறது?" இது காமராசர் கேள்வி.

"சிறுவர்கள் சாப்பாடுதானே! ஒரு சாப்பாட்டிற்கு ஒன்றரை அணா ஆகும்" என்பது எனது பதில். "அந்தக் கணக்கில் செலவு செய்வதைக் கொண்டு, அப்படியே சொல்லுகிறார்களா? ஏதாவது அடிப்படை உண்டா?"

"உண்டுங்க. படி அரிசி சமைத்தால் பத்து மாணவர்கள் சாப்பிடலாம். படி அரிசி பத்தணா, ஆளுக்கு ஓரணா அரிசி போதும். அரிசிச் செலவில் பாதி, மேற்செலவு; சமைக்க, சாம்பாரோ, மோரோ கொடுக்க; கொண்டுபோய்க் கொடுக்க, இராமகிருஷ்ண லஞ்சுஹோம் முதலாளி, திரு. இராமநாத அய்யர் மாநகராட்சி உறுப்பினர். எனக்கு வேண்டியவர். அவரிடம் தனியாகக் கேட்டுப் பார்த்தேன். ஒன்றரை அணா நியாயமானதே என்றார்." இதைக் கேட்ட காமராசர், "சரி, சரி நாட்டுப்புறப் பள்ளிகளிலும் சோறு போடவேணும். அது ஏழைகள் படிக்க உதவும். அப்படிச் செய்வதானால், எவ்வளவு பேருக்குப் போடவேண்டியிருக்கும்?" என்று வினவினார்.

"சென்னையில் நூற்றுக்கு இருபத்தைந்து மாணவர்களுக்குப் போடுகிறோம். சிற்றூர்களில் ஏழ்மை அதிகம். ஆகவே, கூடுதலாகப் போட வேண்டியிருக்கும்." "சந்தேகமில்லை. நூற்றுக்கு முப்பதுக்குக் குறையாமல் போடணும். எல்லாரும் பள்ளிக்குப் போகும்போது, அது எத்தனை இலட்சமாக இருக்கும்?" என்று ஆய்ந்தார் காமராசர்.

"இருபது இலட்சத்திற்குப் போகுங்க. இப்போதைக்கு ஐந்தாண்டில், பத்து இலட்சம் பேருக்குச் சோறுபோட ஏற்பாடு செய்தால் சரியாக இருக்கும்" என்றேன்.

"இரு நூறு நாட்கள் போடணும் எவ்வளவு பணம் என்று மனக்கணக்கு போட்டுப் பாருங்கள்." என்று ஆணையிட்டார்.



இருவரும் மனக்கணக்கு போட்டோம். இருவருடைய மதிப்பீடுகளும் ஒத்திருந்தன. "இந்தத் தொகை பெரிதல்ல. எப்படியும் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன். விரைவில் விரிவான திட்டத்தைப் போட்டுக் கொடுங்கள்."

இருவரும் மனக்கணக்கு போட்டோம். இருவருடைய மதிப்பீடுகளும் ஒத்திருந்தன. "இந்தத் தொகை பெரிதல்ல. எப்படியும் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன். விரைவில் விரிவான திட்டத்தைப் போட்டுக் கொடுங்கள்."

## இரண்டாவது ஆணையும் பிறந்தது

முதலமைச்சர் காமராசர் பேசவேண்டிய முறை வந்தது. உலகளந்த உத்தமர், எழுந்து நின்றார். சொற்பொழிவு ஆற்றினாரா? இல்லை. உரையாடினார். குழந்தைகளோடு உரையாடுவதுபோல் இனித்தது.

தமது பேச்சினூடே, "அத்தனை பேரும் படிக்கணும் என்றேன். வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்? அவனுந்தானே நம் இந்தியாவிற்குச் சொந்தக்காரன். ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே சோறு போட்டுப் படிக்க வைக்கணும். இதைத் தள்ளிப்போட முடியுமா என்ன? இது மிக முக்கியம். உடனடியாகத் தொடங்கிவிடணும். பணத்திற்கு எங்கே போவது? இப்படிக் கேட்பீர்கள். வழி இருக்குது. தேவைப்பட்டால், பகல் உணவிற்கென்று தனியாக வரி போடத் தயங்கமாட்டேன். எப்படியும் எல்லா ஏழைகளும் படிக்கணும். அவர்களுக்குந்தான் தேசம்" என்று தெளிவுரையும் அருள் உரையும் ஆற்றியபோது, கைதட்டல் ஓயப் பல மணித்துளிகள் ஆயின.

கல்வி மடையைத் திறந்துவிடும் இப்புதியத் திட்டத்தைப் பெரிய தலைப்பில் வெளியிட்டன செய்தித் தாள்கள்.

"ஏற்கனவே, வரிச்சுமை பெரிதாக இருக்கிறது. பதினாயிரக்கணக்கான ஊர்களில் இப்படியொரு திட்டத்தைச் செம்மையாக நடத்தமுடியுமா என்பது அய்யப்பாடு. இந்நிலையில் புது வரியைப் போட்டு மக்களைத் துன்பப்படுத்த வேண்டுமா?' இப்படி எழுதிய செய்தித் தாள்களும் உண்டு.

## திட்டம் உருவாயிற்று

கர்மவீரர் காமராசரின் ஆணையை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்திடம் நேரில் தெரிவித்தேன். முதலமைச்சரே, "தன்னிடம் தகவல் கொடுத்ததாகக் கூறினார். திட்டம் தீட்டிக் கொடுங்கள்" என்றார்.

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டும் காலகட்டம் அது

புதியதாக எத்தனைத் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவது? அவற்றிலும் ஏற்கனவே உள்ள பள்ளிகளிலுமாக எத்தனை இலட்சம் சிறுவர் சிறுமியர்களைச் சேர்ப்பது? புதிய உயர் தொடக்கப் பள்ளிகள் எத்தனை? அந்நிலையில், எவ்வளவு பேரைக் கூடுதலாகச் சேர்க்க முடியும்? அதேபோல், உயர் நிலைப் பள்ளிக் கல்வியை எவ்வளவிற்கு வளர்ப்பது? கட்டடங்களுக்கு எத்தனைக் கோடி ஒதுக்குவது, தளவாடப் பொருள்களுக்கு எவ்வளவு நிதி? விஞ்ஞானத் துணைக் கருவிகளுக்கு எவ்வளவு ஒதுக்குவது? சோதனைக் கூடங்களின் பங்கு எத்தனைக் கோடி? பள்ளிக்கூட நூல் நிலைய வளர்ச்சிக்கு மான்யம் எவ்வளவு? பொது நூலக வளர்ச்சிக்கு எவ்வளவு பணம்? இப்படிப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத்



தீட்டினோம் அவற்றிற்கான செலவைக் கணக்கிட்டோம். ஒரு முறைக்கு இருமுறை சரிபார்த்தோம்.

தொடக்கப் பள்ளிகளில் பகல் உணவு போடுவதற்குத் தனியாகத் திட்டம் போட்டோம். தொடக்கத்தில் எவ்வளவு பேருக்கு ஏற்பாடு செய்யமுடியும்? ஆண்டுக்கு ஆண்டு எத்தனை பேருக்கு அதிகப்படுத்தலாம்? ஐந்தாண்டின் முடிவில், எத்தனை இலட்சம் குழந்தைகள் நன்மை பெறுவர்? இப்படி நுணுக்கமாகக் கவனித்துக் கணக்கிட்டோம். கல்விக்கான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், பகல் உணவுத் திட்டத்தைச் சேர்த்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

## இரண்டாம் இலக்கு

சில வாரங்கள் கழிந்தன. அமைச்சரவை கூடிற்று. ஒவ்வொரு துறையும் அனுப்பியுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களை ஆய்ந்து பார்த்து, முடிவு செய்தது.

கல்வித் துறைத் திட்டங்கள் ஆய்விற்கு வந்தன. ஒவ்வொன்றாக விளக்கினேன். உயர் அதிகாரிகள் குழுவின் பரிந்துரையும் சுட்டிக் காட்டப்பட்டது. கடைசியாக, பகல் உணவுத் திட்ட மதிப்பீடு ஆய்வுக்கு வந்தது. அத்திட்டத்தின் தேவை, அதை எப்படி வளர்ப்பது, எந்த அடிப்படையில் செலவு கணக்கிடப்பட்டுள்ளது என்பனவற்றை விளக்கினேன்.

"இது பெரிய புதியத் திட்டம். இச்சுமையைத் தொடர்ந்து தாங்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதிகாரிகள் குழு மட்டத்தில் இதைப் பற்றி எவ்வித முடிவுக்கும் வரவில்லை. முழு அமைச்சரவையே முடிவு செய்வதே பொருத்தம் என்று கருதி விட்டு விட்டோம்' இப்படி அதிகாரிகள் குழுவின் சார்பில் கூறப்பட்டது.

"நடுத்தர வர்க்கத்தினர் ஏற்கனவே பள்ளிக்கு வருகிறார்கள். ஏழைகளே வருவதில்லை. பள்ளிகளிலேயே உணவு கொடுத்துத்தான் அவர்களை இழுக்க வேண்டும். பகல் உணவுத் திட்டத்தை விட்டு விடுவதானால், மாணவர் சேர்க்கை இலக்கையும் குறைத்துக் கொள்ளவேண்டும். வேறு வழியில்லை" என்று எடுத்துரைத்தேன். உயர் அதிகாரிகள் இரண்டொருவர்- இவ்விவகாரத்தோடு தொடர்பு இல்லாதவர்கள்- தங்கள் கருத்தைச் சொல்ல அனுமதி கோரினர். அனுமதி கிடைத்தது.

"அரிசனப் பள்ளிகளில் இத்தகையத் திட்டம் இருக்கிறது. அது காண்ட்ராக்டர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவும் அளவு பிள்ளைகளுக்கு உதவுவது இல்லை. மற்ற பள்ளிகளிலும் பணச் செலவைத் தவிர பலன் இருக்காது. ஆசிரியர்கள் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அந்தப் பணத்தை, வேறு நல்ல காரியம் எதற்காகிலும் செலவிடலாம்" இப்படி மூத்த அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதலமைச்சர் காமராசர் முகங் கோணவில்லை; குறுக்கிடவில்லை. பொறுமையாகக் கேட்டார். பிறகு, இத்திட்டத்தை 'காண்ட்ராக்டர்' மூலம் நடத்தக் கூடாது என்பதை இப்போதே பதிந்து கொள்ளுங்கள். பொதுமக்கள் குழுவே, பகல் உணவுத் திட்டத்தை நடத்த வேண்டும்.

"அடுத்து, ஆசிரியர்களும் பள்ளிக்கூடத்திலேயே குழந்தைகளோடு உட்கார்ந்து சாப்பிடலாம்" என்று ஆணையிட வேண்டும். இந்த முடிவையும் எழுதிக் கொள்ளுங்கள்.

"பகல் உணவுத் திட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்வோம்" என்று, வெகுளாமல், ஆனால் உறுதியாகத் தீர்ப்புக் கூறினார். எனவே, இந்திய திட்டக் குழுவிற்கு அனுப்பிய நூற்றுக்கணக்கான திட்டங்களில், தொடக்கப்பள்ளி, பகல் உணவுத் திட்டமும், முழுமையாக இடம் பெற்றது.

## முடிந்த முடிவு

சில திங்களுக்குப் பிறகு, தில்லியிலிருந்து அழைப்பு வந்தது. சென்னை மாநில ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தையும் பரிசீலிக்கும் திட்டக் குழுக் கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு வந்தது.

சென்னையிலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் திரு.காமராசர், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், மாண்புமிகு அமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம் ஆகிய மூவரும் சென்றனர். எல்லாத் துறை இயக்குனர்களும், செயலர்களும் சென்றனர். மூன்று நாள் கூட்டம் நடந்தது.

முதல் நாள் காலை, திட்டக்குழுவின் துணைத்தலைவர், திரு.வி.டி. கிருஷ்ணமாச்சாரியார், அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தில் தொடக்க உரை ஆற்றினார். சென்னை மாநிலத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்க முடியுமோ, அதற்கு மேலான தொகைக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆங்காங்கே வெட்டுகள் வரலாம். எங்கே, எவ்வளவு வெட்டு, என்பதைச் சம்பந்தப்பட்ட சிறு குழுக்கள் விரிவாக ஆலோசித்து முடிவு செய்யும். அவற்றோடு ஒத்துழைத்து, சுமுகமான முடிவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டார்.

கூட்ட முடிவில் தமிழ்நாடு கோரியதில் மொத்தத்தில் ஐந்து கோடி வெட்டு பெரிதல்ல. இந்திய அரசின் முடிவை ஏற்றுக்'கொள்வோம். அடுத்த கேள்வி எங்கெங்கே வெட்டுவது என்பதே!

"அது இருக்கட்டும். பகல் உணவுத்திட்டத்தில் கை வைக்காதீர்கள். வேறு எங்காகிலும் குறைத்துக்கொள்ளப் பாருங்கள்", என்று முதலமைச்சர் காமராசர் முடிவு கூறினார். பகல் உணவுத் திட்டம் பிழைத்தது. ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்ந்தது. எனவே, நம் மாநிலத்தின் அடுத்த ஆண்டின் கல்வி மானியக் கோரிக்கையில் இடம் பெற்றது. சட்டமன்றம் ஒப்புதல் அளித்தது; ஆயினும் தடைகள் அகலவில்லை. உரியக கோப்பினை இங்கும் அங்கும் பலமுறை தள்ளிக் கொண்டிருந்தார்கள். அலுவலர்கள். ஆகவே, தாமதம் ஆணை பிறக்கவில்லை.



**க. தில்லைக்குமரன்,**
**சான் ஓசே, கலிபோர்னியா**

# பயன்பெற்றோர் போற்றுகின்றனர்

சத்துணவுத் திட்டத்தால் தமிழ்நாட்டு மாணவர்கள் அடைந்த பயன் அளப்பரியது. முதலில் இலவச உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தது நீதிக்கட்சி. சென்னை மாநகரத்தில் அரசுப் பள்ளிகளில் முதன் முறையாக இலவச உணவைக் கொண்டு வந்தனர் நீதிக் கட்சியினர், சமூக நீதியின் அடிப்படையில் ஆண்ட நீதிக் கட்சியைத் தொடர்ந்து பெருந்தலைவர் காமராசர் அவர்கள் துவக்கிய மதிய உணவுத் திட்டம் மாணவர்களைப் பள்ளிகளுக்குக் கொண்டு சேர்த்தது. அதைவிடப் பன்மடங்கு ஏழை, நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்விபெற உதவியது டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த சத்துணவுத் திட்டம்.

பசியால் வாடிய குழந்தைகளை ஒரு வேளையாவது பசியாறவைத்தது மதிய உணவு, பின்பு அதைத் தொடர்ந்து இன்றுவரை திராவிடக் கட்சியினர் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவது சமூகநீதி சிந்தனைதான்.

மதிய உணவுத் திட்டத்தினால் பயனடைந்தவர்களில் நானும் ஒருவன். என் தங்கையும் அத்திட்டத்தினால் பயனடைந்துள்ளார். இன்று இலவசம் என்று கொச்சைப்படுத்தும் ஆதிக்க சக்திகளுக்கும் இத்திட்டங்களினால் மக்கள் அடையும் பயன் அறியமாட்டார்கள். பசியால் வாடினால்தானே அவர்களுக்கு இத்திட்டங்களின் அவசியம் தெரியும்.

இலவச உணவுத் திட்டம் துவங்கி 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. இத்திட்டத்தினால் பயனடைந்த பலர் படித்து வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் நல்ல நிலையில் வாழ்ந்து வருவதே இத்திட்டத்தின் வெற்றியைக் காட்டும். இன்னும் 100 ஆண்டுகள் இத்திட்டம் தொடர நாமெல்லாம் பாடுபடவேண்டும். தமிழ்நாட்டின் சமூகநீதிப் பயணம் தொடர்ந்து அடித்தட்டு மக்களுக்கு நன்மை தர நமது ஆதரவு முக்கியம்.

“ மூன்று முட்டைகள் வழங்குகின்ற விழாவினை நடத்துகிறோம் என்றால் அதற்குக் காரணம் சிறார் இளைஞர்கள் சிறுமிகள் இவர்கள் எல்லாம் கல்வி கற்று கல்வி கற்கின்ற பள்ளிகளுக்குச் செல்கின்ற அந்த ஊக்கத்தைப் பெற்று அந்த ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் வீட்டிலே சத்துணவு கிடைக்காது இருந்தாலும் பள்ளிக்குச் சென்றால் அங்கே சத்துணவு கிடைக்கும் என்கின்ற அந்த ஆர்வத்தை அவர்களுக்குத் தூண்டி அவர்களைக் கல்வியிலே கருத்துள்ளவர்களாக ஆக்குகின்ற ஒன்று இதற்கான குறிக்கோள். ”

- மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

# CARE அமெரிக்கத் தன்னார்வ அமைப்பின் பேருதவி



CARE - Co-operative for American Relief Everywhere என்னும் சர்வதேச தன்னார்வ கூட்டமைப்பின் சார்பாகத் தமிழ்நாட்டின் பகல் உணவுத் திட்டத்திற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. Co-operative for American Remittances to Europe என்று தொடங்கப்பட்ட இவ்வமைப்பு அமெரிக்காவிலிருந்து இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்ட ஐரோப்பியப் பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. பின்னர் உலக அளவில் அதன் செயல்பாடுகள் விரிவடைந்தபோது 1953ஆம் ஆண்டு Co-operative for American Relief Everywhere என்று பெயர்

மாற்றப்பட்டது. தற்போதும் இவ்வமைப்பு Co-operative for Assistance and Relief Everywhere (1993 முதல்) என்ற பெயரில் செயல்பட்டுவருகிறது.

CARE - Co-operative for American Relief Everywhere என்னும் உலகளாவிய தன்னார்வ கூட்டமைப்பின் சார்பாக தமிழ்நாட்டின் பகல் உணவுத் திட்டத்திற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக அரிசி, பால் பவுடர், செறிவூட்டப்பட்ட சோள உணவு, சமையல் எண்ணெய் ஆகிய 4 பொருட்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

பகல் உணவுத் திட்டமானது இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகளவிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது என்பதை கேர் அமைப்பு 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது.

"85,04,857 கிலோ - அரிசி

28,34,952 கிலோ - பால் பவுடர்

13,60,777 கிலோ - செறிவூட்டப்பட்ட சோள உணவு



(2) Based on the above, then, and barring any contingencies, CARE is prepared to offer the following commodities towards a School Feeding Program in Madras:

(a) 18,750,000 pounds of rice.
(b) 6,250,000 pounds of milk powder.
(c) 3,000,000 pounds of enriched corn meal.
(d) 3,000,000 pounds of vegetable cooking oil.

These commodities totalling 31,000,000 pounds are worth approximately Rs. 30,000,000 and would make the Madras State-CARE project the largest 4-commodity feeding program in the world.

13,60,777 கிலோ - சமையல் எண்ணெய்" ஆகிய 4 பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, "மதராஸ் மாநிலம் மற்றும் கேர் அமைப்பு இணைந்து செயல்படுத்தும், இந்திய மதிப்பில் ரூ. 3 கோடி மதிப்பிலான 31 மில்லியன் பவுண்டுகள் எடைகொண்ட 4 வகையான உணவுப் பொருட்களை

உள்ளடக்கிய இத்திட்டம் - உலகிலேயே மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்படும் திட்டமாக உருப்பெறுகிறது" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பகல் உணவுத் திட்டத்தில் கேர் அமைப்பு வழங்கும் பொருட்களைச் சரிவர நிருவகிக்க அமெரிக்காவைச் சேர்ந்த நிருவாக அதிகாரி ஒருவரும் குறைந்தபட்சம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 கள ஆய்வு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரூ.3 கோடி அளவிலான இந்த உணவுப் பொருட்களைத் தமிழ்நாடெங்கும் கொண்டு சேர்த்தல், பாதுகாத்தல் மற்றும் பல்வேறு நிருவாக ரீதியிலான செலவாக ரூபாய் 5,41,500 (ஐந்து இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து ஐந்நூறு ரூபாய்) கணக்கிடப்பட்டுள்ளது. கேர் அமைப்பு வழங்கும் பொருட்களை நிர்வகித்தல், வழங்கல், மேற்பார்வை செய்தல் மற்றும் பிறவற்றுக்கு ஆகும் மொத்த செலவுகளுக்குமான கணக்குகளையும் கேர் அமைப்பு செம்மையாகப் பதிவு செய்து, மீதமாகும் தொகை தமிழ்நாடு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்று கேர் அமைப்பின் இந்தியாவுக்கான இயக்குநர் திரு.ஆலன் க்ளைன் அவர்கள், தமிழ்நாடு கல்வி அமைச்சருக்கு எழுதிய ஒப்பந்தக் கடிதத்தின் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.

Copy of Letter dated the 11th April 1961 from the Director of CARE in India, New Delhi to the Minister for Education, Madras-9.

I have just received a communication from New York and I am pleased to say that our head office approves of the idea of our Madras State - CARE Mid-day Meal Program in Elementary Schools. I should like, If I may, to outline the main points of our correspondence with New York:

(1) Since CARE's requirements for commodities for Fiscal Year 1962 have already been requested and approved it would be difficult for us, at this point, to get the full amount of commodities that we spoke of during my visit to Madras. We are suggesting, therefore, that we begin our mid-day meal program with 5,00,000 to 6,00,000 school children rather than 10,00,000.

We also think, that because this would be the first program of its kind in India it would be more circumspect on both our parts if we begin with a slightly smaller program. Even with CARD's experience in this field, there will be certain

problems arising pertaining to the situation in Madras which will be different from problems encountered elsewhere.

For this reason also we feel that we should not try to over extend ourselves in the beginning. We can always hope to expand our program once we see that things are running smoothly.

(2) Based on the above, then, and barring any contingencies, CARE is prepared to offer the following commodities towards a School Feeding Program in Madras.

1,87,50,000 pounds of rice.

62,50,000 pounds of milk powder.

30,00,000 pounds of enriched corn meal.

30,00,000 pounds of vegetable cooking oil.

These commodities totalling 3,10,00,000 pounds are worth approximately Rs.3,00,00,000 and would make the Madras State-CARE project the largest 4-commodity feeding program in the world.

(3) As you can well understand there are certain costs connected with such a program both in the United States and India. Our New York of Ace has to form a special group of people to work on the Madras project. Also, there are costs pertaining to warehousing, marking, insuring and in some cases, special packing of the commodities in the United States.

(4) There will also be certain costs pertaining to our operation in Madras. We would, ofcourse, assign a CARE administrator from the United States to work in Madras. Moreover, we will need atleast three other people from Madras to act as field representatives and whose job would be to visit and advise the various public schools involved in our program.

Other costs such as vehicle maintenance, travel expenses etc., would also have to be included.

(5) CARE has estimated that the total cost for running this program for one year would be approximately Rs. 5,41,500.

As you will note in paragraph 6b of the proposed Madras State-CARE agreement, we keep a strict accounting of all expenses occurred.

Any sum remaining at the end of the program will be returned to the Ministry of Education.

6) For your further guidance as far as costs are concerned I am enclosing a copy of an agreement between the Republic of the Philippines and CARE. As you note in paragraph 1 approximately the same amount of commodities is involved though in the case of the Philippines it was only a single commodity, milk.

You will also note that in paragraph 4 CARE has requested a contain percentage of the program cost be paid in dollars. Though CARE makes this stipulation at tall countries in which we operate, there will be no such dollar figure involved in the case of Madras.

Again, you will note by adding the figures in paragraph 4 and paragraph 5 that, the total cost of the Philippines portion comes to $196,407.50 or Rs. 933,00,32. This is considerably more than the amount requested for the program in Madras, even though the amount of commodities is the same.

Based on the above points, I am including a draft of a possible agreement between the state of Madras and CARE. I hope you will feel free to make any changes, additions or deletions that you think the text may require, before sending it back to me. Should it be necessary at this stage, I Would be most happy to come to Madras for further discussions.

May I so reiterate what I said during our meeting concerning other CARE projects in Madras. Once we have working agreement which provide for our administrative costs running a food program, we would then be free to channel

other money into protects of a different nature. This would include aiding programs such as Dr. Sanjivi's hospital and other projects in the fields of Health or Agriculture in which the State of might be interested. There would, of course, be no counter part fund required for these programs.

May I once again say that a Madras State-CARE Midday meal Program of the kind envisaged would be a tremendous achievement in the field of child health. And I am convinced that together we can carry it out successfully.

Yours faithfully,

(sd.) Allan Kline, Director of CARE in India.




கேர் அமைப்பின் பங்களிப்புகள் உணவுப் பொருள்கள் வழங்கியதோடு நிற்காமல், மேலும் சில வகைகளிலும் தொடர்ந்தது. ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களின் பணிக்கு இடையே அவர்கள் மதிய உணவுத் திட்டப்

பணிகளையும் கவனிக்கும் கூடுதல் பொறுப்பைக் குறைக்கும் வகையில் 1960களில் மையப்படுத்தப்பட்ட பொது சமையலறைகள் உருவாக்கப்பட்டன. அதன்கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் 30 சமையலறைகள் கட்டி, 66 உணவு வழங்கல் வாகனங்கள் வழங்கியது கேர் அமைப்பு. அடுத்த 10 ஆண்டுகளில் மேலும் 2 மாவட்டங்களில் 66 சமையலறைகளைக் கட்டித் தந்தது கேர் அமைப்பு.

### இது குறித்து கேர் அமைப்பு தனது இணையதளத்தில் பகிர்ந்துள்ள செய்தி பின்வருமாறு

In Madras, now known as Chennai, the midday meal scheme had been operational since 1925. It was intended to help poor children who attended school but remained hungry all throughout the day. However, its reach was limited.

The programme received an impetus with Dr. C. Subramaniam, the then Finance Minister of India, signing an agreement in Washington in 1961 under which CARE was to provide the nourish-ment while the state government had to bear the administrative costs of the expanded midday meal programme. This firmly established the developing world's largest logistical network for free food distribution.

CARE's midday meal beneficiaries rose from 7,50,000 in 1960 to 12 million children daily in 1,30,000 schools in 14 states by 1985.

Initially, the programme began with the provision of a glass of milk every day. Later, it included corn-soya milk, corn-soya blend, bulgur wheat, salad oil and rice.

It was a mammoth programme. Every year, till mid-eighties, CARE imported 1,45,000 tone of food worth USD 44 million. The Food Corporation of India cleared the shipments with the assistance of CARE port officers who supervised their dispatch to district warehouses in the surrounding states.

CARE constructed storage godowns and central kitchens for preparing the vast quantities of food.

## Central Kitchens

The Central Kitchen project was conceived to reduce the involvement of teachers, headmasters and headmistresses in preparing meals, neglecting their prime responsibility of teaching. In the sixties, 30 central kitchens were constructed in Chingleput district. CARE bore this cost as well as that of 66 food delivery vans. In the next decade, CARE constructed another 66 kitchens in two more districts. Commenting on the CARE support, a retired government official in Tamil Nadu said, "The poor children of Tamil Nadu prospered and CARE was loved by all." Even uneducated mothers knew CARE.

CARE's midday meal beneficiaries rose from 7,50,000 in 1960 to 12 million children daily in 1,30,000 schools in 14 states by 1985.



# தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டத்திற்கு நேசக்கரம் நீட்டிய அமெரிக்கா!

இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதராக (18 ஏப்ரல் 1961 முதல் 12 ஜூலை 1963 வரை) செயல்பட்ட திரு.ஜான் கென்னத் கேல்பிரித் அவர்கள், 17 ஆகஸ்டு 1961 அன்று சென்னைக்கு (அன்று மதராஸ் பட்டணம்) வருகை தந்தார். அப்போதைய முதலமைச்சர் திரு.கு.காமராஜர் அவர்களது ஆட்சியில் செயல்படுத்தப்பட்டிருந்த பகல் உணவுத் திட்டத்திற்கு ஐக்கிய அமெரிக்க அரசின் உதவிகளைக் குறிப்பிட்டுப் பேசினார்.

Food for Peace என்னும் முன்னெடுப்பின் மூலமாகத் தமிழ்நாட்டில் (அன்று மதராஸ் மாநிலம்) செயல்படுத்தப்பட்டிருந்த பகல் உணவுத் திட்டத்திற்கு ஐக்கிய அமெரிக்க அரசின் பல்வேறு உணவுப் பொருட்கள் ஆகஸ்டு 17, 1961 அன்று சென்னை வந்தடைந்தன.

அப்போது பேசிய திரு. ஜான் கென்னத் கேல்பிரித் அவர்கள், "நேற்றைக்கு முன்தினம் டெல்லியில், இந்தியாவிற்கான 3 மின் உற்பத்தி நிலையங்களுக்கு ஐக்கிய அமெரிக்க அரசின் கடனுதவித் திட்டங்கள் ஒப்பந்தமாயின. மின் உற்பத்திக்கான வேலை சிறப்பாக நடைபெறப்போகிறது. அவை நிறைவடையும்போது அதன் பயன்பாட்டை நாம் கண்கூடாக மிகவும் வெளிப்படையாக உணர முடியும். அதே வேளையில், மதராஸில் (தமிழ்நாடு) செயல்படுத்தப்பட்டுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தின் பயன் வெளிப்பாட்டைக் கண்கூடாக அறிய முடியுமா என்று தெரியவில்லை; ஆனால் இத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நமது இல்லங்களில் இருளகற்ற விளக்கை ஒளிரச் செய்வது நல்லதுதான். ஆனால், பள்ளிக் குழந்தைகளின் கண்களை ஒளிமிகுந்ததாக்குவது அதனினும் சிறந்தது. அவ்வகையில் இந்தப் பகல் உணவுத் திட்டம் மிகவும் முற்போக்கானது," என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டத்தைச் செழுமைப்படுத்துவதற்காக அமெரிக்காவிலிருந்து வழங்கப்படும் உணவுப் பொருட்களைப் பற்றியும் அதனை வழங்கும் வேளையில் அமெரிக்காவில் உணவு வழங்கலில் உள்ள சிக்கல்களையும் குறிப்பிட்டு மதிய உணவுத் திட்டத்தை அன்றைய அமெரிக்க அதிபராக இருந்த திரு. ஜான் எஃப் கென்னடி அவர்கள் எந்த அளவிற்குப் பயனுள்ளதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதினார் என்பதை விளக்கிப் பேசினார்.

"உங்களுக்கு இன்றைக்கு அமெரிக்காவிலிருந்து பால் வழங்குகிறோம் என்றால் எங்கள் நாட்டில் பால் மிகவும் உபரியாகக் கிடைக்கிறது என்று பொருளல்ல; அங்குப் பால் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. அமெரிக்காவில் அரிசி கையிருப்பு மொத்தமும் தீர்ந்துபோயுள்ளது. ஆனாலும் மதராஸின் (தமிழ்நாடு) குழந்தைகளுக்கு அரிசி வழங்க வேண்டிய முக்கியத்துவத்தை எங்கள் அதிபர் ஜான் கென்னடி அவர்களுக்கு விளக்கிச் சொன்னபோது, 'வேளாண்துறைச் செயலாளரிடம் இருந்து மதராஸ் (தமிழ்நாடு) குழந்தைகளுக்கான அரிசியைப் பெற, வேண்டுமானால் வன்முறையைக் கூடக் கையாளுங்கள்' என்று சொன்னார். ஆனால், வேளாண் செயலாளர் மிகவும் பரந்த மனதோடு

கைவசமிருந்த கடைசிப் பருக்கை அரிசியையும் வழங்கியிருக்கிறார். அந்த அரிசி உங்களுக்குப் போதுமானதாக இருக்குமா என்று தெரியவில்லை என்பதால் அரிசிக்கு ஈடான ஊட்டத்தைத் தரவல்ல பல்கர் கோதுமையும் கூடுதலாக வழங்குகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

வன்முறையைக் கையாளுதல் என்பதன் பொருள் உண்மையில் அடித்துப் பிடுங்குங்கள் என்பதல்ல; குழந்தைகளுக்குத் தேவையானதை எப்படியேனும் வழங்கிவிடுங்கள் என்னும் பொருளில் சொல்லப்பட்டது. அன்றைய அமெரிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடியும் இந்தியாவின் மீது எப்போதும் மிகுந்த பாசம் கொண்டிருந்த ஜான் கென்னத் கேல்பிரித்தும் இந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதினார்கள் என்பதை அவரது உரையின் மூலம் நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

திரு. ஜான் கென்னத் கேல்பிரித் அவர்கள் உரை நிகழ்த்திச் சென்ற 50 ஆண்டுகளுக்குப் பிறகு 2011இல் அமெரிக்க அரசுச் செயலாளராக இருந்த திருமதி. ஹிலாரி க்ளிண்டன் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார். திருமதி. ஹிலாரி க்ளிண்டன் அவர்கள் வருகின்றபோது மதராஸ் பட்டணம் - சென்னையாகவும், மதராஸ் மாநிலம் - தமிழ்நாடாகவும் மாறியிருந்தது. பசியால் சூழப்பட்டிருந்த கல்வியறிவில் பின் தங்கியிருந்த மதராஸ் மாநிலம், 80.3 சதவிகிதம் பேர் கல்வியறிவு பெற்ற தமிழ்நாடாகவும், மதராஸப் பட்டணம் - டெட்ராய்ட் ஆஃப் இந்தியாவாகவும் (Detroit of India) மாறியிருந்தது. சென்னையின் எழில்மிகு விரிவாக்கத்தையும் தொழில் ஆக்கத்தையும் கண்டு வியந்து வாழ்த்திச் சென்றார். மொத்த இந்தியாவும் வியந்து பார்க்கும், மொத்த இந்தியாவும் பின்பற்றும் பண்பாட்டையும் புரட்சிகரத் திட்டங்களையும் உருவாக்கிய சென்னையின் சொத்து - கல்வி வளர்ச்சி, மானுட மேம்பாடு, அறிவியல் பார்வை!

# பயன்பெற்றோர் போற்றுகின்றனர்

## திரு. சுந்தர்

மஸ்கட், ஓமன்

வணக்கம் !!

வாழ்த்துகள் தங்கள் முயற்சிக்காக..

பெருந்தலைவர் காமராஜரின் புகழ் போற்றி எனது பள்ளிப் பருவ வாழ்க்கை சுருக்கம் இங்கே தருகிறேன்.

என் பெயர் சுந்தர், வயது 52.

77 முதல் 81 வரையிலான கால கட்டத்தில், பள்ளிப் பருவ சமயத்தில் நானும் தமிழக அரசின் மதிய உணவு உண்டுதான் படித்தேன். திருவையாறு பஞ்சாயத்து யூனியன் பள்ளி. மறக்க முடியாத நினைவுகள். நானும் எனது அண்ணனும் முதல் பட்டதாரிகள் என் குடும்பத்தில்.

பிறகு நான் முதுகலைப் பட்டம் பெற்று, பல நிறுவனங்களில் பணிபுரிந்து, தற்பொழுது நான் ஓமன் நாட்டில் முதன்மையான வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். என் வாழ்வு, உயர்வு இவற்றில் சத்துணவுத் திட்டம் ஈன்ற கொடை மகத்தானது.

வயிறார உண்ணும் மகற்கு, நானிலம் போற்றும் நற்கல்வி வாய்க்கும்.

அந்நாளில், பெருமளவு சத்துணவுக்கான நிதி அரசிடம் இருந்தும், பகுதி அளவு தனியார் நன்கொடைகளையும் கொண்டு இருந்தது. பிறகு தமிழக அரசே பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி மகத்தான மக்கள் பணி செய்தது.

காமராஜரின் எண்ணத்தில் உதித்த முத்தான திட்டம். வழி நடத்திய பிற்கால முதல்வர்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள் மற்றும் நன்றிகள்.

மென்மேலும் மக்கள் நலத் திட்டங்கள் கொண்டு வரும் எந்த அரசுக்கும் துணை நிற்போம். அடித்தட்டு மக்களின் கல்வி தாகம் தீரப் பசிப்பிணி ஆற்றி உழைக்கும் தலைவர்களுக்கும் கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.

“ காமராஜருடைய பெருமையை எடுத்துச் சொல்வதிலும்
காமராஜர் எந்த கல்விக்காக பாடுபட்டாரோ அந்த
கல்வியை வளர்ப்பதிலும் கழக அரசு கங்கணம்
கட்டிக்கொண்டு கடமையை ஆற்றும். ”

- மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

## சொர்ணம் சங்கரபாண்டி

மேரிலாந்து, வாசிங்டன் டிசி,
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

என் பெயர் சொர்ணம் சங்கரபாண்டி. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் வாசிங்டன் டிசி அருகே மேரிலாந்து மாநிலத்தில் வசித்து வருகிறேன். ஒரு பன்னாட்டு வங்கியில் துணைத்தலைவராகப் பணியாற்றுகிறேன். சென்னை ஐ.ஐ.டி.யில் வேதியியல் ஆராய்ச்சி முனைவர் பட்டம் பெற்றபின், 1990ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தேன். கொலம்பஸ் நகரத்திலிருக்கும் ஓஹையோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் உதவிப்பேராசிரியராய் 1994 வரையில் பணியாற்றினேன். பின்னர் பால்டிமோர் நகரத்தில் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுமுனைவர் பட்டமும், கணினிப்பொறியியலில் பட்டமேற்படிப்பும் பெற்றேன். அமெரிக்காவின் பல்வேறு தமிழ்த் தொண்டு அமைப்புகளில் தன்னார்வலராகப் பணியாற்றி வருகிறேன்.

தமிழ்நாட்டின் தென்கோடியில் மணப்பாடு என்ற கடலோரச் சிற்றூரில் பிறந்தவன். என் தந்தையார் மின்சார வாரியத்தின் கடைநிலை ஊழியர் என்பதால் பல கிராமங்களுக்கு மாற்றப்பட்டார். ஆறு பிள்ளைகளைக் கொண்ட என் குடும்பத்தில் இளமைக்கால வறுமை மிகவும் துன்புறுத்தினாலும் பள்ளிக்கூடத்தில் மதிய உணவு உண்பது தரக்குறைவாகக் கருதப்பட்டது. இருப்பினும் பூச்சிக்காடு என்ற சிற்றூரில் புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளியில் மதிய உணவைத் தயாரித்து வழங்குவதில் மாணவர்களும் ஈடுபடுத்தப்பட்டதால் நானும் அதில் பணியாற்றி இருக்கிறேன். ஒரு பெண் சமைத்து வைத்துவிட்டுச் செல்வார். அவருக்கு முன்னதாகவே வேண்டிய பொருட்களையும் பாத்திரங்களைத் தயாரித்து எடுத்து வைப்பதையும், உணவைப் பரிமாறுவதையும், அனைவரும் சாப்பிட்டு முடித்தபின் இடத்தையும், பாத்திரங்களையும் சுத்தப்படுத்துவதையும் மாணவர்களாகிய நாங்கள் செய்து வந்தோம். ஏழாம் வகுப்பும், எட்டாம் வகுப்பும் படித்து வந்த அக்காலத்தில் மதிய உணவு கை கொடுத்தது. அதன்பிறகு பணகுடி என்ற சிறுநகரில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்த காலத்தில் மதிய உணவுத் திட்டமில்லாமல் இருந்தது ஏமாற்றத்தையளித்தது. என்னுடன் பள்ளியில் பயின்ற எத்தனையோ மாணவர்கள் பயன்பெற்றார்கள் என்பது கண்கூடு.

# சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் - 1971

பள்ளிக் குழந்தைகள் மட்டுமில்லாமல் பிறந்து 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரையிலான பச்சிளம் குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையில் 1971ஆம் ஆண்டு திட்டம் வகுத்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. 1971ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விளிம்புநிலைக் குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் புரதம் மற்றும் இரும்பு உள்ளிட்ட "சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. முதலில் ஒன்றிய திட்டமாக வடிவமைக்கப்பட்டாலும் பின்னர் மாநிலங்களே நடத்தும் திட்டமாகச் செயல்பட்டது. தற்போதும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இத்திட்டம் இயங்கி வருகிறது.

1971ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தாம்பரத்தில் உள்ள விளிம்புநிலைப் பகுதிகளுக்கான சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டத்தை அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தது குறித்து ஜீன் 1971 தமிழரசு இதழில் வெளிவந்த தகவல்.

The Tamil Nadu Chief Minister inaugurated the Special Nutrition Programme for the Children of Slums at Tambaram and belt areas on 16th May 1971.

The non-availability of protein-rich food affects the body and mind of the Children resulting in retarded brain. To offset the deficiency in protein, the Government of Tamil Nadu introduced the Special Nutrition Programme for the first time in October 1970 for the benefit of the pre-school Children in the slums of Madras in the age group of 6 months to 3 years. The programme having proved a success has been extended to benefit the Children in the slums of Chengalpet, Madurai, Trichy and Coimbatore districts.

In Chengalpet District, the Special Nutrition Programme is benefiting 20,000 Children of the slums in the Belt area. Accordingly the following local bodies are covered by the Scheme :

1. St. Thomas Mount Panchayat Union.
2. Madhavaram Panchayat Union.
3. Villivakkam Panchayat Union.
4. Tambaram Municipality.
5. Pallavaram Municipality.
6. Thiruvottiyur Municipality.
7. Madhavaram Municipality.

8. Ambattur Municipality.

9. Kathivakkam Municipality.

10. Alandur Municipality.

11. Avadi Municipality.

Under the Scheme, the protein-rich “Modern Bread” is supplied at a cost of 23 paise per child per day for 250 days in a year involving at a total cost of Rs. 11,75,000 for this district.

Each child is supplied per day with 75 grams of Modern bread cut into three loaves. The bread is distributed in 100 Centres, calculated at 200 children per Centre. Arrangements have been made for feeding the children at the Centre itself, as far as possible. The bread left undistributed, due to the absence of few children, are distributed to the poor children, who do not have identification cards.

A periodical medical check-up of children once in a quarter is done to access the health (weight) of the children and remarks of the doctor are noted in the backside of the card.

Maternity centres, Health and Family planning centres, Madhar Sangams and Schools are utilised as centres of distribution of the bread and are distributed through the agencies such as Madhar Sangams, YMCA College Rural Service League and Indian Women’s Association. An organiser and a helper are appointed in each centre of 200 children and they are paid honorarium at Rs. 20 and Rs. 10 respectively per month.

# சத்துணவுத் திட்டம் புகைப்படக் கட்டுரை

திரு. டால்டன்,
மதுரை



மதுரை மாநகராட்சித்
தொடக்கப்பள்ளி,
எஸ்.எஸ்.காலனி



உணவு சமைக்கத்
தேவையான அரிசியை
அளவிடும் சத்துணவுப்
பணியாளர்கள்



சுத்தம் செய்யப்பட்ட
அரிசி



மசாலா முட்டைக்குத்
தேவையான தக்காளிகள்



உணவுக்குத்
தேவையான
புளிக்கரைசல்



சத்துணவு முட்டைகளைத்
தேர்வு செய்தல்



சத்துணவுக்குத் தேர்வு
செய்யப்பட்ட
முத்திரையிடப்பட்ட
முட்டைகள்



முட்டைகள்
அவிப்பதற்குத் தயார்
நிலையில்



முட்டைகளை
வேகவைத்தல்



அவித்த
முட்டைகள்



முட்டையில் கலப்பதற்குத்
தேவையான மசாலா



முட்டையும்
மசாலாவும்



மசாலா
முட்டை தயார்



அரிசி
வேகவைத்தல்



சாப்பாடு தயார்



புளியோதரைக்குத்
தேவையான மசாலா
தாளிப்பு



தாளிப்பில் சேர்க்கப்படும்
புளிக்கரைசல்



புளியோதரைக்குத்
தேவையான தாளித்த
கரைசல் தயார்



புளியோதரை தயார்



பரிசோதனைக்குக்
காத்திருக்கும் சத்துணவு



பள்ளி
தலைமை ஆசிரியை
ஆய்வு

உணவின் தரத்தைப்
பரிசோதிக்கும் பள்ளி
தலைமை ஆசிரியை





பரிமாறுவதற்குத்
தயாராகச் சத்துணவு

சத்துணவு சாப்பிட
மாணவர்கள் கிளம்பிட்டாங்க!





சத்துணவு சாப்பிடும்
மாணவர்கள் வருகைக்
கணக்கெடுப்பு



சாப்பாட்டுக்கு
நேரமாச்சு



கைகளையும்,
தட்டுகளையும்
கழுவும் மாணவர்கள்



மாணவர்களுக்கு உணவு
பரிமாறும் சத்துணவுப்
பணியாளர்



மகிழ்வுடன்
உணவருந்தும்
குழந்தைகள்



யாருக்கெல்லாம்
இன்னொருக்க வேணும்...
கைதூக்குங்க



சுத்தமா சாப்பிட்டாச்சு



சாப்பிட்டதற்குப் பின்
தங்கள் தட்டுகளைக்
கழுவும் குழந்தைகள்



சத்தமா வாய்ப்பாடு
சொல்லுங்க



உற்சாகத்துடன்
வகுப்பறையில்...



ஆர்வமுடன் பாடம்
படிக்கும் குழந்தைகள்...

# சத்துணவுத் திட்டத்தால் சமுதாயம் பெறப்போகும் பலன்கள்

மாண்புமிகு
முன்னாள் முதலமைச்சர்
திரு.எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்கள்

சாதிமத வேறுபாடின்றி 60 இலட்சம் குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டத்தால் பயனடைவர்.

முன்பிருந்த 4,343 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன, தவிர, புதியதாக 15,501 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களும் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படும்.

15,500க்கு மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்களுக்குப் புதியதாக 15,500க்கும் மேற்பட்ட குழந்தைகள் நல அதிகாரிகள் நியமனம்.

குழந்தைகள் காப்பக உதவியாளர், சமையல்காரர்கள் என ஏறத்தாழ இலட்சம் ஏழைத் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை.

கிராமப்புறங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.38,000 செலவில் உணவுக்கூடம் அமைக்கப்படும்.

சத்துணவுத் திட்டத்தில் இயன்றளவு உதவிட, எல்லா மக்களும் பங்கேற்க வாய்ப்பு.

எனது வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே. உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம்.

தமிழ்நாட்டில் வாழும் ஏழைக் குழந்தைகளின், மன்னிக்கவும், பட்டினியால் வாடும் ஏழைக் குழந்தைகளின் ஒரு வேளைப் பசியைப் போக்கும் திட்டத்தைப் பற்றி உங்களிடையே நான் பேச வந்திருக்கிறேன்.

"அன்னக் குவளையில்தான் இறைவன் ஏழைக்குக் காட்சி அளிக்கிறான்" என்று அமரர் அண்ணல் மகாத்மா காந்தி அடிகள் கூறியுள்ளார்கள்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்" என்று அமரர் அண்ணா சொன்னார்கள்.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும்
சேராது இயல்வது நாடு"

என்பது வள்ளுவரின் வேதவாக்கு. 70 கோடி என்ற எண்ணிக்கை அளவை எட்டிக் கொண்டிருக்கும் இந்திய நாட்டின் மக்கள் பெருக்கம் ஒரு புறம், மீளமுடியாத வறுமையின் பயங்கரக் கொடுமை மறுபுறம், இவ்விரண்டு சூழலில் பிறந்துள்ள குழந்தைகள் ஒட்டிய வயிறோடும், உலர்ந்த உதடுகளோடும். இடுங்கிய கண்களோடும் இளைத்த மேனியோடும் இருக்கும் அவல நிலையை நமது நாட்டு மருத்துவர்கள் பல முறை வேதனையோடு சுட்டிக்காட்டியுள்ளார்கள். தாய்க் குலத்தின் கண்ணீரைத் துடைத்திட.

"கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை" ஆம்; பசித்தால் அழ மட்டுமே தெரிந்த வயதில் பசிக் கொடுமைக்காளாகும் அனுபவத்தை நான் இளமையில் அறிந்ததன் விளைவே இத்திட்டம். பக்கத்து

வீட்டிலிருந்த ஒரு தாய் முறத்தில் அரிசியைத் தந்து கஞ்சிக் காய்ச்சிக் குடிக்க எங்களுக்கு உதவியிருக்காவிடில் மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடந்த எங்கள் தாயும் நாங்களும் என்றோ இந்த உலகை விட்டுப் போயிருப்போம். அத்தகைய தாய்க்குலம் முழு நம்பிக்கையோடு என்னை முதலமைச்சராக்கியுள்ளது.

அந்தத் தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க எனக்குத் தெரிந்த வழியில் இப்பணியை மேற்கொண்டுள்ளேன்.

ஏழ்மை நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் பல குடும்பங்களில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல் கை பிசைந்து. நிற்கும் அவல நிலையைப் போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது எனது அவசர அவசிய கடமை என்பதை உணர்ந்தேன். இந்த அடிப்படையில்தான், 2 முதல் 10 வயது வரை ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. 1982 ஜூலைத் திங்கள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள, ஒருவேளை உணவிற்கும் வழியின்றித் தவிக்கும் - ஏழ்மையில் வாடும் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் வகை செய்யும்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 1981ஆம் ஆண்டுக் கணக்கின்படி 4.82 கோடியாகும். இதில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42.10 இலட்சம். 5 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 63.73 இலட்சமாகும். ஆக 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மொத்தம் 105.83 இலட்சமாகும். ஏழ்மைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இந்த இலவச உணவு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் ஏறத்தாழ 60 இலட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த உணவுத் திட்டம், தற்போது சமூக நலத்துறை இயக்கி வரும் குழந்தைகள் காப்பகங்கள் மூலம் செயல்படுத்தப்படும். 5 முதல் 9 வயதுக் குழந்தைகளைப் பொறுத்தவரை, இத்திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

இந்த இரண்டு அம்சங்களுக்கும்,மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்பார்கள். அவர்களுடைய மேற்பார்வையில்தான், திட்டத்தின் இரு கூறுகளும் செயல்படும். மாநில அளவில், அமைச்சரவையில் இத்திட்டத்தை நேரடியாகக் கண்காணிக்கும் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டுள்ளேன். இப்பொறுப்பில் எனக்கு உதவிசெய்ய சில அமைச்சர்களையும், அதிகார சார்பற்ற வல்லுநர்கள் சிலரையும், அதிகாரிகள் சிலரையும் கொண்ட ஓர் உயர்மட்டக்குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு கிராமத்திலும்...

சமூக நலத்துறை ஏற்கனவே 4,343 குழந்தைகள் காப்பகங்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது. இப்போது இப்புதிய திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதற்கு, ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் உணவு மையம் இயங்க வேண்டும் என்ற அடிப்படையில், இதுவரை இயங்கி வந்த குழந்தைகள் காப்பகங்களுக்கு மேலாக 15,501புதிய குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி புகட்டுவதற்கும் உணவோடு உணர்வையும், அறிவையும் ஊட்டுவதற்கும், குழந்தை நல அதிகாரி பொறுப்பில் ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார். பத்தாவது வகுப்புப் படித்து அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் உள்ளூரைச் சேர்ந்தவராக இப்பெண் இருக்க வேண்டும் என்றும், விதவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு இவர்கள் அதிகாரிகளாலும், அதிகாரச் சார்பற்ற உள்ளூர்ப் பிரமுகர்கள் சிலரின் ஆலோசனையின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்வுப்பணி முடிந்து இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஜூலை முதல் தேதியிலிருந்து இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் பொறுப்பேற்க இவர்கள் ஆயத்த நிலையில் உள்ளனர்.

ஐந்துக்கு மேற்பட்டு பத்துக்கு உட்பட்ட வயதைச்சார்ந்த குழந்தைகளைப் பொருத்தவரை, தமிழ்நாட்டிலுள்ள 36 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளின் மூலம் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பழையதும் புதியதும்!

பள்ளிகளைப் பொறுத்த வரை, சென்ற சில ஆண்டுகளாக மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

ஆனால்,அத்திட்டம் செயல்பட்டுவந்த முறைக்கும்.இப்போது செயல்படுத்தப்பட இருக்கும் மதிய உணவுத் திட்டத்தின் முறைக்கும் அடிப்படையிலேயே மிகப் பெரிய வேறுபாடு உள்ளது.

பழைய திட்டம் பள்ளியில் பயின்று வந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்குத் தான் பயனளித்து வந்தது.

புதிய திட்டம் பள்ளியில் உள்ள ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் பயன்தரும்.

பழைய திட்டத்தின்படி ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மட்டும்தான் பள்ளியில் உணவு அளிக்கப்பட்டு வந்தது.

புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களிலும் மதிய உணவு வழங்கப்படும்.

பழைய திட்டத்துக்கு அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் 10 காசு வீதம் செலவு செய்து வந்தது. ஒவ்வொரு ஒன்றியமும் ஒரு குழந்தைக்கு 5 காசு வழங்க வேண்டும் என்ற முறை இருந்தது.

ஆனால், பொருளாதார நெருக்கடியின் காரணமாகப் பல ஒன்றியங்கள் இந்தத் தொகையை வழங்க இயலவில்லை.

ஆகவே, அரசு அளித்த 10 காசுகளைக் கொண்டும், உள்ளூர்ப் பிரமுகர்களின் உதவியுடனும்தான் பழைய திட்டம் செயல்பட வேண்டி இருந்தது.

புதிய திட்டத்திலோ, மதிய உணவு ஒன்றுக்கு ஆகும் 45 காசு செலவு முழுவதையும் அரசே நேரடியாகத் தந்து விடுகிறது.

ஆகவே பொதுமக்களிடமிருந்து பணத்தை வசூலித்து இத்திட்டத்தை நடத்தும் நிர்ப்பந்தத்திற்கு இப்போது ஆசிரியர்கள் யாரும் ஆளாக வேண்டிய

அவசியமில்லை. மேலும், பழைய திட்டத்தின்படி, பல பள்ளிகளில் ஆசிரியர்களே சமையல் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை இருந்தது. புதிய திட்டத்தின்படி. ஒவ்வொரு பள்ளியிலும் சமையல்காரர் ஒருவரும், அவருக்கு உதவியாகச் சிற்றாள் ஒருவரும் நியமிக்கப்படத் திட்டத்திலேயே வசதி செய்யப்பட்டு, இச்செலவுகளையும் அரசே ஏற்க முன் வந்துள்ளது.

இலட்சக்கணக்கான குழந்தைகள் ஒரே வகையான உணவைத் தினந்தோறும் உட்கொள்வதால் குழந்தைகளுக்குச் சலிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதை, கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு 28 உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவ்வாறு தயாரித்து வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 20,000 குழந்தைகள் காப்பகங்கள் மூலமாக, 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட 2 முதல் 5 வயதுக் குழந்தைகளுக்கும் 36,000 பள்ளிகள் மூலமாக, 5 முதல் 10 வயதைச் சார்ந்த ஏறத்தாழ 40 இலட்சம் குழந்தைகளுக்கும் உணவு அளிக்கும் இந்த மாபெரும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு. ஆழ்ந்த ஆய்வுக்கும் ஆலோசனைக்கும் பின்பு அவசியமான ஆயத்தங்கள் எல்லாம் ஆற்றல் மிக்க வகையில் செய்யப்பட்டுள்ளன.

திட்டம் செயல்படுவதைக் கண்காணிப்பதற்கு அரசுக்கும், உள்ளூர் மட்டத்தில் அதிகாரிகளுக்கும் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகள் கூறுவதற்கும் உயர்மட்டக் குழுவைத் தவிர, உள்ளூர் குழுக்களை, பொதுச் சேவையில் ஆர்வமுள்ள பெரியவர்களையும், குறிப்பாகப் பெண்களையும் கொண்டு அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டு. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அமைக்கவிருக்கும் குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் குறிக்கோள் உன்னதமானது. உயர்ந்தது, என்று அனைவரும் ஏற்றுக்கொண்ட போதிலும், திட்டம் செயல்படும் விதத்தில் கவனமாக இருக்கவேண்டுமென அரசு கருதுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமையை ஆய்ந்து அறியவும், உடனுக்குடன் குறைகளைக் களைந்து, நிலைமையைச் சீர்செய்யவும் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள குழுவில் பொதுமக்களும், குறிப்பாகத் தாய்மார்களும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் பயனாகப் பல இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்துவதோடு, அந்தக் குழந்தைகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு இதன் மூலம் மிகப்பெரிய சுமை குறைக்கப்படுகிறது.

இது தவிர, இத்திட்டத்தின் கீழ் புதியதாகக் கிராமப் பகுதிகளில் 15,500க்கும் மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளதால். 15,500 குழந்தைகள் நல அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன், புதியதாகத் திறக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காப்பகத்திலும் இரண்டு உதவியாளர்கள் வீதமும் ஏற்கனவே இயங்கி வரும் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக ஒரு உதவியாளர் வீதமும் ஏறத்தாழ 40 ஆயிரம் பெண் உதவியாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர 36 ஆயிரம் பள்ளிகளிலும், 36 ஆயிரம் சமையல் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதிலும், குறிப்பாக ஏழைத் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது சிறப்பான அம்சமாகும்.

புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திட இதை வெறும் உணவூட்டும் திட்டமாக மட்டும் நாம் வகுக்கவில்லை.

சாதி, சமய வேறுபாடின்றி இளமைப் பருவத்திலிருந்தே குழந்தைகள் பழகிப்படித்து உண்டு வளரும் நிலையை உருவாக்குகிறோம். சமுதாயத்தில் முற்போக்கான மாறுதல் மலரக் கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படும்.

குழந்தைகள் காப்பகங்கள் மூலம் சுத்த, சுகாதாரப் பழக்கங்களும், நல்லொழுக்கமும், ஒருமைப்பாட்டுணர்வும், கட்டுப்பாட்டுணர்வும் அவர்களுக்குக்கிடையே வளர்க்கப்படும்.

கிராமப்புறங்களில் தாய்மார்களுக்கென கழிப்பிடங்கள் கட்ட தனியாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கழிப்பிடங்கள் இச்சிறு பிள்ளைகளுக்கும் பயன்பட வேண்டும் என்பது எங்கள் எண்ணம்.

கழிவுப் பொருள்களிலிருந்து எரிபொருளையும், எருவையும் உருவாக்குவதும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

கழிப்பிடங்களைப் பயன்படுத்தும் சுகாதாரப் பழக்கத்தினை இளம் வயதிலேயே நிலைநாட்ட இது பயன்படும்.

இந்த உணவுக் கூடங்களில் ஒவ்வொரு குழந்தைக்கும் பயன்படுத்துவதற்காக, தனியாகத் தட்டு, குவளை போன்றவையும் அரசு செலவிலேயே வழங்கப்பட இருக்கின்றன.

இதன் மூலம் தங்களுடைய தட்டு, குவளைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளக் குழந்தைகளுக்குக் கற்றுத் தரப்படும். இந்தக் கூடங்களில் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும், வசதியுள்ள இடங்களில் காய்கறி, கீரை முதலியவற்றை உற்பத்தி செய்யவும் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

இவ்வாறு குழந்தைகளின் உடல் உறுதியையும் உள்ளச் செம்மையையும் பேணி, போற்றிப்பாதுகாக்கும் வகையிலும், ஊருக்கு நல்லது செய்யும் உணர்வை இளம் வயதிலிருந்தே அவர்களுக்குப் போதிக்கும் வகையிலும் கிராமப்புறச் சமுதாயத்திலே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தவும் இத்திட்டத்தினை ஒட்டிய நடவடிக்கைகள் அமைக்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் வேட்கையுமாகும்.

இப்போது மதிப்பிட்டுள்ளபடி ரூ.100 கோடிக்கு மேல் இத்திட்டத்தினால் அரசுக்கு நிதிப்பொறுப்பு ஏற்படும். போகப் போக இச் செலவு அதிகரிக்கவும் நேரிடலாம். நெருக்கடியான நிதி நிலைமையிலும் இவ்வளவு பெரும் பொறுப்பை மாநில அரசு தாமாகவே ஏற்றுக்கொள்ள முன் வந்துள்ளது என்றால், இத்திட்டத்தினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய மகத்தான நன்மையில் அரசுக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையே காரணமாகும். இப்பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்திக்கொடுப்பதில், பொதுமக்களும், சேவை உணர்வு கொண்டவர்களும், வசதி படைத்தவர்களும், அரசுக்கு உறுதுணையாக நின்று ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்

புறங்களில் இந்த உணவுக் கூடங்களைக் கட்டுவதற்கு ஒவ்வொன்றிற்கும் 38 ஆயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டு அந்த அடிப்படையில் வரி வடிவப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பொதுநலனில் அக்கறை கொண்ட ஒரு சில பெரியோர்கள் தங்கள் சொந்தச் சார்பிலும். தங்கள் நிறுவனங்கள் சார்பிலும் ஒவ்வொருவரும் நான்கு அல்லது ஐந்து கூடங்கள் கட்டுவதற்குத் தாமாகவே முன்வந்துள்ளது என்பது எங்களுக்குப் பெரிதும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது.

குறிப்பாக, இப்போதைய சென்னை ஷெரீப் சிவந்தி ஆதித்தன் அவர்கள், செட்டி நாட்டரசர் அவர்கள், சேஷசாயிவிசுவநாதன் அவர்கள், எம்.ஏ. எம். ராமசாமி அவர்கள். எஸ்.எஸ்.எம்.சவுண்டப்பன் அவர்கள், ஏ.சி முத்தையா அவர்கள் போன்றவர்களும் பல்வேறு நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் உதவ முன் வந்துள்ளனர். இவர்களுக்கெல்லாம் தமிழக அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வகையில் இத்திட்டத்திற்கு உதவ விரும்பும் பெரியோர்களும், நிறுவனங்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு உதவ முன்வருபவர்கள் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடனும் மாநில அளவில் இத்திட்டத்திற்கென பொதுத்துறையில் நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்குப்பெற வழியுண்டு. இவ்வாறு உணவுக்கூடம் கட்ட நன்கொடை அளிப்பவர்கள் குறிப்பிடும் பெயர் அக்கூடங்களுக்குச் சூட்டப்படும். உதவவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்து ஆனால் உணவுக்கூடம் கட்டித் தரும் அளவுக்குப் பணவசதியில்லாதவர்களும் இந்தத் திட்டத்தினைச் செயலாக்குவதில் பங்கு கொள்ளலாம். குழந்தைகளுக்குப் பயன்படுவதற்காகத் தட்டு, குவளை முதலியவற்றை வாங்கித்தரலாம். சமையல் கூடங்களுக்குப் பயன்படும் பாத்திரங்களை வாங்கித்தரலாம். நிதி உதவி செய்ய வசதியற்றவர்கள் தாங்கள் தங்கள் ஊரில் இத்திட்டம் நல்ல முறையில் நடைபெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்கலாம்.

## ஒளிமயமான நிகழ்ச்சியாக....

இத்திட்டத்தைப் பற்றிய விவரங்களை அறிய நம் பாரதப் பிரதமர் ஆர்வம் தெரிவித்துள்ளார் என்ற செய்தி நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து மட்டுமல்லாது, பல அயல்நாட்டு நிறுவனங்களிலிருந்தும் இத்திட்டத்தில் அக்கறை காட்டியும் ஆதரவு அளித்தும் செய்திகள் வந்துள்ளன. நம்முடைய குழந்தைகள் நாட்டின் பொதுச்சொத்து. அக்குழந்தைகளின் வாழ்வை வளமாக்க நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் நாட்டின் எதிர்கால நலத்திற்கு நாம் செய்யும் முதலீடாகும்

இந்த மாபெரும் திட்டத்தைச் செயலாக்க இரண்டொரு மாதங்களாக இரவும் பகலும் உழைத்த தலைமைச் செயலாளர் திரவியம் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாயிருந்த அனைத்து அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், இத்திட்டத்தின் பல்வேறு மட்டத்தில் பணிபுரிந்த அனைவருக்கும். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் இந்த மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும் இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகள் ஒன்று கூடி, ஊட்ட உணவு அருந்தும் காட்சி, அவர்கள் தங்கள் மழலை மொழியில் நமக்கு வாழ்த்துக் கூறும் ஒளிமயமான நிகழ்ச்சியாக அமையும் என்ற எதிர்பார்ப்பில் இத்திட்டத்தில் பங்கு கொள்ள உங்கள் அனைவரையும் உவகையோடும் உரிமையோடும் பரிவோடும், பாசத்தோடும் இரு கைகூப்பி அழைக்கிறேன்.

# சத்துணவும் சமத்துவமும்!

மலேசியக் கவிஞர்
ஐ. உலகநாதன்

வாய்மணக்கும் நல்லுணவு
மண்மணக்கும் கல்விநலம்
தாயின் பணியனைத்தும்
தருமத்தில் நடக்கிறது.
மேல்த்தட்டும் கீழ்த்தட்டும்
ஓர் தட்டின் முன்னாலே
ஊர்க்கட்டுப் பாட்டிற்குள்
ஒழுங்காக நடக்கிறது.
கஞ்சிக்கும் பஞ்சமெனும்
கடைநிலையில் உள்ளவர்தம்
நெஞ்செலும்பு நிமிர்கின்ற
நேரமொன்று நடக்கிறது.
மதியத்துச் சத்துணவில்
மறுமலர்ச்சிப் புத்துணர்வில்
புதியதொரு தலைமுறைதான்
புறப்பட்டு வருகிறது.

ஊரில் உள்ள பிள்ளைக்கும்
சேரிவாழ் கிள்ளைக்கும்
வேரில் உள்ள வேற்றுமையை
வெட்டி முறிக்கிறது!
சாணத்தில் கலந்த இளம்
சந்ததிகள் காலையிலே
காணத் தகுந்தபடி
காட்சி நலம் தருகிறது.
மாட்டுத்துப் போன
மரப்பாச்சிப் பிள்ளையெல்லாம்
ஏடெடுத்து நாள்தோறும்
எதிர்காலம் படைக்கிறது.
முடமாகிப் போகாமல்
முளைக்கின்ற அரும்பெல்லாம்
திடமாகச் சத்துணவுத்
திட்டம் வழி சமைக்கிறது!
சாரமுள்ள சமுதாயம்
தழைத்துவர நாட்டிலுள்ள
ஈரமுள்ள புள்ளிகளின்
இதயம் திறக்கிறது!

# சத்துணவுத் திட்டத்தின் உடனடிப் பலன்கள்!

1982ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் மாணவர்கள் மத்தியில் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தியதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

மதிய உணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1920ஆம் ஆண்டு முதலே பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டபோதிலும் அத்திட்டத்தின் பயன் என்னவாக இருக்கின்றது, மக்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் அத்திட்டத்தின் தாக்கம் என்னவாக இருந்தது என்பது பற்றியும் பள்ளிக்கூடத்தின் மாணவர் சேர்க்கை, மாணவர்களின் ஊட்டச்சத்து உள்ளிட்ட பலவும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.



1982ஆம் ஆண்டு மதிய உணவுத் திட்டம் முதலமைச்சர் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டபோது திட்டத்தின் உடனடித் தாக்கம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டவை.

## 1) மாணவர் சேர்க்கை

மதிய உணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பப் பள்ளி மாணவர் சேர்க்கை மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 1982ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் முந்தைய கல்வி ஆண்டான

1981-1982ஆம் ஆண்டின் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களைவிட 10 சதவிகித மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது. ஆண் குழந்தைகளின் சேர்க்கைவிகிதம் 12 சதவிகிதமும், பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதம் 7 சதவிகிதமும் அதிகரித்துள்ளது. 1978-1979இல் 2.3 சதவிகிதமும், 1979-1980இல் 1.7 சதவிகிதமும், 1980-1981இல் 1.9 சதவிகிதம் என்ற அளவில் மட்டுமே மாணவர் சேர்க்கை அதிகரித்து வந்த நிலையில், 1981-1982ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையானது மிகக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

## 2) மாணவர் வருகைப்பதிவு

ஆய்வின்போது மிகக் குறிப்பிடத்தக்க அளவிலான மாணவர்கள் பள்ளியில் இணைந்திருந்தபோதும் அவர்கள் நீண்ட காலம் வருகையைப் பதிவு செய்யாதது கண்டறியப்பட்டது. எனவே, மாணவர்களின் வருகைப் பதிவைக் கொண்டு திட்டத்தின் தாக்கத்தைக் கணக்கிடுவதே சரியானதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. 1982ஆம் ஆண்டின் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களைக் கணக்கிடும்போது முந்தையக் கல்வி ஆண்டினைவிட 33 சதவிகிதம் மாணவர் வருகைப் பதிவு அதிகரித்துள்ளது. 1981ஆம் ஆண்டின் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களை வருகைப் பதிவினை விட 1982ஆம் ஆண்டின் அதே மாதங்களில் மாணவர் வருகை 26 சதவிகிதம் அதிகரித்துள்ளது. மேலும் 1982ஆம் ஆண்டின் ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் மாணவர்களின் வருகை ஒவ்வொரு மாதமும் அதிகரித்து வருவது புலப்படுகின்றது.

ஜூன் மாதம் பள்ளிகளில் சேருகின்ற முதலாம் வகுப்பு மாணவர்களின் வருகைப்பதிவு 1981ஆம் ஆண்டு செப்டம்பரைவிட 1982ஆம் ஆண்டு 66.03 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இன்னும் குறிப்பாக ஆண் பிள்ளைகளின் வருகைப் பதிவைவிடப் பெண் பிள்ளைகளின் வருகைப் பதிவு மிகவும் குறிப்பிடத்தகும் அளவில் அதிகரித்துள்ளது.

## 3) சீரான வருகைப்பதிவு

பள்ளிக் கல்வித் துறையைப் பொருத்தமட்டில், 1, 2, 3ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சியை நிறுத்தி வைப்பதில்லை என்பது கொள்கை முடிவு. 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் மாணவர் தேர்ச்சியினை நிறுத்தி வைப்பதற்கான முக்கியக் காரணம், சீரான வருகைப் பதிவின்மை. அம்மாணவர்கள் சத்துணவுத் திட்டத்திற்குப் பிறகு மீண்டும் பள்ளிகளில் இணைந்துள்ளார்களா என்பது ஆய்வு செய்யப்பட்டது. சில குறிப்பிட்ட பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் 4ஆம் வகுப்பில் இடைநின்ற மாணவர்கள் 81 பேரில் 14 மாணவர்கள் மீண்டும் பள்ளிகளில் இணைந்து சீராக வருகைப்பதிவு செய்கின்றனர். 5ஆம் வகுப்பில் இடைநின்ற 44 மாணவர்களில் 6 பேர் மட்டுமே மீண்டும் பள்ளிகளில் இணைந்துள்ளனர். அவர்களது பள்ளி வருகையும் சீராகவே இருக்கின்றது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை
மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில்
காமராஜர் பிறந்த நாள் - கல்வி வளர்ச்சி நாளான
15.07.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் அவர்கள் பள்ளி குழந்தைகளுக்கு
சத்துணவுடன் வாரத்திற்கு மூன்று முறை
முட்டை வழங்கும் திட்டத்தை
தொடங்கி வைத்தார்.

# தமிழ்நாடே முன்னோடி! Centre for Social Studies ஆய்வறிக்கை

குஜராத் மாநிலத்தில் 19 நவம்பர் 1984ஆம் ஆண்டு முதல் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அம்மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகளில் தமிழ்நாடு அரசின் மதிய உணவுத் திட்டம் முன்னோடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக ஆய்வுகளுக்கான மையம் (Centre For Social Studies) எனப்படும் தன்னிச்சையான ஆய்வமைப்பு இந்தியா முழுவதும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் குஜராத் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் குறித்த ஆய்வினை



கன்ஷியாம் ஷா என்னும் ஆராய்ச்சியாளர் மேற்கொண்டார். ஆணை Mid Day Meals Scheme in Gujarat - An Evaluation என்னும் தலைப்பில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மக்களின் வாழ்வியல் தொடர்பான 36க்கும் மேற்பட்ட ஆய்வுகளை Centre For Social Studies மூலமாக மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ஷா, தெற்கு குஜராத் பல்கலைக்கழகத்தில் பொது நிருவாகத் துறை பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். மேலும், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையிலும், சிகாகோ பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையிலும் வருகைதரும் பேராசிரியராக இருந்துள்ளார். அவருக்கு 1979 மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் அரசியல் அறிவியல் ஆராய்ச்சிக்கான வி.கே.ஆர்.வி. ராவ் பரிசு, 1998இல் அரசியல் அறிவியலுக்கான பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. கன்ஷியாம் ஷா, Social Movements in India (1981 and 2004),

Protest Movements in Two Indian States (1977), Public Health and Urban Development: The Study of Surat Plague (1997), Untouchability in Rural India (2006), Dalit Identity and Politics (2001), Re-reading Hind Swaraj: Modernity and Subalterns (2012) and Growth or Development: Which Way Is Gujarat Going? (2014) உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

Mid Day Meals Scheme in Gujarat - An Evaluation என்னும் ஆய்வுக் கட்டுரையில் தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டம் குறித்த விவரங்களைக் குறிப்பிட்டு, அத்திட்டம் நாட்டிற்கே எப்படி முன்னோடியாகத் திகழ்ந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

“மாணவர்களைப் பள்ளியை நோக்கி ஈர்க்கவும் அம்மாணவர்களது ஊட்டச்சத்தினை மேம்படுத்தவும் பள்ளிகளில் வழங்கப்படும் இலவச மதிய உணவுத் திட்டம் மிகவும் இன்றியமையாத பங்காற்றுகிறது.”

இத்திட்டத்தை முதன்முதலாக 1925ஆம் ஆண்டு மதராஸ் மாநகராட்சி அமல்படுத்தியது. மாத வருமானம் 50 ரூபாய்க்குக் குறைவாக இருந்த ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு மட்டும் முதலில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1957ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் திரு. காமராஜர் அவர்களது சீரிய முன்னெடுப்பில் இத்திட்டம் தமிழ்நாடெங்கும் விரிவு செய்யப்பட்டது. பின்னர் தேசிய சுகாதாரக் குழுவின் பரிந்துரையை அடுத்து 1962-1963ஆம் ஆண்டில் தேசிய அளவில் சில குறிப்பிட்ட பகுதிகளைத் தேர்வு செய்து ஒன்றிய அரசின் திட்டமாக இத்திட்டம் அமலாக்கப்பட்டது. 6 முதல் 11 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 8-12 கிராம் புரதமும் 300 கலோரிகளும் வழங்கப்பட வேண்டும் என்பது அத்திட்ட நோக்கமாக இருந்தது. ஆந்திரப் பிரதேசத்தில் 1982ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் அன்று மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அதே காலகட்டத்தில் இத்திட்டத்தின் உள்ளடக்கத்தையும் பயனாளர்களையும் விரிவுபடுத்தி முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமாகச் செயல்படுத்தியது. அத்திட்டத்தின்படி பாலர் பள்ளிகள் மட்டுமல்லாமல் இடைநிலைப் பள்ளிகள் மற்றும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த முதியோருக்கும் உணவளிக்கப்பட்டது. இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தபோது அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்,

"பசித்தால் அழ மட்டுமே முடிந்த வயதில் வறுமையும் பட்டினியும் தந்த அனுபவங்களில் இருந்து இத்திட்டத்தை வெளிக்கொணர்கிறேன். அன்று எங்கள் பக்கத்து வீட்டுப் பெண் பரந்த மனதோடு எங்களுக்கு ஒரு குவளை அரிசி தந்திருக்காவிட்டால் இந்த உலகத்தைவிட்டு எப்போதோ நான் பிரிந்திருப்பேன். இன்று தமிழ்நாடெங்கும் இலட்சோப இலட்ச ஏழைக் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலமாகச் சத்தான உணவைச் சாப்பிட்டுப் பசியாறி தங்கள் மழலைக் குரலில் நம்மையெல்லாம் வாழ்த்தும் இந்தத் தருணம் என்று குறிப்பிட்டார்."

[Mid day meals scheme in Gujarat - An Evaluation by Ghanshyam Shah, July 8, 1988]

„இந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு நல்ல எண்ணத்தோடு இந்த அரசு கொண்டு வருகிறதோ அந்த நல்ல எண்ணம் ஈடேறுகின்ற அளவுக்கு வெற்றி பெறுகின்ற அளவிற்கு நம்முடைய அரசு அலுவலர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளை தங்கள் வீட்டு குழந்தைகளாக கருதி அவர்களை எல்லாம் வாழ வைக்க வேண்டும். "

- மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

# கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம்

## மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னை சிந்தாதரிப்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளான 15.07.2007 அன்று, பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டை வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை வருமாறு:

இன்று இளைஞர்களுக்கு எழுச்சியூட்டக் கூடிய, அவர்களுடைய அறிவுக்கு வளர்ச்சியூட்டக்கூடிய ஒரு நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. இங்கே வருகை தந்துள்ள நம்முடைய சட்டப்பேரவையின் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் அவர்கள் எடுத்துரைத்ததைப்போல,

தன்னலம் மறந்து தாயகத்திற்காகப் பல தியாகங்களைச் செய்து, வாழ்ந்து, மறைந்த, ஆனால் நம்முடைய நெஞ்சங்களில் எல்லாம் மறையாமல் நிழலாடிக் கொண்டிருக்கின்ற பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்தநாள் இந்த நாள் என்பதை எண்ணும்போது, இந்த நாளில் இந்த நாட்டை ஆளுகிற அரசு, அந்தப் பெருந்தலைவரின் நினைவாக என்ன செய்கிறது என்ற கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில்தான் சத்துணவுத் திட்டத்தை மேலும் வலுவுள்ளதாக, மேலும் மேலும் ஊட்டச்சத்து மிகுந்ததாக ஆக்குவது என்று முடிவு செய்து, அப்படி முடிவுக்கு விரிவுரையாகத் தொடக்கத்திலே சத்துணவோடு சிறார்க்கு ஒரு முட்டை வழங்குவதென்றும், அதற்குப் பிறகு கடந்த காலத்தில் இரண்டு முட்டைகள், வாரம் ஒன்றுக்கு வழங்குவதென்றும் தீர்மானித்துக் கடந்த ஆண்டு அறிவித்தேன். இனி வாரம் மூன்று முறை சிறார்க்குச் சத்துணவோடு முட்டைகள் வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற ஓர் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

## உங்களால் உருவாக்கப்பட்ட அரசு

முட்டை வழங்குவதாகச் சொல்லிவிட்டு, வழங்கப்பட்ட முட்டையை நிறுத்துகின்ற அரசாக இந்த அரசு இல்லாமல், ஒரு முட்டை, இரண்டு முட்டை, இரண்டு முட்டைக்கு மூன்று முட்டை வழங்குகிறோம் என்று வழங்கிக் காட்டுகின்ற அரசுதான் உங்களால் உருவாக்கப்பட்ட, அமர்த்தப்பட்ட தி.மு. கழக அரசாகும்.

வாக்குறுதிகள் அளித்திருக்கிறோம், ஒரு முட்டை அல்ல. ஒரு கோடி முட்டைகூட வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கிவிடலாம். ஆனால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மிகமிக சிரமம். ஏனென்றால், சிலபேர், சில அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளைச் சுலபமாக வழங்குவார்கள். எப்படி சுலபம் என்றால், நிறைவேற்றவா போகிறோம் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள்.

இன்னும் சில பேர் வாக்குறுதிகளை வழங்கும்போது, வெற்றி பெறவா போகிறோம். நாம் வாக்குறுதி வழங்கினால் நிறைவேற்றுவதற்கு என்று அந்த எண்ணத்தோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள். ஆனால், தி.மு.க.வைப்



பொறுத்தவரையில் நாங்கள் உருவாக்கிய கூட்டணி மீது எங்களுக்கே நம்பிக்கை நிறைய உண்டு. இந்தக் கூட்டணி தமிழகத்திலே வெற்றி பெறாவிட்டால், வேறு எந்தக் கூட்டணி வெற்றி பெறும் என்ற அந்த மனத்தெம்போடுதான் நான் இந்த வாக்குறுதியைத் தேர்தல் அறிக்கை மூலமாக வழங்கினேன்.

முதலிலே இரண்டு முட்டைகள் வழங்கப்படும், வெற்றி பெற்றால் மூன்று முட்டைகள் வழங்கப்படும் என்று அறிவித்தேன். வெற்றி பெற்றவுடன் வாக்குறுதியை நிறைவேற்றினேன். இரண்டு முட்டைகள் வழங்கப்பட்டது. இப்போது மூன்று முட்டைகள் வழங்கப்படும் என்று கூறியதற்குக் காரணம் நீங்கள் கேட்பீர்கள், அப்போதுதான் தேர்தல் வாக்குறுதி வழங்கினீர், இப்போது எதற்காக வாக்குறுதி வழங்கினாய் என்று கேட்பீர்கள் உங்களால் அமைக்கப்பட்ட அரசு தொடர்ந்து நல்ல முறையிலே நீடித்து ஆட்சி நடத்தும் என்ற அந்த

நம்பிக்கையில்தான் மூன்று முட்டைகள் வழங்கப்படுமென்று அறிவித்தேன். தொடர்ந்து இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த மூன்றாவது முட்டையும் இன்றைக்கு வழங்கப்படுகிறது.

## மனநிறைவோடு நினைக்கின்ற நாள்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை இந்த நாளில் நினைக்கப்படுவதற்கு என்ன காரணம்? பெருந்தலைவரைத் திராவிட முன்னேற்றக் கழகம் நினைப்பதற்கும் நம்முடைய நண்பர் சுதர்சனம் அவர்கள் இருக்கின்ற காங்கிரஸ் இயக்கம் நினைப்பதற்கும் வேறுபாடு உண்டு, அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர். நமக்கும் தமிழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவர். அந்த வகையில் அவர் கட்சிச் சார்பற்ற முறையிலே ஒரு பெருந்தலைவர். நம்முடைய சுதர்சனம் போன்றவர்களுக்குக் காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் அவர்கள் நினைப்பதிலே அர்த்தம் இருக்கிறது. ஆனால் நாம் அவரைக் கொண்டாடுவதும், அவருடைய பிறந்த நாளைப் போற்றுவதும் என்ன அதிலே ஒரு கருத்து, உணர்வு இருக்கிறதென்றால், இப்படிப்பட்ட தலைவர்களைக் கொண்டாடுகின்ற அந்தப் பண்பு இப்படிப்பட்ட தலைவர்களுக்குப் புகழ் சேர்க்கின்ற அந்தப் பண்பு - எல்லா கட்சிகளுக்கும் வந்துவிடாது. அண்ணா போன்ற பெரியவர்களால், அண்ணா போன்ற பெருந்தன்மையாளர்களால் வளர்க்கப்பட்ட தி.மு. கழகம் போன்ற கட்சிகளுக்குத்தான் அப்படிப்பட்ட பண்பு வர முடியும். நாம் இன்றைக்கும் அவர்கள் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே, என்று பிரித்துப் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் அவர்கள் நம்முடைய நாட்டவர்கள், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், நம்முடைய தமிழ் இனத்தவர்கள். அவர்கள் தலைவர்களாக உயர்ந்தால், அவர்கள் மதிப்பும் மரியாதையும் மக்களிடம் பெற்றால், அந்த மதிப்பும் மரியாதையும் நமக்கும் உண்டு, நம்மையும் சேரும், அப்படிப்பட்டவர்களை நாம், அவர்களுடைய மாண்பினை மேலும் மேலும் உயர்த்துகின்ற வகையிலே மன நிறைவோடு நினைக்கின்ற நாளாக இந்நாள் இருக்க வேண்டுமென்று கருதித்தான் இந்த நாளை காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடுகிறோம்.



## கல்வியிலே கருத்துள்ளவர்களாக்கும் பணி

அதிலேகூட எனக்கு என்ன சந்தேகம் வந்தது என்றால், நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதைச் சட்டமாகவே ஆக்கிவிட்டார் என்று குறிப்பிட்டார். ஏன் சட்டமாக ஆக்கப்பட்டது என்றால், காமராஜர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாள் என்று சட்டமாக ஆக்கப்படாவிட்டால், முன்பு இதைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டு, தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து வேறொரு ஆட்சி வந்தபோது உங்களுக்குத் தெரியும் நான் அந்த ஆட்சியின் பெயரையெல்லாம் இப்போது சொல்லி நல்ல நேரத்தில் என்னுடைய மனதைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அந்த ஆட்சி காமராஜருடைய பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அறிவித்த அந்த அறிவிப்பைச் செயல்படுத்தவில்லை. செயல்படுத்தாதது மாத்திரமல்ல, சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்க வேண்டும் என்று வழங்கப்பட்ட அந்தக் காரியத்தையும் அந்த ஆட்சி நிறுத்திவிட்டது. அதற்குப் பிறகு மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் தி.மு.கழக ஆட்சியை இந்தக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு உருவாக்கி அவையிலே உட்காரவைத்த பிறகு இன்றைக்கு நாங்கள் மூன்று முட்டைகள் வழங்குகின்ற விழாவினை நடத்துகிறோம் என்றால், அதற்குக் காரணம் சிறார், இளைஞர்கள், சிறுமிகள் இவர்கள் எல்லாம் கல்வி கற்று, கல்வி கற்கின்ற பள்ளிகளுக்குச் செல்கிற அந்த ஊக்கத்தைப் பெற்று, அந்த ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் வீட்டிலே சத்துணவு கிடைக்காது, இருந்தாலும் பள்ளிக்குச் சென்றால் அங்கே சத்துணவு கிடைக்கும் என்கிற அந்த ஆர்வத்தை அவர்களுக்குத் தூண்டி, அவர்களைக் கல்வியிலே கருத்துள்ளவர்களாக ஆக்குகின்ற ஒன்று இதற்கான குறிக்கோள்.

இரண்டாவது ஏன் முட்டை வழங்க வேண்டும்? சில பிள்ளைகளுக்குப் பள்ளியிலே அவர்கள் படிக்கும் படிப்புகளில் முட்டை கிடைக்கின்றது. அந்த முட்டை இல்லாமல் இது உள்ளபடியே சாப்பிடுகிற முட்டையாக வழங்குவதற்குக் காரணம், கல்வி கற்றிட மூளை வளர்ச்சி மட்டும் போதாது, உடல் வளர்ச்சியும் தேவை. “ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா” என்று மிக எளிய முறையில் பாரதி

பாடினான். ஏன் குழந்தையைப் பார்த்து அப்படிச் சொன்னான் என்றால், அப்படி ஓடி விளையாடினால்தான் அதன் இளம் எலும்புகள் வளரும். அதனுடைய உடல் கட்டுமஸ்தான நிலையில் இருக்கும். அது எதிர்காலத்திலே நல்ல உடல் அமைப்போடு,உலகத்தோடு போட்டிப் போடுகின்ற பல விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் ஈடுபட முடியும். அந்தப் பெருமை இன்றைக்கு இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்குப் பெருமை, பெரும்பாலும் கிடைப்பதில்லை, எப்போதாவது அத்தி பூத்தது போலத்தான் நாம் ஏதோ சில பதக்கங்களை விளையாட்டுப் போட்டிகளில் நம்முடைய உடல் பயிற்சியிலே உள்ள அந்த ஆர்வத்தைக் காட்டுகின்ற வகையிலே பெற முடிகின்றது.

## பள்ளிக்குத் தவறாமல் அனுப்புங்கள்

இங்கே ஒருவர், இருவர் தங்கப்பதக்கங்களைப் பெற்றாலே அதை வைத்துக்கொண்டு கூத்தாடுகின்ற அளவுக்கு நம்முடைய நாட்டிலே, குறிப்பாகத் தமிழகத்திலே உடல் பயிற்சியிலே அதிக கவனம் செலுத்தாத நிலைமைதான் நம்முடைய பிள்ளைகளுக்கு, பிள்ளைகளை வளர்க்கின்ற பெற்றோர்களுக்கு இருக்கின்றது. அதனால்தான் முட்டை சத்தான உணவு, அந்தச் சத்துணவை குழந்தைகள் சாப்பிடுகின்ற காரணத்தால் அவர்கள் உடற்கட்டு வலுவானதாக அமைகின்றது. அந்த உடற்கட்டு நம்முடைய வீட்டுப் பிள்ளைகளுக்குத் தேவை என்ற முறையில் இந்த முட்டையைப் பயன்படுத்த வேண்டும், அதற்காகத்தான் ஒரு முட்டையை இரண்டு முட்டையாக ஆக்கி, இன்று மூன்று முட்டை என்று இப்போது ஆக்கியிருக்கிறோம்.

ஒருவேளை அடுத்த ஆண்டு நான்கு முட்டையாக இருக்குமா என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். அளவுக்கு மீறினால் அந்த முட்டையும் உடம்புக்குக் கெடுதி என்பதால், இந்த மூன்று முட்டையோடு நிச்சயமாக நிறுத்தப்படும்.

அரிச்சுவடியில் படித்ததைத் தம்பி தங்கம் தென்னரசு இங்கே விரிவாகச் சொன்னார். அ, ஆ எழுத்துக்களில் கடைசியாகப் பார்த்தால் மூன்று முட்டைகள் (ஃ) போட்டு இது ஆயுத எழுத்து, எனவே இந்த ஆயுத எழுத்தோடு இந்த முட்டை எழுத்துக்களை நாம் நிறுத்திக்கொள்கிறோம். அடுத்த ஆண்டு நான்கு முட்டை, ஐந்து முட்டை என்பதெல்லாம் குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அல்ல, நம்முடைய துரைமுருகன் போன்றவர்களின் சாப்பாட்டிற்கு வேண்டுமானால் அவைகள் இருக்கலாமேத் தவிர, குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அவைகள் கிடையாது என்பதைச் சொல்லி காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும், ஒரு அரசுக் கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும்போது பெற்றோர்கள், உற்றார் உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பித் தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெற வேண்டும், உடல் அறிவும், உடல் நலமும் பெற வேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அப்போதுதான் காமராஜர் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாள் என்று நாம் கொண்டாடுவதற்கு அர்த்தம். நாடு வளர, சமுதாயம் வளர, இளந்தலைமுறை வளர இந்த நாள் பெரிதும் உதவும் என்று கூறி, இங்கே உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டமைக்காக மகிழ்ச்சியும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

“ஒரு அரசுக் கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும்போது பெற்றோர்கள், உற்றார், உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பி தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெறவேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும்.”

# குழந்தைகளுக்கு முட்டை: சந்தேகத்துக்கு இடமற்ற புரதத் தீர்வு

டாக்டர் கு. கணேசன்

'குழந்தைகள் கொழுப்பு உள்ள உணவுகளான முட்டை, இறைச்சி போன்றவற்றை தினமும் சாப்பிடுவது உடற்பருமன், ஹார்மோன் பிரச்சினைகள் உள்ளிட்ட வாழ்க்கைமுறை பிரச்சினைகளை ஏற்படுத்தும். அவற்றை மதிய உணவுத் திட்டத்தில் கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டும்' என்ற கருத்து பொதுவெளியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது; மருத்துவர்களிடமிருந்தும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. இது குறித்து மருத்துவ அறிவியல் என்ன சொல்கிறது?

## எச்சரிக்கும் 'யுனிசெஃப்' அறிக்கை

கடந்த ஆண்டில் மத்திய அரசு கொடுத்துள்ள புள்ளிவிவரப்படி இந்தியாவில் 33 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கடுமையான சவலை நோயால் (Severe Malnutrition) பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் உயரத்துக்கு ஏற்ற உடல் எடை இல்லாமல் இருக்கின்றனர். புரதச்சத்துக் குறைவால் ஏற்படுகிற இந்த நிலைமையால் குழந்தைகளுக்கு நிமோனியா, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்கள் 11 மடங்கு அதிகமாகப் பாதிக்கின்றன. குழந்தை இறப்புகளில் ஐந்தில் ஒன்று இந்த வழியில்தான் நிகழ்கிறது.

குழந்தைகளின் இறப்புக்கு முக்கியக் காரணமாகப் புரதச்சத்துக் குறைவு (Protein Energy Malnutrition) காணப்படுகிறது என்று 'யுனிசெஃப்' (UNICEF) அமைப்பு ஏற்கெனவே எச்சரித்திருக்கிறது. அதே நேரத்தில் சரியான அளவில் புரதச்சத்துள்ள உணவைக் கொடுத்தால் இந்த இறப்புகளை நிச்சயம் தவிர்க்கலாம் எனவும் அது ஆலோசனை கூறியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, உலகில் பல நாடுகளில் 'யுனிசெஃப்' யோசனைப்படி வேர்க்கடலை, வெல்லம், பால் பவுடர் கலந்த உடனடிச் சத்துமாவைக் கொடுத்து (Ready-to-use therapeutic food - RUTF) 2020இல் மட்டும் 50 இலட்சம் குழந்தைகள் சவலை நோயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிறது.

## முட்டை வழங்கப்படுவது ஏன்?

இந்தியாவில் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக மதிய உணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுவது நடைமுறையில் உள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் வாரத்துக்கு 3 முட்டைகள் வழங்கப்படுகின்றன. தானியங்கள், காய்கறிகள், பழங்கள், இறைச்சிகள் எனப் பல உணவு வகைகள் இருந்தாலும் அவற்றில் எதுவும் முழுமையான உணவு இல்லை. ஆனால், முட்டை முழுமையான உணவு. எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கிற, விலை மலிவான, ஆரோக்கியமான



உணவு. இதனால்தான் குழந்தைகளுக்கு மதிய உணவில் முட்டை கொடுக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.

## முட்டை ஒரு புரதப் பொட்டலம்

'குழந்தைகள் தினமும் முட்டை சாப்பிட்டால் உடற்பருமன் ஏற்படும்' என்ற கருத்து தவறானது. முட்டை ஒரு கொழுப்பு ஆயுதமல்ல; அது ஒரு புரதப் பொட்டலம். புரதம் என்பது குழந்தைகளின் தசை வளர்ச்சிக்குத் தேவைப்படுகிற ஒரு பேரூட்டச் சத்து (Macronutrient). முக்கியமாக, சவலை நோய்க்கு கல்லறை கட்டுகிற சத்து. குழந்தைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் உடற்பருமனைக் கொண்டு வருவது வெள்ளை அரிசி, வெள்ளைச் சர்க்கரை உள்ளிட்ட மாவுச்சத்துதான். ஆனால், முட்டையில் மாவுச்சத்து மிகவும் குறைவு. 100 கிராம் கோழி முட்டையில் புரதச்சத்து 12.6 கிராம் இருக்கிறது. ஆனால், மாவுச்சத்து 1.12 கிராம்தான்.

அடுத்து, 'முட்டையில் இருக்கிற வெள்ளைக் கரு மொத்தமும் புரதம், மஞ்சள் கரு மொத்தமும் கொழுப்பு என்று ஒரு தவறான புரிதலும் இருக்கிறது'. அப்படியில்லை. வெள்ளைக்கரு, மஞ்சள் கரு இரண்டிலும் சம அளவில் புரதம்தான் இருக்கிறது. வெள்ளைக்கருவோடு மஞ்சள் கருவையும் சேர்த்து எடுத்துக்கொண்டால்தான் அதிலிருக்கிற மொத்தப் புரதமும் முழுவதுமாகக் கிடைக்கும்.

## உச்சம் தொடும் 'உயிரிய மதிப்பு'

பல உணவு வகைகளில் புரதம் இருக்கிறது. ஆனால், முட்டையில் இருக்கிற புரதத்துக்குத் தனி மதிப்பு உண்டு. புரதத்தின் தரத்தைக் குறிப்பிட 'உயிரிய மதிப்பு' (Biological value) என்றொரு அளவீடு இருக்கிறது. எந்தவொரு சத்தான உணவானாலும், அது செரிமானமாகி, அதில் உள்ள புரதங்கள் அமினோ அமிலங்களாக மாறி, உடலில் சேர வேண்டும். இதைக் குறிப்பதுதான் 'உயிரிய மதிப்பு'. முட்டையின் 'உயிரிய மதிப்பு' 95 சதவீதம். மற்ற புரத உணவுகளுக்கெல்லாம் இந்த மதிப்பு 60 முதல் 70 சதவீதம்தான். இப்படி மதிப்பு குறைந்த புரத உணவுகளால் உடனடியாகச் சவலை நோயைத் தீர்க்க முடியாது.

அடுத்து, முட்டையில் உள்ள வைட்டமின் - ஏ கண் பார்வைக்கு உதவும். பயாட்டின் முடி வளர்ச்சியைக் கூட்டும். லூட்டின், சியாசாந்தைன் எனும் ஆன்டி-ஆக்ஸிடன்டுகள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். சூரிய ஒளிக்கு அடுத்ததாக நமக்கு வைட்டமின்-டியை அதிகம் கொடுப்பது முட்டைதான். இதிலுள்ள கால்சியம், பாஸ்பரஸ் போன்றவை எலும்பு மற்றும் பல் ஆரோக்கியத்தைக் காக்கும். வைட்டமின்-பி2, பி12 இரத்த உற்பத்திக்குப் பயன்படும். வைட்டமின்-இ பாலினச் சுரப்புகளை மேம்படுத்தும். இரும்பு இரத்தவிருத்திக்கு உதவும்; இரத்தசோகையைத் தடுக்கும். அயோடின் தைராய்டு குறைபாடு வராமல் பார்த்துக்கொள்ளும். பென்டோதெனிக் அமிலம் இளநரை ஏற்படுவதைத் தடுக்கும்; நினைவாற்றலை வளர்க்கும்.

## முட்டையில் எந்தப் பிரச்சினையும் இல்லையா?

முட்டையில் இருக்கிற கொழுப்பு உடலை வலுப்படுத்துமே தவிர பாதிக்காது. இதில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் இருக்கிறது. இது இதயத்துக்கு நல்லது. 100 கிராம் முட்டையில் கொலஸ்ட்ரால் 373 மி.கிராம் இருக்கிறது. ஆனால், நமக்கு தினமும் 2,000 மி.கிராம் கொலஸ்ட்ரால் தேவைப்படுகிறது. ஆகவே 9 மாதம் முதலே குழந்தைகளுக்குத் தினமும் ஒரு முட்டை கொடுப்பது நல்லது. சவலை நோயுள்ளவர்களுக்கு தினமும் 2 முட்டை கொடுக்கலாம்.

முட்டையில் இருக்கிற பிரச்சினை என்று சொல்லவேண்டுமானால் பண்ணைகளில் கோழிகள் வளர்க்கப்படும் விதத்தைச் சொல்லலாம். இயற்கையாக மண்ணில் வாழும் புழு பூச்சிகளைத் தின்று வளரும் கோழிகளால் பிரச்சினை இல்லை. பல பண்ணைகளில் கோழி வளர்க்க அளவில்லாமல் செயற்கைத் தீவனம், நுண்ணுயிர்க்கொல்லி (Antibiotic) மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். இதனால், பயனாளிகளுக்கு நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பாற்றல் (Antibiotic resistance) எனும் ஆபத்து நேருகிறது. இதைக் கண்காணித்து சரிப்படுத்த வேண்டிய கடமை கால்நடை மருத்துவர்களுக்கும், பண்ணை உரிமையாளர்களுக்கும், அரசு இயந்திரத்துக்கும் தான் இருக்கிறது.

இன்றைய நடைமுறையில் குழந்தைகளுக்கு உடற்பருமன் ஏற்படுவதற்கு அவர்கள் அளவுக்கு மீறி இனிப்பு உணவுகளையும் மாவுச்சத்து நிறைந்த உணவுகளையும் சக்கை உணவுகளையும் (Junk Foods) சாப்பிடுவதுதான் முக்கியக் காரணம். அடுத்து, அவர்களுக்கு உடலுழைப்பு, உடற்பயிற்சிகள் குறைந்துவிட்டதையும் சொல்லலாம். இவை குறித்த விழிப்புணர்வை குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமே தவிர, உடற்பருமனுக்கு முட்டையின் மேல் பழியைப் போடுவது அறிவியலுக்குப் புறம்பானது. எனவே, மதிய உணவில் முட்டை கொடுப்பது தொடர்பாகச் சொல்லப்படும் கருத்து தவறானது.



# பயன்பெற்றோர் போற்றுகின்றனர்



**மருத்துவர்
ஜெயராமகிருஷ்ணன்
வேலுசாமி**
The University of Cambridge,
United Kingdom

நான் கோவை மாவட்டத்தில் உள்ள ஒத்தக்கால் மண்டபம் கிராமம், பிரிமியர் மில்ஸ் அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் பிரிமியர் மில்ஸ் அரசினர் உயர்நிலை பள்ளியில் எனது முழு பள்ளிக் கல்வி கற்றேன். எனது பள்ளி வாழ்க்கை முழுவதும் அரசின் சத்துணவு, பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் பெற்று அதனை கொண்டு தான் என்னால் பள்ளியில் படிக்க முடிந்தது. அப்போது பொருளாதாரத்தில் நலிவுற்று இருந்த போதும் கூட என்னை பள்ளிக்குச் சென்று கல்வி பயில மேற்கூறிய தமிழ்நாடு அரசின் திட்டம் பேருதவியாக இருந்தது. அதனால்

தான் நான் மேலும் தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளநிலை முதல் முனைவர் பட்டம் வரை உள்ள உயர் கல்வியைப் பெற்றுள்ளேன் என்பதில் மாற்று கருத்து இல்லை. தற்போது உலக பல்கலைக்கழக தரவரிசையில் இரண்டாம் இடம் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முதன்மை ஆராய்ச்சியாளராக பணியாற்றும் வாய்ப்பை பெற்றுள்ளேன். இந்த நல்வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி.

“1922ஆம் ஆண்டு தான் மாணவர்களுக்கு பள்ளிக்கூடம் வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்த பள்ளிக்கூடத்துக்கு வந்து படித்துவிட்டு செல்கிறவர்கள் பசியோடு செல்லக்கூடாது என்பதற்காக சர்.பி. தியாகராயர் மாநகராட்சியின் தலைவராக இருந்த காலத்தில் மதிய உணவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். அது சென்னை மாநகரத்தை பொறுத்து ஒரே ஒரு பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அதை மனதிலே வைத்து அன்றைக்கு இருக்கின்ற நீதிக் கட்சியின் பால் தொடர்பு கொண்ட கல்வி அதிகாரிகள் அதன் பிறகு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக ஆனபோது அவருக்கு 25ஆம் ஆண்டு தியாகராயர் செய்த அந்த செயலை எடுத்துக்காட்டி - இதை நாம் பின்பற்ற வேண்டும் என்று சுந்தர வடிவேலு போன்ற அதிகாரிகள் சொன்னபோது, அதை பெருந்தலைவர் காமராஜர் உடனடியாக தயக்கமின்றி, தாமதமின்றி ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் அவர் பயணம் செய்கின்ற ஊர்களில் பாதைகளில் ஏழை எளியவர்கள் கிராமப்புறத்து மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்கள் மாடு மேய்ப்பவர்களாக ஆடு மேய்ப்பவர்களாக இருக்கின்ற அந்த பிள்ளைகளை எல்லாம் பார்த்து விட்டு, "இவர்கள் எல்லாம் ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை?" என்ற கேள்வியை எழுப்பி பள்ளிக்குச் சென்றால் அவர்களுக்கு உணவு கிடைக்காது வீட்டிலே வேலை செய்ய ஆள் கிடைக்காது அதற்காகத்தான் அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்கள் என்று சொன்னபோது அவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் பசியாறிப் படிக்க வேண்டும் என்ற நல்ல நினைப்போடு பெருந்தலைவர் காமராஜர் அன்றைக்குத் தமிழ்நாட்டிலேயே உள்ள பெற்றோர்கள் இந்த பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்ற பெற்றோர்கள் நல்ல உள்ளத்தோடு தருகின்ற நன்கொடை எல்லாம் பெற்று அவைகளைக் கொண்டு அந்த பிள்ளைகளுக்கு மதிய உணவை வழங்கினார்.”

- மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்











# தேசிய அளவில் மதிய உணவுத் திட்டம்

The Report on the State of Food Insecurity in Rural India - jointly prepared by the United Nations World Food Programme (WFP) and M.S. Swaminathan Research Foundation (MSSRF) பள்ளிக் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து வழங்கல் என்பதைப் பொருத்தமட்டில் மெட்ராஸ் மாநகராட்சியில் 1925ஆம் ஆண்டிலேயே பணிகள்தொடங்கப்பட்டு விட்டன. பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு அத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொல்கத்தாவில் 1927, கேரளாவின் சில பகுதிகளில் 1941 மற்றும் பாம்பேயில் 1942 ஆகிய ஆண்டுகளில் இப்பணிகள் தொடங்கப்பட்டன.




தமிழ்நாடு இத்திட்டத்தின் சிறந்த முன்னோடியாக விளங்குகின்றது. 1958ஆம் ஆண்டு மாநில அரசால் அனைத்துப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. 8,000 தொடக்கப்பள்ளிகளில் பயின்ற 2,00,000 குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்தனர். 1967ஆம் ஆண்டு முதல் மையப்படுத்தப்பட்ட பொதுச் சமையலறைகளில் உணவு தயாரித்து பள்ளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1982ஆம் ஆண்டு மாநில அரசு பரவலாக்கப்பட்ட மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்தியது. அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்திய பள்ளிகளும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டன. செப்டம்பர் 1984ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் 6-10ஆம் வகுப்புகள் வரையிலான உயர்நிலை வகுப்பு மாணவர்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

1984ஆம் ஆண்டு முதல் குஜராத் மாநில அரசு தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

1995ஆம் ஆண்டளவில் மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிசாவின் சில முக்கியமான பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 1995அன்று இந்திய அரசு அறிவித்த மதிய உணவுத் திட்டத்தின் குறிக்கோளாக அரசு அறிவித்தது:

"மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்தல், தக்கவைத்தல் மற்றும் மாணவர் வருகையைச் சீர்படுத்தல் ஆகியவற்றோடு மாணவர்களுக்கான ஊட்டச்சத்தினையும் வழங்கி அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்பதை உறுதிப்படுத்தல்"

ஏற்கனவே பல்வேறு மாநிலங்களில் செயல்பாட்டில் உள்ள மதிய உணவுத் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அனைத்து மாநிலங்களிலும் அத்திட்டத்தைச் செயல்படுத்தல் என்பதும் இந்திய அரசின் நாட்டம். ஒவ்வொரு குழந்தைக்கும் நாளொன்றுக்கு 100 கிராம் உணவு தானியங்கள் வீதம் மாநில அரசுகள் குழந்தைகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசு உதவுவதாகவும் உணவு தானியங்கள் தேவைப்படும் இடங்களுக்கு அருகே இருக்கக்கூடிய இந்திய உணவு நிறுவனத்தின் தானிய விநியோக மையங்களில் இருந்து உணவு தானியங்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவிற்கான மானியம் வழங்குவதாகவும் இத்திட்டத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டது. உட்கட்டமைப்பு மற்றும் சமையலுக்கான செலவுகளை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடு முழுவதும் புதுப்பிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் மற்றும் வேலை உறுதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்த 2,368 பகுதிகளிலும் குறைந்த கருவள வீதம் கண்டறியப்பட்ட பகுதிகளிலும் இத்திட்டம் முதற்கட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. பஞ்சாப் போன்ற புதுப்பிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படாத சில மாநிலங்களில் குறைந்த கருவள வீதம் கண்டறியப்பட்ட பகுதிகளிலும் குடிசைப் பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டது. மாவட்ட மற்றும் மாநில நிர்வாகத்தின் கண்காணிப்பில்

இத்திட்டத்தை அமலாக்கும் முகமைகளாக உள்ளாட்சி அமைப்புகளே செயல்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வறுமை ஒழிப்புத் திட்டங்களான ஜவஹர் ரோஜர் யோஜனா (JRY - Jawahar Rozar Yojana) போன்ற திட்டங்களின் மூலமாக உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து மாநில அரசுகள் தங்கள் பங்கிற்கான நிதியாதாரங்களைத் திரட்ட வேண்டும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் ஏப்ரல் 1999இல் இருந்து மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் தங்களது சொந்த நிதியாதாரங்களைத் திரட்ட வேண்டும் என்று பொறுப்பளிக்கப்பட்டது. நிதிச்சிக்கல்களைச் சந்தித்த மாநிலங்கள் இடைக்கால அளவில் மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு 3 கிலோ உணவு தானியங்கள் வழங்கி வந்தன. எனினும் டிசம்பர் 2003 முதல் மாநிலங்களின் நிதி நிலைமையைக் கணக்கில் கொண்டு பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா (Pradhan Mantri Gramodaya Yojana - PMGY) திட்டத்தின் மூலமாக தானியங்களைச் சமைப்பதற்கு ரூ.15 நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் அனைத்து மாநிலங்களிலும் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டது. மதிய உணவு தயாரிப்பதற்கான போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் பெரும் நிதிச்சிக்கல் இருப்பது கண்டறியப்பட்டது. சில மாநிலங்களால் திட்டத்தை அமல்படுத்தவே இயலாத சூழல் நிலவியது. மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் மாணவர்களுக்கு ஒரு நபருக்குத் தினசரி 100 கிராம் உணவு தானியங்கள் என்று கணக்கிடப்பட்டு மாதம்தோறும் 3 கிலோ சமைக்கப்படாத பச்சை உணவு தானியங்கள் வழங்கப்பட்டன. ஒன்றிய அரசு நிர்பந்தத்தில் மாநில அரசுகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளானது. இதனைச் சரிசெய்ய ஒன்றிய அரசுக்கு நீண்டகாலம் ஆனது. 2004இல் இத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் 2006ஆம் ஆண்டில் தான் ஒன்றிய அரசு போதுமான நிதியினை மாநிலங்களுக்கு வழங்குவதாகத் திட்டம் சீரமைக்கப்பட்டது.

எனினும் ஒன்றிய அரசு இத்திட்டத்தைச் சீரமைக்க எடுத்துக்கொண்ட நீண்ட கால அவகாசத்தினிடையே 2001 நவம்பரில் உச்சநீதிமன்றம் முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கியது. People's Union for Civil Liberties என்னும் அமைப்பு ஏப்ரல் 2001இல் தாக்கல் செய்த வழக்கின் இடைக்கால தீர்ப்பினூடாக மதிய உணவுத் திட்டம் என்பது வெறுமனே ஒரு திட்டம் என்னும் நிலையில் இருந்து பள்ளிச்சிறார்களுக்கான சட்டப்பூர்வமான உரிமை என்னும் நிலையை அடைந்தது.

## உச்சநீதிமன்றத் தீர்ப்பு

சில மாநிலங்களில் மாணவர்களுக்குச் சமைத்த உணவிற்குப் பதிலாக சமைக்கப்படாத பச்சை உணவு தானியங்கள் வழங்கப்படுவதை எதிர்த்து People's Union for Civil Liberties அமைப்பின் மூலமாக 2001ஆம் ஆண்டு பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. 28 நவம்பர் 2001 அன்று அவ்வழக்கில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பில் அனைத்து மாநிலங்களும் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும் சமைத்த உணவுகளை வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கக் கல்வி நிலையங்களில் குறைந்தபட்சம் 300 கலோரிகளும், 8-12 கிராம் புரதமும் கொண்ட அளவில், பள்ளிகள் செயல்படும் 200 நாட்களும் மாணவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்றும் அத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

மேலும், 2004 ஏப்ரல் 20 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில்,

சமைப்பதற்கான செலவுகளைக் குழந்தைகளிடம் இருந்தோ அவர்களது பெற்றோர்களிடம் இருந்தோ எந்தச் சூழலிலும் வசூலிக்கக்கூடாது.

உணவு தானியங்களைச் சமைப்பதற்குத் தேவையான நிதியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்.

வறட்சிப் பகுதிகளில் கோடை விடுமுறைக் காலங்களிலும் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தலாம்.

சமையற்கூடங்களைக் கட்டுவதற்கான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

நல்ல உட்கட்டமைப்பு, தரம் உயர்த்தப்பட்ட வசதிகள் (பாதுகாப்பான குடிநீர் உட்பட) மற்றும் பிற பாதுகாப்பு வசதிகளையும் உணவின் தரத்தையும் உயர்த்தி ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்தான உணவினை வழங்கவும் முயற்சி செய்ய வேண்டும் என்று பல்வேறு வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வழங்கியது.

இதன் பின்னர் தேசியப் பொதுச் செயல்திட்டம் ஒன்று ஒன்றிய அரசால் மதிய உணவுத் திட்டத்திற்காக உருவாக்கப்பட்டது. இதன் பிரதானமாக ஒன்றிய அரசின் நிதி உதவியுடன், தேசிய அளவிலான சமைத்த சத்தான மதிய உணவுத் திட்டம் ஆரம்பப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டது.

## தமிழ்நாட்டின் தனித்துவம்!

இந்தப் பின்னணியைக் கருத்தில் கொண்டுதான் தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்டத்தைப் பிற மாநிலங்களோடு ஒப்பாய்வு செய்கின்றபோது தமிழ்நாட்டின் திட்டம் பல வகைகளில் முன்னோடியாகவும் வெற்றிகரமானதாகவும் கருதப்படுகின்றது.

Strategies for Human Development in India - A Study of Two Indian States என்னும் தலைப்பில் திருமிகு. கே. சீதா பிரபு ஒரு ஒப்பாய்வினைச் செய்துள்ளார். மனித வள மேம்பாட்டுச் செயல்பாடுகளில் தமிழ்நாடும் மத்தியப் பிரதேசமும் எவ்வாறு செயல்படுகின்றன, திட்டங்களின் களப் பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கின்றது என்று செய்யப்பட்ட அவ்வொப்பாய்வில் மதிய உணவுத் திட்டம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தமிழ்நாட்டில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் தொடங்கி உயர்நிலைப் பள்ளிகள் வரை 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. குழந்தைகளுக்குச் சமைத்த சூடான உணவு வார நாட்களில் வழங்கப்படுகின்றது.

மேலும், மாதம் ரூ.125 சம்பளத்தில் சமையலரும் ரூ.100 மாத ஊதியத்தில் ஒரு உதவியாளரும் அனைத்துச் சத்துணவு மையங்களிலும் நியமிக்கப்பட்டனர். அதேவேளையில் மகாராஷ்டிராவில் 1 முதல் 4ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 200 மி.லி பால் மட்டுமே வழங்கப்பட்டது. குறிப்பிட்ட சில கிராமங்களில் 3 பள்ளிகளில் மட்டுமே அத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. சில சமயங்களில் மாதக்கணக்கில் திட்டத்திற்கான பால் வழங்கப்படாமல் உள்ளது. மேலும் மகாராஷ்டிராவில் பல சமயங்களில் போதுமான பால் வழங்கபடாத நிலையும் கண்டறியப்படுகின்றது.

மதிய உணவுத் திட்டத்தின்கீழ், உணவு மட்டுமல்லாமல் அத்திட்டத்தின் பயனாளிகளான குழந்தைகளுக்கு சீருடையும், புத்தகங்களும் இணைத்து வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் திட்டத்தின்கீழ் இணைக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விட வழங்கப்படும் சீருடைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை அறியமுடிகிறது. ஆனாலும், மதிய உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற பொருட்களின் இருப்பும், விநியோகமும் மகாராஷ்டிராவை விட தமிழ்நாட்டில் பன்மடங்கு அதிகமானதாக உள்ளது.”

இன்று நாடு முழுவதும் சத்துணவுத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பல மாநிலங்கள் இத்திட்டத்தில் முன்னணி வகிக்கின்றன. ஒன்றிய அரசும் அதிகமான நிதியினை ஒதுக்கீடு செய்கின்றது. அதே சமயத்தில் தமிழ்நாட்டின் மதிய உணவுத் திட்ட நோக்கத்தைப் பிற மாநிலங்களும் ஒன்றிய அரசும் புரிந்துகொள்ளப் பல சதாப்தங்கள் உருண்டோடிவிட்டன என்பது ஆய்வாளர்கள் கருத்து. தமிழ்நாட்டின் நோக்கம் மிகவும் பரந்துபட்டது. மாணவர்களுக்கு ஊட்டச்சத்து, உடை, கல்வி ஆகியவை மட்டுமல்லாமல் மாணவர்களைச் சமூகப் பொருளாதார ரீதியில் முன்னேற்றிடக் கல்வி இன்றியமையாதது என்பதால் தமிழ்நாடு இத்திட்டத்தை மிகக் கவனமாகத் தொடர் உழைப்பில் செயல்படுத்திக் கொண்டுள்ளது. அதனால்தான் இடையூறுகள் பல வந்தபோதும் தமிழ்நாடு சமைத்த சத்தான சுகாதாரமான உணவை மாணவர்களுக்கு வழங்கிக்கொண்டே இருக்கின்றது.

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் 6 வயது வரையிலான குழந்தைகள், வளர்இளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கான மைய இடமாகும். இங்கு ஊட்டச்சத்து பாதிப்பின் முக்கியமான காலங்களில் கவனம் செலுத்தி தொடர்ச்சியான பராமரிப்புடன், நிலையான வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையை செயல்படுத்துகிறோம்.

1975ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 106 ஆவது பிறந்தநாளில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 33 வட்டாரங்கள் முதன்முறையாகத் தொடங்கப்பட்டது.

தமிழகத்தில் சென்னை (நகர்ப்புறம்), நிலக்கோட்டை (கிராமப்புறம்) மற்றும் தளி (பழங்குடி) ஆகிய மூன்று வட்டாரங்களில் முன்மாதிரி திட்டமாகத் தொடங்கப்பட்டு தற்போது தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. "ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு" என்ற இலக்கை எட்டுவதே நமது மாநிலத்தின் கொள்கையாகும்.

### ஒரு குடையின் கீழ் (UMBRELLA ICDS)

2016-2017 நிதியாண்டில் இந்திய அரசு மறுசீரமைக்கப்பட்ட ICDS-யை ஒரு குடையின் கீழ் திட்டமாக மாற்றியது, இந்திய அரசு 2017 ஆம் ஆண்டில், தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் (NNM), பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY), மற்றும் ஒரு குடையின் கீழ் ICDS -யில் உள்ளடக்கிய துணை திட்டங்கள் பின்வருமாறு:

1. அங்கன்வாடி சேவைகள்.
2. வளர்இளம் பெண்களுக்கானத் திட்டம்.
3. குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள்.
4. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்.
5. போஷன் அபியான் (தேசிய ஊட்டச்சத்து மிஷன்).
6. பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (**PMMVY**) - தடுப்பு மருந்து மற்றும் பொது சுகாதாரத்துறை இயக்குநர் மூலம் 2018-2019 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## முழுமையான ஊட்டச்சத்துக்கான பிரதமரின் செயல்பாட்டுத் திட்டம்

#### போஷான் அபியான் (தேசிய ஊட்டச்சத்துக் குழுமம்)

6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை முன்னேற்றுவதற்கான

குறிக்கோளுடன் மாண்புமிகு பிரதமரின் ஊட்டச்சத்து ஒருங்கிணைப்புத் திட்டம் (POSHAN Abhiyaan) ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.. இத்திட்டம் அனைத்து 32 மாவட்டங்களிலும் (ஒருங்கிணைந்த 38 மாவட்டங்கள்) மூன்று கட்டங்களாக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு முறையே 80:20 என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அளவில், மாநில திட்ட மேலாண்மை அலகும் (SPMU) மாவட்டம் மற்றும் வட்டார அளவில் உதவி அலகுகள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுப் போஷான் அபியான் திட்டம் தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் திறம்படச் செயல்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போஷான் அபியான் திட்டத்தின்கீழ், உள்ள பல்வேறு கூறுகள் பின்வரும் அம்சங்களின் மூலம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## பொதுவான மென்பொருள் செயலி (ICDS - CAS)

குறித்த நேரத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த மற்றும் திறன்பட கண்காணிக்க, பொதுவான மென்பொருள் செயலி (ICDS-CAS) மூலம் அங்கன்வாடி பணியாளர்கள் 11 பதிவேடுகளில் 10 பதிவேடுகள் கைதிறன் பேசி செயலி மூலம் எண் முறைப்படுத்தப்பட்டு (Digitize) பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை தொடர் கண்காணிப்பின் மூலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து களப் பணியாளர்களுக்கும் மேற்பார்வையின் தரத்தை மேம்படுத்த கைதிறன்பேசி (Smart Phone) மற்றும் சிறு மின்சேமிப்பு கருவி (Power Bank) வழங்கப்பட்டு செயலியின் செயல்பாடுகள் குறித்த பயிற்சிகள் அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

போஷான் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக, சிறந்த கண்காணிப்பு மற்றும் நிகழ்ச்சி மேலாண்மைக்கு தேவையான தகவல்களை உருவாக்க மற்றும் பெறுவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய (ICDS - CAS) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

போஷான் அபியான் திட்டத்தின்கீழ், வளர்ச்சிக் கண்காணிப்பு சாதனங்கள் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது சிறு குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer), குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவி (Mother & Child Digital Weighing Scale), மற்றும் குழந்தைகளின் எடைக் கருவி (Infant Weighing Scale) ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு தகுதியான பயனாளிகளின் வளர்ச்சி கண்காணிப்பானது போஷான் அபியான் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## சாதாரண குழந்தைகளின் விவரங்கள்

## மிதமான எடை குறைந்த குழந்தைகளின் விவரங்கள்

### படிப்படியாக கற்கும் முறை (ILA)

களப் பணியாளர்களின் ஆலோசனைத் திறனை மேம்படுத்துவதற்கும், குழந்தையின் முதல் 1000 தங்க நாட்களின் முக்கியத்துவத்தை






(Golden 1000 Days) ஊக்குவிப்பதற்கும், படிப்படியாக கற்கும் முறை (ILA) 21 தொகுதிகள் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து நிலையினையும் சென்று சேறும் வகையில் பயிற்சிகளானது மாநில வளக் குழு (SRG), மாவட்ட வளக் குழு (DRG), வட்டார வளக்குழு (BRG) மற்றும் தொகுதி அளவிளான வளக் குழு (SLRG) ஆகியவை ILA-வின் உள்ளடக்கத்தை மாநில அளவிலிருந்து தொகுதி அளவிற்குப் பரப்புவதற்கும் அனைத்து தரப்பு பயனாளிகளைச் சென்றடையவும் அமைக்கப்பட்டன.

முதல் மற்றும் இரண்டாம் கட்டங்கள் 11 மாவட்டங்களில், 21ஆம் தொகுதி வரை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டமாக 21 மாவட்டங்களில், 19 தொகுதி வரை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது

## சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள் (CBE)

தகுதியான பயனாளிகளின் நலனுக்காக, பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப்பெண்கள், குழந்தைகள் மற்றும் சமூகம், ஆகியோர்க்கு பல்வேறு சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள் அங்கன்வாடி மைய அளவில் மாதம் இரு முறை நடத்தப்படுகின்றன.

சமுதாயம் சார்ந்த நிகழ்வுகளின் (CBE) முக்கிய தகவல்கள், கர்பிணிப்பெண்கள் (ANC) & பரிசோதனை, தாய் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு (MCP) அட்டையின் பயன்பாடு, தாய்ப்பால் புகட்டுவதின் அவசியத்தை எடுத்துரைத்தல், அரசு உதவி சார்ந்த தகவல்களை வழங்குதல், இரும்பு சத்து மாத்திரைகள் (IFA) & சுண்ணாம்புச் சத்து மாத்திரைகள், நோய்த்தடுப்பு, புதிதாக பிறந்த பலவீனமான குழந்தைகளின் பராமரிப்பு, ஆரோக்கியமான உணவு, குடற்புழு நீக்குதல், துணை உணவு, எடை அதிகரிப்பு, அயோடின் உள்ள உப்பு, கை கழுவுதல் மற்றும் பிற பொது சுகாதாரம் தொடர்பான செய்திகள்.

முக்கிய செய்திகள் 5 முக்கிய கருப்பொருள்களின் கீழ் வருகிறது. அவைகளாவன:

1) கர்ப்பத்தின் 1ஆவது மற்றும் 2ஆவது மூன்று மாதங்களில் பெண்களை அழைத்தல்.

2) இணை உணவினை சரியான நேரத்தில் கொடுக்க துவங்குதல்.

3) தாய்வழி மற்றும் குழந்தைப் பராமரிப்பில் கணவன்மார்கள் தங்களின் பங்கினைப் பற்றி அறிந்துக்கொள்ளுதல்.

4) அங்கன்வாடி மையத்தில் முன்பள்ளி கல்விக்கு குழந்தைகளை தயார்படுத்துதல்.

5) ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கும் நோயைக் குறைப்பதற்கும் பொது சுகாதாரம் தொடர்பான செய்திகளை வழங்குதல்.

## வெகுஜன மக்கள் இயக்கம் (Jan Andolan)

தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின்கீழ், வெகுஜன மக்கள் இயக்கம் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைய ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும். இது போஷான் (ஊட்டச்சத்து விழிப்புணர்வு) செய்தியுடன் உள்ளாட்சி அமைப்புகளின் பொது பிரதிநிதிகள், மாநில அரசு துறைகள், சமூக அமைப்புகள்

மற்றும் பொது மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் பொது பங்களிப்பை உள்ளடக்கியது.

வெகுஜன மக்கள் இயக்கம் கூறுகளின்கீழ், பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டங்களுக்குத் தேவையான நிதி கொடுக்கப்பட்டுள்ளது.

- சமுதாய வளைகாப்பு (சமுதாய வளையல் விழா)
- தாய்ப்பால் கொடுக்கும் வாரம்
- போஷான் மா (ஊட்டச்சத்து மாதம்) மற்றும் போஷான் பக்வாடா கொண்டாட்டங்கள்.
- பாரம்பரிய உணவுப் பழக்கத்தை மேம்படுத்துதல்.
- கை கழுவும் நாள்.
- இரத்தசோகை விழிப்புணர்வுத் திட்டம்.
- மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில், வட்டார அளவில் விழிப்புணர்வுக் கண்காட்சிகள்.
- அனைத்து மாவட்டங்களிலும் பாரம்பரிய உணவுத் திருவிழா (Traditional food festival).

## வளரிளம் பெண்களுக்கு உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி

தேசிய ஊட்டச்சத்து மாதம் (Rashtriya Poshan Maah) செப்டம்பர் 2020-இல் கொண்டாடப்பட்டது. இந்த மாதக் கொண்டாட்டத்தில் இரண்டு முக்கிய நடவடிக்கைகள்,

1) மிகக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) உள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் கண்காணித்தல்.

2) ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக ஊட்டச்சத்துத் தோட்டங்களை அமைத்தல்.

மொத்தம் 15,706 மிகக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) உள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு சரியான முறையில் பரிந்துரைக்கப்படுகிறார்கள், மேலும், 3,48,939 ஊட்டச்சத்துத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் 1,75,38,935 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் பெரும்பான்மையான மக்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் பற்றிய செய்திகள் சென்றடைந்தது.

மிகக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) குழந்தைகள் விவரங்கள்

| செப்டம்பர் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை அடையாளம் காணப்பட்ட மொத்த மிகக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) குழந்தைகளின் எண்ணிக்கை | மிகக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) குழந்தைகளின் கண்காணிப்பு நிலை | | | பரிந்துரைக்கப்பட்டது | | |
|---|---|---|---|---|---|---|
| | மிக கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) | மிக கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு (SAM) | நல்ல நிலையில் | ஆரம்ப சுகாதார நிலையம் | தேசிய குழந்தை நலத் திட்டம் (RBSK) | வீட்டு ஆலோசனை |
| 15,706 | 7,747 | 3,719 | 4,239 | 1,892 | 31 | 9,543 |

## போஷான் 2.0

ஊட்டச்சத்து விழிப்புணர்வு மற்றும் நிலையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான நல்ல உணவுப் பழக்கம் மூலம் நல்ல ஊட்டச்சத்து பெறுவதை ஊக்குவிக்கும் வகையில், பெண்கள், வளரிளம் பெண்கள்/ ஆண்கள் மற்றும் பிறப்பு முதல் 6 வயது வரையிலானக் குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் பசியை ஒழிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கத்தின் பெண்கள் மற்றும்

குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் போஷான் 2.0 தொடங்கப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு முறையே 80:20 என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## போஷான் கண்காணிப்பு (POSHAN TRACKER)

போஷான் கண்காணிப்பு (POSHAN TRACKER) என்னும் செயலி மூலம் அனைத்து அங்கன்வாடிப் பயனாளிகளையும் பதிவுசெய்து அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டுக் கண்காணிக்க மத்திய அரசால் ஜனவரி 2021 முதல் இத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக அனைத்து அங்கன்வாடி பயனாளிகளையும் (6 மாதம் முதல் 6 வயது வரை குழந்தைகள்-26,04,507, கர்ப்பிணிப் பெண்கள்-3,65,591, பாலூட்டும் தாய்மார்கள்-3,63,371, வளரிளம் பெண்கள்-280 மற்றும் வளரிளம் ஆண்கள்) பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு இச்செயலிக்கான பயிற்சி வகுப்புகள் விரைவில் துவங்க உள்ளது.

## ஒருங்கிணைப்பு (Convergence)

பல்வேறு துறைகளில் பல்வேறு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான திட்டங்களை ஒன்றிணைப்பதை எளிதாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் மாநில/ மாவட்ட / வட்டார அளவில் ஒருங்கிணைப்பு செயல் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தரம் மற்றும் தரங்களை மேம்படுத்துதல், உணவு முறையைப் பலப்படுத்துவது, திட்டச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், உடல்நலம் நடைமுறைகளை மேம்படுத்துதல், அங்கன்வாடி மைய உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், தேசியக் கல்விக் கொள்கை (NEP) போன்றவற்றை மேம்படுத்துவதற்காக அனைத்து மட்டங்களிலும் உள்ள குழுக் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன.

Economic and Political Weekly இதழில் தமிழ்நாட்டின் சத்துணவுத் திட்டம் குறித்து பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இந்தியாவிலேயே தனித்துவமிக்கதாகச் சுட்டிக்காட்டி அனுராதா ராஜீவன் அவர்கள் ஓர் ஆய்வினை வெளியிட்டுள்ளார். ஆய்வியல் முனைவரான அனுராதா ராஜீவன் பல்வேறு ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டவர். அவரது தமிழ்நாட்டின் தனித்துவமிக்க ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என்னும் கட்டுரை.



# Tamil Nadu ICDS with a Difference

Anuradha Khati Rajivan

Tamil Nadu's Noon Meal Programme has evolved via the successful intervention of twin pressures, political will that ensured budgetary provision for the programme and the widespread demand for it from below. Several nutrition-oriented programmes have now expanded to cover groups such as pregnant and nursing mothers, old age pensioners, widows and the destitute. The need is now to create a "nutrition literate" populace, i.e., foster an awareness of non-food factors that in several ways influence behaviours and attitudes related to food.

Combating hunger and reducing the prevalence of malnutrition are a goal common to many national plans and is now part of the internationally accepted development goals, drawing from the Millennium Declaration.

A specific target under the Millennium Development Goals is to "halve, between 1990 and 2015, the proportion of people who suffer from hunger". From a human development perspective, good health and nutrition are inherently valuable, contributing to physical and cognitive development, facilitating educational attainment and overall wellbeing, and expanding human capabilities for present and future generations. Even from a more limited economic growth perspective, better nutrition decreases the incidence of non-communicable diseases and healthcare costs, reduces loss of worktime due to absenteeism and improves productivity.

While nutrition-oriented programmes operate in many countries, they often suffer from low coverage, resource limitations and inadequate focus on many critical non-food factors, protected water, sanitation, women's status, political commitment, among others. Over 150 million children under age five in the developing world are underweight, reflecting the status of the population as a whole. While income poverty has declined steadily in most countries, malnutrition has been harder to combat. In south Asia, hunger and malnutrition have been especially resistant to change and child malnutrition has tended to be high and persistent. Here the share of children under five who are moderately or severely underweight (almost 50 percent) is much higher than the share of population living under a dollar a day (about 33 percent). The incidence of undernutrition among children under five is as high as 47 percent in India, 48 percent in Bangladesh and 29 percent in Sri Lanka. If micronutrient deficiencies, anaemia among women and adolescent girls and various forms of lifestyle related adult malnutrition are added, the incidence of undernutrition is even larger. Thus, the problem of malnutrition is wider and more persistent than income poverty, indicating that poverty reduction by itself will not eliminate widespread malnutrition, and that direct interventions have to go beyond targeting the poor. The contrasting east Asian experience, and the diversity in south Asia itself, show that it is possible to combat malnutrition among children in a relatively short period.

It is in this context that Tamil Nadu's Integrated Child Development Services (ICDS), and its broader Noon Meal Programme (which is fully integrated with ICDS for children under six), present valuable experiences for the nutrition community and policy-makers.



Tamil Nadu is different from other Indian states. In India's federal structure, it is possible for an individual state to have priorities somewhat different from the centre. Combating child hunger and malnutrition became political priorities in Tamil Nadu well before judicial intervention triggered responses at the centre. Today, virtually any child between the ages of 2 and 15 years is eligible for a daily hot lunch at the cost of the State. Most of the feeding takes place outside the home: in ICDS centres 'anganwadis' for children under six, and at school for older children.

Other vulnerable groups like pregnant and nursing women, the destitute and pensioners are also covered. In addition, a range of complementary services are available for children under six and pregnant and nursing women through the ICDS, which is fully integrated with the Noon Meal Programme.

Six aspects of the Tamil Nadu case are of particular interest. One, political will exerted pressure from above, resulting in public policy attention backed by budgets to combat hunger and malnutrition. Tamil Nadu is perhaps the only Indian state where this issue has entered the political discourse and remained there consistently for over four decades. Two, the programme has become very popular, catalysing pressure from below and making it difficult, say, for an

anganwadi to remain closed without immediate enquiry. Three, while political will led to pressure from below, in turn, contributed to retention of political will over time, regardless of the party in power. Four, while visible public feeding centres have the potential to woo voters in a democracy, if well managed, visibility itself contributes to maintaining quality through pressure on local staff and higher officials. The interests of nutritionally vulnerable groups in Tamil Nadu have coincided with prospects for electoral spoils. Five, near universalisation contributed to de facto child rights to nutrition. Since malnutrition is not confined to poor households, universal coverage was more effective than targeted schemes. Six, near-universalisation paved the way to other positive achievements also. In particular, well managed ICDS centres produce school – ready six-year olds with relatively well developed social and cognitive skills that contribute to better education later on. They also contribute to social equity through common dining, especially in rural India’s caste-class conscious context.

Thus, the Tamil Nadu case may be described as a “sandwich”: a unique combination of pressure from above through political will, and from below through public expectations, with a wide network of feeding centres in between. With a population of over 62 million in 2002, Tamil Nadu is larger than many developed and developing countries like the UK (60 million), the Republic of Korea (48 million), Nepal (28 million), Malaysia (24 million) or Sri Lanka (20 million). Tamil Nadu’s experience can provide useful pointers about what works and what does not, including the needed resources of funds, personnel and time, not only to other States in India, but also to other similarly placed developing countries that wish to address child malnutrition and promote child development.

More than 70,000 feeding centres operate every day in the State, providing a hot mid-day meal to around 8 million persons.

Of these, over 30,000 centres are exclusively for children under six (the most elusive age group), mostly under the ICDS. Here a wider range of services is provided for over a million under-six children – including complementary nutritious feed to pre-schoolers, pregnant and nursing women; growth monitoring; health services; pre-school education; and communication. Around 1.5 million young children and women benefit every day. An impressive physical infrastructure is in place as well as extensive staff. Over time the Government of Tamil Nadu (GoTN)

successfully leveraged the massive network of centres created under different schemes with varying objectives and priorities (the noon meal programme, the Tamil Nadu Integrated Nutrition Project (TINP) and ICDS), and consolidated staff, infrastructure and administrative capacity to focus on nutrition security. Nutrition has come to occupy a permanent place on the State's political agenda, with de facto child rights to food having become operational. Government of Tamil Nadu is the only Government that has an official policy for making the State malnutrition free, i.e., reducing malnutrition to such a level that it is no longer a public health issue. Evolution from hunger to nutrition: Tamil Nadu has a long history of direct nutrition investments through provision of food to children outside the home. This started with the aim of combating "classroom hunger" for school children, but over the years it became integrated with the larger goal of addressing malnutrition and promoting overall child development. School meals through public contributions were introduced in 1956, and soon evolved into joint public private funding. Donor assistance was introduced in 1961, helping to expand coverage. But school feeding initially faced many operational problems due to inadequate staffing, infrastructure, training and support. For instance, headmasters were in charge and teachers and children were involved in cooking, resulting in serious



diversion of teaching-learning hours. Lack of staff and poor storage also led to wastage of ingredients and questionable hygiene. Central kitchens changed operations dramatically, with pre-packed food packets delivered to schools. While this improved hygiene, standardisation and teaching-learning, it was more expensive and reduced the number of feeding days.

In parallel, with financial support from the Central Government, ICDS was introduced in 1976 on a small scale (in just three blocks), covering children under six for the first time and combining supplementary nutrition with other child development services. Shortly after ICDS began, in 1980, the TINP was introduced on a pilot basis in another block, with funding and technical support from the World Bank. TINP focused on an even younger age group: children under 36 months of age. These early ages are the hardest to reach being very young, children under six do not assemble every day at a place like a school and need an adult to bring them to a facility. Yet, from a nutrition perspective, this is efficient as interventions reach the most important age group. The pre-school age, especially below 36 months, is a nutritionally most vulnerable period when rapid growth takes place. Deprivations in this period can cause irreversible damage which later feeding cannot fully compensate.

The introduction of the noon meal scheme in 1982 was a watershed which marked the beginning of a continuous expansion to the pre-school ages, moving towards universalisation, provision of dedicated staff and infrastructure, systematic training, and budgeting for recurring and non-recurring expenses. Without waiting for the Government of India led expansion of the ICDS, or the World Bank led TINP, Government of Tamil Nadu proceeded to expand the Noon Meal Programme which was fully under its control, eventually combining it with ICDS and integrating all feeding schemes for children under six. After 1982 the State has never looked back.

While hunger was well understood, initially the concept of nutrition was not. Pressure from below to provide nutrition security did not exist the way it did for the provision of food to combat immediate hunger. Consequently, the shift of focus from hunger to malnutrition did not happen easily or automatically. The Nutrition Oriented Schemes (the ICDS and TINP pilots) and the hunger-oriented noon meal scheme expanded and operated in parallel. To begin with, nutrition

experts undertaking evaluation and providing advice on nutrition schemes remained separate from political decision-making in the social welfare sector. But after about three decades of experimenting with different models, linkages were consciously forged between what was electorally attractive (visible, publicly funded feeding schemes) and what was technically recommended (multi-sectoral nutrition schemes) and different programmes eventually became fully integrated.

While administrators and scientists initially had strong reservations about the noon meal scheme because of its logistical and financial requirements, sheer political will saw it through the initial years. Today, the nutrition-cum-child-development infrastructure is so well entrenched in Tamil Nadu that it has become a de facto entitlement, not seen in other Indian States. Coverage, in terms of both children and adults, has expanded steadily over the years. Pregnant and nursing women are eligible under the ICDS. Old age pensioners, the disabled, widows and destitute also avail of the daily lunch as the marginal cost of adding them to the already large list of eligible persons was found to be relatively small. Both rural and urban areas are covered. Attendance records indicate that nearly 1.7 million persons (1.3 million children aged 2-6 years and 0.4 million adults) benefit from ICDS services including the daily noon meal. If the noon meal for school children is also accounted for, then the State feeds a population of over 8 million (including 7.6 million children) almost everyday through a network of over 71,000 centres.



As mentioned earlier, virtually any child aged between 2 and 15 years is now eligible for a noon meal at the cost of the State. Though there used to be an income criterion, in practice, any willing child in the eligible age group has been allowed to participate. This was done for socio-cultural and practical reasons – it

would have been hard to feed some children and deny others based on some BPL list when all children watch the cooking and serving of food. In practice, it is children from poorer households who predominate in the ICDS centres and in publicly funded schools. One estimate suggests that around 33 per cent of pre-schoolers actually avail the benefits. Infrastructure and staffing: The importance of good infrastructure with separate staff was not lost to policy-makers, especially given the earlier experience with school feeding. Noon meal premises had, to be suitable for children to assemble, play and rest, for storing food commodities and records, and for cooking, with adequate water supply facilities. It was not always easy to find suitable buildings. Most centres operate in Panchayat Union buildings or other public buildings, specially constructed feeding centres, or rent-free private buildings. Where no suitable public building existed, a small rent of Rs.50 per month covered the use of private buildings. School centres are run in the school buildings. Centres are equipped with cooking utensils, plates and tumblers, play equipment, weighing scales and mats for children to sleep on. For pre-school education charts, toys, etc., are provided. Local communities also contribute – e.g., by providing cooking gas to replace firewood, additional toys, kitchen gardens, etc. Former Noon Meal Programme centres have become available for ICDS and vice versa, facilitating integration. The programme has one of the most extensive infrastructure network of centres, equipped and fully staffed.

Each centre has its own staff for cooking, cleaning and pre-school education, both for the ICDS (all women) and school meals (both sexes). Integration of different schemes under the ICDS led to considerable variation in staffing at the centre level.

The need for staff rationalisation based on work load, though well understood, was difficult as it involved sensitive problems of relocation and retrenchment. Moreover, the numbers are large – around 1,00,000 women, who themselves are now an effective pressure group, long perceived as overworked and underpaid. Full integration took place more easily at the village level, with no overlap or wastage, but took time to fall into place at the District and State levels. For a while a District could have both ICDS and TINP offices and staff, functioning independently. At the state headquarters two independent programme heads led to different guidelines, and variations in service delivery based not on

variations in local needs, but due to the different programmes. A full merger was achieved in 2003 with operations under a single management through a single set of personnel. Hot rice cooked with dhal, soyabean flour, vegetables, oil and condiments prepared daily on the spot is served to all participants. Periodically new ideas and recipes were tried out including a weekly egg, occasional 'upuma', sweets on special occasions, etc. The scale of rations is higher for older children and adults. Minimum calorie protein values are prefixed to provide one-third of total daily requirements. Pregnant and nursing women and children aged two or less are provided with a nutrient dense complementary feed – 'sathu maavu' that also provides a pre-determined nutrient composition per 100 grams. School children eat their noon meal at school. The other categories, i.e., pre-schoolers, pensioners and pregnant and nursing women eat at ICDS centres (anganwadis).

The cost of ingredients of the basic meal ranges between Rs.1.38 per head per day (for the youngest age group) and Rs.2.32 per person per day (for adults), excluding administrative overheads, but including transport charges. Thrice a week the addition of potato, bengal-gram and green-gram dhals, one item each on alternate days, adds around Rs.0.19 per head with corresponding calorie-protein addition. The 'sathu maavu' consists of a mix of roasted cereals, gram, jaggery and a vitamin premix based on a prescribed protein-calorie scale and costs about the same – around Rs.1.61 per 100 grams per head.

The sheer logistics of managing these operations are mind-boggling – procurement, delivery of grains minimising crisscross movements to the vast network of village centres and urban slums, ensuring stock adequacy, regular replenishments, cooking, etc. Staff capacity at different levels built on the basis of experience and training helped. The scheme has grown and stabilised over time.

The noon meal is better described as a substitute rather than a supplement as it is in lieu of a home meal. Yet there is some additionality from higher quantity and quality as compared with what the children get at home. For the poorest, more likely to come hungry to the anganwadi or school, the additionality is the greatest.

Regardless of the party in power, successive Governments have consistently maintained or increased the level of budget support to nutrition. The programme has a first call on the State's resources. Expenditure on many of the complementary social services (public health, water and sanitation, labour and employment, education, etc.,) has also followed the same pattern, sometimes growing faster than expenditure on nutrition programmes, and supplementing them by addressing many of the non-nutrition factors important for nutrition security. Quality – Tamil Nadu is different: Tamil Nadu's experience with ICDS indicates that the sandwich situation, with pressure from above and below (a combination of political will and high expectations from participating households), not only ensures budget support to stated policies but also puts in place accountability. As discussed in the editorial introduction to this collection, this has contributed to higher quality of services compared with most other States, especially the northern States. For instance, ICDS centres in Tamil Nadu are open longer, those below three attend more regularly, pre-school education is prevalent in most centres, infrastructure is much better, and workers are regularly paid.

Weight-for-age data indicate a trend reduction in malnutrition among participating rural children – a joint outcome of nutrition interventions and overall development. Data for the period 1983 to 1999 among former TINP participants show a steady decline in severe malnutrition (grades III and IV) to almost zero – from a little over 12 per cent to half of one per cent. The proportion of moderately malnourished (grade II) children also declined, from over 35 per cent to under 10 per cent, while the percentage of children in the "normal" category went up from under 20 to over 50. This is a significant achievement.

Other achievements of ICDS in Tamil Nadu include promoting social equity due to regular common dining, washing, sleep and play (in spite of occasional incidents), and building skills among pre-schoolers for school readiness. Primary school teachers tend to prefer children who have had a few years in anganwadis as these are seen to build social and cognitive skills among children. In fact there are complaints from some ICDS staff that, in the interest of school enrolment targets, primary school teachers sometimes entice ICDS children to join regular school prematurely!

Moreover, in spite of a trend reduction in malnutrition observed among programme participants, malnutrition in the State has proved to be persistent. According to the second National Family Health Survey (NFHS II), over 36 per cent of children under three in Tamil Nadu are underweight, and one-third are stunted. Further, 23 per cent of new-borns are categorised as low birth weight (below 2.5 kg at birth). New batches of underweight babies further add to the probability of malnourishment in future. Adding other correlates, including social and lifestyle-related factors which are prevalent among the better-off sections of the population as well, reasons for policy concern continue.

The state's focus has been more on managing malnutrition after it sets in. Perhaps, simultaneously, greater attention is needed for prevention (without discontinuing the management of prevailing malnutrition). While the state is committing resources to counter food deprivation, further improvements could depend on better addressing non-food factors.

In particular, there is a need to facilitate better nutrition education for behavioural change, enabling individuals to make pro-nutrition choices – a knowledge-based approach.

**Pointers for Future**

Widening nutrition knowledge, and more generally, knowledge about child development and the human life cycle seems to be the missing ingredient in the case of Tamil Nadu, as elsewhere. Food can be "delivered" to beneficiaries; nutrition status cannot, it is an outcome of a number of factors, food and non-food, including actions of people themselves that substantially influence health-nutrition outcomes.Nutrition-related knowledge cannot be taken for granted even among better-off sections of the population, underlining the relevance of a knowledge-based approach. This critical ingredient, nutrition literacy, costs far less but constitutes the strategic "software" required to enhance the effectiveness of per capita income growth and improved access to food.

Equally important is the ability to seek out information and to segregate accurate information from the inaccurate. As the media bombard consumers with slick advertisements for various convenience foods, human milk substitutes, pills and

potions for growth and strength, it is important to develop a discriminating eye based on sound knowledge. There are also many inaccurate traditional beliefs that inhibit consumption of low-cost nutritious food, and need to be countered. This is even more important for the poor, who might end up spending a high share of their limited resources on nutritionally inferior products. Hence, the importance of nutrition education, along with other nutrition inputs.

Recognising this, Government of Tamil Nadu has taken the first step of moving towards a malnutrition free state, i.e., outcomes in line with international norms so that malnutrition is no longer a public policy concern by 2020. Goals for indicator values that match the levels of the best performing countries in the world are incorporated in Government of Tamil Nadu's official nutrition policy of 2003, under which the government intends to reduce human malnutrition of all types, including subclinical deficiencies, to match international norms. Indicators are comprehensive and include percentage of low birth weight; underweight and stunting (0-3 years); anaemia among adolescent girls, 0-3 year olds and pregnant women; average weight and height among adolescents; and body mass index among men and women. These need to be monitored on a regular basis. Setting up of a monitoring mechanism based on panel rather than cross-section data would also be useful, apart from being of great scientific interest.

Leveraging the state's relatively well functioning network of centres, staffing and budgets, based on political will and public expectations, and combining it with a "knowledge approach" to child nutrition, are the suggested future directions for Tamil Nadu. In respect of other states, the Government of India, and countries similarly placed, the Tamil Nadu experience underlines the utility of a "sandwich" situation, combining pressure from above and below for the public good. It also provides a body of experience which can facilitate more efficient operations on a shorter timeline, learning from some of the pioneering attempts in Tamil Nadu and also sharing experiences with others.

# சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களின் விவரம்

| வ. எண் | உணவுப் பொருட்களின் பெயர் | 1–5 வகுப்பு (உ_அ*) | 6–10 வகுப்பு (உ_அ*) | 1–5 வகுப்பு (க^) | 6–10 வகுப்பு (க^) | 1–5 வகுப்பு (பு#) | 6–10 வகுப்பு (பு#) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரிசி | 100 | 150 | 346 | 519.00 | 6.40 | 9.00 |
| 2. | பருப்பு | 15 | 15 | 50.25 | 50.25 | 3.35 | 3.35 |
| 3. | எண்ணெய் | 3 | 3 | 27 | 27 | 0 | 0 |
| 4. | உப்பு | 1.9 | 1.9 | 0 | 0 | 0 | 0 |
| 5. | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள் (பருப்பு பயன்படுத்தும் நாட்கள்) | 1.30 | 1.40 | 37.80 | 45.36 | 1.62 | 1.94 |
| 6. | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள் (பருப்பு பயன்படுத்தாத நாட்கள்) | 1.70 | 1.80 | 37.80 | 45.36 | 1.62 | 1.94 |
| 7. | முட்டை | 1 (46 கிராம்) | 1 (46 கிராம்) | 79.58 | 79.58 | 6.11 | 6.11 |
| 8. | வாழைப்பழம் | 1 (100 கிராம்) | 1 (100 கிராம்) | 116 | 116 | 1.20 | 1.20 |
| 9. | பச்சைப்பயறு, கொண்டைக்கடலை, (செவ்வாய்) | 20 | 20 | 9.90 | 9.90 | 0.59 | 0.59 |
| 10. | உருளைக்கிழங்கு (வெள்ளிக்கிழமை) | 20 | 20 | 2.80 | 2.80 | 0.05 | 0.05 |

**உ_அ* - உணவின் அளவு (கிராமில்), க^- கலோரி, பு# - புரதம் (கிராமில்)**






அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்குச் சூடாக சமைத்த ஊட்டச்சத்து நிறைந்த கலவை சாதத்துடன், குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை வழங்கப்படுகிறது. அதன் மூலம் 6.12 கிராம் புரதமும் 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கின்றன.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000 ஐ பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் 'ஹ' குறியீடு உடைய நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. தரமான முட்டைகள் வழங்குதலை கண்காணிக்க, உணவுத் தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.



மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது செவ்வாய்க்கிழமைகளில் ஒவ்வொரு குழந்தைக்கும், 20 கிராம் 'கருப்பு கொண்டைக் கடலை', கொண்டைக் கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும், 3.42 கிராம் புரதமும் கிடைக்கின்றன.

மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வியாழக்கிழமைகளில் ஒவ்வொரு குழந்தைக்கும், 20 கிராம் 'பச்சைப் பயறு சுண்டல்' வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும், 4.80 கிராம் புரதமும் கிடைக்கின்றன.



ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் குழந்தைகளுக்கு மாவுச் சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில், 20 கிராம் உருளைக் கிழங்கு மிளகாய்ப்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கின்றன.



முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படுகிறது. 100கிராம் எடையுள்ள வாழைப்பழத்தின் மூலம் 116 கிலோ கலோரி சக்தியும், 1.2 கிராம் புரதமும் கிடைக்கின்றன. 12,946 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.



சத்துணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய் (Palmolein Oil) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வழங்கப்படுகின்றன. சமையல் எண்ணெயில் வைட்டமின் 'A' மற்றும் வைட்டமின் 'D' உயிர் சத்துக்கள் சேர்த்து செறிவூட்டப்படுவது வைட்டமின் 'A' மற்றும் 'D' குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது. அயோடின் மற்றும் இரும்பு சேர்த்து செறிவூட்டப்பட்ட உப்பு முன்கழுத்துக் கழலை, இரத்த சோகை ஆகியவற்றைத் தடுக்கிறது.

# சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள்

**மாண்புமிகு
முன்னாள் முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்கள்**



பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி, அதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைவினை அகற்றுதல்; பள்ளி செல்லும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரித்தல்; இடைநிற்றலை அகற்றல் ஆகிய நோக்கங்களை எய்தும் பொருட்டு, 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் சத்துணவுத் திட்டத்தில், பல காலமாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்த நான், காலத்திற்கு ஏற்பவும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், உணவு முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தேன்.

எனது உத்தரவின் பேரில், புதிய வகை உணவு முறையினை அறிமுகப்படுத்துவது குறித்து புகழ் பெற்ற சமையற் கலைஞர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக்குப் பிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பள்ளியிலும்; திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியிலும் சோதனை முறையில், கொண்டைக்கடலை புலவு சாதம் மற்றும் மிளகுத்தூள் கலந்த முட்டை தயாரித்துப் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதனைப் பள்ளிக் குழந்தைகள் விரும்பி உண்பது கண்டறியப்பட்டது. இது மட்டுமல்லாமல், 13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்களை சமையல் நிபுணர்கள் தயாரித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேற்கூறிய சோதனை முறையின் அடிப்படையில், புதிய உணவு வகைகளை சத்துணவுத் திட்டத்தில் படிப்படியாக அறிமுகம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில், திங்கட் கிழமையன்று காய்கறி பிரியாணி மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; செவ்வாய்க் கிழமையன்று கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; புதன் கிழமையன்று தக்காளி சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; வியாழக் கிழமையன்று சாதம், சாம்பார் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக் கிழமை அன்று கறிவேப்பிலை சாதம் அல்லது கீரைசாதம், முட்டை மசாலா மற்றும் மிளகாய்ப் பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும்.

மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில், திங்கட்கிழமை அன்று சாம்பார் சாதம் மற்றும் வெங்காயம், தக்காளி முட்டை மசாலாவும் செவ்வாய்க்கிழமை அன்று மீள்மேக்கர், காய்கறிக் கலவைசாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்,

புதன்கிழமையன்று புளியோதரை மற்றும் தக்காளி முட்டை மசாலாவும், வியாழக்கிழமையன்று எலுமிச்சை சாதம், தக்காளி முட்டை மசாலா மற்றும் சுண்டலும், வெள்ளிக்கிழமையன்று சாதம், சாம்பார், வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு பொரியலும் வழங்கப்படும்.

இதேபோன்று, அங்கன்வாடி மையங்களுக்கு வருகைதரும் குழந்தைகளின் சிறப்பம்சம் மற்றும் செரிமானத் திறன் ஆகியவற்றினைக் கருத்தில்கொண்டு அவர்களுக்குப் புதிய உணவு வகைகள் அறிமுகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, திங்கட்கிழமை அன்று தக்காளி சாதம், வேகவைத்த முட்டையும், செவ்வாய்க்கிழமை அன்று கலவை சாதம் மற்றும் சுண்டலும், புதன்கிழமை அன்று காய்கறிப் புலவு சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும், வியாழக்கிழமை அன்று எலுமிச்சை சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும், வெள்ளிக்கிழமை அன்று பருப்பு சாதம், வேகவைத்த உருளைக்கிழங்கும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கலவை சாதமும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத்திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறைத் திட்டத்தின் செயல்பாடு குறித்து அறிந்த பிறகு, மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

இந்த நடவடிக்கை கல்வி பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கையையும், அவர்களின் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உணவு வகைகள்

| நாட்கள் | புகைப்படம் | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | புகைப்படம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
|---|---|---|---|---|
| திங்கட் கிழமை |  | வெஜிடபிள் பிரியாணியுடன் மிளகு முட்டை |  | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) உடன் வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை |  | கருப்பு கொண்டைக்கடலை புலவு உடன் தக்காளி மசாலா முட்டை |  | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதத்துடன் மிளகு முட்டை |
| புதன் கிழமை |  | தக்காளி சாதம் உடன் மிளகு முட்டை |  | புளி சாதம் உடன் தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை |  | சாதம், சாம்பாருடன் வேகவைத்த முட்டை |  | எலுமிச்சை சாதம் , சுண்டலுடன் தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை |  | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டையுடன் மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு |  | சாதம் , சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

## ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

- ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும், சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகிய மூன்று பதவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. பள்ளியில் பயனாளிகளின் எண்ணிக்கை 500க்கும் மேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையல் உதவியாளரை நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பெண்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ், நியமனம் செய்யப்படுகின்றனர்.
- விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட சிறப்புப் பிரிவினர்களுக்கு சத்துணவு பணியிடங்களில் 25 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்குச் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களில் 4 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பளிக்கப்பட்டுள்ள சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஊதிய விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவி | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் | குறைந்த / அதிகபட்ச சம்பள விகிதம் (₹) |
|---|---|---|---|
| 1. | சத்துணவு அமைப்பாளர் | 42,423 | 10,045-14,770 |
| 2. | சமையலர் | 42,852 | 6,265 - 7,840 |
| 3. | சமையல் உதவியாளர் | 42,855 | 5,110 - 6,160 |
| | மொத்தம் | 1,28,130 | |

பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள் என வகைப்படுத்தப்பட்ட சத்துணவுப் பணியாளர்களின் வேலை நேரம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை ஆகும்.

சத்துணவுப் பணியாளர்களுக்குச் சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம், ஒட்டுமொத்த தொகை, பண்டிகை முன்பணம், பொங்கல் போனஸ், மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி, சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், கூடுதல் பொறுப்புப்படி, குடும்ப நல நிதி, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பொது வருங்கால வைப்பு நிதி, மகப்பேறு விடுப்பு, விருப்ப ஓய்வு, கருணை அடிப்படையிலான பணி நியமனம் ஆகிய கூடுதல் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

## திட்டத்தின் விளைவு

இத்திட்டத்தின் செயலாக்கத்தினால் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்தல், மாணவர்களின் பள்ளி இடைநிற்றலைக் குறைத்தல், முறையாகப் பள்ளிக்கு வருகை தருவதை உறுதி செய்தல் ஆகிய நேர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் இத்திட்டம் பெண் கல்வியினை ஊக்கப்படுத்திடவும், குழந்தைகளது ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்திடவும் வழிவகை செய்கிறது.

## வைப்பறையுடன் கூடிய சமையலறை



வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கான மதிப்பீடு, மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. 100 குழந்தைகள் பயின்று வரும் பள்ளிகளுக்கு 20 சதுர மீட்டரும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கும், கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

## சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்



சத்துணவு மையங்களை நவீன மயமாக்கி புகையில்லா சுற்றுச்சூழல் உருவாக்க நவீன எரிவாயு இணைப்புகள் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளன. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக ரூ.22,350 வீதம் சமையல் மேடை கட்டுமானத்திற்கும், எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு பெறுவதற்கும் (பாதுகாப்பு வால்வு உள்ளிட்டவை) வழங்கப்பட்டுள்ளன. 35,713 மையங்களுக்கு எரிவாயு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்புகளைக் கையாளுவது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள் மூலம் சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## மையங்களின் எண்ணிக்கை விவரம்

| வ. எண். | மாவட்டம் | வட்டாரங்களின் எண்ணிக்கை | மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | 6 | 568 |
| 2. | சென்னை | 0 | 637 |
| 3. | கோயம்புத்தூர் | 12 | 1291 |
| 4. | கடலூர் | 13 | 1585 |
| 5. | தருமபுரி | 8 | 1381 |
| 6. | திண்டுக்கல் | 14 | 1520 |
| 7. | ஈரோடு | 14 | 1331 |
| 8. | காஞ்சிபுரம் | 13 | 1560 |
| 9. | கன்னியாகுமரி | 9 | 660 |
| 10. | கரூர் | 8 | 789 |
| 11. | கிருஷ்ணகிரி | 10 | 1732 |
| 12. | மதுரை | 13 | 1446 |
| 13. | நாகப்பட்டினம் | 11 | 1172 |
| 14. | நாமக்கல் | 15 | 1011 |
| 15. | நீலகிரி | 4 | 517 |
| 16. | பெரம்பலூர் | 4 | 379 |
| 17. | புதுக்கோட்டை | 13 | 1642 |
| 18. | இராமநாதபுரம் | 11 | 1224 |
| 19. | சேலம் | 20 | 1817 |

| | | | |
|---|---|---|---|
| 20. | சிவகங்கை | 12 | 1292 |
| 21. | தஞ்சாவூர் | 14 | 1592 |
| 22. | தேனி | 8 | 707 |
| 23. | திருச்சி | 14 | 1593 |
| 24. | திருவள்ளூர் | 14 | 1523 |
| 25. | திருவாரூர் | 10 | 984 |
| 26. | திருநெல்வேலி | 19 | 2085 |
| 27. | திருப்பூர் | 13 | 1354 |
| 28. | திருவண்ணாமலை | 18 | 2016 |
| 29. | தூத்துக்குடி | 12 | 1492 |
| 30. | வேலூர் | 20 | 2416 |
| 31. | விழுப்புரம் | 22 | 2411 |
| 32. | விருதுநகர் | 11 | 1478 |
| **மொத்தம்** | | **385** | **43205** |

"பெரும்பாலான பிள்ளைகள் காலையில் புறப்படும்போது
சாப்பிடாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள்.
அதுவும், நிச்சயமாக சொல்கிறேன்;
காலையில் மட்டும் சாப்பிடாமல் இருக்கவே கூடாது."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

# முதலமைச்சரின் திராவிட மாதிரியும் தமிழ்நாட்டு சத்துணவுத் திட்டத்தின் வெற்றிக்கதையும்

முனைவர்
விஜய் அசோகன்
அறிவியல் ஆராய்ச்சியாளர்,
சுவீடன் / அயர்லாந்து

நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கம் தமிழ்நாட்டினை வெற்றிப் பாதையில் தொடர்ந்து செலுத்த எப்பொழுதும் முதன்மையான பார்வையை வைத்திருப்பது கல்வித்துறையில் தான்! அதில், மாணவ, மாணவிகளின் கல்வி, உடை, உணவு, போக்குவரத்து, அவர்களது சுகாதாரம் என எல்லாமும் திராவிட அரசுகளின் கொள்கைகளிலும் சட்டங்களிலும் முதன்மை பெற்றவை! அன்றைய நீதிக்கட்சித் தலைவர்கள் முதல் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் வரை கூர்மைப்படுத்துவது கல்வித்துறையைத்தான்!

கல்வித்துறையில் மாணவ, மாணவிகளை வெற்றிபெற வைத்துவிட்டால், மாநிலத்தின் வளர்ச்சி, தமிழினத்தின் மேன்மை என அனைத்தும் பெருவீச்சு பெற்றுவிடும் என்பதே திராவிட இயக்கங்களின் அடிப்படை தாரக மந்திரம்! அதுவே நம் முதலைமைச்சர் முன்மொழியும் வருங்கால திராவிட மாடலும்!

நூற்றாண்டு வரலாற்றினைச் சுமக்கும் திராவிட இயக்கத்தினை திராவிட மாடல் அரசின் தலைமையில் இருந்து நம் மக்களைக் காக்கும் பெரும் பொறுப்போடு நம் முதலமைச்சர் பயணிப்பதால், கல்வித்துறையினை மையப்படுத்தி திராவிட மாடலினை நிறுவிக்கொண்டே செல்கின்றார். கல்வித்துறையில் நம் திராவிட அரசின் தாக்கத்தின் உலகப் பார்வையினை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் பல திட்டங்கள் உலக அரங்கில் ஐக்கிய நாடுகள் சபை அனைத்து வளர்ந்துவரும் நாடுகளுக்கும் வலியுறுத்தும் திட்டங்கள், நாம் செயல்படுத்தும் திட்டங்கள் பலவும் உலகின் தலைசிறந்த கல்வியினை வழங்கும் பின்லாந்து உள்ளிட்ட நாடுகள் பின்பற்றும் திட்டங்கள்! நமது தமிழ்நாட்டின் மாணவ, மாணவிகள் உலகெங்கும் இன்று உயரிய பொறுப்புகளில் வீற்றிருப்பதற்கும் நாம் வழங்கும் விலையில்லா உணவிற்கும் தொடர்புண்டு! சமத்துவக் கல்வி, உலகத்தரக் கல்வி, சமூகநீதிக் கல்வி என்பதே பள்ளி வழங்கும் உணவில் இருந்துதான் தொடங்குகிறது!

## பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்

நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பள்ளிகளில் காலை உணவுத்திட்டத்திற்கான கோப்புகளில் ஒப்புதல் கையொப்பம் இட்ட வேளையில் வெளியிட்ட அறிக்கையில், "ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்ட போதிலும், காலை உணவுத் திட்டத்திற்கான கோப்பில் கையெழுத்திட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சமூகநீதியை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டம்தான்

இந்த காலை உணவுத் திட்டம். வயிற்றுக்கு நிறைவும், செவிக்கு அறிவும் ஊட்டுபவையாகப் பள்ளிச் சாலைகளை மாற்றும் முயற்சி இது" எனத் தெரிவித்து இருந்தார்.

மேலும், இலட்சக்கணக்கான மாணவக் கண்மணிகளின் மனம் குளிர நான் காரணம் ஆகிறேன் என்பதே எனக்கு ஏற்பட்டுள்ள பெருமகிழ்ச்சி. திராவிட இயக்கக் கொள்கைகளில் உணர்வுப்பூர்வமாகத் தோய்ந்துபோன எனக்கு, ஏழைக் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை ஊக்குவிக்கும் இந்தத் திட்டம் ஒரு கனவுத் திட்டம். முதலமைச்சராகப் பெருமிதம் தரும் திட்டம்." என்றும் தெரிவித்திருந்தார்.

இந்திய ஒன்றிய அளவிலேயே முதன் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் வழி, 2022-2023இல், 33 கோடி செலவில், 1545 பள்ளிகளின் 1.14 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைய இருக்கின்றனர். நம் தமிழ்நாட்டில் பசியால் வாடும் பல்லாயிரக்கணக்கான மாணவச் செல்வங்கள் முதலமைச்சரையும் முத்தமிழ் அறிஞரையும் நன்றியோடு வணங்கி தங்கள் காலைப் பொழுதைத் தொடங்க இருக்கின்றனர்!

திராவிடர் கழகத் தலைவர் நம் மதிப்பிற்குரிய ஆசிரியர் வீரமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரை, "சமூகநீதிக்கான சரித்திர நாயகர்" என்றும் "இந்தியாவிற்கே முதலமைச்சர் வழிகாட்டுகிறார்" என்று தொடர்ந்து புகழ்ந்துரைப்பதற்கு முத்தாய்ப்பாய் காலை உணவுத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது எனலாம்.

பள்ளிகளில் அசைவ உணவு எடுத்து வரலாமா? பள்ளிகளில் இலவச உணவு அவசியமா? இத்தகைய வாதங்கள் இந்தியாவெங்கும் தொடர்ந்து பேசப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ்நாட்டில் மதிய உணவைக் கடந்து காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுவது எத்தகைய முக்கியத்துவத்தை வழங்குகிறது என்பதற்கான சில விளக்கங்களை நாம் பார்க்க வேண்டியுள்ளது..

## உலக வழிகாட்டுதல் என்ன சொல்கிறது?

உலக அளவில், பள்ளிகளில் உணவு வழங்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையும் UNICEF நிறுவனமும் சுட்டிக்காட்டிய பல ஆய்வறிக்கைகளில்,

1) மாணவ, மாணவிகள் இடை நிற்றல் தடுக்கப்படும்,

2) நல்ல ஊட்டச்சத்து நிறைந்த உணவு, மாணவ, மாணவியரின் ஆரோக்கியத்தைப் பேணுவதோடு, கல்வி கற்றலில் திறன் மேம்பாடடையும்,

3) சமூக ஏற்றத்தாழ்வற்ற வகுப்பறைகள் உருவாகும், அதனால், சமத்துவ வகுப்பறைக்கு வித்திடும்" என்றெல்லாம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Organization for economic co-operation and development (OECD) என்ற பன்னாட்டு அமைப்பின் கணக்கின்படி, அடுத்த 30 ஆண்டுகளில் இள வயதில் உணவில்லாமல், முறையான ஊட்டச்சத்து கிடைக்கப்பெறாமல் பாதிக்கப்படும் குழந்தைகளில் 9 கோடி பேர் இறக்கவும் நேரிடலாம், இதனோடு, ஒவ்வொரு நாடுகளும் குறைந்தது 3.3% GDP பொருளாதார இழப்பையும் சந்திக்க நேரிடும் என்றுரைத்தது (2022 அறிக்கை).

உலகின் தலைச்சிறந்த அறிவியல் ஆய்வு வெளியீடான Nature பதிப்பகத்தில் வெளியான Intergenerational nutrition benefits of India's national school feeding program என்ற தலைப்பிலான ஆராய்ச்சிக் கட்டுரையில், "பள்ளிகளில் வழங்கப்படும் உணவினால் குழந்தைகளின் மனநலன், உடல்நலன், கல்வி வளர்ச்சி என்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பல தலைமுறைகளுக்கும் தொடர்ச்சியான உடல்நலன் வளர்ச்சியடையும்" என்று தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை, பள்ளிகளில் வழங்கப்படும் உணவுத்திட்டத்தினை அடிப்படை மனித உரிமைச் செயற்பாடுகளாக வரையறுக்கிறது. கல்வி பெறுவதற்குரிய உரிமைகள் (Right to education) எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்வது எப்படி அரசினது கடமையோ, அத்தகைய நோக்கில், குழந்தைகளுக்கான

உடல்நலன் பேணுதல், சத்துள்ள உணவு வழங்குதல் இவையாவுமே அரசின் கடமை என்றும், பள்ளிகளை முறையாக நிர்வகிப்பதன் மூலமே ஒவ்வொரு நாடுகளும் மனித உரிமைச் சட்டங்களை பேணுவதற்குரிய அடிப்படை சமூகத்தைக் கட்டமைத்து, சாதி, மத, இன நல்லிணக்கங்களைப் பேண முடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையும் சுட்டிக்காட்டியுள்ளன. ஆதாரம் : United Nations standing committee on Nutrition வெளியிட்ட ஆய்வறிக்கை: “Schools as a System to Improve Nutrition”-Sep 2017.

மேலும் அவ்வறிக்கையில், “பள்ளிகளில் வழங்கப்படும் உணவிற்கான அரசின் முதலீடுகள், மனிதவள மேம்பாட்டினை வளர்த்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குக் கைகொடுக்கும்” எனவும் தெரிவித்துள்ளனர்.

உலக சுகாதார அமைப்பு (WHO), வெளியிட்ட “Food and nutrition policy for schools” என்ற ஆய்வறிக்கையில், பள்ளிகளில் வழங்கப்படும் சத்துணவால், ‘கல்வி வளர்ச்சி, திறன் மேம்பாடுகள் இவற்றோடு குழந்தைகளுக்கு வருங்காலத்தில் ஏற்பட இருக்கும் உடற்பருமன் மற்றும் தீவிரமான தீராநோய்கள் (Chronic disease) தடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

## தமிழ்நாட்டின் உலக சாதனை – பள்ளிகளில் உணவு

உலக நாடுகளும் உலக அமைப்புகளும் எதனை முன்னிலைப்படுத்த வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வளரும் நாடுகளுக்கும் மூன்றாம் நாடுகளுக்கும் ஆலோசனைகள் கூறி, அதற்கான உரிய உதவிகளைச் செய்து வருகிறார்களோ, அதனை நம் திராவிட இயக்கங்களின் மூதாதையர் இயக்கமான நீதிக்கட்சி 100 ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்கின்றனர் என்பது வியப்பிலும் வியப்பானதாக உள்ளது.

இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நிலைநிறுத்த முனையும் முன்பே முதற்படியாக கல்வி கற்கத் தடையாக இருப்பது தங்குமிடமும் உணவுமே என்பதனை முன்னுணர்ந்திருக்கின்றனர்.

1875-ல் சென்னை திருவல்லிக்கேணியில் பிறந்து, மருத்துவம் கற்றிருந்த சி.நடேசனார், பிராமணரல்லாத மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் மறுக்கப்பட்ட காலகட்டத்தில், அவர்களுக்காக 'திராவிடர் இல்லம்' விடுதியை 1914இல் தொடங்கி, அவர்களின் உணவு, உடை, தங்குமிடம் ஆகிய தேவைகளை மட்டுமின்றி, அவர்களின் கல்வி வளர்ச்சிக்குமான செலவுகளையும் ஏற்றிருந்தார்.

சென்னை மாநகராட்சித் தலைவராக இருந்த சர்.பிட்டி தியாகராயனார், செப்டம்பர் 16, 1920இல் ஆயிரம் விளக்குப் பகுதியில் 1600 மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கி, இந்தியாவிற்கே முன்னோடியாக நம் இயக்கத்தையும் மாநிலத்தையும் கட்டமைத்தார். இன்று, நம் கழகத் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 1,545 பள்ளிகளின் 1 இலட்சம் மாணவ, மாணவிகளுக்குக் காலை உணவு வழங்குவதன் வழியாக இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாட்டிற்கு இதிலும் பெற்றுவந்துள்ளார்.

1957இல், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மதிய உணவுத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார், 1982இல் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் சத்துணவுத் திட்டமாக மாற்றியமைத்தார், 1989இல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இரண்டு முட்டைகளைச் சத்துணவில் சேர்த்து ஊட்டச்சத்து உணவாக மாற்றியமைத்தார்.

தமிழ்நாட்டின் இந்த 100 ஆண்டு பெருமையின் மைல்கல் இன்றைய முதலமைச்சர் நம் கழகத் தலைவரின் காலை உணவுத்திட்டம் எனலாம்.

2015இல், Journal of Economics ஆய்விதழில் வெளியான "Nutrition and cognitive achievement: An evaluation of the School Breakfast Program" கட்டுரையில், 'பள்ளியில் சத்தான காலை உணவினை எடுத்துக்கொள்ளும் மாணவ, மாணவியர் கணக்கு, அறிவியல் பாடங்களில் அதிகமான மதிப்பெண்ணைப் பெறுவார்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Food research and action centre என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "பள்ளியில் காலை உணவினை எடுத்துக் கொள்ளும் மாணாக்கருக்கு மெத்தனப்போக்குக் குறையும் என்றும், உளவியல் பிரச்சனைகளால் ஏற்படும் மன அழுத்தம் குறையும் என்றும் சமூக ஒழுக்கம் மேம்படும்" என்றும் தெரிவித்துள்ளனர்.

### தமிழ்நாட்டின் வெற்றிக்கதையே 'திராவிட மாடல் – Dravidan Model'

2020இல் Tony Blair Institute for Global Change நிறுவனம் வெளியிட்ட 'Inclusive growth in Tamil Nadu: The role of political leadership and governance' என்ற ஆய்வுக் கட்டுரையும், பொருளாதாரத்தில் நோபல் பரிசுப் பெற்ற பேராசிரியர் அமெர்தியா சென் மற்றும் தமிழ்நாட்டின் பொருளாதார ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருக்கும் ஜீயான் டெரஸ் அவர்களும் இணைந்து எழுதிய 'An Uncertain Glory: India and its Contradictions' என்ற நூலிலும் தமிழ்நாட்டின் வெற்றிக்கதையை உருவாக்கிய திராவிட மாடலின் மையமாக கல்வித்துறையை, வேலை வாய்ப்புகளில் உருவாக்கிய நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இட ஒதுக்கீடுகளைக் கொண்ட சமூகநீதித் திட்டங்கள், சத்துணவு உள்ளிட்ட சமூகநலத்திட்டங்களே அடிப்படை என விரிவாக ஆய்வு செய்து வெளியிட்டுள்ளனர்.

நம் மாண்புமிகு முதலமைச்சர் ஓங்கி ஒலிக்கும் குரல்களில் தந்தைப் பெரியாரும் அறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞரும் கட்டிக்காத்த 'திராவிட மாடல்' நிலைநிற்கின்றன. நாமும் அவர் காட்டும் பாதையில், அவரின் வழித்தடம் பின்பற்றி தொடர்ந்து இயங்குவோம்!

# பயன்பெற்றோர் போற்றுகின்றனர்



கனக் (கனகராஜன் நடராஜன்)
Senior Network Architect,
கலிபோர்னியா சான் பிரான்சிஸ்கோ
வளைகுடாப் பகுதி கலிபோர்னியா,
அமெரிக்கா
Email: nkanakaraj@gmail.com

வணக்கம்! என் பெயர் கனகராஜன் நடராஜன். சென்னையின் மாநகராட்சி பள்ளிகளிலும், அரசு உதவிப்பெறும் பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்தவன். கோவை தொழில்நுட்பக் கல்லூரியில் (CIT) எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் படித்துவிட்டு, பின்பு அமெரிக்காவில் தொழில் நிமித்தமாகக் குடியேறி, இரண்டு குழந்தைகள் மற்றும் மனைவியுடன் வசித்து வருகிறேன். தற்போது கலிஃபோர்னியாவில் இருக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மூத்த நெட்வொர்க் வடிவமைப்பாளராக (Senior Network Architect) பணியாற்றுகிறேன். இங்கு கலிபோர்னியா தமிழ்ப் பள்ளி உள்படப் பல தொண்டு நிறுவனங்களிலும்

என்னை ஈடுபடுத்திக்கொண்டு என்னால் முடிந்த சமுகப்பணிகளையும் செய்து வருகிறேன்.

சென்னையில் ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் தான் நான் 1970களின் முன்பகுதியில் பிறந்தேன். என்னுடன் சேர்த்து மொத்தம் ஏழு சகோதர-சகோதரிகள். அந்தக்காலத்தில் எங்கள் பகுதியில் அடிப்படை வசதிகளே அடியோடு இல்லை. அப்பாவின் வருமானம் மாதத்தின் எல்லாம் நாட்களுக்கும் எங்கள் எழுவரின் பசியை ஆற்றாது. சில காலைவேளைகளில் பழைய சோற்றின் தண்ணீரை மட்டுமே குடித்துவிட்டு மாநகராட்சி பள்ளிக்கு நடந்து சென்ற நாட்களும் உண்டு. வெறும் தண்ணீரையே இரவு உணவாக உண்டு, வயிறு கிள்ள உறங்கியும் உறங்காத நாட்களும் உண்டு.

முதலாம் வகுப்பு முதல் நானே என் வகுப்புகளில் முதல் அல்லது இரண்டாவது அதிக மதிப்பெண் பெறும் மாணவன். அது பன்னிரெண்டாம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்தது. வகுப்பில் பாடம் நடத்தும் ஆசிரியரை நான் கவனித்தாலும், பல நாட்களில் என் வயிறு என்னைக் கிள்ளி விட்டு என் கவனத்தை திசைத்திருப்பும். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது தான் சத்துணவுத் திட்டம் என் பள்ளிக்கு வந்தது. தினந்தோறும் மதியம் விதவிதமான சோறு பரிமாற ஆரம்பித்தார்கள். வயிற்றைக் கிள்ளும் பசியும் மெல்ல மெல்ல பறந்துச் சென்றது. கூடவே, மதிய சத்துணவு வைத்துச் சாப்பிடும் அலுமினிய தட்டு ஒன்றும் என் புத்தகப் பையில், புத்தகங்களுக்கு நடுவே ஒளிந்துக்கொண்டு பள்ளிக்கு தினந்தோறும் வரும். அவ்வப்போது பள்ளி இடைவேளைகளில் “இன்று என்ன வகையான சோறு போடப்போகிறார்கள்” என்பதைச் சொல்லும் பள்ளிப் பதாகையை நண்பனுடன் பார்ப்பேன். அதுவும் பதாகையில் “இன்று காய்கறி கலவைச் சோறு” என்று எழுதி இருந்தால் அன்று மிகவும் மகிழ்ச்சி கொள்வேன். ஏனென்றால் “பிரியாணி” என்ற வார்த்தைதையை மட்டுமே அந்த காலகட்டங்களில் கேள்விப்பட்ட எனக்கு “காய்கறி கலவைச் சோறு” தான் இன்றைய பிரியாணி.

நான் ஆறாம் வகுப்பைத் தொட்டவுடன், அப்பாவின் திடீர் மறைவு பெரும் பேரதிர்ச்சி. அம்மாவுக்கு போதிய கல்வியும் கிடைத்திருக்கவில்லை. அதனால் அம்மாவிற்கு ஏழு குழந்தைகளுக்கு, உணவும் கல்வியும் அளிக்கும் அளவிற்கு வேலையும் இல்லை, வருமானமும் இல்லாமல். அவ்வப்போது உறவினர்கள் அவர்களால் முடிந்த அளவிற்கு கிராமத்தில் இருந்து சென்னை வந்து சிறிது அரிசி கொடுத்து உதவினார்கள். இருந்தாலும் பசி என் குடும்பத்தை மீண்டும் வாட்டியது. அப்போதுதான் ஒருவரின் உதவியில் அம்மாவுக்கு அருகிலிருக்கும் ஒரு மாநகராட்சிப் பள்ளியின் சத்துணவுக் கூடத்தில் தற்காலிக உதவியாளராக

பணிக்கிடைத்தது. அந்த பள்ளி மாணவர்களுக்குப் போக மீதி மிஞ்சும் வெள்ளைச் சோறை அம்மா வீட்டிற்கு கொண்டு வருவார். மதியம் நான் படிக்கும் பள்ளியில் சத்துணவு சோறும், இரவு அம்மா கொண்டுவந்த எஞ்சிய சத்துணவு சோறும் தான் பல ஆண்டுகளுக்கு எங்கள் வீட்டில் அனைவரின் பசியைப் போக்கியது என்றால் மிகையாகாது.

அரசு உதவிபெறும் பள்ளியிலும் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுமே நான் என் பள்ளி தரும் மதிய சத்துணவு தான் சாப்பிட்டேன். வீட்டிலிருந்து மதிய சோறு கொண்டுவந்து உண்ணும் நடுத்தரவர்க்க மாணவர்களுக்கு இடையில் நானும் என் ஒன்றிரண்டு நண்பர்களும் தான் பள்ளி கொடுக்கும் சத்துணவு சோற்றைச் சாப்பிடுவோம். சில நடுத்தரவர்க்க மாணவர்கள் என் வீட்டு ஏழ்மையையும், பள்ளி தரும் சத்துணவை நான் சாப்பிடுவதையும் அவர்களின் அறியாமையால் கிண்டல் அடித்த சில தருணங்களும் உண்டு. அந்த நேரத்தில் லேசாகச் சிரித்துவிட்டு, அவர்களுக்கு என் தேர்வு மதிப்பெண்களில் மட்டுமே முழு பதிலையும் சொல்லுவேன். பசி பறந்துபோய் கல்வியில் முழு நாட்டம் கொண்டதோடு பள்ளியில் நடக்கும் பாட்டுப் போட்டி பேச்சுப் போட்டிகளிலும் பலப் பரிசுகளையும் வாங்கி உள்ளேன். பள்ளியின் 12-ம் வகுப்பின் இறுதி ஆண்டில் சிறந்த மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தமிழ் வழி படித்து இறுதியாண்டு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மாணவனாய் வெற்றிபெற்றேன்.

நான் விரும்பிய இன்ஜினியரிங் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்தது. அதில் படித்து, முதல் வகுப்பில் தேர்ச்சிப்பெற்று, சிறிதுகாலம் சென்னையில் பல சாப்ட்வேர் நிறுவனங்களில் பணி புரிந்தேன். என் அம்மா சகோதர-சகோதரிகள் நிறைந்த குடும்பத்தை ஒரு வறுமையான நிலையிலிருந்து ஒரு சுமாரான நடுத்தர நிலைக்கு உயர்த்தினேன். சில சகோதரிகளுக்கு நான் ஈட்டிய பணத்தைக் கொண்டு திருமணம் செய்து வைத்தேன். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா நோக்கிப் பறந்து, இன்று இங்கு நல்ல நிலையில் உள்ளேன். என் அம்மா மற்றும் சகோதர-சகோதரிகளும் நல்ல நிலையில் இப்போது உள்ளார்கள். அவ்வப்போது என் சகோதர-சகோதரிகளின் மகன்-மகள்களுக்குத் தேவைப்படும் கல்வி-மருத்துவ உதவியையும் என்னால் செய்யமுடிகிறது. புரட்சியாளர் அம்பேத்கரின் கடைசி வாசகமான “PAY BACK TO THE SOCIETY” என்ற கருத்துக்கு ஏற்ப முகம் தெரிந்த நண்பர்களுக்கும் முகம் தெரியாத பல்வேறுபட்ட மனிதர்களுக்கும் என்னால் முடிந்த பல்வேறு உதவிகளை அடிக்கடி செய்தும் வருகிறேன்.

தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டம் போலவே நான் வசிக்கும் கலிபோர்னியாவில் உள்ள பள்ளிகளிலும் மாணவ-மாணவியருக்கு காலை மற்றும் மதிய உணவு தரும் திட்டம் உள்ளது. அதை இங்கு வசிக்கும்இந்திய-வம்சாவழி மாணவ-மாணவியர்கள் விரும்பி உண்கிறார்களா என்பது கேள்விக்குறிதான். ஆனால் இந்த உணவால் பயனடையும் மற்ற அமெரிக்க ஏழை மாணவ-மாணவிகள் இருக்கிறார்கள். கோவிட் காலத்திலும் வீட்டிலிருந்தே படிக்கும் ஏழை மாணவ மாணவியருக்கு இங்குள்ள பள்ளிகள் தினந்தோறும் மதிய உணவுகளை "பார்சல்களாக" அளித்தன.

அன்று என் பசியையும் எங்கள் குடும்ப பசியையும் தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டம் போக்கி இருக்கவில்லை என்றால், இன்று அமெரிக்காவில் இருந்து Macbook மடிக்கணினியில் இந்த உரையை நான் எழுதி இருப்பேனா என்பது சந்தேகமே!. தமிழ்நாடு அரசு மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக தொடர்ச்சியாக பல்வேறு சீரிய திட்டங்களைத் தொடர்ந்து செய்து வருவதின் நேரடி பயனின் சாட்சியாக என்போன்றே என்னைக் காட்டிலும் திறமை வாய்ந்த ஆயிரமாயிரம் பேர் உருவாகி உள்ளார்கள். இந்திய நாடு விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆன போதிலும், பசியின் கொடுமையாலும் வறுமையாலும் படிப்பின் மேல் நாட்டம் அற்று போகும் குழந்தைகள் இருந்துக்கொண்டு தான் உள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அதனால் இந்த "பள்ளிக்கு வர பசியும் ஒரு தடை இல்லை" என்னும் மதிய உணவுத் திட்டம் மென்மேலும் விரிவடையட்டும், பலகாலம் நீடிக்கட்டும்!. "பகுத்தறிவுடன் கூடிய சமூகக் கல்வியே அனைத்துக்கான விடுதலை" என்ற உன்னத கனவை உண்மையாக்க தமிழ்நாடு அரசுடன் என்போன்றோர் என்றும் கைக்கோர்ப்போம்!

வாழ்க தமிழ்! வாழிய தமிழர்!

நன்றியுடன்

**Ponsingh Babu** B.E., (Mechanical Engineering)
Government School in Village
First generation Graduate

When I was in elementary school, Wheat rava and Sambar were served for lunch for certain students. After that Lunch meal was launched by MGR and I was enrolled the first couple of years for the lunch scheme and excluded because my parents were teachers. It was very helpful for my friends who came from very poor backgrounds to attend the school without worrying about food and helped to concentrate on studies.

I worked for a French international construction company for eight years in Jamaica and for the last six years I have been living and working in the USA.

I hope my information will be helpful for your requirements.

Best regards,

Ponsingh.

# மருத்துவப் பார்வையில் மதிய உணவுத் திட்டம்

மரு. சென் பாலன்,
எலும்பு மற்றும்
முடநீக்கியல் மருத்துவர்

பிறப்பு முதல் இறப்பு வரை தினசரி இன்றியமையாத தேவையாக இருப்பது உணவு. ஒருவர் நூறு வருடங்கள் வாழ்ந்தார் என்றால், அவர் பிறந்தது முதல் இறக்கும் தருவாய் வரை அவரது உணவுத் தொடர்ச்சியின் கண்ணி அறுபடாமல் இருந்து வந்துள்ளது என்று பொருள். ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படும் உணவின் அளவு அவர்களது வயது, பாலினம், செய்யும் வேலை, உடல் எடை போன்ற பல காரணங்களை வைத்து மாறுபடும்.

இரண்டு முதல் மூன்று வயது வரை இருக்கும் குழந்தைகளுக்குத் தினசரி 1000 கலோரியில் இருந்து 1400 கலோரி வரை தேவைப்படும். அவர்களின் வளர்ச்சிக்கேற்ப கலோரித் தேவையும் அதிகரித்துக் கொண்டே வரும். முக்கியமாகப் பருவமடையும் வயதை நெருங்கும் போது உடலில் அதிவேக வளர்ச்சி (Growth spurt) ஏற்படும். அப்போது வழக்கத்தை விட அதிகமான கலோரி உடலுக்குத் தேவைப்படும். கலோரியை அளிக்கும் கார்போஹைடிரேட், புரதம், கொழுப்பு போன்ற பேரூட்டச் சத்துக்களுடன் (Macronutrients), நுண் சத்துக்களான (micronutrients) வைட்டமின்கள், தாது உப்புகள் போன்றவையும் உடல்நலத்திற்கு அவசியம். இவை உடலுக்கு கிடைப்பதில் சிரமம் ஏற்படும் போது ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படுகிறது. வளரிளம் பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட்டால் அது அவர்களது உடல்நலத்தில் நிரந்தர பாதிப்பை உண்டாக்கும் அளவு தீமையானது.

வளரிளம் பருவத்தில் ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் உடற்கேடுகளை தடுப்பதே மதிய உணவுத் திட்டத்தின் உள்ளார்ந்த நோக்கம் ஆகும். அதற்காகக் கல்வி, சமத்துவம், சமூக முன்னேற்றம் போன்ற எண்ணற்ற பிற பயன்கள் முக்கியமற்றவை என்று பொருளில்லை. ஆனால் உள்ளார்ந்த முதன்மை நோக்கமாக உடல்நலத்தை நாம் வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் அல்லவா?

மதிய உணவுத்திட்டத்தின் இந்த முதன்மை நோக்கம் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளது? ஊட்டச்சத்துக் குறைபாடால் ஏற்படும் நோய்களை குறைத்துள்ளதா? நீண்டகால பாதிப்புகளை தடுத்துள்ளதா? மதிய உணவுத் திட்டத்தை நாட்டிலேயே முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை நமக்குள்ளது. அதன் விளைவுகள் என்ன?

இந்த கேள்விகளுக்கான விடைகளை சில "உடல்நலக் குறியீடுகள்" (Health Indicators) மூலமாக தேடலாம்.

(இந்தத் தரவுகளின் மூலம் : Comprehensive National Nutrition Survey 2016- 2018)

### 1. வயதிற்கேற்ற உயரம்

ஊட்டச்சத்துக் குறைபாடு நேரும் போது குழந்தைகளின் உயர வளர்ச்சி பாதிக்கப்படும். சிறு வயதில் அவர்களது உயரத்தை அளவிடுவதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைபாடு இருப்பதை நாம் கண்டறியலாம்.

5 வயதிற்கு கீழான குழந்தைகளில் தங்கள் வயதிற்கேற்ற உயரத்தினை அடையாதவர்கள்

தமிழ்நாடு - 19.7 சதவிகிதம்

இந்தியா - 34.7 சதவிகிதம்

5 -9 வயதுடைய குழந்தைகளில் தங்கள் வயதிற்கேற்ற உயரம் அடையாதவர்கள்

தமிழ்நாடு - 9.7 சதவிகிதம்

இந்தியா - 21.9 சதவிகிதம்

இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்திய சராசரியில் இருந்து தமிழ்நாட்டு தரவுகள் மேம்பட்டு இருப்பதை நாம் அறியலாம். இவை ஊட்டச்சத்துக் குறைபாடை நீக்குவதில் நாம் பல படிகள் முன்னேறியுள்ளதை நமக்குக் காட்டுகின்றன.

### 2. Body Mass Index (BMI)

10-19 வயதுடைய வளரிளம் பருவத்தில் உயரத்திற்கு ஏற்ப உடல் எடை உள்ளதா என அளவிடுவதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடை நாம் அறியலாம். இதை BMI வைத்து கணக்கிடலாம்.

10-14 வயதில் BMI குறைவாக, அல்லது மிகக் குறைவாக உள்ளவர்கள் சதவிகிதம்

தமிழ்நாடு - 21.6 சதவிகிதம்

இந்தியா - 27.4 சதவிகிதம்

15-19 வயதில் BMI குறைவாக, அல்லது மிகக் குறைவாக உள்ளவர்கள் சதவிகிதம்

தமிழ்நாடு - 18.1 சதவிகிதம்

இந்தியா - 20.0 சதவிகிதம்

10-19 வயதில் BMI குறைவாக, அல்லது மிகக் குறைவாக உள்ளவர்கள் சதவிகிதம்

தமிழ்நாடு - 20.0 சதவிகிதம்

இந்தியா - 24.1 சதவிகிதம்

இந்தத் தரவுகள் பள்ளி செல்லும் பருவத்தில் உள்ள தமிழ்நாட்டு குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை இந்திய அளவை விட சிறப்பாக இருப்பதை நமக்குக் காட்டுகின்றன.

### 3. இரத்த சோகை

இரும்புச்சத்து குறைபாடால் ஏற்படுவது இரத்தசோகை நோய். நுண் ஊட்டச்சத்து (Micronutrients) குறைபாடின் ஒரு வகை இந்த இரத்தசோகை.

5-9 வயது குழந்தைகளில் இரத்தசோகை உடையவர்கள்

தமிழ்நாடு - 10.4 சதவிகிதம்

இந்தியா - 23.5 சதவிகிதம்

10-19 வயது குழந்தைகளில் இரத்தசோகை உடையவர்கள்

தமிழ்நாடு - 16.4 சதவிகிதம்

இந்தியா - 28.4 சதவிகிதம்

### 4. வைட்டமின் B12 குறைபாடு

உணவில் இருந்து கிடைக்கக் கூடிய மிக முக்கிய வைட்டமின் இது. உடலுக்கு அத்தியாவசியமான வைட்டமின்களில் ஒன்று.

10-19 வயதில் வைட்டமின் B12 குறைபாடு இருப்பவர்கள்

தமிழ்நாடு - 18.9 சதவிகிதம்

இந்தியா - 30.9 சதவிகிதம்

இவற்றை வைத்துப் பார்க்கும் போது நுண் ஊட்டச்சத்து குறைபாடை களைவதிலும் தமிழ்நாடு சிறப்பாக இருப்பதை நம்மால் காண முடிகிறது.

1989ஆம் ஆண்டு அப்போதைய தமிழ்நாட்டு முதல்வர் கலைஞர் அவர்களால் சத்துணவுத் திட்டத்தில் முட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. குழந்தைகளின் புரதச்சத்து குறைபாடை நீக்குவதில் முட்டை முக்கிய பங்கு வகிக்கிறது. முட்டையில் நிறைய வைட்டமின்களும் இருப்பதால் நுண் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கும் தீர்வாக அமைகிறது. ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் சிகிச்சையிலும், ஊட்டச்சத்துக் குறைபாடை தடுப்பதிலும் முட்டையின் பங்கு இன்றியமையாதது.

இதை மனதில் வைத்துக் கொண்டு கீழ்க்கண்ட தரவுகளைப் படிக்கவும்.

5-9 வயதுடைய குழந்தைகளில் குறைந்தபட்சம் வாரம் ஒருமுறையாவது முட்டை உண்பவர்கள்:

தமிழ்நாடு - 84.6 சதவிகிதம்

பீகார் - 17.3 சதவிகிதம்

உத்திரபிரதேசம் - 15.2 சதவிகிதம்

பள்ளி செல்லும் குழந்தைகளில் முட்டை எடுத்துக் கொள்பவர்களின் விழுக்காட்டில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. உத்திரபிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களின் விழுக்காட்டுடன் ஒப்பிட்டால் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருப்பது தெரியவருகிறது.

இவற்றைப் போன்றே பல தரவுகள் உள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டுமே இங்கு பகிர்ந்துள்ளேன்.

வளரிளம் பருவத்தில் கிடைக்கும் நல்ல ஊட்டச்சத்து, அக்குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கிறது? நீண்ட கால நோக்கில் இதன் வெற்றி என்ன?

இதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்கலாம்.

### 1. மகப்பேறின் போதான தாய்மார்களின் இறப்பு விகிதம்

மகப்பேறின் போதான தாய்மார்களின் இறப்புவிகிதம் அதிகரிப்பதற்கு இரத்தசோகை முக்கிய காரணம். இந்திய சமூகத்தில் இள வயதில் கருத்தரிக்கும் பெண்களின் இரத்தசோகைக்கு முக்கிய காரணமாக அவர்களுக்கு வளரிளம் பருவத்தில் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடு அமைகிறது.

அதாவது ஒரு சமூகத்தில் வளரிளம் பருவப் பெண்களிடம் ஊட்டச்சத்து குறைபாடு இருந்தால், அங்கு மகப்பேறின் போதான இறப்புவிகிதம் அதிகமாக இருக்கும் என்று கூறலாம்.

மகப்பேறின் போதான இறப்பு விகிதம்

(Maternal Mortality Ratio - MMR) (ஒரு லட்சம் பிறப்புகளுக்கு)

தமிழ்நாடு - 58

இந்தியா - 103

பீகார் - 130

உத்திரபிரதேசம் - 167

(Source : MoHFW press release on 14.03.2022, press release id - 1805731)

அதாவது உத்திரபிரதேச மாநிலத்தில் ஒரு இலட்சம் பிரசவங்கள் நிகழ்ந்தால் அதில் 167 தாய்மார்கள் இறக்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பிரசவங்களில் 58 தாய்மார்களுக்கு இறப்பு நேரும் வாய்ப்பு உள்ளது. தேசிய சராசரி இறப்புகளை விட தமிழ்நாட்டு சராசரி குறைவாக இருக்கப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் வளரிளம் பருவத்தில் இரத்தசோகை ஏற்படாமல் தடுத்தது மிக முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது நம் மதிய உணவுத் திட்டத்தின் மறுக்கமுடியாத பலன் ஆகும்.

## 2. சராசரி ஆயுட்காலம்

சிறுவயதில் இருந்தே ஊட்டச்சத்து நன்றாக இருந்தால் அவர்களது ஆயுட்காலமும் நன்றாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

சராசரி ஆயுட்காலம்

தமிழ்நாடு - 71.7 ஆண்டுகள்

இந்தியா - 69 ஆண்டுகள்

பீகார் - 68.9 ஆண்டுகள்

உத்திரபிரதேசம் - 65 ஆண்டுகள்

(Source : MoHFW press release on 13.03.2020, ID - 1606209)

மேற்கூறிய அனைத்துத் தரவுகளையும் வைத்து மறுபடி ஒருமுறை சிந்தித்துப் பார்ப்போம். இப்போது நாம் கட்டுரையின் முதல் பகுதியில் எழுப்பிய கேள்விகளுக்கு விடைகள் கிடைக்கும்.

மதிய உணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு போதுமான ஊட்டச்சத்து கிடைக்கிறதா?

ஆம். இதை முட்டை உணவின் தரவுகள் மூலம் அறியமுடிகிறது.

மதிய உணவுத் திட்டத்தின் முதன்மை நோக்கமான "ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல்" நிகழ்ந்துள்ளதா?

ஆம். இந்திய சராசரியை விட, மற்ற மாநில சராசரிகளை விட, தமிழ்நாடு ஊட்டச்சத்துக் குறைபாட்டை களைவதில் பலமடங்கு மேம்பட்டுள்ளது. இவற்றை உயரத்திற்கான எடை, BMI, இரத்தசோகை பரவல் போன்றவற்றின் மூலம் அறியமுடிகிறது.

மதிய உணவுத்திட்டம் ஊட்டச்சத்துக் குறைபாடால் ஏற்படும் நீண்டகால பாதிப்புகளை தடுத்துள்ளதா?

ஆம். அதை மகப்பேறு இறப்பு விகிதம், சராசரி ஆயுட்காலம் போன்றவற்றின் மூலம் அறியமுடிகிறது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது வெறும் பழந்தமிழ் வாக்கு மட்டுமன்று. சிறுவயதில் கிடைக்கும் ஊட்டச்சத்தான உணவு உண்மையிலேயே உயிரை வளர்க்கிறது என்பதை மருத்துவப் பார்வையில் மதிய உணவுத்திட்டத்தை நாம் பார்க்கும் போது நம்மால் அறியமுடிகிறது

# இனி பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின்**
**அவர்கள்**

எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதைப் போன்ற உற்சாகம் வேறு நிகழ்ச்சிகளில் நிச்சயமாக அமைவது இல்லை. நான் நீண்ட நேரம் உங்களிடத்திலே உரையாற்ற முடியாத சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கிறேன்.

நான் பேசுகின்ற பேச்சிலேயே உங்களுக்குத் தெரியும், தொண்டை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தாலும், தொண்டில் பாதிப்பு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான்எ ன்னுடைய பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறேன் தவிர வேறு அல்ல. குழந்தையின் புன்சிரிப்பு தரும் புத்துணர்ச்சியும் பிள்ளைச் செல்வங்களின் பேச்சு தரும் உற்சாகமும் - மருந்து மாத்திரைகளை விட வலிமையானவை.



கடந்த வாரம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நான் - அதிலிருந்து சிறிது குணமடைந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும், உடல் சோர்வு என்பது சற்று இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் உங்களையெல்லாம் பார்க்கும்போது அதெல்லாம் பறந்து போய்விடுகிறது, முழு நலம் பெற்றதாக நான் உணர்கிறேன்.

இந்த மேடைக்கு நான் வருவதற்கு முன்னால் ஒரு வகுப்பறைக்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களோடு கலந்து பேசினேன். ஐந்தாறு மாணவியர்களிடத்தில் நான் சில கேள்விகளைக் கேட்டேன். அப்படிக் கேட்கிறபோது, நீங்கள் எந்தப் பகுதியிலிருந்து வருகிறீர்கள்? எப்படி வருகிறீர்கள், காலையில் உணவு சாப்பிட்டீர்களா? என்று 5 பேர்களிடத்தில் கேட்டேன். 5 பேர்களில் 3 பேர் காலையில் சாப்பிடாமல் வந்தார்கள் என்ற செய்தியைச் சொன்னார்கள். இதுதான் உண்மை. இது தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றபோது, பலமுறை சாப்பிடாமல் பள்ளிக்குப் போயிருக்கிறேன். ஏனென்றால், பஸ் பிடிக்க வேண்டுமென்பதால், அது ஒரு சூழ்நிலை. இது நகரப்பகுதி, ஆனால், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை எண்ணிப் பார்க்கிறபோது, எந்த அளவுக்கு அவர்கள் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளமுடியும்.

பெரும்பாலான பிள்ளைகள் காலையில் புறப்படும்போது சாப்பிடாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுவும் நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், காலையில் மட்டும் சாப்பிடாமல் இருக்கவே கூடாது.

காலையில்தான் அதிகமாகச் சாப்பிடவேண்டும். மதியம் அதைவிடக் கொஞ்சம் குறைவாகவும், இரவில் இன்னும் கொஞ்சம் குறைவாகவும் சாப்பிட வேண்டும் என்று டாக்டருடைய அறிவுரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எல்லாம் எப்படி நடக்கிறது என்றால், காலையில் குறைவாகவும், இரவு நேரத்தில் அதிகமாகவும், சாப்பிடுகின்ற வழக்கத்தை வைத்திருக்கிறார்கள். அது மாதிரி இருக்கக் கூடாது. அதிலும் கட்டாயமாக, உறுதியாகக் காலை உணவை யாரும் தவறவிடக் கூடாது.

அதிகாலையில் அவசர அவசரமாக நீங்கள் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பி வரவேண்டிய சூழல் இருப்பதை மனதில் வைத்து அதிலும் குறிப்பாக, 1வது முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்கும் அரசுப் பள்ளி பிள்ளைகளுக்குக் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நம்முடைய தமிழ்நாடு அரசு தொடங்கப்போகிறது.

திராவிட இயக்கத்தின் தாய்க் கட்சியான நீதிக்கட்சித் தலைவராக இருந்த சர்.பி.தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில்தான் முதன்முதலாக மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். அதுவும் ஆயிரம் விளக்கில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. என்னை முதன்முதலாகத் தேர்ந்தெடுத்த தொகுதி ஆயிரம் விளக்குத் தொகுதிதான்.

வெள்ளுடை வேந்தர் தியாகராயர், பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த திட்டமானது இன்றைய அரசால் அடுத்த வளர்ச்சியை அடையப் போகின்றது. மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியை நாம் வழங்கப் போகிறோம். மாணவர்களாகிய நீங்கள் தன்னம்பிக்கையை முதலில் பெற்றாக வேண்டும். இந்த தன்னம்பிக்கை மட்டும் வந்துவிட்டால் போதும்! படிப்பு தானாகவே வந்துவிடும். அத்தகைய தன்னம்பிக்கையை ஊட்டுவதற்காகத்தான் இந்த பயிற்சி முகாம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மன நலன் - உடல் நலன் - ஆகிய இரண்டும் சரியாக இருந்தால் அனைத்து நலன்களும் சிறப்பாக இருக்கும். எப்போதும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சோர்வாக இருக்கக் கூடாது. சோம்பேறித்தனம்தான் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடை! எதையும் நாளைக்குப் பார்த்துக்கலாம், நாளைக்கு படிச்சிக்கலாம், நாளைக்கு எழுதிக்கலாம் என்று தள்ளிப் போடாதீங்க. வாழ்வில் எதையும் சுறுசுறுப்பாக எதிர்கொள்ளக்கூடிய அந்த உணர்வு உங்களுக்கு வந்தாக வேண்டும். அதற்கு உங்கள் உடல் நலத்தை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும், பார்த்துக் கொள்ளவேண்டும்.

நல்ல உடற்பயிற்சியும், நல்ல எண்ணங்களும்தான் இதற்கு அடிப்படையாக அமையும். மிகச் சிறப்பான பள்ளி உங்களுக்கு அமைந்துள்ளது. இந்தப் பள்ளிக்கு ஒரு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் பள்ளி என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்களால் 1962-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளி என்பது பாராட்டுக்குரிய ஒன்று. அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆக, இந்த பள்ளியில் ஏறக்குறைய நாலாயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள்.

அட்மிஷன் முதல் நாள் அன்றே ஹவுஸ் புல் போடக்கூடிய பள்ளியாக இந்த பள்ளி விளங்கிக் கொண்டு இருக்கிறது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட பெயர் பெற்ற பள்ளிதான் இந்த அசோக் நகர் பள்ளி. திறமையான ஆசிரியர்கள் நிறைப் பேர் இருக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன வேண்டும்? என்ன கவலை இருக்கிறது? படிப்பைத் தவிர மற்ற வீண் சிந்தனைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டாம்.

நன்றாகச் சாப்பிடுங்கள், நன்றாக உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள், நன்றாகச் படியுங்கள், இந்த மூன்றும்தான் நான் உங்களுக்குச் சொல்வது. இப்படி சொல்கிறேன் என்றால் நான் முதலமைச்சர் என்ற அதிகாரத்தில் இருந்து சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். உங்கள் அப்பாவாக, அம்மாவாக உங்களுடைய பெற்றோரில் ஒருவனாக இருந்து இந்த வேண்டுகோளை இங்கே இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்கள், பாடங்கள் நடத்தும் கூடங்களாக மட்டுமில்லாமல் அறிவு - ஆற்றல் - மனம் - உடல் ஆகிய அனைத்தையும் வளப்படுத்த வேண்டும். பாதி பெற்றோர்களாக, ஆசிரியர்களும் - பாதி ஆசிரியர்களாக, பெற்றோர்களும் செயல்படவேண்டும். கல்விக் கூடங்கள் மதிப்பெண் கூடங்களாக இல்லாமல், மதிப்புயர் கூடங்களாக அவை மாறவேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய திராவிட மாடல் அரசு நடந்து கொண்டிருக்கிறது. எல்லோரும் எல்லாவற்றையும் அடைவதற்கு அனைவரும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றாகவேண்டும்.

எனது மாணவக் கண்மணிகள் முகத்தில் நான் உற்சாகத்தைப் பார்க்கிறேன். மகிழ்ச்சியைப் பார்க்கிறேன். மலர்ச்சியைப் பார்க்கிறேன். வானம் தொட்டு விடும் தூரம்தான். உங்களால் முடியும், உங்களால் மட்டுமே முடியும். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

"சத்துணவில் முட்டை சாப்பிடாத
குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும்
திட்டத்தை, சென்னை, ஆயிரம் விளக்கில்
15.07.2008 அன்று நடைபெற்ற
காமராஜர் பிறந்தநாள் - கல்வி வளர்ச்சி நாள் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
தொடங்கி வைத்தார்."

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான அரசாணை

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண். 110-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு - அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவுத் திட்டத்தை முதற்கட்டமாக செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சுருக்கம்

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண். 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்குதல் – முதற்கட்டமாக செயல்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண்.43 நாள். 27.07.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது ஆடி 11

படிக்கப்பட்டவை:–

1 சென்னை மாநகராட்சியின் 16–09–1920 நாளிட்ட தீர்மானம்.
2 அரசாணை எண்.1008, Local Self – Government Department, நாள். 07–06–1922.
3 அரசாணை எண்.1850, கல்வித் துறை, நாள் 8.11.1957.
4 அரசாணை (நிலை) எண்.857, பொதுத் (TPEP) துறை, நாள். 28.05.1982.
5 அரசாணை (நிலை) எண்.499, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள். 26.05.1989.
6 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசாணை (நிலை) எண்கள். 73, 95, 47, 50, 51, 60, 69, 85 மற்றும் 176 நாள். 27–04–1998, 16–06–2004, 13–05–2006, 19–05–2006, 24–04–2007, 24–05–2006, 11–05–2007, 14–07–2008 மற்றும் 17–09–2010.

மேலும் படிக்கப்பட்டவை:

7 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், வெளியிட்ட அறிவிப்பு நாள். 07–05–2022.
8 சமூக நல இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண். 17570/ 2021/மஉதி–2/ நாள். 07.07.2022

------

த.பி.பா.

2

<u>ஆணை</u>:-

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே"
(புறநானூறு 173)

சங்க காலத்தைச் சேர்ந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால் பசிப்பிணியைப் போக்கிய மருத்துவராகப் போற்றப்படுகிறார். அம்மரபின் தொடர்ச்சியாகவே, தமிழ்ச் சமூகத்தை வழிநடத்திய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையை அகற்றிடவும், மாணவர்களின் கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளனர்.

2. தொன்றுதொட்டு நிலவும் சமூகச் சிக்கலுடன் வறுமையும் இணைவதால் ஏழை, எளிய சமூகக் குழந்தைகளின் காலடிகள் கல்விச்சாலையை எட்ட முடியவில்லை என்பதைக் கருத்திற் கொண்டு, ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பள்ளியில் உணவளிக்கும் திட்டத்தை முன்மொழிந்து நிறைவேற்றியது அப்போதைய சென்னை மாநகராட்சி நிர்வாகம்.

3. சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர். பிட்டி தியாகராயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், இந்தியாவிலேயே முதன்முதலாக 16.09.1920 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மதிய உணவுத் திட்டம், சென்னை, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

4. ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ஓர் அணாவிற்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளப்படும் வகையில், ஆயிரம் விளக்கு பகுதியில் அமைந்த பள்ளியில் தொடங்கப்பட்ட இத்திட்டம், பின்னர் சேத்துப்பட்டு, மீர்சாகிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இயங்கிய மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவாக்கப்பட்டது. இதன் பயனாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஐந்து பள்ளிகளின் ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை 1922–23–ஆம் ஆண்டு 811 –லிருந்து 1925–26ஆம் ஆண்டில் 1,671 ஆக உயர்ந்தது.

5.அதன் பின்னர், 1957ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்களால் தொடக்கக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ரூ.18/–க்கு மிகாமல், இத்திட்டத்தைச் செயல்படுத்திட பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3

6. அதன் பின்னர், முன்னாள் முதலமைச்சர் திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள், ஜுலை 1982 முதல், 2 முதல் 5 வயது வரையுள்ள முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயது வரையுள்ள தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியருக்கும் சத்துணவு வழங்கப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பாப்பாகுறிச்சியில் 01.07.1982 அன்று முதல் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

7. சத்துணவுத் திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட, 1989–ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், சத்துணவுடன் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப்படுத்தினார். 23.7.1998 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்ட முட்டை இனி வாரந்தோறும் ஒரு முறை வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

8. மேலும், முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களால் 2006–ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜுலை 15–ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாளாகக்" கொண்டாடிட ஆணையிடப்பட்டு, அந்நாளில், சத்துணவுடன் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டை வழங்கும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கான செலவினமாக ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், கல்வி வளர்ச்சி நாளான 15.07.2007–இல், 165 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டமும், 15.07.2008 முதல் சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வாழைப்பழங்கள் வழங்கும் திட்டமும், பின்னர், ரூ.125.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சத்துணவுடன் வாரம் 5 முறை முட்டைகள் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவு திட்டம் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

9. வாஷிங்டன் பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் பொருளாதார வல்லுநர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் அறிக்கையில், 2006–2016 காலக்கட்டத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் (Z–scores) 13 முதல் 32 சதவிகிதம் வரை உயர்ந்திருப்பதற்கு, சத்துணவுத் திட்டம் ஒரு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மூன்றில் ஒரு குழந்தை வளர்ச்சி குறைவாகவோ அல்லது அவர்களின் வயதுக்கேற்ற உயரத்தை அடையாமலோ இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் தொடர்ச்சியான ஊட்டச் சத்துக் குறைபாடே ஆகும். அதே போன்று தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் பயிலும் சில குழந்தைகள் தற்போதும் வயதுக்கேற்ற உயரத்தினை அடையாமல், அவர்களின் வளர்ச்சி தடைபடுவது தெரியவருகிறது. மேலும்

4

ஊட்டச்சத்து குறைபாட்டினால் அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த இயலாமல் போய்விடும் வாய்ப்பும் இருக்கிறது.

10. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 7.5.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

*"அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இனிமேல் காலைச் சிற்றுண்டி வழங்கப்படும். நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும், பள்ளிக்குச் செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். இதனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வழங்குவோம், படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்".*

11. மேற்காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு சமூக நல இயக்குநர் அவர்கள், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ மாணவியருக்கு சூடான சமைத்த, சத்தான மற்றும் சுவையான காலை உணவினை வழங்குவதற்கான கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

12. சமூக நல இயக்குநர் அவர்கள், இத்திட்டம் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களினால் முறையே பெருநகர சென்னை மாநகராட்சி, ஏனைய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக செயல்படுத்துவதற்குரிய பொறுப்புகள் அனைத்தும் இத்திட்டத்தினை செயல்படுத்தும்

முகமைத் துறைகளான மேற்கண்ட துறைகளைச் சார்ந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

13. மேலும், சமூக நல இயக்குநர் அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கு முதற்கட்டமாகக் காலை உணவு வழங்கும் திட்டத்தை ரூ.33.56 கோடி செலவினத்தில் செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

14. மேற்கண்ட சமூக நல இயக்குநர் அவர்களின், கருத்துருவினை அரசு விரிவாகப் பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணைகளை வெளியிடுகிறது:–

i. மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும், இவ்வாணையின் இணைப்பு–1இல் குறிப்பிடப்பட்டுள்ள 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை 2022–2023–ஆம் ஆண்டில் முதற்கட்டமாகச் செயல்படுத்திட, ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்து ஆறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

ii. திட்டத்தின் நோக்கம், சிற்றுண்டியின் வகைகள், பொதுவான நடைமுறைகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையின் இணைப்பு–2–இல் வெளியிடப்படுகிறது.

iii. இவ்வாணையின் இணைப்பு–2–இல் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றுண்டி வகைகளிலிருந்து ஏதாவது ஒரு சிற்றுண்டியினை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது இரண்டு நாட்களிலாவது, இயன்ற அளவு, அந்தந்தப் பகுதிகளில் விளையும்/கிடைக்கும் சிறுதானியங்களின் அடிப்படையிலான சிற்றுண்டியினைத் தயார் செய்து வழங்கப்படவேண்டும்.

iv. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் இவ்வாணையின் இணைப்பு–1ல் குறிப்பிடப்பட்டுள்ள, முறையே, பெருநகர சென்னை மாநகராட்சி, ஏனைய மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும்

6

தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை இவ்வாணையின் இணைப்பு 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது. அரசு அனுமதித்துள்ள ஒரு வேளை காலை உணவுச் செலவான ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சம் மட்டும்) அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். திட்டச் செயல்பாட்டின் போது கூடுதல் செலவினம் ஏற்படின் அது குறித்து தனியே முடிவு செய்யப்படும், மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 1,545 பள்ளிகளின் விவரங்களை மேற்கண்ட துறைகளுக்குத் தெரிவிக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

v. காலை உணவு வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.33.56 கோடி (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சம் மட்டும் ) தொகையினில் ரூ.31.91 கோடி (ரூபாய் முப்பத்து ஒன்று கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம் மட்டும்) பெற்று, அதில் ரூ.1.66 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சம் மட்டும்) சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், ரூ.15.43 கோடி (ரூபாய் பதினைந்து கோடியே நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் மற்றும் ரூ.14.82 கோடி (ரூபாய் பதினான்கு கோடியே எண்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநருக்கும் பகிர்ந்து அளிப்பதற்கும், திட்டத்திற்கான நிர்வாக செலவினம் மற்றும் மதிப்பீட்டு ஆய்வுகளை உரிய தருணங்களில் மேற்கொண்டு ஆவணப்படுத்த ரூ.1.65 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

vi. நாட்டிலேயே முன்னோடியாக அறிமுகப்படுத்தப்படும் இத்திட்டம், **"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"** என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.

vii. மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்களை இவ்வாணையின் இணைப்பு–2இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் அலுவலர்களைக் கொண்டு அமைப்பதற்குச் சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7

viii. திட்டச் செயல்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில், இனிவரும் ஆண்டுகளில் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

15. மேலே பத்தி 14(i)–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் புதிய கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

2236–சத்துணவு 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102–மதிய உணவு– மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல்.

| | |
|---|---|
| 309–உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை<br>(IFHRMS ததொகு : 2236 02 102 BG 30903) | ரூ. 31,91,00,000/– |
| 333 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 03–சிறப்புப்பணி<br>(IFHRMS ததொகு : 2236 02 102 BG 33303) | ரூ. 1,65,00,000/– |
| மொத்தம் | ரூ. 33,56,00,000/– |

16. மேலே பத்தி 14(i)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன் பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வசெபொ–I)த் துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்குத் தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள், 1963–இல் உள்ள அட்டவணை–A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வசெபொ–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022–23–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குத் தவறாது உரிய நேரத்தில், நிதித் (வ.செ.பொது–I)/(சந))த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

17. மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பிற்கு சமூகநல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

18. மேற்படி துவங்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பினை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுகொள்ளப்படுகிறார்.

19. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 37575 /நிதி (சந)/2022, நாள். 25.07.2022–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0805 (எண்ணூற்று ஐந்து) (IFHRMS ASL No.2022070805).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ. இறையன்பு**
**தலைமைச் செயலாளர்**

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நல இயக்குநர், சென்னை–15.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை–28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,சென்னை–34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.

9

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சந/வசெபொ–I,II, வ.வ–I) த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

27/7/2022
அரசு சார்பு செயலாளர்

11

## இணைப்பு-1

**அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 27-07-2022**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

**காலை உணவு வழங்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள தொடக்கப் பள்ளிகள்/ பயனாளிகளின் விவரம் ( 1 முதல் 5ஆம் வகுப்பு வரை)**

**I. சென்னை மாநகராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவ / மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 36 | 5,941 |

**II. மற்ற மாநகராட்சிகள்**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | 40 | 2928 |
| 2 | காஞ்சிபுரம் | 20 | 1892 |
| 3 | கடலூர் | 15 | 630 |
| 4 | தஞ்சாவூர் (ம) கும்பகோணம் | 21 | 1442 |
| 5 | வேலூர் | 48 | 3432 |
| 6 | திருவள்ளூர் | 6 | 1152 |
| 7 | தூத்துக்குடி | 8 | 817 |
| 8 | மதுரை | 26 | 4607 |
| 9 | சேலம் | 54 | 5719 |
| 10 | திண்டுக்கல் | 14 | 1223 |
| 11 | திருநெல்வேலி | 22 | 2658 |
| 12 | ஈரோடு | 26 | 2649 |
| 13 | கன்னியாகுமரி | 19 | 973 |
| 14 | கோயம்புத்தூர் | 62 | 7618 |
| | மொத்தம் | 381 | 37,740 |

12

III. நகராட்சி

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | நகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | விழுப்புரம் | 13 | 1382 |
| 2 | | திண்டிவனம் | 6 | 355 |
| 3 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 8 | 1388 |
| 4 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 3 | 118 |
| 5 | செங்கல்பட்டு | காட்டாங்கொளத்தூர் | 8 | 969 |
| 6 | | கூடுவாஞ்சேரி | 2 | 644 |
| 7 | நாமக்கல் | நாமக்கல் | 3 | 989 |
| 8 | | திருச்செங்கோடு | 7 | 484 |
| 9 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 17 | 1652 |
| 10 | | திருவத்திபுரம் (செய்யாறு) | 7 | 607 |
| 11 | அரியலூர் | ஜெயங்கொண்டம் | 9 | 464 |
| 12 | ராணிப்பேட்டை | ஆற்காடு | 6 | 1704 |
| 13 | திருப்பத்தூர் | ஆம்பூர் | 6 | 644 |
| 14 | | வாணியம்பாடி | 5 | 467 |
| 15 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | 11 | 431 |
| 16 | | சீர்காழி | 9 | 297 |
| 17 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 11 | 615 |
| 18 | இராமநாதபுரம் | பரமக்குடி | 7 | 956 |
| 19 | சிவகங்கை | காரைக்குடி | 7 | 839 |
| 20 | தூத்துக்குடி | கோவில் பட்டி | 2 | 306 |
| 21 | திருவாரூர் | மன்னார்குடி | 4 | 267 |
| 22 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 9 | 1119 |
| 23 | | மதுக்கரை | 3 | 730 |
| மொத்தம் | | | 163 | 17,427 |

**IV. வட்டாரங்கள்/ கிராம ஊராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | சூளகிரி | 133 | 10302 |
| 2 | தருமபுரி | பாலக்கோடு | 112 | 8404 |
| 3 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | 77 | 4163 |
| 4 | தூத்துக்குடி | விளாத்திகுளம் | 56 | 2350 |
| 5 | திருப்பூர் | குண்டடம் | 77 | 1746 |
| 6 | சிவகங்கை | எஸ். புதூர் | 47 | 2812 |
| 7 | தேனி | மயிலாடும்பாறை | 51 | 3978 |
| 8 | விருதுநகர் | காரியாபட்டி | 69 | 3884 |
| 9 | திருச்சிராப்பள்ளி | துறையூர் | 41 | 2705 |
| 10 | தென்காசி | மேலநீலிதநல்லூர் | 29 | 1331 |
| 11 | | குருவிகுளம் | 36 | 1151 |
| | மொத்தம் | | 728 | 42826 |

**V. மலைப்பகுதி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை | 15 | 984 |
| 2 | நாமக்கல் | கொல்லிமலை | 41 | 1710 |
| 3 | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை | 46 | 1981 |
| 4 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 34 | 1105 |
| 5 | ஈரோடு | தாளவாடி | 38 | 806 |
| 6 | நீலகிரி | கூடலூர் | 63 | 3575 |
| | மொத்தம் | | 237 | 10161 |

14

<u>தொகுப்பு</u>

| வ. எண் | விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மாநகராட்சி மையங்கள் | 417 | 43681 |
| 2 | நகராட்சி மையங்கள் | 163 | 17427 |
| 3 | வட்டாரங்கள் | 728 | 42826 |
| 4 | தொலைதூரம் / மலைப்பிரதேசம் | 237 | 10161 |
| மொத்தம் | | 1,545 | 1,14,095 |

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

27.7.2022
அரசு சார்பு செயலாளர்

–15–

## இணைப்பு–2

**அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 27-07-2022**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

**வழிகாட்டு நெறிமுறைகள்**

**தொடக்கப் பள்ளி மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்குதல்**

**( 1 முதல் 5ஆம் வகுப்பு வரை)**

**I . குறிக்கோள்கள் :**

- மாணவ/ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்
- மாணவ / மாணவியர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தலை உறுதி செய்தல்,
- மாணவ / மாணவியரின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், குறிப்பாக இரத்த சோகை குறைபாட்டினை நீக்குதல்
- பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் வருகையை அதிகரித்தல் / தக்க வைத்துக் கொள்ளுதல்
- வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல்

**II. காலை உணவு வகைகள் :**

பின்வரும் பல்வேறு விதமான சிற்றுண்டி வகைகளில் ஏதேனும் ஒன்றை குறிப்பிட்டுள்ள நாட்களில் வழங்க வேண்டும்.

| திங்கட்கிழமை–உப்புமா வகை | செவ்வாய்கிழமை–கிச்சடி வகை | புதன்கிழமை–பொங்கல் வகை |
|---|---|---|
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | ரவா காய்கறி கிச்சடி | ரவா பொங்கல்+ காய்கறி சாம்பார் |
| சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் | சேமியா காய்கறி கிச்சடி | வெண்பொங்கல் + காய்கறி சாம்பார் |
| அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் | சோள காய்கறி கிச்சடி | |
| கோதுமைரவா உப்புமா+ காய்கறி சாம்பார் | கோதுமை ரவாகாய்கறி கிச்சடி | |

| வியாழக்கிழமை –உப்புமா வகை | வெள்ளிக்கிழமை – கிச்சடியுடன் இனிப்பு |
|---|---|
| சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் | ஏதாவது ஒரு கிச்சடி வகையுடன் (செவ்வாய்கிழமை உணவு வகையின்படி) |
| அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் | ரவா கேசரி |
| ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | சேமியா கேசரி |
| கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் | |

ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி / ரவை/கோதுமை ரவை / சேமியா / உள்ளூரில் / அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / மற்றும் சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக் கூடிய காய்கறிகள் (சமைத்த பின் 150 – 200 கிராம் உணவு மற்றும் 60 மி.கி காய்கறியுடன் கூடிய சாம்பார்) . ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவை வழங்கலாம்.

III. பொதுவான வழிமுறைகள்:

- காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் தரம் FSSAI நெறிமுறைகளுக்கு உகந்தவாறு இருக்க வேண்டும்.
- நகரப்புறப் பகுதிகளில், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மையப்படுத்தப்பட்ட சமையலறை அல்லது வேறு ஏதேனும் தகுதி வாய்ந்த அமைப்பின் மூலம் தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப்படுத்த வேண்டும், ஊரக பகுதிகளில் கிராம ஊராட்சி மற்றும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் மூலம் தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப்படுத்த வேண்டும்,
- காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப் பொருட்கள் (Extraneous substance) கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும்,
- உள்ளூரில் சமைக்க பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தபட வேண்டும், ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக் கூடாது,
- உணவு சமைக்க பயன்படுத்தப்படும் மசாலா பொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்,
- காய்கறிகளின் தரத்தை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்பட வேண்டும்,
- தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்த்தல் வேண்டும்.
- உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் அவ்வப்போது பள்ளிகளை ஆய்வு செய்து உணவின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும்,
- உணவு தயாரிக்கப்படும் இடத்தை தேர்வு செய்து, அந்த குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே உணவு தயாரிக்கப்பட வேண்டும்,
- உணவு தயாரித்தல் மற்றும் விநியோகிக்கும் பணிகளில் ஈடுபடும் சமையலர் மற்றும் உதவியாளர்கள் தன் சுத்தத்தை பராமரித்தல் வேண்டும்,

## IV. கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு

### கண்காணிப்புக் குழுக்கள்

காலை உணவு வழங்கும் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு கீழ்கண்ட துறை அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

- சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை
- ஊரக வளர்ச்சி,
- நகர்ப்புற நிர்வாகம்
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
- பள்ளிக் கல்வி
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்
- உணவுப் பாதுகாப்பு

## V. மதிப்பீடு

திட்டம் செம்மையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்ய ஏதுவாக அடிப்படை மற்றும் இறுதி நிலை ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையினால் தகுதி வாய்ந்த வெளி முகமை நிறுவனங்களின் வாயிலாக இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

22/7/2022
அரசு சார்பு செயலாளர்

# "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" தொடக்கம்

"நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை

பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்ட போதிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான கோப்பில் கையெழுத்திட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றும், பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்குவது, கற்றலை இனிமையாக்குவது என்ற நோக்கத்தில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும், ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகம் இல்லை என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான அரசாணையினை வெளியிட்ட நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

நாட்டிலேயே முன்னோடித் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

மாணவ, மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புர நிருவாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக்கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை ஆகிய துறைகளின் அலுவலர்களைக் கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டம் கண்காணிக்கப்படும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத் தொடக்க விழாவில், கோயம்புத்தூர், வடிவேலம்பாளையத்தில் கடந்த 30 ஆண்டு காலமாக ஏழை எளியவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கும் சமூக சேவகி திருமதி கமலாத்தாள் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு செய்தார்.

மேலும், தமிழ்நாட்டின் பள்ளிகளில் உணவு வழங்கப்படும் திட்டங்களின் ஒரு நூற்றாண்டு நிகழ்வுகளை, வரலாற்று சம்பவங்களை அரிய ஆவணங்களை தொகுத்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு பதிப்பகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள "ஒரு நூற்றாண்டின் கல்விப் புரட்சி" என்ற சிறப்பு மலரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, சமூகசேவகி திருமதி கமலாத்தாள் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

முன்னதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை, நெல்பேட்டையில் மைய சமையல் கூடத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, பள்ளிகளுக்கு காலை உணவு எடுத்துச் செல்லும் வாகனங்களை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

" தமிழ்நாட்டில் உள்ள
38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்தும்
வகையில் ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி
பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி
பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச
பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில்
தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள்
பயன்பெறுவார்கள். "

மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 15.09.2022

# குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்ய தயார்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

வாழ்விலே ஓர் பொன்னாள் என்று சொல்லத்தக்கக்கூடிய வகையில் இந்த நாள் அமைந்திருக்கிறது.

பசித்த வயிறுகளுக்கு உணவாக -

தவித்த வாய்க்குத் தண்ணீராக -

திக்கற்றவர்களுக்குத் திசைகாட்டியாக-

யாருமற்றவர்களுக்கு ஆறுதலாக- இருக்கப் போகும் கருணை வடிவான திட்டம்தான் இந்தக் காலை உணவு வழங்கும் திட்டம்!

பள்ளிக்குப் பசியோடு படிக்க வரும் பிள்ளைகளுக்கு முதலில் உணவு வழங்கிய பிறகு வகுப்பறைக்குச் செல்லக்கூடிய வசதியை நாம் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். தமிழ்நாடு இந்த ஆண்டு வரலாறு காணாத அளவு நெல் மற்றும் தானிய உற்பத்தியில் உச்சத்தைக் கண்டிருக்கிறது. மறுபுறம் யாரும் பசியால் வாடிடக் கூடாது என்பதற்காகத்தான் நெல்பேட்டை சமையற்கூடத்தில் தயாரான உணவு பிஞ்சுக் குழந்தைகளைத் தேடிப் பள்ளிகளுக்குச் செல்கின்றன.

இந்த சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களின் ஆதிமூலத்தை அறிந்து தீர்வுகள்

காணப்பட வேண்டும். அந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகத்தான் காலை உணவுத் திட்டத்தை ஆதிமூலம் தொடக்கப் பள்ளியில் இருந்து நாம் தொடங்கியிருக்கிறோம்.

இந்தப் பள்ளி அமைந்துள்ள இடத்தைப் நாம் பார்த்தோம் என்று சொன்னால், கீழ் அண்ணா தோப்பு. என்ன பொருத்தம் பாருங்கள்!! கீழ் அண்ணா தோப்பு.

பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்த்தெடுத்திருக்கக்கூடிய தம்பிகள் நாம். ஏழை மக்களுக்கு மலிவு விலையில் உணவு கிடைத்திட வேண்டும் என்ற முழக்கத்தை முதன்முதலில் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்த ஒரு மாபெரும் தலைவர் நம்முடைய பேரறிஞர் அண்ணா. அவருடைய பிறந்தநாளில், நெல்பேட்டையில் அமைந்திருக்கக்கூடிய அந்த உணவு கூடத்தில் நாங்கள் உள்ளே சென்று பார்ப்பதற்கு முன்னால் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, இன்றைக்கு இந்த மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்து இருக்கிறோம். அதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள் சொன்னதுபோல, 102 ஆண்டுகளுக்கு முன்னால், இதே செப்டம்பர் 16ஆம் நாள் நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவராக இருந்த சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை இயற்றினார். அதாவது, ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் காலை உணவுத் திட்டம் தொடங்கப்படுகிறது.

அன்று ஆயிரம் விளக்கில் தொடங்கிய திட்டம், தூங்கா நகரமாக இருக்கக்கூடிய இந்த மதுரையின் வைகை ஆற்றங்கரையில் அடுத்த பரிணாமத்தை அடைந்து விரிவடைந்திருக்கிறது.

பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் என்பது அமெரிக்காவில் US Department of Agriculture மூலம் பல மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல, ஐரோப்பா நாடுகளிலும், குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஃபிரான்ஸ் நாட்டிலும், காலை உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் காலை உணவு வழங்குவதால் அந்த நாட்டு மாணவர்கள் கற்றல் திறன் மேம்படுவதாகவும், மாணவர் வருகை அதிகரிப்பதாகவும், பல ஆய்வு முடிவுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு காலை உணவுத் திட்டத்தின் தேவை அதிகரித்துள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இப்போது, பிள்ளைகள் காலைச் சிற்றுண்டியைச் சாப்பிடும்போது அடையும் மகிழ்ச்சியை அவர்களது முகங்களில் நான் பார்த்தேன். அந்த தருணத்தில், நான் அடைந்த மகிழ்ச்சியைச் சொற்களால் வர்ணிக்கவே முடியாது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.09.2022 அன்று
மதுரை, ஆதிமூலம் மாநராட்சி தொடக்கப் பள்ளியில்
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை
மாணவர்களுக்கு உணவு பரிமாறி தொடங்கிவைத்தார்.

அவர்கள் சாப்பிடும்போது அதைப் பார்த்தேன். என்னுடைய மனம் நிறைந்தது. என்னுடைய இதயம் மகிழ்ச்சியில் திளைத்தது. ஏழை, எளியோர் வீட்டுப்பிள்ளைகள்- ஒடுக்கப்பட்ட குடும்பத்துப் பிள்ளைகள்– எதன் காரணமாகவும் பள்ளிக்குச் செல்வது தடைப்படக்கூடாது என்பதற்காகவே திராவிட இயக்கம் தொடங்கப்பட்டது.

அங்குதான் கடந்த நூற்றாண்டின் மாபெரும் இயக்கத்துக்கான விதை தூவப்பட்டது. அதற்காகவே சுயமரியாதை, சமூகநீதிக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. வகுப்புவாரி உரிமை எனும் இடஒதுக்கீடு தரப்பட்டது. வறுமையோ- சாதியோ எதுவும் ஒருவரது கல்விக்குத் தடையாக இருக்கக்கூடாது என்று தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் நினைத்தார்கள்.

அவர்கள் வழித்தடத்தில் வந்திருக்கக்கூடிய நான், அவர்களது கனவுகளை நிறைவேற்றும் இடத்துக்கு வந்து அதனை நான் செயல்படுத்திக்கொண்டு வருகிறேன். அதை நினைத்து நான் உள்ளபடியே, அளவிடமுடியாத மகிழ்ச்சிக்கு ஆளாகி இருக்கிறேன்.

இன்று நம்முடைய கையில் இருக்கின்ற ஆட்சியை காப்பியத்தில் வரக்கூடிய மணிமேகலை கையில் வைத்திருந்த அமுதசுரபி போல நினைத்து ஆட்சியைப் பயன்படுத்தி, எத்தகைய நிதிச்சுமை இருந்தாலும், இந்த பசிச் சுமையைப் போக்க நாம் முடிவெடுத்து இந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பசியால் வாடக்கூடாது என்று நினைக்கிறோம். அதனால்தான், இத்திட்டத்தை உடனடியாகத் தொடங்கி இருக்கிறோம். பள்ளிப் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் சேர்த்து உணவும் வழங்க வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்கத்தை முதலில் வெளிப்படுத்தினார் பண்டித அயோத்திதாசர் அவர்கள். அவரது பவுத்த சிந்தனையில் இது உதித்தது.

1900ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் சென்னை வட்டாரத்தில் உருவாகிய கர்னல் ஆல்காட் பள்ளிகளில் மதிய உணவு வழங்க வேண்டும் என்ற சிந்தனைக்கு வித்திட்டார் பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சியின் தலைவராக இருந்த வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள், சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபோது, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு 1922ஆம் ஆண்டு மதிய உணவை வழங்கினார்.

அந்த ஆயிரம் விளக்குதான் முதன்முதலாக நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதும் எனக்குக் கிடைத்த மகிழ்ச்சி!

இந்தியா விடுதலை அடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு நிதி நெருக்கடியைக் காரணமாகக் காட்டி ஆங்கிலேய அரசால் மதிய உணவுத் திட்டம்

நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு 1955ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

அப்போது பொதுக்கல்வி இயக்குநராக இருந்தவர் யார் என்று கேட்டீர்கள் என்றால், நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள்தான். அவர்தான் இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டார். சில அதிகாரிகள் கூட எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைக் கண்டித்து இருக்கிறார்கள். இதை எப்படி செயல்படுத்த முடியும் என்று எல்லாம் கேள்விகளை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த எதிர்ப்புகளை எல்லாம் மீறி அதனை செயல்படுத்திக் காட்டியவர் யார் என்று கேட்டீர்கள் என்றால், பெரியாரின் பெருந்தொண்டராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள்.

இத்தகைய மதிய உணவுத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து நடத்தியது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு. இதனை செழுமைப்படுத்தும் வகையில் கூடுதலாக ஊட்டச்சத்துத் திட்டத்தை 1971ஆம் ஆண்டு முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் கையில் எடுத்தார்கள்.

குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்து வழங்குவதை மாபெரும் இயக்கமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதை உருவாக்கித் தந்தார்கள்.

அந்தக் காலத்தில் பேபி ரொட்டி என்பதை குழந்தைகள் அனைவருக்கும் வழங்கியது நம்முடைய கலைஞரின் அரசு. 1975ஆம் ஆண்டு முழுமையாக மாநில அரசின் நிதியில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலம் முழுவதும் நடத்திக் காட்டினார்கள்.

இதனை மேலும் விரிவுபடுத்த பெருமுயற்சி எடுத்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அதிகப்படியான மையங்களை உருவாக்கி, சத்துணவுத் திட்டத்துக்குக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்தார் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதற்குப் பிறகு 1989ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொறுப்புக்கு வருகிறது. அப்போது தேர்தல் நேரத்தில் திட்டமிட்டு எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். என்னவென்றால், எம்.ஜி.ஆர். கொண்டுவந்த சத்துணவு திட்டத்தை கலைஞர் ஆட்சிக்கு வந்தால், நிறுத்திடுவார், அந்த சத்துணவுத் திட்டத்தை அழித்திடுவார், ஒழிச்சிடுவார் என்று திட்டமிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரமே நடந்தது. ஆனால் கலைஞர் 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். வந்தவுடனே சொன்னார், சத்துணவுத் திட்டத்தை நான் நிறுத்திடுவேன், நிறுத்திடுவேன் என்று சொன்னார்கள். ஆனால், உண்மையான சத்துணவை வழங்கப்போகிறேன் என்று சொல்லி, கலைஞர் அவர்கள் 1989இல் முதலில், வாரம்தோறும் ஒரு முட்டை, பின்னர் இரண்டு முட்டையும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

2007ஆம் ஆண்டு வாரத்துக்கு மூன்று முட்டை வழங்கினார். அத்துடன் கொண்டைக் கடலை, பச்சைப்பயிறு, வேகவைத்த உருளைக் கிழங்கு ஆகியவற்றையும் சேர்த்துக் கொடுத்தார்.

2010ஆம் ஆண்டு வாரம் ஐந்து நாட்களும், சனி, ஞாயிறு தவிர, முட்டை வழங்கிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். முட்டை சாப்பிடாதவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்து, வாழைப்பழமும் வழங்கினார்.

முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தனது ஆட்சிக்காலத்தில் கலவை சாதமாக வழங்க உத்தரவிட்டார்.

இதுவரை இருந்தவை அனைத்தும் மதிய உணவுத் திட்டங்கள். இப்போது நான் சொன்னவை எல்லாம், நான் சென்னையில் அடிக்கடி, நம்முடைய மாநகராட்சிப் பள்ளி, அரசுப் பள்ளிகளுக்கு ஆய்வு மேற்கொள்ளும்போது, ஒருமுறை ஒரு பள்ளிக்கு நான் சென்றேன். ஒரு நிகழ்ச்சிக்காக சென்றேன்.

அப்போது அங்கே இருக்கக்கூடிய பிள்ளைகளைப் பார்த்து, என்ன படிக்கிறீர்கள் என்று கேட்டு, ஏன் சோர்வாக இருக்கிறீர்கள் என்று கேட்டேன். சாப்பிடவில்லை என்று சாதாரணமாக கேட்டேன். வழக்கமாக கேட்கிறமாதிரி, காலையில் எப்போதும் நாங்கள் சாப்பிடுவதில்லை, அப்படியே பள்ளிக்கூடத்திற்கு வந்து விடுவோம் என்று சொன்னவுடன் எனக்கு அதிர்ச்சியாக போனது.

உடனே, நான் அதிகாரிகளை ஆலோசித்தபோது, நிறைய பிள்ளைகள் காலையிலேயே சாப்பிடாமல்தான் வருகிறார்கள் என்ற தகவலை அதிகாரிகள் சொன்னார்கள். அப்படியானால் காலை உணவுத் திட்டத்தை நாம் தொடங்கியாக வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன்.

பசியோடு பள்ளிக்கு வரக்கூடிய பிள்ளைகள் பட்டினியாக வைத்து அவர்களுக்கு பாடம் சொல்லித்தரக் கூடாது என்று நினைத்தேன்.

அந்த வரிசையில், இன்றைய நாள் காலை உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்படி நாள்தோறும் முதல்கட்டமாக 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட இருக்கிறது.

1,545 பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் முதல்கட்டமாக பயனடைய இருக்கிறார்கள்.

ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் 75 காசு செலவு செய்யப்பட இருக்கிறது. செலவு என்பதை நிருவாக மொழியில் சொல்கிறேன்.

உண்மையில் இது செலவு அல்ல, நமது அரசின் கடமை! இன்னும் சொன்னால் எனது கடமையாகவே நான் கருதுகிறேன். இந்த திட்டத்தை படிப்படியாக இன்னும் விரிவுபடுத்தி, முழுமையாக நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்வோம் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்.

இத்தகைய திட்டங்களை இலவசம் என்றோ, தர்மம் என்றோ, தானம் என்றோ, சலுகை என்றோ யாரும் நினைக்கக்கூடாது. இது ஒரு அரசினுடைய கடமையும், பொறுப்பும் ஆகும். அத்தகைய கடமை உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம்.

பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவுடன் பிள்ளைகள் கல்வி கற்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவு இருக்கும்.

தமிழ்நாட்டின் கல்வி விகிதம் அதிகம் ஆகும். தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் அறிவாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை இந்த மாநிலம் அடையப் போகிறது. எனவே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கக்கூடிய பணத்தை நாங்கள் செலவாக நினைக்கவில்லை.

ஒரு மாணவருக்கு வழங்கும் உணவின் மதிப்பு 12 ரூபாயாக இருக்கலாம். ஆனால், அதனை உண்டு, சிறப்பான கல்வி கற்கக்கூடிய அந்த மாணவர் நாளைய தினம் மிகப்பெரிய பொறுப்பில் வந்து உட்கார்ந்தால் அவர் மூலமாக இந்தச் சமூகம் அடையும் பயன் என்பது அளவிட முடியாதது. என்னைப் பொறுத்தவரை கல்விக்காகவும், மருத்துவத்துக்காகவும், பசிப்பிணி போக்கவும் உருவாக்கப்படும் திட்டங்கள் எந்த விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை.

இத்தகைய திட்டங்களைத்தான் ஒரு ஆட்சியின் முகமாக நான் பார்க்கிறேன். இந்த ஆட்சியை அளவிடும்போது, இது போன்ற திட்டங்களை மனதில் வைத்து அளவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மகனின் அரசு, கருணையின் வடிவான அரசாகச் செயல்படும் என உறுதி அளிக்கிறேன். இந்த நேரத்தில் அரசு அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும் என்னுடைய அன்பான வேண்டுகோள் ஒன்றை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அரசானது தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. நீங்களும் தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தை பின்பற்ற வேண்டும். உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு எத்தகைய கவனத்தோடும், கனிவோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத்தோடும், கனிவோடும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள மாணவச் செல்வங்களே! உங்களுக்கு காலையும் மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே, நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல்

படியுங்கள்,
படியுங்கள்,
படியுங்கள்.

இது ஒன்றுதான் என்னுடைய வேண்டுகோள்.

கல்வி நாம் போராடிப் பெற்ற உரிமை!

படிப்பு ஒன்றுதான் உங்களிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்து!

அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக்கொள்ளுங்கள். உங்களது மற்ற கவலைகள், மற்ற தேவைகளை நிறைவு செய்யத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. நான் இருக்கிறேன். நீங்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

படித்துத்தான் ஆக வேண்டுமா?

படிக்காமல் முன்னேறியவர்களை எடுத்துக்காட்டாக காட்டுகிறோம்...

குறிப்பாக இந்தப் படிப்பைத்தான் படிக்க வேண்டுமா?

வேறு படிப்பே இல்லையா?...

என்று யாராவது சொன்னால், அவர்களை முட்டாள்களாகப் பாருங்கள்!

நீங்கள் படித்து அறிவார்ந்த சமூகமாக முன்னேற இருப்பவர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வியை விட்டு விலகிச் சென்று விடாதீர்கள். விலகிச் செல்லவும் நான் விட மாட்டேன்.

பள்ளிக் கல்வி, உயர்கல்வி, பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்புகள் எனக் கலை, அறிவியல் அனைத்துத் துறைகளிலும் நீங்கள் முன்னேறவேண்டும்! நீங்கள் முன்னேறினால்தான் நம் தமிழ்ச்சமூகம் இன்னும் முன்னேறும்! அந்த முன்னேற்றத்திற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் களத்திலும், ஆட்சிப்பொறுப்பிலும் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க வாழ்க" என்கிறது மணிமேகலைக் காப்பியம்.

அத்தகைய மாநிலமாக தமிழ்நாடு அமைய எந்நாளும் உழைப்போம், தமிழ்ச் சமூகத்தினுடைய வறுமையை அகற்றிட, குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்திட நான் தயாராக இருக்கிறேன்.



மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்**
அவர்கள்



மதுரை, ஆதிமூலம்
மாநகராட்சி தொடக்கப்
பள்ளியில்



மாணவர்களுக்கு
முதலமைச்சரின் காலை
உணவுத் திட்டத்தை



தொடங்கிவைத்து
குழந்தைகளுக்கு
உணவினை ஊட்டி
மகிழ்ந்தார்.



மதுரை,
நெல்பேட்டையில்
மைய சமையல் கூடத்தை
பார்வையிட்டு ஆய்வு
செய்தல்.



காலை உணவு
எடுத்துச் செல்லும்
வாகனங்களை
கொடியசைத்து
துவக்கிவைத்தல்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்,
சமூக சேவகி திருமதி கமலாத்தாள் அவர்களுக்கு பொன்னாடை
அணிவித்து "ஒரு நூற்றாண்டின் கல்விப் புரட்சி" என்ற
சிறப்பு மலர் அளித்தல்

# சத்தான காலை உணவுத் திட்டம்

## பயன்பெற்றோர் போற்றுகின்றனர்

திருமதி **கயல்விழி**,
சத்துணவு அமைப்பாளர்,
அரசு (ஆதிதிராவிடர் நலத்துறை) மேல்நிலைப் பள்ளி,
கிளாம்பாக்கம், வண்டலூர் தாலுகா,
சென்னை - 603210.



"நான் 1991இல் இருந்து இந்த ஸ்கூல்ல வேலை பாக்குறேன். 32 வருஷமா நான் தான் சத்துணவு அமைப்பாளரா இருக்கேன். ஒவ்வொரு வருஷமும் ஸ்கூல் தொடங்குனதும் ஜூன் மாசம் ஸ்கூல்ல எல்லா க்ளாஸ்கும் போய் சத்துணவு சாப்பிட

விருப்பம் தெரிவிக்கிற மாணவர்கள் லிஸ்ட் எடுத்துருவேன். இப்போ 330 பேர் சாப்பிடுறாங்க. அவங்க அத்தனை பேரும் என் பிள்ளைங்க மாதிரி தான். தினமும் அட்டடண்டன்ஸ் எடுத்து எத்தனை பிள்ளைங்க வந்துருக்காங்கனு பார்த்துட்டு ரேஷனும் முட்டையும் எடுத்து, அன்னன்னைக்கு காய்கறியும் வாங்கி குடுப்பேன். சமையலர்கள் ரொம்ப சுத்தமா சமைப்பாங்க. என் பிள்ளைகளுக்கு எவ்வளவு சுத்தமா, டேஸ்டா சமைக்கனும்னு ஆசைப்படுவனோ அதேபோலதான் 330 பிள்ளைகளுக்கும் சமைக்கிறோம். சமையலர் அம்மாவும் சமையல் உதவியாளர் அம்மாவும் ரொம்ப ஈடுபாடா வேலை பார்ப்பாங்க. ஆயா ஆயானு பிள்ளைங்களும் அவங்க எல்லார் மேலயும் பாசத்தோடதான் இருப்பாங்க. பெரும்பாலும் எந்த பிள்ளைகளும் சாப்பாட வேஸ்ட் பண்ண மாட்டாங்க. சமைச்சி அவங்களுக்கு பரிமாறிட்டு பிள்ளைங்கட்ட எப்படி இருக்குப்பானு கேப்பேன். நல்லா இருக்குனு அவங்க சொல்லுறப்போ அவ்வளவு மன நிறைவா இருக்கும். சில சமயம் ஸ்கூல்ல யாராச்சும் சாப்பாடு கொண்டு வரல, சாப்பிடாம இருக்காங்கனு பசங்க சொன்னா அவங்களும் சில சமயம் வந்து சாப்பிடுவாங்க. எல்லா பசங்களும் நாங்க வைக்கிற சாம்பார விரும்பி சாப்பிடுவாங்க. வெரைட்டி ரைஸ் பிடிக்கும்னாலும் வாரத்து ஒருக்க அந்த சூடான சாம்பாரும் சோறும் சாப்பிடுறப்போ அவ்வளவு ரசிச்சு சாப்பிடுவாங்க பிள்ளைங்க. பிள்ளைங்களுக்கு பசியாத்துற வேலை. நிறைவா இருக்கு. நானும் நல்லா இருக்கேன் இப்போ. நான் வேலைக்கு சேர்ந்தப்போ 210 ரூபாய் சம்பளம். ஆனா இன்னிக்கு 17,000 ரூபாயாகிருக்கு. அரசு ஊழியர்களுக்கு உரிய எல்லா பலன்களையும் அரசு குடுத்துருக்கு".

❖❖❖❖❖

திருமதி **ஜெயலெட்சுமி**,
சத்துணவு சமையலாளர்,
அரசு (ஆதி திராவிடர் நலத்துறை)
மேல்நிலைப் பள்ளி,
கிளாம்பாக்கம்,
வண்டலூர் தாலுகா,
சென்னை.



"ஒவ்வொரு நாளும் சமைக்கிறப்போ என் பிள்ளைகளுக்கு சமைக்கிறதா நினைச்சிதான் சமைக்கிறேன். தினமும்

ஒரு சாப்பாடு. தினமும் ஒரு முட்டை. பச்சப்பயறு, கடலைனு அவங்களுக்கு கொடுக்க வேண்டியதையெல்லாம் பார்த்து பார்த்து சமைப்போம். மிளகு முட்டை, மசாலா முட்டை, வெள்ள முட்டைனு தினமும் பிள்ளைகளுக்கு குடுக்குறோம். பல பிள்ளைங்க வீட்ல இதெல்லாம் கிடைக்காது. கஷ்டப்படுற பிள்ளைங்க. தினமும் ஆசையா சாப்பிடுவாங்க. ஒவ்வொரு நாளும் சாப்பிட்டுட்டு 'நல்லாருக்கு ஆயா; இன்னுங்கொஞ்சம் குடு'னு கேட்டு வாங்கி சாப்பிடுவாங்க. என்ன ஆயாம்மானுதான் கூப்புடுவாங்க. பாசமா ஆயா சாப்பாடு போடு ஆயானு அவ்வளவு பாசமா என்கிட்ட பழகுவாங்க. சாம்பார்னா பிள்ளைகளுக்கு உசுரு. விரும்பி சாப்பிடுவாங்க. மீல் மேக்கர் போட்டு பிரிஞ்சு சாதம் செய்வோம். அதுவும் பிள்ளைகளுக்கு ரொம்ப விருப்பம். எனக்கு எழுத படிக்க தெரியாது. 20 வருஷத்துக்கு மேல வேல பாக்குறேன். மனசார வேல பாக்குறேன்".

❖❖❖❖❖

திருமதி **மோகனா**,
க/பெ: திரு. ரமேஷ்
குழந்தைகளின் பெற்றோர்,
கிளாம்பாக்கம்,
சென்னை.

"நாங்க இந்த ஏரியாதான். பிள்ளைங்க ரெண்டு பேரும் இங்க தான் படிக்கிறாங்க. நாங்க வீட்டு வேலைக்குதான் போறோம்.



தினமும் எங்க பிள்ளைங்களுக்கு சமைச்சி குடுக்க முடியல. காலைல இருக்குறத சாப்பிடுவோம். மதியானம் நாங்க வேலைக்கு போற இடத்துல சாப்பிட்டுக்குவோம். ஆனா சூடா சத்தா ஆக்கிக் குடுக்க எங்களுக்கு வருமானம் போதாது. நானும் இந்த ஸ்கூல்லதான் பன்னெண்டாவது வரை படிச்சேன். அப்போ நானும் சத்துணவுதான் சாப்டேன். அது எவ்வளவு நல்லா இருக்கும்னு எனக்கு தெரியும். மொதல்ல நாங்க படிச்சப்போலாம் வெறும் சாம்பார் சாதம்தான். ஆனா இப்போ பிள்ளைங்க வகை வகையா சாப்பிடுறாங்க. தினமும் முட்டை சாப்பிடுறாங்க. 'இன்னிக்கு பருப்பு போட்டாங்கம்மா; மூக்கடலை போட்டாங்கம்மா'னு ஒவ்வொரு நாளும் ஆர்வமா வந்து சொல்லுவான். அதெல்லாம் அவனுக்கு ரொம்ப பிடிக்கும். வீட்ல எங்களால தினமும் செஞ்சு குடுக்க முடியல. ஆனா அவன் ஸ்கூல்ல நல்லா சாப்பிடுறான். நான்

படிக்கிறப்போ இந்த பெசிலிட்டிலாம் இல்ல. இப்போ இதெல்லாம் கிடைக்கிதுனு ரொம்ப சந்தோஷமா இருக்கு. என் பையன், அவன் அக்காவுக்கு சேத்து வாங்கிட்டு போய் குடுப்பான். ‘அக்கா படிக்கிதுமா, வரமுடியல, அதான் நான் வாங்கிட்டு போய் குடுத்தேன்’னு சொல்லுவான் புள்ள. பிள்ளைங்க நல்லா சாப்பிடனும், நல்லா படிக்கனும்னு தான் உழைக்கிறோம். ஆனா அது ஸ்கூல்லயே கிடைக்கிது. அதுவும் நான் படிச்ச அதே ஸ்கூல்ல கிடைக்கிது”.

❖❖❖❖❖

திருமதி **ராஜேஷ்வரி**,
பெற்றோர்
துப்புரவுப் பணியாளர்,
ஒழலூர் ஊராட்சி,
செங்கல்பட்டு.



“நான் பஞ்சாயத்து போர்ட்ல துப்புரவுப் பணியாளரா வேலைபார்க்குறேன். கணவர் இல்ல. ஆதரவற்று இருக்கேன். என்னோட 3 குழந்தைகளும் அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிலதான் படிக்கிறாங்க. காலைல சீக்கிரத்துல வேலைக்கு போய்ட்டா பிள்ளைங்க ஸ்கூலுக்கு போற டையத்துல வந்து அவங்களுக்கு எதாச்சு சாப்பிட குடுத்து அனுப்பிடுவேன். ஆனா மதியத்துக்கு சாப்பாடு குடுத்து அனுப்ப வசதி இல்ல எங்கிட்ட. அவங்க ஸ்கூல்லயே சத்துணவு சாப்பிடுறாங்க. வீட்டுல நம்ம சமைச்சி குடுக்குறத விடயும் ஸ்கூல்ல நல்லா சமைச்சி குடுக்குறாங்க. ‘சாம்பார் குடுத்தாங்க. அதுல கேரட் போட்டாங்க. காய்கறிலாம் போட்டாங்க. முட்ட குடுத்தாங்க’னு என் பிள்ளைங்க வீட்டுக்கு வந்து சொல்லுவாங்க. தண்ணிகூட ஸ்கூல்ல அக்குவா கார்ட் தண்ணி குடுக்குறாங்கனு வந்து சொல்லுவான் சந்தோஷமா. வீட்ல பெத்தவங்களே வளர்க்குற மாதிரி ஸ்கூல்ல எங்க பிள்ளைகள பார்த்துக்கிறாங்க. எனக்குனு இல்ல. என்னைப்போல எவ்வளவோ பெத்தவங்க வசதி வாய்ப்பில்லாம இருக்குறாங்க. ஒரு முட்டை வாங்கிக்குடுக்க முடியாம எவ்வளவு பேர் கஷ்டப்படுறாங்க. எங்க வீட்லலாம் சோறு மட்டும்தான் இருக்கும். எங்க பிள்ளைகளுக்குலாம் இந்த சத்துணவுதான். பிள்ளைங்க நாங்க படுற கஷ்டத்த படக்கூடாதுனுதான் ஸ்கூலுக்கு அனுப்புறோம். ஸ்கூல்ல எந்தக் குறையும் இல்லாம எங்க பிள்ளைங்கள பாத்துக்குறாங்க.”

❖❖❖❖❖

திருமதி **எழிலரசி**,
தலைமையாசிரியை
அரசு (ஆதிதிராவிடர் நலத்துறை)
நடுநிலைப்பள்ளி, ஒழலூர்,
செங்கல்பட்டு.



“நான் இங்க 10 ஆண்டுகளுக்கு மேல தலைமையாசிரியரா இருக்கேன். ஒவ்வொரு நாளும் சத்துணவு சமைச்சதும் அதை டேஸ்ட் பண்ணி பார்த்த பிறகுதான் பிள்ளைங்களுக்குக் கொடுப்போம். எல்லா டீச்சர்களும் ஆளுக்கு ஒரு நாள் டியூட்டி போட்டு பிள்ளைங்களுக்கு சத்துணவு வழங்குறத கண்காணிக்கிறோம். பிள்ளைகளுக்கு அரசே தட்டு டம்ப்ளர் கொடுத்திருக்காங்க. அவங்கள வரிசையா உட்கார வைச்சு “பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”னு உணவு சாப்பிடுறதுக்கு முன்னாடி தொடக்கப் பாடல் பாடுவாங்க. அப்பறம் எல்லாருக்கும் வரிசையா பரிமாறுவோம். பிள்ளைங்க ரொம்ப நல்லா சாப்பிடுவாங்க. இது ரொம்ப விளிம்பு நிலைப்பகுதி இங்க படிக்கிற எல்லா பிள்ளைகளும் சத்துணவு சாப்பாடு தான் சாப்பிடுறாங்க. வீட்ல அம்மா அப்பா காட்டு வேல, ஏரி வேலைனு போறதால பிள்ளைகளுக்கு சத்தான சாப்பாடு கொடுக்க முடியல. ஆனா அந்தப் பிள்ளைங்க எல்லாருக்கும் இங்க சத்தான சாப்பாடு குடுக்குறோம். எல்லா பிள்ளைங்களுக்கும் புரியுற மாதிரி இந்த விசயங்கள பேசுவோம். அரசு என்னென்ன உதவிகள் குடுக்குதுனு அவங்க பெற்றோருக்கும் சொல்லுவோம். ஜாமெண்டிரி பாக்ஸ், தட்டு டம்ப்ளர், ஸ்கூல் பேக், செப்பல், நோட்டு புக், அட்லஸ்ல இருந்து சீருடை வரைக்கும் அரசு கொடுத்த நலத்திட்டங்களை தான் எல்லா பிள்ளைகளும் பயன்படுத்துறாங்க. பிள்ளைகளுக்கு இருக்குற ஸ்காலர்ஷிப்ஸ் பத்திலாம் பெற்றோர்ட்ட சொல்லி பிள்ளைங்கள நம்பி படிக்க அனுப்புங்கனு சொல்லுவோம். நிறைய பேர் இலவசம்னு சொல்றாங்க. ஆனா இங்க இருக்குற அவ்வளவு பிள்ளைகளும் அரசு கொடுக்கும் திட்டங்களை நம்பி மட்டுமே படிக்க வராங்க. அவங்களுக்கு அடுத்த வருஷம் யூனிபார்ம் நைஞ்சு போய்ட்டா அவங்களுக்கு அத மாத்தகூட சூழல் இல்ல. அப்போ அரசாங்கம் இந்த திட்டங்களையெல்லாம் குடுத்தா தான் பிள்ளைங்க ஸ்கூலுக்கு வராங்க. ஏழ்மைல இருந்தவங்களுக்கு தான் அந்த வலி புரியும். அரசு திட்டங்களால பலனடைஞ்ச பிள்ளைங்க தான் இங்க இருக்குற அத்தனை பேரும்.”

❖❖❖❖❖

மாணவி **புவிதா**,
5ஆம் வகுப்பு
டூவிபுரம் மாநகராட்சி துவக்கப் பள்ளி,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.



“எனது பெயர் புவிதா நான் தூத்துக்குடி மாநகராட்சியில் அமைந்துள்ள டூவிபுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறேன். இன்று எங்க பள்ளியில் காலையில சாப்பாடு வழங்கினார்கள் நாங்க எல்லாரும் பிரண்ட்ஸ் கூட சந்தோசமா சாப்பிட்டோம். சாப்பாடு ருசியா இருந்துச்சு”. காலையில வீட்ல சாப்பிடாம பள்ளிக்கு வரதுனால எனக்கு பசி மயக்கமா இருக்கும் அதை போக்கிட இந்த காலை உணவு திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு ரொம்ப நன்றி.”

❖❖❖❖❖

திருமதி **சந்தனமாரி**,
பெற்றோர்
தூத்துக்குடி மாவட்டம்.




“எனது பெயர் சந்தனமாரி எனது பொண்ணு தனுஷியா தூத்துக்குடி மாநகராட்சி பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வருகிறாள். எனது பையன் சந்தனகுமார் எல்.கே.ஜி படித்து வருகிறான். மாநகராட்சி பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வந்ததுக்கு நன்றி. தமிழ்நாடு முதலமைச்சர் சத்தான காலை உணவுத் திட்டத்தை தூத்துக்குடி மாநகராட்சியில் கொண்டு வந்ததுக்கு ரொம்ப ரொம்ப நன்றி. சில பெற்றோர்கள் வேலைக்கு செல்வதால் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்க முடிவதில்லை. இதை அறிந்து சத்தான காலை உணவு திட்டம் கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ரொம்ப ரொம்ப நன்றி.”

# ஊடகப்பார்வை...

முதலமைச்சரின்
காலை
உணவுத்
திட்டம்

THE HINDU

## Eat and learn

Tamil Nadu's breakfast scheme is a good model for other States to follow

Sometimes the ability of a government to find resources for a good scheme is only limited by its intent. The Tamil Nadu government's launch of the free breakfast scheme for schoolchildren is an instance of a policy initiative with far-reaching consequences for school education and public health. As Chief Minister M.K. Stalin himself said at the launch of the scheme, provision of free breakfast is not a freebie, but the foremost duty of a government to ensure no child goes hungry. Mr. Stalin framed his words and deeds from the promontory of the progressive Dravidian model, which promises inclusive growth for all segments of the population. A key element is the welfare of children, which explains Tamil Nadu's early emphasis on feeding children in schools. The importance of a daily breakfast as the most important meal of the day is widely acknowledged. Multiple studies across the globe indicate that eating breakfast regularly confers positive outcomes on students, affecting their ability to focus, learn and retain information positively. School performance improves, as do behaviour and cognition, but a regular breakfast also takes care of diet quality, micronutrient sufficiency, anaemia and height and weight issues in children, and is even believed to sculpt BMI scores for the future. The government has targeted providing schoolchildren an average of 293 calories and an average protein input of 9.85 gm per day. The mid-day meal that is already being provided to students in schools comes up to an average of 553 calories and 18 gm of protein, giving every student who takes the food supplied in school about 846 cal and nearly 28 gm of protein a day. The Centre's midday meal guidelines prescribe between 450-700 cals per child per day, and a protein intake of 12-20 gm per day.

While the proposed menu for the Tamil Nadu government's breakfast scheme will take care of hunger, the calorific, energy and micronutrient requirements of the children, with a diet rich in local preparations and vegetables, it also has to provide adequate attention to taste and quality parameters. The government, rich with its experience of dealing with the mid-day meal scheme over several decades, must avoid the errors of omission and commission – including pilferage, poor quality of food, delays in sanctioning funds, and caste-related disruptions – that have been hurdles in its path earlier. Other State governments would also do well to be inspired by Tamil Nadu, which has allowed its intent to triumph over the state of its finances, finding money to fund this very crucial aspect of nation building – ensuring the growth and development of children.



# ஊடகப்பார்வை...

THE HINDU
FRIDAY, SEPTEMBER 16, 2022
NEWS 11

## 'Breakfast scheme should not be counted as freebie, charity or gift'

### Students learn comfortably and with enthusiasm once hunger is satiated



M.K. STALIN

After assuming the office of Chief Minister of Tamil Nadu by swearing "I, Muthuvel Karunanidhi Stalin" last year, I feel, Thursday's inauguration of the Breakfast Scheme for students of classes I to V, will remain in the golden pages of history and bring a positive change in the lives of my people.

We have enabled the schoolchildren to get their breakfast before attending their classes. The 'Athimoolam' (root cause) of the problems faced by the suppressed and marginalised people in the society must be identified and suitable remedies be provided. That is why, we have launched this scheme in Athimoolam Primary School, Madurai. It is a coincidence that the school is located in Keezh Anna Thoppu. I am proud to be one of Anna's (former CM Annadurai) younger brothers to have started this scheme on his birth anniversary. Exactly, 102 years ago, on September 16, one of the leaders of the Justice Party, Sir Pitti Thiagarayar passed a resolution to introduce mid-day meal scheme for children in Chennai Corporation. After a century, the breakfast programme is being launched.

Breakfast Schemes in schools have been implemented in many states of United States of America by the Department of Agriculture.



**Nutritional boost:** The mid-day meal scheme was started in Tamil Nadu in 1956. •FILE PHOTO

Such schemes have been introduced in European countries, particularly in France three years ago. Research shows that providing breakfast in schools improves the learning ability of students and increases attendance. Analysts say the demand for breakfast schemes has increased after the COVID-19 pandemic. I am ready to make any sacrifice to alleviate the poverty of the Tamil community and hunger of the children. Now I see the joy on the faces of children as they get their breakfast. I have no words to explain my happiness.

The Dravidian movement was established to ensure children belonging to poor and suppressed families should not be prevented from going to school. That is why the doctrine of Self-respect and Social Justice were coined. Communal reservation was brought as Thanthai Periyar (E.V. Ramasamy), Perarignar Anna (Annadurai) and Muthamizh Arignar (M. Karunanidhi) thought neither poverty nor caste should be a hindrance to one's education. I am overwhelmed that I, the follower of their path, have come to a position to fulfil their dreams and have implemented it.

**No starvation**

We believe the children of Tamil Nadu should not starve at any cost. 'Ayodhidasa Pandithar' (a Dalit icon) was the first to express the noble intention of providing food to schoolchildren along with education. In the early period of 1900, he sowed the seed for the idea of providing mid-day meals in the Olcott Memorial schools in Chennai region. A few months before India's independence, the meal scheme was discontinued by the British government citing financial crisis.

The mid-day meal scheme was started in 1956 when Perunthalaivar Kamarajar was the Chief Minister. Then Director of Public Education N.T.Sundaravadivelu, an ardent follower of Periyar, was the one who implemented it despite strong opposition from some officials.

To enhance this scheme, in 1971, Chief Minister Karunanidhi took charge of the Nutritional Meals Programme. He made it a grand movement by providing nutritional meals to children and pregnant mothers. He offered nutrient-rich bread to children (aged up to 3 years in municipalities around Chennai). In 1975, he launched an Integrated Nutritional Programme across the state.

'Makkal Tilagam' M.G. Ramachandran, as Chief Minister, took great efforts to expand it setting up more centres and allotted more funds. In 1989, Karunanidhi added egg in the nutritious meal; he also added chickpeas, green gram and boiled potatoes. In 2010, he extended eggs for five days a week and provided bananas to those who do not prefer eggs. Former Chief Minister Jayalalithaa Amma ordered the provision of variety rice during her regime.

When I attended a programme at a school in Chennai, I asked a few children if they'd had their breakfast. They replied 'no'. Later, when I consulted the authorities, they said that many children come to school skipping breakfast. I thought no child should attend classes with empty stomach. Under the Chief Minister's Breakfast Scheme, 1.14 lakh children from 1,545 schools will benefit at a cost of ₹12.75 per day / per child. I quote the 'cost' in administrative terminology. In fact it is not an expenditure; it is the duty of our government! We will progressively expand this project and take all steps expeditiously for its implementation to the fullest. Such schemes should not be counted as freebies, charity, gift or privilege. This is the bounden duty and responsibility of the government!

Students learn comfortably once hunger is satiated. They grasp easily and attend the school with enthusiasm. There will be a regular attendance in schools. Tamil Nadu will have a great educational ratio. If a person who benefits from this scheme occupies the highest position later, the benefits to the society remains immeasurable. For me, the schemes devised for education, medicine and the mitigation of hunger stand beyond criticism. These schemes form a face of governance. I request the people to measure the success of the government only with such schemes.

*(M.K. Stalin is the Chief Minister of Tamil Nadu)*

THE NEW INDIAN EXPRESS
17 SEP 2022

## Breakfast scheme to benefit 5,941 city kids

### Corporation rolls out initiative in 37 schools with low enrolment in first phase, prepares route maps for distribution

EXPRESS NEWS SERVICE
@ Chennai

A day after Chief Minister MK Stalin inaugurated the breakfast scheme for elementary school students in Madurai, ministers, MLAs and other elected representatives inaugurated it in all districts of Tamil Nadu on Friday.

Health Minister Ma Subramanian, HR&CE Minister Sekar Babu, and Mayor R Priya flagged off the vehicles carrying food for the children at Madhavaram on Friday. Like the midday meals scheme, this initiative is expected to increase enrolment in government schools. It has been rolled out in 37 schools in Chennai corporation, all in the northern part of the city. These schools were chosen due to their low enrolment. The corporation had earlier set up six kitchens to supply food to four to seven schools nearby.

Priya said 5,941 students will benefit from the scheme in Chennai. "Route maps have been prepared and the food will reach the schools from 8 to 8.45 am," she said.



Children having breakfast at the Corporation Primary School in Madhavaram on Friday | ASHWIN PRASATH

Refuting claims that the scheme was earlier implemented by the previous AIADMK government, Subramanian said: "They distributed food for one or two days with help from an NGO, and stopped it after a while." As for Telangana Governor Tamilisai Soundararajan's statement that the scheme is part of the National Education Policy, Subramanian said, "If that is so, why wasn't it implemented when the AIADMK was ruling the State?"

When asked why Amma Unavagams are not being used to supply food for the scheme, Sekar Babu said, "Amma Unavagams serve everyone. But this scheme is specifically for schoolchildren, and the food is prepared by self-help groups. We don't plan to undermine Amma Unavagams. Separate officers have been appointed for this scheme."

**Amma Unavagams serve everyone. But this is specifically for schoolchildren, and the food is prepared by SHGs. We don't plan to undermine Amma Unavagams**

Sekar Babu,
HR&CE Minister



In the first phase, the scheme is being implemented by local bodies in 1,545 schools, benefitting 1.14 lakh students at a cost of ₹33.56 crore.

**'Maintain social distance to prevent flu'**

Subramanian said the number of flu cases among children is less than in the previous two years, due to social distancing. "Flu affects children for 3-5 days. If there are other children in the house, it is advised to maintain social distancing and wear masks. Since January, nine children have died due to the flu," he added.



# ஊடகப்பார்வை...

24.09.2022





**Amidst global philanthropists, Tamil Nadu has pioneered an exhaustive morning meal scheme to alleviate the perennial agony of school children**

## Dravidian Movement Redefines Philanthropy

Tamil Nadu has created an indelible impression among states in India with the introduction of morning meal scheme for school children. The practice of free meal scheme has been in vogue since 102 years when justice party's leader, late Sir P T Theyagarayar introduced a proposal for noon meal scheme in Chennai Corporation. The scheme launched in Thousand Lights area has rapidly expanded and engulfed the interior of Tamil Nadu today.

Inaugurating a morning meal scheme at Adimoolam Corporation Elementary school in Madurai, Chief Minister M K Stalin said the practice has been in vogue globally through US Department of Agriculture across several states in US. Similarly, in Europe, and also in France three years ago, the morning meal scheme was introduced.

A number of surveys on similar schemes have demonstrated that the morning meal scheme in particular has improved the students' attendance in schools and enhanced their learning ability. In the aftermath of Covid-19 pandemic, the need for such a scheme has been felt necessary.

"I cannot simply express my happiness merely in words when school children consuming morning meals gleefully when served in the schools. I am sure everyone is aware of the background of the Dravidian movement which was started with a clear intention that poor children should not miss the schools due to poverty. The seeds of Dravidian principles were sown decades ago for the century's mega movement. Reservations were made for the downtrodden in the society. Neither caste nor religion should be a deterrent to get access to education for any child in the state. This is what illustrious leaders of Dravidian movement late E V Ramaswamy, Annadurai and Karunanidhi said and wished to implement," said Stalin.

As one who has inherited the Dravidian ideologies, I have been implementing their objectives and policies now. My joy knew no bounds when I saw the poor children immensely benefiting out of the pragmatic measures initiated by the government, he adds.

The scheme has been undertaken despite financial crunch faced by the state. The objective is not to let Tamil Nadu's children suffer from hungry in schools. There is no denying that late Pandit Ayothidasar was the one who mooted the idea in



1990 at Karnal Olcott school that children should be served morning meal, said M K Stalin.

Tracing the events that led to the introduction of mid-day meal scheme, CM Stalin said that one of the stalwarts of justice party, late Thyagarayar served mid-day meals to government school children in Thousand Lights. "It is where I have been elected as the member of the legislative assembly," said Stalin.

"The British government discontinued the scheme before independence citing revenue crunch but in 1955, it was resumed when late K Kamaraj was the chief minister. Late N D Sundaravadivelu was directorate of education at that time. He took the initiative to start the mid-day meal scheme despite vehement opposition from officials. However, he overruled all their objections and implemented the scheme as a true disciple of late EV Ramaswamy," said Stalin.

The practice of free meal scheme has become an integral part of the DMK's agenda. It was late chief minister Dr M Karunanidhi who took additional measures in 1971 to improve the overall benefit of the scheme by including nourished foods not only to children but also to pregnant women. The scheme was extensively implemented and in 1975 with the state's funds, an integrated nourished food scheme was extended throughout the state.

True to the wise saying of the founder of DMK, late C N Annadurai when he said that even jasmine in the enemy's gardens will smell equally good, CM Stalin paid glowing tribute and said that the nourished food scheme was continued even during the AIADMK's regime when late M G Ramachandran was chief minister. What is more, additional funds were allocated besides opening more branches to distribute the foods, said Stalin.

In 2007, late Dr Karunanidhi had introduced egg along with pea nut, banana and boiled potato which was later followed by former CM late J Jayalalithaa.

It is often said that an effective leader is one who continuously monitors the performance of administrators of government scheme at varied levels to derive maximum efficiency out of the system. It so happened while inspecting a school which enabled CM Stalin to observe the fallacy in the system. "When I routinely inspected schools, I happened to see the school children in a school with dejected look, and casually asked them whether they ate in the morning. Their reply shocked me when they said they do not eat at all in the morning while coming to school. After making a detailed enquiry with the concerned officials, I have plunged into action to start the morning meal scheme instantly," said Stalin.

To begin with, the morning meal scheme will benefit 1,14,000 children spread over 1,545 schools. A sum of Rs 12.75 per child will be spent towards cost of the scheme. "This is not considered as a financial burden at all and I consider it as my duty to implement the scheme," said Stalin.

"If the students from the downtrodden are nourished they may study well and even occupy top echelons in management and serve the society. So, the government does not consider the expenditure as a burden at all and strongly believes that money spent for education, healthcare and meal scheme are beyond the purview of any argument in a civilized society," said Stalin.

In a strong message to the children about the importance of education, MK Stalin stressed the immense benefit of education in a child's life. "Education is an invaluable asset and none can snatch it. One may ask is education really necessary to succeed in life. Do not ignore education under any circumstances and sky is the limit for any student in life. We are here to take care of your basic needs and it is your duty to study and contribute to the society that will change the face of the country tomorrow.

The morning meal scheme has sent ripples across the country and widely acclaimed by several sections of people across the country. In a significant development, several writers and social activists have appreciated on how significant is the scheme for lower and middle income group especially for school-going children. With education becoming a key factor to change the future of school children for better, this novel scheme will immensely relieve their hunger and encourage them to focus on studies.

Chief Minister M K Stalin said that the morning breakfast scheme will go down in history as an eternal and indomitable scheme to encourage more children to focus on studies and contribute significantly in future for the upliftment of society. Neither poverty nor caste should be an obstacle for school children to get their due education to progress in Tamil Nadu.

"It is my earnest wish that students should aim to achieve progress in research areas including art and science and literally in all areas. Only if you progress, Tamil Nadu will progress. In order to achieve this the DMK has been marshalling all efforts both on political and governmental fronts. There will not be any let down in attempts or efforts on my part in removing hunger from the lower strata of society and to benefit their children. I am willing to travel to any extent and prepared to make any sacrifice to achieve this objective for students in Tamil Nadu" said Stalin.






# ஊடகப்பார்வை...

## ‘பிள்ளை சிரிக்கையில் சிரித்தது வையம்! சிரித்தது வானமே!’

17 SEP 2022



இதோ! இந்த இளம் தளிரின் இன்சிரிப்பைக் காணுங்கள்!

கள்ளம் கபடமற்ற களிப்பு

எதிர்பார்ப்பு ஏதுமில்லா ஆனந்தச் சிரிப்பு

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன்னதச் சிரிப்பு.

கடந்த தேர்தலுக்குமுன் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஒலித்த பாடல்:

“ஸ்டாலின்தான் வாராரு... விடியல் தரப் போறாரு...”

- அது பாடல் அல்ல; தமிழகத்தின் தேடல் - என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பு இருந்தது.

தமிழக மக்களுக்கு அவர்கள் மனம் குளிர - அவர்களது வேதனைகளைக் குறைக்க - வளமான தமிழகத்தை வார்த்தெடுக்க வேண்டும் என்று மனதில் ஆழமான பதிவுகளோடும், நிரம்பக் கனவுகளோடும் - ஆட்சி பீடம் ஏறினார்; தளபதி ஸ்டாலின். ஆனால் அங்கே கண்டது அதிர்ச்சித் தகவல்கள்!



சிகிச்சைக்கு முன் | சிகிச்சைக்குப் பின்

கஜானாவை, முந்தைய ஆட்சியாளர்கள் காலி செய்து சென்றதுமல்லாமல்; பல லட்சம் கோடிக்கு கடன் சுமையையும் ஏற்றி வைத்துச் சென்றனர்!

நிலைகுலைய வைக்கும் நிலையில், அரசின் நிதிநிலை இருந்தது; மற்றொரு புறம் நாடே கொரோனா கொடுந்தொற்றின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தது. மற்றொரு பக்கம்,

முன் எப்போதும்காணா மழை - வெள்ளம்; இப்படி அவலச் சூழ்நிலை சூழ்ந்து நின்றது!

“விடியல் தரப் போகிறாயா? இந்த நிலையில் உன்னால் எப்படி முடியும்; அதையும் பார்த்து விடலாம்” - என எதிரிகள் உள்ளத்தில் ஆனந்தம் பெருகிட எக்காளமிட்டனர். தளபதி ஸ்டாலின் தளரவில்லை!

**“முடியுமா நம்மால் என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கான தொடக்கம்” - என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வாசகங்கள் அவரது காதுகளில் எதிரொலித்தன. அவரைச் சிலிர்க்க வைத்தது!**

**“நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்று உரைத்து வந்து நம்மிடம் கெஞ்சுவது உறுதி” என்ற பேரறிஞர் அண்ணாவின் ஊக்க மொழிகள் செவிப்பறைகளில் மோதி அவரை உலுக்கியது!**

**“காலத்தை எதிர்பார்ப்பது என்பதே சோம்பேறித் தனத்தைத் தான் குறிக்கும்” - என்ற, தந்தை பெரியாரின் வார்த்தைகள் எதிரொலித்து அவரை உசுப்பியது.**

இப்படி முன்னோடித் தலைவர்கள் உசுப்பி ஊக்குவித்த வார்த்தைகளை உள்வாங்கியிருந்து சிலிர்த்த தளபதி, சூறாவளிக் காற்றடித்து சுழன்று எழும் அலைகள் போல சுற்றிச் சுழல ஆரம்பித்தார்! ‘முடியுமா இவரால்’ என்றவர்கள் மூச்சடைத்து நின்றார்கள்! ஆம்; அவர் கொடுத்த உறுதிமொழிகள் ஒவ்வொன்றாக நிறைவேறத் தொடங்கின.

“பெண்களுக்கு இலவசப் பேருந்து திட்டம்; பால் விலை குறைப்பு, கொரோனா கொடுந்தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டதால் குடும்பத்துக்கு ரூ.4.000 நிவாரணத் தொகை (இரண்டு கட்டங்களாக) வழங்கப்படும்!” - எனப் பதவி ஏற்ற முதல் நாளே அறிவித்ததும், ஒட்டுமொத்தத் தமிழ்நாடே விடியலை உணரத் தொடங்கியது!

பதவி வந்ததும் பவிசு, போலீஸ் பந்தோபஸ்து, கோட்டை நாற்காலி, குனிந்து சேவகம் புரிய ஆள், அம்புகள் என்ற நிலையில், வேறுலகம் கிடைத்தது போல குதூகலித்து மகிழாமல், தெருவுக்கு வந்தார் முதல்வர் ! மக்களோடு மக்களாக நின்றார் !

“நம்பிக்கை என்ற அச்சாணியிலேதான் உலகமே சுழலுகிறது” என்ற வார்த்தைகளின் வலிமை உணர்ந்து, தன்னை நம்பிய மக்களுக்கு நம்பிக்கையை உருவாக்கினார்! ஒரு பக்கம் ஆதிக்கச் சக்திகளோடு போராட்டம்; மறு பக்கம் ஆக்கப் பணிகள் என்று, ஓய்வின்றிச் சுழன்றார் முதல்வர்!

“ஆம்; ஸ்டாலின்தான் வாராரு... விடியல் தரப் போறாரு...” என்று தேர்தலுக்குமுன் தமிழ் மக்கள் காதுகளில் புகுந்து புறப்பட்ட வரிகள், வடிவங்கள் பெறத் தொடங்கின!



நித்தம் நித்தம் ஒரு மக்கள் நலத் திட்டத்தோடு பொழுதுகள் விடியத் தொடங்கின; சில நாட்களில் ஒரு திட்டமல்ல; பல திட்டங்கள்!

**திட்டங்களின் அறிவிப்புகள் ஒரு பக்கம்;**

**அறிவித்த திட்டங்களுக்கு தொடக்க விழாக்கள் மறுபக்கம்;**

**தொடங்கிய திட்டங்களுக்கு திறப்பு விழாக்கள் இன்னொரு பக்கம்;**



**இவை மட்டுமல்ல - நடக்கும் பணிகள் செம்மையாக நடைபெறுகிறதா என்ற ஆய்வு!**

**ஆற்றாது எழும் அபயக்குரல்களுக்குச் செவிமடுத்து, அழுதிடும் கண்களைத் துடைத்திட ஓடோடிச் சென்றிடும் மனிதாபிமானம்!**




இப்படிச் சுழன்று சுழன்று பணியாற்றிடும் முதலமைச்சரைக் கண்டு பூரித்து மகிழ்கின்றனர் மக்கள்!

தான் பெற்றெடுத்த பிள்ளைக் கனியமுதின் முகம் ஒரு பக்கம் சிதைந்த நிலையால், அந்த அரும்பு பள்ளிக்குப் போகக் கூசுகிறது என்ற தாயின் ஆதங்கக் குரல் கேட்கிறது. அங்கு முதல்வரின் ஆதரவுக் கரம் நீள்கிறது; உடனடியாக மருத்துவமனையில் அந்த மாணவி சேர்க்கப்பட்டு, முகம் சீர் செய்ய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது! அந்தக் குழந்தையின் முகத்தில் மட்டுமின்றி பெற்றோர் உள்ளத்திலும் இனம் காண இயலா ஒரு மகிழ்ச்சி!

கடந்த காலத்தில் சில நரிக்குறவ இனத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் அளித்த பேட்டியில், “என்னதான் தாங்கள் பள்ளியில் படித்தாலும் - எங்களை சிலர் ஒதுக்கி வைக்கிறார்களே” என்று மனப் புழுக்கத்தோடு பேசிய வேதனைக் குரல், முதலமைச்சரின் செவிகளில் கேட்டது! அந்த இளம் பிஞ்சுகளின் இதயங்களில் தாழ்வு மனப்பான்மை தலைதூக்கி, அவர்களது எதிர்கால வாழ்வில் இருள் சூழ்ந்து விடக்கூடாது என்பதற்காக முதல்வரே அழைத்துப் பேசுகிறார்! அந்தக் குழந்தைகளின் அழைப்பை ஏற்று அவர்கள் இல்லம் சென்று அவர்களுடன் உணவருந்தி மகிழ்கிறார்;

‘நாட்டின் தலைமகனே எங்களோடு இருக்கிறார், எங்களுக்கு இனி என்ன கவலை?’ - என்ற செய்தி கேட்டு ஒட்டுமொத்தச் சமுதாயமே தாழ்வு மனப்பான்மையை ஒதுக்கி எறிந்துவிட்டு தலைநிமிர்கிறது!

**அவமானப்படுத்தப்பட்ட நரிக்குறவர் இனப் பெண்ணை, அமைச்சரோடு அமர்ந்து உணவருந்த வைத்து, சமூக நீதிக் கொள்கையை உயர்த்திப் பிடித்தார்!**

விளிம்பு நிலை மக்கள், “ஸ்டாலின்தான் வாராரு... விடியல் தரப் போறாரு...” - என்ற பாடல் வரிகளின் வெளிச்சத்தை உணரத் தொடங்கினர்.

இப்படி ஓராண்டில் மக்களோடு மக்களாக உழன்று, அவர்கள் ஏற்றம் பெற எண்ணற்ற பணிகளைத் தொடர்கிறார்!

இதோ அந்தப் பெருமைமிகு பணிகளில் ஒரு அங்கமாக “இளம் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம்” தொடங்கப்பட்டது.

ஆங்காங்கே மேலே கண்ட இளம் தளிர் போல, ஆயிரம் பல்லாயிரமாய் குழந்தைகள் சிரித்து மகிழும் காட்சிகளை தமிழகம் முழுதும் காணப் போகிறது !



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளில் கூற வேண்டுமெனில்:

**“செம்பவழத்து சிமிழ் சாய்ந்த அமுதாய்ச்**

**சிரித்தது, பிள்ளை சிரிக்கையில்**

**சிரித்தது வையம்! சிரித்தது வானமே !”**

# ஊடகப்பார்வை...

# பசிப்பிணி மருத்துவர்!

முரசொலி 16 SEP 2022

"உனக்கு சோறு ஊட்டினாரே? யாரு அது?"

"அவர்தான் இந்த நாட்டு ராஜா" என்று பதில் சொல்கிறது அந்தக் குழந்தை. ஆமாம்! தமிழ்நாட்டு ராஜாவாகவே செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

நம்முடையதமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் வீரத்தையும், காதலையும் சொல்பவைதான் என்று சொல்லப்படுகிறது. அதையும் மிஞ்சும் அளவுக்கு அறத்தையும், அன்பையும், கருணையையும்தான் நம்முடைய இலக்கியங்கள் சொல்கின்றன.

**புதிய புறநானூறு!**

சிறுகுடி கிழான் பண்ணன் என்ற மன்னனைப் பாராட்டி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்கிற புலவன் பாடுகிறான். புறநானூற்றில் இருக்கிறது இந்தப் பாட்டு. இப்போதும் பொருத்தமாக இருக்கிறது.

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர் காண்க, இவன் கடும்பினது இடும்பை,
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊணொலி அரவந் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்,
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்; கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ? கூறுமின், எமக்கே !"

- என்கிறது அந்தப் பாடல்.

**"பாணரே! இந்த இரவலனது சுற்றத்தாரின் வறுமையைக் காணுங்கள். பழ மரத்திலே பறவையினம் ஒலித்தாற்போல ஊண் உண்பார் ஆரவாரம் கேட்கும். எறும்புகள் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தை நோக்கிப் போகின்றது போலப் பெரிய சுற்றத்தோடுங் கூடிய பிள்ளைகள், கையிலே சோறு பெற்றுக்கொண்டு போவதைக் காண்போம். பசியும், வழிநடை வருத்தமும் வாட்டுகின்றன. அவை கண்டும் கேட்டும் தெளியவும் பசிநோய் தீர்க்கும் மருத்துவன் இல்லம் பக்கமோ தூரமோ என்று உங்களைக் கேட்கின்றோம்; சொல்லுங்கள். அப் பண்ணன் இவ்வுலகிலே நெடுங்காலம் வாழ்வானாக!"**

- என்பது இதன் பொருள்.



பள்ளிப் பிள்ளைகளுக்கு காலைச் சிற்றுண்டித் திட்டத்தைத்தொடங்கியதன் மூலமாக பசிப்பிணி மருத்துவராய் உயர்ந்து நிற்கிறார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவரகள். 'பசிப்பிணி மருத்துவன் இல்லம் பக்கமோ, தூரமோ' என்று, அன்று ஒரு புலவன் கேட்டதைப் போல, இப்போது இந்தியாவின் பல மாநிலங்களின் ஆட்சிப் பணி அதிகாரிகள், முதலமைச்சர் வெளியிட்ட அரசாணையைக் கேட்டு வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள்! புறநானூற்றின் தொடர்ச்சியாக இருக்கிறது இந்த ஆட்சி!

**மணிமேகலையின் மறுவடிவம்!**

இதோ! நம் மனக்கண் முன்னால் மணிமேகலை தெரிகிறாள்!

**ப.திருமாவேலன்**

ஆபுத்திரன் தெரிகிறான். வேதியர்கள் சிலர் சேர்ந்து பசுவைக் கொல்ல முயற்சித்தார்கள், அதனைத் தடுத்து பசுவைக் காப்பாற்றியவன் (ஆ என்றால் பசு) ஆபுத்திரன். இன்றைய பசு பாதுகாவலர்களுக்கு இந்தக் கதை எல்லாம் தெரியாது. அத்தகைய ஆபுத்திரனின் கையில் இருந்தது அமுதசுரபி. அது பூம்புகாரைச் சேர்ந்த மணிமேகலையின் கையில் வந்து சேர்ந்தது.

'அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்
மறவாது இதுகேள்: மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும், உறையுளும் அல்லது கண்டது இல்"

- என்கிறது மணிமேகலை.

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

- என்கிறது மணிமேகலை.

- அந்தக் காப்பியத்தின்படி உயிரூட்டும் முதலமைச்சராக உயர்ந்துநிற்கிறார், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**'எனக்குப் பிடித்த பாத்திரம், மணிமேகலை கையில் இருந்த அட்சயப்பாத்திரம்தான்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் ஒருமுறை சொன்னார்.**

கருணை வடிவிலான மணிமேகலையின் கையில் அமுதசுரபி இருந்தது.

எடுக்க எடுக்கக் குறையாத சோறு இருந்த பாத்திரம் அது. அப்படி இருந்திருக்க முடியுமா? என்ற ஆராய்ச்சி இப்போது தேவையில்லை. கருணையின் குறியீடாக, அன்பின் குறியீடாக அந்த 'அமுதசுரபி' இருக்கிறது.

அமுதசுரபியில் எடுக்க எடுக்க உணவு வரும். ஆனால் அத்தகைய நிலைமையில் தமிழ்நாட்டுக் கருவூலம் இல்லை. என்றாலும், தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பசியால் வாடக் கூடாது என்ற அறத்தின் அடிப்படையில் அரசாணை வெளியிட்டு, உணவு வழங்கத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர். மணிமேகலையின் மறுவடிவமாகத் தெரிகிறார் முதலமைச்சர்!

**அவ்வையின் ஆட்சி!**

"பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" என்றாள் அவ்வை மூதாட்டி.

"பசி வந்து அந்தப் பசியைத் தீர்க்க உணவு கிடைக்காத மனிதன்; தன்னிடமுள்ள மானம், குலம், கல்வி,வண்மை,அறிவு, தானம், தவம், காமுறுதல், முயற்சி, தாளாமை ஆகிய பத்தையும் இழந்து விடுவான்" என்றார்.

அவ்வை சொல் மிக்க மந்திரமில்லை என்றால், அவ்வை சொல்லை அரசாணையாக வெளியிடும் ஆட்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சி மலர்ந்து காணப்படுகிறது!

**வள்ளலார் வழியில்!**

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடியவர் மட்டுமல்ல, வாடியவர் வள்ளலார். பாடியதால் வள்ளலாருக்குப் பெருமை அல்ல. தருமசாலை தொடங்கினார். அந்த தருமசாலைக்கு வந்தவர் அனைவர்க்கும், மூன்று வேளையும் உணவு வழங்குவதையே வேலையாக வைத்திருந்தார். அன்று மூட்டிய அடுப்பின் நெருப்பு இன்று வரை தணலாக எரிந்து கொண்டுஇருக்கிறது. "பசிப்பிணியே எல்லா மனப்பிணிக்கும் அடிப்படை" என்றவர் அவர். "சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அனைவர்க்கும் உணவளிக்க வேண்டும்" என்றார் வள்ளலார். இன்றைய முதலமைச்சர் இதைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்.

**நடேசனாரின் 'திராவிடன் இல்லம்'!**

நீதிக்கட்சியின் தோற்றத்துக்கு வித்தூன்றிய மூவர் வெள்ளுடை வேந்தர் தியாகராயர், 'திராவிட லெனின்' என்று போற்றப்பட்ட டி.எம்.நாயர், தமிழ்ச் சமூகத்தின் மருத்துவரான நடேசனார். அந்தக் காலத்தில் சென்னைக்குப் படிக்க வந்த பார்ப்பனரல்லாதார் மாணவர் தங்கவும், உணவு உண்ணவும் 'திராவிடன் இல்லம்' என்ற விடுதியைத் தொடங்கியவர் அவர்.

பார்ப்பனரல்லாதாராக இருந்தால் உணவு விடுதிகளில் உட்கார்ந்து உண்ண உரிமை கிடைக்காத காலம். 'எடுப்பு சாப்பாடு என்பதே இப்படித்தான் வந்தது' என்பார் பேராசிரியர் நன்னன்.

உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்து படிக்க வைத்தார் டாக்டர் நடேசனார். அங்கு நடந்த கூட்டங்களுக்குப் பேச அழைக்கப்பட்டவர்கள்தான் தியாகராயரும், நாயரும். இந்த மூவரது மூளையில் முகிழ்த்ததே, தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகப் பதிவான நீதிக்கட்சி.

அனைவரும் படிக்க பாதை அமைத்தது நீதிக்கட்சியின் சென்னை மாகாண ஆட்சி. உணவு வழங்குவதைத் தொடங்கி வைத்தது சென்னை மாநகராட்சி.

**நடேசனாரின் 'திராவிடன் இல்லம்' தான், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியாக விரிந்து நிற்கிறது.**

**"இது போன்ற திட்டங்களைத் தான் ஒரு ஆட்சியின் முகமாக நான் பார்க்கிறேன். இந்த ஆட்சியை அளவிடும் போது, இது போன்ற திட்டங்களை மனதில் வைத்து அளவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார் முதலமைச்சர்.**

புறநானூற்றின், மணிமேகலையின், அவ்வையின், வள்ளலாரின், நடேசனாரின் நீட்சியாகவே நடக்கிறது 'பசிப்பிணி மருத்துவன்' ஆட்சி!



# ஊடகப்பார்வை...

பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்!

முரசொலி 1 9 SEP 2022

# அனைத்துத் தரப்பிலிருந்தும் பாராட்டு குவிகிறது!

## ‘தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் - வரலாற்றில் என்றென்றும் நினைவுகூரப்படுவார்!’ என ஏடுகள் புகழாரம்!



**சென்னை, செப்.19-**

**1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கு, ‘முதலமைச்சர் காலை உணவு வழங்கும் திட்டம்’ எனும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான மனிதநேயத் திட்டத்திற்கு அனைத்துத் தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளது.**

**"அனைத்து மாநிலங்களும் பின்பற்றிட வேண்டிய ஒரு முன்னோடித் திட்டம் - நல்ல முன்மாதிரித் திட்டம்" என, பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இத்திட்டத்தைப் பாராட்டுகிறார்கள்.**

**"இந்த மாபெரும் திட்டத்திற்காக, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வரலாற்றில் என்றென்றும் நினைவு கூரப்படுவார்!" என, ஏடுகள் பலவும் புகழாரம் சூட்டுகின்றன.**

**பொருளாதாரப் பேரறிஞர்கள், கல்வியாளர்கள் பலரும், "மாநிலத்தின் கல்வி வளர்ச்சி மேலும் மேன்மையடையும்!" என, ஆதாரங்களுடன் விளக்கி அறிக்கை விடுக்கிறார்கள்.**

கழக அரசுக்குப் புகழ்சேர்க்கும் பல்வேறு திட்டங்களில் முத்தாய்ப்பாக முகிழ்த்துள்ள இத்திட்டம் பற்றிய விபரம் வருமாறு:-

1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான, ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப். 15 அன்று, மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்ததறிவோம்!

ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டுநிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 7.5.2022 அன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினை அறிவித்தார்கள்.

"ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்ட போதிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான கோப்பில் கையெழுத்திட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை; பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்குவது, கற்றலை இனிமையாக்குவது என்ற நோக்கத்தில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும், ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகம் இல்லை"

என்று; இத்திட்டத்திற்கான அரசாணையினை வெளியிட்ட நாளன்று, முதலமைச்சர் அவர்கள் நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டது, இவ்வேளையில் நினைவுகூரத்தக்கது.

மதுரைப் பள்ளியில் இம்மகத்தான மனிதநேயத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் முதல்வர் அவர்கள்,

**"இன்று நம்முடைய கையில் இருக்கின்ற ஆட்சியை காப்பியத்தில் வரக்கூடிய மணிமேகலை கையில் வைத்திருந்த அமுதசுரபி போல நினைத்து ஆட்சியைப் பயன்படுத்தி, எத்தகைய நிதிச்சுமை இருந்தாலும், இந்த பசிச் சுமையைப் போக்க நாம் முடிவெடுத்து இந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்."**

"பசியோடு பள்ளிக்கு வரக்கூடிய பிள்ளைகளைப் பட்டினியாக வைத்து அவர்களுக்குப் பாடம் சொல்லித் தரக் கூடாது என்று நினைத்தேன்.

பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவுடன் பிள்ளைகள் கல்வி கற்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவு இருக்கும். தமிழ்நாட்டின் கல்வி விகிதம் அதிகம் ஆகும்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் அறிவாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை இந்த மாநிலம் அடையப் போகிறது. எனவே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கக்கூடிய பணத்தை நாங்கள் செலவாக நினைக்கவில்லை.

**அரசானது தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. அரசைப்போலவே - ஆசிரியர்களும், பணியாளர்களும் தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும். உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு எத்தகைய கவனத்தோடும், கனிவோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத்தோடும், கனிவோடும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**எனதருமை தமிழக மாணவச் செல்வங்களே!**

**நீங்கள் படித்து அறிவார்ந்த சமூகமாக முன்னேற இருப்பவர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வியை விட்டு விலகிச் சென்று விடாதீர்கள். விலகிச் செல்லவும் நான் விடமாட்டேன்"**

-என்று உருக்கமுடன் குறிப்பிட்டார்கள்.

முதல்வர் அவர்களின் மனதுக்கு நெருக்கமான இந்த மாபெரும் மனிதநேயத் திட்டத்தை தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சியினரும் ஏடுகளும் வெகுவாகப் பாராட்டி, இத்திட்டத்தின் பிதாமகனான, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் புகழாரம் சூட்டி வருகிறார்கள்.

அனைத்துத் தரப்பிலிருந்தும் குவிந்திடும் இந்தப் பாராட்டுகள் குறித்த தொகுப்பு வருமாறு:-

**‘தி இந்து’ ஆங்கில நாளிதழ்**

"தமிழ்நாட்டின் காலை உணவுத் திட்டத்திற்கான உணவு வகைகள் பசியில் கவனம் செலுத்துவதோடு குழந்தைகளுக்கான கலோரி அடிப்படையிலான சக்தியும், நுண் சத்துணவுத் தேவைகளிலும் உள்ளூர் தயாரிப்பின் மூலமும் காய்கறிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் உயர்தரமான உணவாகத் தயாரிக்கப் படுகிறது.

பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டிருப்பது ஒரு கொள்கை முயற்சியும், பள்ளிக் கல்வியிலும், பொது சுகாதாரத்திலும் நீண்ட தொலைவுக்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சியாகும். இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் பள்ளி மாணவர்களுக்கான இலவச காலை உணவுத் திட்டம் ஓர் இலவசத் திட்டம் அல்ல; மாறாக, ஓர் அரசாங்கத்தின் முதன்மையான முக்கியக் கடமையாகும். அதன்மூலம் எந்தக் குழந்தையும் பசியோடு இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சொற்களையும் செயல்களையும் முற்போக்கான திராவிட மாடலை உயர்த்துகிற வகையிலேயே கட்டமைத்துள்ளார். இந்த ‘திராவிட மாடல்’ உள்ளடங்கிய வளர்ச்சி மக்கள் தொகையின் எல்லா தரப்பினருக்கும் உறுதியளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது."

**அமெரிக்கப் பேராசிரியர்**
**நிருபம் வாஜ்பாய்**

"அரசு தொடக்கப்பள்ளிகளில் கற்றலையும், கற்பித்தலையும் மேம்படுத்துவதற்கான "வாழ்க்கையின் வழியாகக் கல்வி" என்ற எங்கள் திட்டத்தின் நடவடிக்கைகளில் ஒன்றாகும். இது குழந்தைகளின் நலனுக்கும், வெற்றிகரமான பள்ளிக் கல்விக்கும் மிகவும் முக்கியமான நடவடிக்கை என்று நான் நம்புகிறேன். நான் இன்று (15-ஆம் தேதி) தமிழ்நாடு அரசு இந்தக் கொள்கையை செயல்படுத்தப்போவதைப் பத்திரிகைகளில் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தயவுசெய்து எல்லோரும் பாருங்கள்."

**திராவிடர் கழகத் தலைவர்**
**ஆசிரியர் கி.வீரமணி**

"உலகம் இந்த ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை வரலாற்றைப் பாராட்டியது. அவற்றைத் தாண்டியது இன்றைய கல்விப் புரட்சி!

அரசுப் பள்ளிகளில் காலையில் ‘இளங்குருத்துகள்’ தொடக்கப்பள்ளிகளில் (ஒன்றாம் வகுப்பு முதல் அய்ந்தாம் வகுப்பு வரை) சிற்றுண்டி சாப்பிட வசதியில்லாததாலோ அல்லது வாய்ப்பில்லாததாலோ அல்லது வேறு காரணங்களாலோ பசியோடு வகுப்பறைகளுக்குச் சென்று, பாடங்களில் கவனம் செலுத்த இயலாத சூழலில் கருகிய மொட்டுகளாகிவிடும் நிலை கண்கூடு.

தற்போது ஏற்பட்டு, திக்கெட்டும் தமது சாதனைகளால் சரித்திரம் படைக்கும் நமது ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாண்புமிகு நமது முதலமைச்சர், இதனைச் சரியாக உணர்ந்து ஆரம்பப் பள்ளிகளில் நல்ல தூய்மையும், பான்மையும் கூடிய காலைச் சிற்றுண்டியையும் அக்குழந்தைகளுக்கு அளிக்கும் திட்டத்தை நேற்று (15.9.2022) தொடங்கி வைத்து,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

‘திராவிட மாடல்’ ஆட்சியின் மணிமகுடத்தில் மேலும் ஓர் ஒளிமுத்தைப் பதித்துள்ளார்!

**இந்து தமிழ் திசை**

"மாணவ, மாணவிகள் பசியின்றி பள்ளிக்கு வருதல் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படாமல் இருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்கள் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்தல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு முதல்வரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நாட்டுக்கே முன்னோடியாக, கல்வியுடன், காலை உணவும் வழங்கும் விதமாக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த சாதனைத் திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றும் நாள் வெகுதொலைவில் இல்லை!"

**தமிழ்நாடு காங்கிரஸ்**
**தலைவர் கே.எஸ்.அழகிரி**

"எந்த சொத்தும் இல்லாதவர்களுக்கு கல்வி என்ற சொத்தை அனைவருக்கும் இலவசமாக வழங்கி மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்காக கல்வி நிலையங்களில் மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் காமராஜர். அத்தகைய புரட்சிக்கு வித்திட்ட தமிழகத்தில், மற்றுமொரு புரட்சி 1,545 அரசு தொடக்க பள்ளிகளில் முதற்கட்டமாக காலை உணவு வழங்கும் திட்டத்தை ரூ.33.56 கோடி செலவில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கியிருப்பதை மனதார வரவேற்கிறேன்."

**பா.ம.க. நிறுவனர்**
**டாக்டர் ராமதாஸ்**

தமிழ்நாட்டில் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார். அறிவுத் தீனி தேடி வரும் மாணவச் செல்வங்களின் வயிற்றுப் பசியை போக்குவதற்கான இந்தத் திட்டம் நல்ல தொடக்கம் ஆகும். 5 வயதான அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளுக்கு கொண்டு வருவதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். பள்ளியில் சேர்ந்த மாணவர்களை தக்க வைத்துக் கொள்ள அவர்களின் பசியைப் போக்க வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு இந்த திட்டம் பெரிதும் உதவும். தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து பள்ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவாக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவுகளில் படிப்படியாக சிறு தானியங்களை சேர்த்து, அவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்த வேண்டும்.

இவ்வாறு பல்வேறு தரப்பினரும் முதல்வர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தைப் பாராட்டிக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

**வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!**



# ஊடகப்பார்வை...




■ சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி நேற்று. காலை உணவு சாப்பிட்ட மாணவியர். இடம்: அன்னை சிவகாமி நகர், எண்ணுார்.

## சென்னை மாநகராட்சி பள்ளிகளில் காலை உணவு திட்டம் துவக்கம்

**சென்னை, செப். 17–**

சென்னை மாநகராட்சியில் உள்ள 37 தொடக்க பள்ளிகளில், காலை உணவு திட்டம் நேற்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான, 5,941 மாணவ – மாணவியர் பயனடைவர். திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை, ஒவ்வொரு நாளும் கிச்சடி, பொங்கல், இனிப்பு ஆகியவை காலை உணவாக வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான காலை உணவு தயாரிக்க, மாதவரம், எண்ணுார், கொடுங்கையூர், சிகரந்த பாளையம், ராயபுரம் உள்ளிட்ட ஆறு இடங்களில், ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாதவரம், ராஜாஜி தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்க பள்ளியில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்து, மாணவ – மாணவியருடன் உணவருந்தினர்.

இந்த விழாவில், மாநகராட்சி மேயர் பிரியா, மாதவரம் எம்.எல்.ஏ., சுதர்சனம், மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, மாதவரம் மண்டல குழு தலைவர் நந்தகுமார் மற்றும் கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.



# ஊடகப்பார்வை...

## காலை உணவு திட்டத்தை வரவேற்போம்!

தினமலர்
22 SEP 2022

அ.அப்பர் சுந்தரம், மயிலாடுதுறையிலிருந்து அனுப்பிய, 'இ – மெயில்' கடிதம்: தினமும் காலை உணவு அருந்தாமல், பள்ளிக்கு அவசர அவசரமாக, ஆயிரக்கணக்கான மாணவ – மாணவியர் செல்கின்றனர். அதற்கான விடி மோட்சமாக, முதல்வர் ஸ்டாலின் முயற்சியால், அண்ணாதுரை பிறந்த நாளில், பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை துவங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

எந்தவொரு மாணவனும், சிறந்த கல்வியை, ஏக்கமும் தாக்கமும் இல்லாத மனநிலையில் தான் கிரகிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து, இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

காமராஜர் ஆட்சிக் காலத்தில், உணவில்லாமல் தான், பல மாணவர்கள் பள்ளிகளுக்கு செல்வதில்லை என்பதை அறிந்து, அவர் மதிய உணவு திட்டத்தைக் கொண்டு வந்தார். அதே திட்டத்தை, சத்துக்கள் மிக்க உணவு தரும் திட்டமாக மாற்றினார், எம்.ஜி.ஆர்.,

அதன்பின் வந்த முதல்வர்களான கருணாநிதி, ஜெயலலிதா போன்றோர், மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைக்க வழி செய்தனர். இப்போதைய முதல்வர் ஸ்டாலின் காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளார்.

வயிற்றில் பசியோடு நிச்சயம் கல்வியை ஏற்க முடியாது என்ற உண்மையை உணர்ந்த, நம் முதல்வர்களின் செயல்பாடுகள் அத்தனையும், நம் மாணவர்களின் பசியை போக்குவதாக இருந்தாலும், அறிவை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றலை கொடுக்க வல்லவை என்றும் கருத வேண்டும்.

அறிவை பெருக்கிக் கொள்ளும் மாணவர்கள், நிச்சயமாக தமிழகத்திற்கும், நாட்டிற்கும் நற்சேவை ஆற்ற முதற்படி காலை உணவு திட்டம். இத்திட்டம் சிறப்பாக செயல்பட, அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்போம். வலுவான, அறிவான இளம் மாணவ சமூகம் உருவாக துணை நிற்போம்.

●●●



# ஊடகப்பார்வை...



## தலையங்கம்

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

20.9.2022 (செவ்வாய்க்கிழமை)

# அன்று மதிய உணவு தந்தார் காமராஜர்!; இன்று காலை உணவு தருகிறார் மு.க.ஸ்டாலின்!

"நீங்கள் யாரையும் கற்கவைக்க முடியாது, கற்க வைப்பதற்கான சூழ்நிலையைத்தான் வழங்க முடியும்" என்றார், கனடா நாட்டு எழுத்தாளர் வின்ஸ் கவ்மோன். ஒட்டுமொத்த மக்களுக்கு பசிப்பிணியை போக்கவேண்டும் என்ற முயற்சியில், முதலில் பள்ளிக்கூடங்களுக்கு வரும் குழந்தைகள் பசியோடு இருக்கக்கூடாது என்ற கருணை உள்ளத்தோடு, தமிழ்நாட்டில் பல தலைவர்கள் உணவு ஊட்டியிருக்கிறார்கள். அதில் மறைந்த தலைவர் காமராஜர் மதிய உணவு திட்டம் கொண்டு வந்ததும், தற்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியதும், ஒரே பின்னணியில்தான் தொடங்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் ஒருமுறை தன் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு காரில் சென்னை திரும்பிக் கொண்டிருந்தபோது, ரெயில்வே கேட் மூடியிருந்ததால், காரை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது காரில் இருந்து கீழே இறங்கிய காமராஜர், அந்த சாலையின் பக்கத்தில் ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தார். அவனை அழைத்து, பெயர் விவரங்களை கேட்டபின், "நீ ஏன் பள்ளிக்கூடத்துக்கு போகவில்லை" என்று கேட்டார்.




அவன் தன்னிடம் பேசிக்கொண்டு இருப்பது முதல்-அமைச்சர் காமராஜர் என்பதை அறியாமல், "பள்ளிக்கூடத்துக்கு போனால் யார் சோறு போடுவார்கள்?" என்று அப்பாவித்தனமாக கேட்டான்.

உடனே காமராஜர், "சோறு போட்டால் பள்ளிக்கூடம் போவாயா?" என்று கேட்டார். அந்த சிறுவனும் "போவேன்" என்றான்.

ரெயில்வே கேட் திறந்தது. காமராஜரும் காரில் ஏறி வழிநெடுக சிந்தித்துக்கொண்டே வந்தார். சென்னை வந்தவுடன், அப்போது பொது கல்வி இயக்குனராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலுவிடம் ஆலோசனை நடத்தினார். அவர் உதவியோடு மதிய உணவு திட்டத்தை வடிவமைத்தார். அப்போது, சில அதிகாரிகள் இந்த திட்டத்தை நிறைவேற்ற நிதி இல்லை என்று முட்டுக்கட்டை போட்ட நேரத்திலும், அதையெல்லாம் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறி, காமராஜர் 1955-ம் ஆண்டு மதிய உணவு திட்டத்தைக் கொண்டுவந்தார்.

இதேபோன்ற பின்னணியில்தான், இப்போது காலை உணவு திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார். பொதுவாகவே, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எங்கு சுற்றுப்பயணம் செல்லும்போதும், திடீரென யாருக்கும் முன் அறிவிப்பு கொடுக்காமல் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், ரேஷன் கடைகள், போலீஸ் நிலையங்கள் போன்ற இடங்களுக்கு பார்வையிட செல்வது வழக்கம். அந்த வகையில், மாநகராட்சி, அரசு பள்ளிக்கூடங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளும்போது, ஒருமுறை ஒரு பள்ளிக்கூடத்துக்கு சென்றார். அப்போது அங்கிருந்த மாணவர்களிடம், "என்ன படிக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில், சில மாணவர்கள் சோர்வுடன் இருப்பதைப் பார்த்து, "ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "நாங்கள் சாப்பிடவில்லை" என்று அந்த மாணவர்கள் சாதாரணமாக பதில் அளித்தவுடன் அதிர்ந்துபோனார். உடனே ஆசிரியர்கள், அதிகாரிகளிடம் கேட்டபோது, "நிறைய பிள்ளைகள் காலையில் சாப்பிடாமல்தான் வருகிறார்கள்" என்று பதிலளித்ததுதான், அவர் உள்ளத்தில் காலை உணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்ற உறுதி ஏற்பட்டது.

வெறும் வயிற்றில் மாணவர்களால் பாடங்களை உன்னிப்பாக கவனிக்கவும் முடியாது. உலகில் பல ஆய்வுகள் காலை உணவு மட்டும் சாப்பிடாமல் இருக்கக்கூடாது என்று தெளிவாக கூறுகிறது. இதன் அடிப்படையில்தான், சட்டசபையில் அறிவிப்பு வெளியிட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில், கடந்த 15-ந் தேதி அண்ணா பிறந்தநாளன்று முதல் கட்டமாக 1,545 பள்ளிக்கூடங்களில், 1 முதல் 5-ம் வகுப்பு வரை படிக்கும் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 95 குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் கருணை திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

இந்த திட்டத்துக்கான உணவுப்பட்டியலை பார்த்தால், வசதியுள்ளவர்கள் வீடுகளில் குழந்தைகள் உண்ணும் உணவுக்கு சற்றும் குறையாத சத்தான உணவாக இருக்கிறது. விரைவில் அனைத்து பள்ளிக்கூடங்களிலும் இந்த காலை உணவுத் திட்டம் தொடங்கப்படவேண்டும், இதே தரத்துடன் போடப்படவேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.



# ஊடகப்பார்வை...

## Dinathanthi - 27.09.2022



மாதவரத்தில் உள்ள மாநகராட்சி உணவு சமைக்கும் மையத்தில் நேற்று அதிகாலை ரவை உப்புமா தயார் செய்யப்பட்ட காட்சி.



'காலை உணவு அருமை ஸ்டாலின் தாத்தா' என்று மாணவ-மாணவிகள் உற்சாகமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்திய காட்சி.

'சூப்பரா இருக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாத்தா'...

### காலை உணவு திட்டத்துக்கு மழலைச் செல்வங்களின் மனம் குளிர்ந்த பாராட்டு

சென்னை, செப்.27-

காலை உணவு வகைகள் சூப்பராகஇருக்கிறதுஎன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை மழலைச் செல்வங்கள் மனதார பாராட்டி உள்ளனர்.

#### காலை சிற்றுண்டி திட்டம்

தமிழகத்தில் கல்வி புரட்சிக்கு வித்திட்ட காமராஜர் அரசு பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு திட்டம் கொண்டு வந்தார். இதனை சத்துணவு திட்டமாக மாற்றி எம்.ஜி.ஆர். விரிவுபடுத்தினார். இந்த திட்டங்களுக்கு முத்தாய்ப்பாக மகுடம் சூட்டுவது போல் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு முதல்-அமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் மகத்தான திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்ணா பிறந்த நாளான கடந்த 15-ந் தேதி மதுரையில் தொடங்கிவைத்துவரலாற்றில் தனது பெயரை முத்திரை பதித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் 417 மாநகராட்சி பள்ளிகள், 163 நகராட்சி பள்ளிகள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகள், 237 தொலைதூர, மலைப்பிரதேச பள்ளிகள் என மொத்தம் 1,545 பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை படிக்கும் 1 லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்களுக்கு தினமும் காலை உணவு பரிமாறப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 37 தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் 5 ஆயிரத்து 941 மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்படுகிறது.

#### மு.க.ஸ்டாலினுக்கு குவியும் பாராட்டு

முதல்-அமைச்சரின் காலை உணவு திட்டம் மழலைச்செல்வங்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் மனதார பாராட்டுகிறார்கள்.



சென்னை மாதவரம் ராஜாஜி தெருவில் உள்ள தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை கல்பனா கூறுகையில், 'எங்கள் பள்ளியில் 193 மாணவர்கள், 187 மாணவிகள் என 380 பேர் படிக்கிறார்கள். காலை உணவு திட்டம் வந்த பிறகு மாணவ-மாணவிகள் முன்பை விட மிகவும் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கின்றனர். கல்வியில் சிறப்பாக கவனம் செலுத்துகிறார்கள். சோர்வு அடையாமல் விளையாட்டிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். காலை உணவு என்ற உன்னத திட்டம் மூலம், வெறும் வயிற்றில் பள்ளிக்கு படிக்க வரும் ஏழை, எளிய குழந்தைகளின் பசியை போக்கி உள்ள முதல்-அமைச்சரை அனைத்து ஆசிரியர்கள் சார்பிலும் மனதார பாராட்டுகிறேன்' என்றார்.

சென்னை மாதவரம் தொடக்கப்பள்ளியில் சில பெற்றோர்களே தன்னார்வலர்கள் போன்று உணவு பரிமாறி வருகின்றனர். இது குறித்து எம்.துர்கா என்ற பெண் கூறும்போது, 'எனது கணவர் கூலித்தொழிலாளி ஆவார். என்னுடைய 2 குழந்தைகள் இந்த பள்ளியில் படித்து வருகிறார்கள். பல நாட்களில் வீட்டில் காலை உணவு செய்ய முடியாதவாறு பொருளாதார நெருக்கடி இருக்கும். குழந்தைகள் காலை உணவை தவிர்த்து மதிய உணவை எதிர்பார்த்து பள்ளிக்கு செல்லும் நிலை இருந்தது. இந்தநிலையில் முதல்-அமைச்சர் கொண்டு வந்த காலை உணவு திட்டம் குழந்தைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மகத்தான இந்த திட்டத்தில் எங்களது பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதற்காக அனைத்து குழந்தைகளுக்கும் காலை உணவை மகிழ்ச்சியுடன் பரிமாறி வருகிறோம்' என்றார்.

#### மாணவியின் உருக்கமான பேட்டி



5-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் சிவனாந்தம், கவுசிக் ஆனந்த் ஆகியோர் கூறும்போது, 'பள்ளிக்கு வந்தவுடன் எங்களுக்கு ரொம்ப 'டேன்டாடியன்' (சுவையான உணவு) கிடைக்கிறது. சாம்பார் சூப்பரா இருக்கு. ஜாலியாக சாப்பிடுறோம். எங்களுக்கு காலை உணவு வழங்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாத்தாவுக்கு ரொம்ப நன்றி சொல்கிறோம்' என்று தெரிவித்தனர்.

4-ம் வகுப்பு மாணவி சாதிகா கூறுகையில், 'எங்கப்பா இறந்துட்டாங்க. அம்மாதான் கஷ்டப்பட்டு என்னை வளர்க்கிறாங்க. குடும்ப



வறுமையால் நான் பல நாட்கள் காலையில் டீ, பிஸ்கட் மட்டும் சாப்பிட்டு பள்ளிக்கு வருவேன். வயிறு பசிக்கும்போது எப்போது மதியம் ஆகும். சத்துணவு கிடைக்கும் என்று எண்ணுவேன். இப்ப எனக்கு பள்ளியிலேயே காலை உணவு கிடைப்பது சந்தோஷமாக இருக்கிறது. என்னை போன்ற குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கி பசியை போக்கிய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாத்தாவை நான் வணங்குகிறேன்' என்றார்.



5-ம் வகுப்பு மாணவி பூஜா கூறும்போது, 'காலையில் வீட்டில் டிபன் செய்வதற்கு தாமதம் ஆவதால் பள்ளிக்கூடத்துக்கு தாமதமாக வரும் நிலை இருந்தது. தற்போது பள்ளியிலேயே காலை உணவு கிடைப்பதால், சிக்கிரம் வந்து விடுகிறேன். உணவு வகைகளும் சூப்பரா இருக்கு. வயிறு நிறைய சாப்பிடுகிறேன்' என்று மகிழ்ச்சி ததும்ப கூறினார்.

#### அதிகாரிகள் கண்காணிப்பு

காலை உணவு திட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்ணும், கருத்துமாக இருக்கிறார். எனவே திட்டத்தில் எந்தவித சுணக்கமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அதிகாரிகள் மிக கவனமாக இருக்கிறார்கள்.

அந்த வகையில் சென்னையில் மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடியின் நேரடி மேற்பார்வையில் துணை கமிஷனர் (கல்வி) சினேகா, எம்.சிவகுரு பிரபாகரன் (வடக்கு வட்டாரம்), மாவட்ட வருவாய் அதிகாரி (அம்மா உணவகம்) எஸ்.சூர்யபிரகாஷ் ஆகிய 3 அதிகாரிகள் இந்த பணியை கண்காணித்து வருகின்றனர்.

மாவட்ட வருவாய் அதிகாரி எஸ்.சூர்யபிரகாஷ் காலை 5 மணி முதல் ஒவ்வொரு சமையல் செய்யும் மையத்துக்கும் சென்று ஆய்வு நடத்துகிறார். உணவு சுவையாகவும், தரமாகவும் இருக்கிறதா? என்பதை தினமும் சாப்பிட்டு பார்க்கிறார். மேலும் பள்ளிக்கூடங்களில் தாமதமின்றி உணவு முறையாக பரிமாறப்படுகிறதா? என்பதையும் நேரடியாக கண்காணித்து வருகிறார்.

இதுகுறித்து அவர் 'தினத்தந்தி' நிருபருக்கு அளித்த பேட்டியில், 'கமிஷனர் ககன்தீப் சிங் பேடி உத்தரவு மற்றும் ஊக்கத்தின் பேரில் தினமும் ஆய்வு பணியை மேற்கொண்டு வருகிறோம். தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக்கழகம், கூட்டுறவு இணையம் மூலம் தரமான மளிகை பொருட்கள் 20 நாட்களுக்கு ஒரு முறை பெறப்பட்டு வருகிறது' என்றார்.

#### செல்போன் செயலி

இந்த திட்டத்தில் குறைகள் இருந்தால் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் செல்போன் செயலி பயன்படுத்தப்படுகிறது. இந்த செயலியை பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் செல்போனில் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

பள்ளிக்கூடத்துக்கு காலை உணவு கொண்டு வரப்படும் காட்சி, பரிமாறப்படும் காட்சிகளை பள்ளி தலைமை ஆசிரியர்கள் இந்த செயலியில் பதிவேற்றம் செய்கிறார்கள். இன்று உணவு சரியாக சரியான நேரத்துக்கு வந்ததா? தரமாக இருந்ததா?, எத்தனை பேர் சாப்பிட்டார்கள்? போன்ற கேள்விகளுக்கும் பதில் அளித்து அனுப்புகிறார்கள்.



பெற்றோர்கள் தன்னார்வலர் போன்று குழந்தைகளுக்கு உணவு பரிமாறிய காட்சி.

### உயர்தரத்தில் தயாராகும் காலை உணவு

#### தினமும் ஆய்வு செய்யும் அதிகாரிகள்

முதல்-அமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் சென்னை எண்ணூர் தாழங்குப்பம் புயல் காப்பகம், எண்ணூர் அன்னை சிவகாமி நகர் அம்மா உணவகம், மாதவரம் சி.எம்.டி.ஏ. சரக்கு வாகன வளாக கட்டிடம், கொடுங்கையூர் ராஜரத்தினம் நகர், கொருக்குப்பேட்டை மாநகராட்சி கட்டிடம், ராயபுரம் பழைய பள்ளி கட்டிடம் என 6 இடங்களில் அமைக்கப்பட்ட 'கிச்சன்' மையத்தில் மாநகராட்சி தொடக்கப்பள்ளி மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு தயார் செய்யப்படுகிறது.

இங்கு எவ்வாறு காலை உணவு தயார் செய்யப்பட்டு பள்ளிக்கூடங்களுக்கு எடுத்து செல்லப்படுகிறது என்பதை விரிவாக பார்ப்போம்.

★ ஒவ்வொரு 'கிச்சன்' மையத்திலும் அம்மா உணவக ஊழியர்கள் 6 பேர் பணி அமர்த்தப்பட்டு உள்ளனர். அவர்கள் தினமும் காலை 4.30 மணிக்கு இங்கு வருகிறார்கள். முதலில் சமையல் அறையை கிருமி நாசினி மூலம் நன்கு சுத்தம் செய்கிறார்கள். சமையல் செய்யும் பாத்திரங்களை வெந்நீரில் கழுவுகிறார்கள். சுமார் 30 நிமிடங்கள் தூய்மை பணி நடக்கிறது. எனவே சமையல் கூட அறை உயர்தர சைவ உணவகம் போன்று பளிச்சென்று காட்சி அளிக்கிறது.

★ தலைமுடி உணவில் விழுந்து விடாதவாறு தலையில் 'கேப்' அணிந்துகொண்டு ஊழியர்கள் சமையல் வேலையை காலை 5 மணிக்கு தொடங்குகிறார்கள். 3 ஊழியர்கள் டிபன் செய்யும் பணியிலும், 3 ஊழியர்கள் காய்கறிகளை வெட்டி சாம்பார் தயாரிக்கும் பணியிலும் ஈடுபடுகின்றனர். சமையல் வேலை காலை 6.30 மணிக்கு முடிவடைகிறது.

இந்த நேரத்தில் மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் வந்து உணவின் சுவை, தரத்தை சாப்பிட்டு பார்த்து ஆய்வு செய்கிறார்கள். அதன்பின்னர் சமைத்த உணவு மிகப்பெரிய 'ஹாட் பாக்ஸ்'சில் (5 மணி நேரம் சூடு தாங்க கூடியவை) நிரப்பப்படுகிறது. மேலும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பரிசோதனை செய்வதற்காக 250 கிராம் தனியாகவும் எடுத்து வைக்கப்படுகிறது.

★ சுடச்சுட தயாரான உணவை பள்ளிக்கூடங்களுக்கு எடுத்து செல்லும் வாகனம் காலை 7 மணிக்கு வருகிறது. சமைக்கப்பட்ட உணவு இந்த வாகனத்தில் ஏற்றப்படுகிறது. காலை உணவை எடுத்து செல்லும் வாகனத்தில் மாநகராட்சி ஊழியர் ஒருவரும் பயணிக்கிறார்.

★ ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் உணவு சென்றவுடன், அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் தங்களிடம் உள்ள சாவி மூலம் உணவு வைக்கப்பட்டிருக்கும் பெட்டியை திறக்கிறார்கள். பின்னர் அவர்கள் முன்னிலையில் உணவு பரிமாறும் பணி காலை 8.10 மணிக்கு தொடங்குகிறது.

★ பள்ளி குழந்தைகள் சாப்பிடுவதற்காக மாநகராட்சி சார்பில் எவர்சில்வர் தட்டு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் சாப்பிட்ட தட்டை கழுவுவதற்கு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மாநகராட்சி சார்பில் 2 பெண் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

#### இட்லி, இடியாப்பம், பூரி கேட்கும் மாணவர்கள்

### உணவு வகையில் மாற்றம் செய்யப்படுமா?

#### அதிகாரிகள் பதில்

முதல்-அமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் திங்கட்கிழமை- உப்புமா வகைகள், (ரவை, சேமியா, அரிசி, கோதுமை), காய்கறி சாம்பார், செவ்வாய்கிழமை-காய்கறி கிச்சடி வகை (ரவா, சேமியா, சோளம், கோதுமை), புதன்கிழமை-பொங்கல் வகை (ரவை, வெண் பொங்கல்), காய்கறி சாம்பார், வியாழக்கிழமை- உப்புமா வகை, (ரவை, சேமியா, அரிசி, கோதுமை), காய்கறி சாம்பார், வெள்ளிக்கிழமை- காய்கறி கிச்சடி (ரவா, சேமியா, சோளம், கோதுமை) மற்றும் ரவை கேசரி அல்லது சேமியா கேசரி ஆகியவை தொடக்க பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு பட்டியல் ஆகும்.

இந்த நிலையில் உணவு வகைகளில் மாற்றம் செய்ய வேண்டுமா? என்பது குறித்து மாணவ-மாணவிகளிடம் கருத்து கேட்டு அனுப்புமாறு அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவிகளிடம் கருத்துகள் பெறப்பட்டு வருகின்றன.

இதில் இட்லி, இடியாப்பம், பூரி, சப்பாத்தி போன்ற டிபன் வகைகள் வழங்க வேண்டும் என்று மாணவர்கள் விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

எனவே காலை உணவு திட்டத்தில் இந்த உணவுகள் இடம் பெறுமா? என்று மாநகராட்சி அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது, 'தற்போது வழங்கப்படும் உணவு பட்டியலில் எந்த உணவு மிகவும் பிடிக்கிறது என்பது போன்றுதான் கருத்துகள் கேட்க உத்தரவிடப்பட்டது. அந்த வகையில் உணவு பட்டியலில் மாற்றம் செய்யப்படும். கூடுதல் உணவு வகைகள் பட்டியலில் சேர்க்கப்படாது' என்று பதில் அளித்தார்.



# ஊடகப்பார்வை...

## TOI - 27.09.2022

South Pole: A Deep Dive Into Politics, Society And Culture

Government School Breakfast Scheme Removes Hunger Pangs. Teachers Hope It Will Improve Enrolment

# HOW PONGAL WITH A SMILE IS BRINGING KIDS BACK TO SCHOOL



**RAVA OR UPMA?:** Students of Kaliyampatti school in Trichy district can't wait to see what's on the breakfast menu

Pics: R Baskar



We are excited to eat a different breakfast every day. I am excited about attending school

**P Akilan** | A CLASS II STUDENT, THURAIYUR, TRICHY



I like the vegetable sambar cooked at the school. Every day, I tell my amma about the tasty breakfast I get to eat at school

**C Sanjana** | CLASS III STUDENT, THURAIYUR, TRICHY

**Deepak.Karthik**@timesgroup.com

Nutritionists believe breakfast is the most important meal of the day. But for children at Kaliyampatti, a remote village in Pagalavadi panchayat in Trichy district, it is more of a luxury. With their parents away for days, working as well-diggers or on rubber plantations in Kerala, most are left to fend for themselves when it comes to meals. Skipping breakfast, eating leftovers, or going hungry is common.

A survey by Kaliyampatti panchayat union primary school found 48 of 68 students were raised by their grandparents as their parents had migrated for work to other districts or states. Of them, at least 8 children skipped breakfast and went hungry throughout the day.



All that is set to change thanks to the government's TN-wide free breakfast scheme.

Steaming hot breakfast, a line of cooks rustling up nutritious platters, serving them with a smile, children are now reporting to school on time, not just to feed their minds, but their stomachs as well. "My wife and I eat leftovers at home while our daughter gets a fresh breakfast at school," says M Veerabathran, a farmhand. "My daughter describes the food she gets. She loves the upma," says S Thilaga from Madurai.

At Kaliyampatti, two moms of children studying in the school, were trained by the Mahalir Thittam department as cooks. They reach the school at 6 am to cook breakfast, served hot to students at 8 am.

Across schools, cooks are short-listed from SHGs recognised by the panchayat-level federation and assigned to schools where they have children studying. While cooks in rural areas prepare breakfast on the school premises, in Coimbatore, Trichy, and Madurai districts, urban local bodies operate centralised kitchens and collaborate with NGOs to get the breakfast to schools. In Trichy, authorities have selected 41 primary schools in Thuraiyur block that has remote, hilly hamlets. Coimbatore and Madurai have selected 74 and 26 schools respectively.



**JUST LIKE HOME:** Some cooks are moms of the kids at school

The cooks are trained in Chennai and then locally by food safety experts. The cooks must sign in on the chief minister's breakfast scheme mobile application, log in the time of cooking, the dish chosen for the day, and number of students to be served. The cooking process is supervised by the block coordinator, block manager, and project officers of 'Mahalir Thittam' through the app. Food safety department officials, teachers, school management committee, and panchayat representatives inspect the cooking.

"Every morning, we make updates with photographs in the WhatsApp group," says Thuraiyur block coordinator M Rajeshwari. The breakfast prepared is randomly tasted and tested by officials and teachers. TOI reporters, who sampled it, found it had the flavour of home-cooked food.

Ingredients such as rice, rava, oil, pulses, and spices required for the month are purchased through the TN Civil Supplies Corporation and Cooperatives department, while the cooks are responsible for buying the daily vegetables. The plates and tumblers are bought by the social welfare department. The entire mechanism (including a separate kitchen) is run outside the purview of the noon meal scheme.

M Vishnu, a Class IV student from Peelamedu corporation primary school in Coimbatore, looks forward to school these days. "My parents rush to work and have no time to make breakfast. Now I get to eat to my heart's content in school," he says.

"In a tribal school in Pachamalai, children make requests for favourites like upma. We change the menu based on feedback," says 'mahalir thittam' assistant project officer Nirmala Devi.

For primary school teachers, the scheme, the brainchild of chief minister M K Stalin, is being seen as a tool to increase enrolment and compete with private schools in remote hamlets. The free breakfast coming in addition to the nutritious noon meal scheme is a relief for parents. "Next year, we expect enrolment to increase," says Kaliyampatti school headmistress P Manjula. Now, with states like Madhya Pradesh keen to emulate it, Tamil Nadu is anxious to make it a successful flagship programme.

*(With Inputs From V Devanathan and R Sukshma)*

## HEALTHY START TO THE DAY

Food safety officers give the cooks lessons on keeping the meals healthy and hygienic. Officials also conduct surprise quality inspections




Total schools **1,545**

Total Students **1,14,095**

Total Districts **38**

Fund **₹33.56 crore**

### TIMELINE

**6 am** | Cooks report to school kitchens

**6.15-7.30 am** | Food preparation

**8 am** | Children arrive

**8.15 to 8.45 am** | Food served

**9 to 9.15 am** | Vessels washed, cooks leave school

### HOW THE SCHEME WORKS

**URBAN AREAS**
Food cooked in centralised kitchens – inspected by food safety officers – food transported to schools in covered vehicles for serving

**RURAL AREAS**
Decentralised kitchen in schools (separate from noon meal kitchen) – two cooks designated for food preparation – random quality check by block coordinators and managers – food served under teacher supervision

**BREAKFAST APP**
- Cook logs into the app before cooking
- Number of students and cooks uploaded in the app
- Type of dish selected
- Food preparation completion time uploaded

**SIZE OF KITCHEN**

Area of centralised kitchen **2,500 to 3,600** square feet

Area of decentralised kitchen **60 to 100** square feet

**NUMBER OF COOKS**

**Rural** | 2 per school (1 reserve)

**Urban** | 15 per centralised kitchen



# ஊடகப்பார்வை...



## Deccan Chronicle - 27.09.2022

### Filling stomachs and hearts

N. SAMPATH I DC
CHENNAI, SEPT 26

M. Lakshmi,38, of Vyasarpadi wakes up in the wee hours for the past two weeks and, after performing the morning chores, she rushes to the Corporation Primary School in Kodungaiyur in an auto. In-charge of the common kitchen at the school, Lakshmi collects the grocery items and vegetables from the store room and with the help of five other women cooks, she prepares breakfast for the students. They also pack dishes for students in five other nearby schools. In total, they prepare breakfast for 1,030 students. Greater Chennai Corporation PRO Surya Prakash told DC that Chief Minister M.K. Stalin's pet free breakfast scheme for students has been introduced in four zones in north Chennai. The corporation operates common kitchens at Tiruvottiyur, Madhavaram, Tondiarpet and Royapuram in the first phase. A total of 5,941 students benefit from the scheme. Staff from Madras Institute of Hotel Management and Catering Technology and food safety department and corporation officials provide training to cooks in making tasty and healthy dishes, maintaining hygiene. Food safety department officials inspect the kitchens every day. Inaugurated by Chief Minister Stalin in Madurai last week, in the first phase, the scheme is being launched in 1,545 schools across the state.

Bhagyalakshmi of north Chennai quipped, "my son is thrilled nowadays. He happily informs me about the dishes he had for breakfast in the school." Daily wage worker Revathy of Vysarpadi said, "As I leave early for work my daughter went to the school with an empty stomach. I am happy that my daughter eats good food now." Gomathy of Royapuram said "my daughter told me that while serving the food the teacher told her to concentrate on her studies and that breakfast comes with responsibilities".

## பிஞ்சுக் குழந்தைகளின் மகிழ்ச்சி எனது நெஞ்சில் நிறைகிறது...

**கா**லை உணவுத் திட்டம் குறித்து சிறப்பாக எழுதியுள்ள தினத்தந்தி,

The Times of India, Deccan Chronicle நாளிதழ்களுக்கு எனது நன்றி!

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கியது முதல், நாள்தோறும் கண்காணிக்கிறேன்; எவ்விதக் குறைபாடுமின்றி, சரியாக நடக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்து வருகிறேன்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மிகமிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதை புகழ்பெற்ற நாளிதழ்கள் உறுதி செய்திருப்பது என் உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தருகிறது!

பிஞ்சுக் குழந்தைகளின் மகிழ்ச்சி என் நெஞ்சிலும் நிறைகிறது!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (27.09.2022)



# ஊடகப்பார்வை...



எழில்நகர், துரைப்பாக்கம், சென்னை

# நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி

## சிறப்பு மலர்



“பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் திட்டமானது தமிழ்நாட்டில் கடந்த ஒரு நூற்றாண்டாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்தின் பல்வேறு முன்னேற்றங்கள், தகவல்கள், ஆவணங்கள், அரிய கட்டுரைகளைத் தொகுத்து, சிறப்பு ஆவணமாக 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் தொடக்க விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் **'நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி'** என்ற சிறப்பு மலரினை வெளியிடுவதில் தமிழரசு பெருமை கொள்கிறது.

இச்சிறப்பு மலரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் திட்டம் தொடங்கிய பிறகு இதுகுறித்து வெளிவந்த கட்டுரைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை, இது தொடர்பான பல்வேறு நிறுவன அமைப்புகளின் கருத்துக்கள், சமூக ஊடக விமர்சனங்கள் ஆகியவற்றைத் தொகுத்து திருத்திய பதிப்பாக 27.09.2022 அன்று வெளியிடப்படுகிறது.”

\- ஆசிரியர்

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **வீ.ப.ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

**படிக்காமல் சாதித்த ஒருவரை யாராவது எடுத்துக்காட்டாகக் காட்டினால், அதற்கு இணையாகப் படித்துச் சாதித்தவர்கள் லட்சம் பேரை நாம் காட்டமுடியும்.**

**படிக்காமலே சாதிக்கலாம் என்று யாராவது சொன்னால், அது தன்னம்பிக்கை ஊட்டுவது அல்ல; அது வெறும் ஆசை வார்த்தை.**

*– திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

